வரலாற்றியல் நோக்கில் சிலப்பதிகார உரைகள்

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பி.எச்.டி) பட்டத்திற்குப்
பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

பெ.குபேந்திரன்

பதிவு எண் : 0987

நெறியாளர்

பேரா. சே.செந்தமிழ்ப்பாவை

தமிழ்ப் பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத்தர மதிப்பீட்டில் 'A+' (CGPA.3.64) தகுதி பெற்றது மற்றும்
மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல்தரப் பல்கலைக்கழகத் தகுதி பெற்றது)

காரைக்குடி - 630 003

தமிழ்நாடு, இந்தியா

அக்டோபர் - 2019

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி
பேராசிரியர் & இயக்குநர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630 003.

நாள்:

நெறியாளர் சான்றிதழ்

"வரலாற்றியல் நோக்கில் சிலப்பதிகார உரைகள்" என்னும் தலைப்பில் **பெ.குபேந்திரன்** அவர்கள் முழுநேர முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காகச் செய்த இவ்ஆய்வு அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப்பண்பாட்டு மையத்தில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும் இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

(முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை)

நெறியாளர்

பெ.குபேந்திரன் (பதிவுஎண்:0987)
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630 003.

நாள்:

ஆய்வாளர் உறுதிமொழி

“வரலாற்றியல் நோக்கில் சிலப்பதிகார உரைகள்” என்னும் தலைப்பில் முழுநேர முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்ஆய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்ஆய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

(பெ.குபேந்திரன்)

ஆய்வாளர்

உறுதிக்கையொப்பம்

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி
பேராசிரியர் & இயக்குநர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630 003.

நன்றியுரை

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப்பண்பாட்டு மையத்தில் **“வரலாற்றியல் நோக்கில் சிலப்பதிகார உரைகள்”** என்னும் தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வு நிகழ்த்த வாய்ப்பு நல்கிய அழகப்பா பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கும் மதிப்பிற்குரிய பதிவாளர் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் ஆய்வின் நெறியாளராக இருந்து ஆய்வேட்டைச் செம்மையாக உருவாக்குவதற்கு உதவிய தமிழ்ப் பண்பாட்டு மையப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் **முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை** அம்மா அவர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றி என்றும் உரியது.

ஆய்வு தொடர்பான செய்திகளையும் நூல்களையும் தந்துதவிய பேராசிரியர் **சு.இராசாராம்** அவர்களுக்கும் ஆய்வு தொடர்பான பல்வேறு அறிவுரைகளை நல்கிய திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் பேரா.**மு.பழனியப்பன்** அவர்களுக்கும் உதவிப்பேராசிரியர் முனைவர் **க.சொல்லேருழவன்,** உதவிப்பேராசிரியர் முனைவர் **கா.கணநாதன்** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நன்னிலை பெற்றுயர நாளும் உதவும் எனது தாய் **பெ.செல்லம்மாள்** தந்தை தெய்வத்திரு நா.பெரியநாயகம், அண்ணன், அண்ணிமார்களான பெ.செந்தில்குமார் – மலர்ராணி, பெ.கார்த்திக்-கவிதா, அக்கா நா.தவமணி நாகநாதன் ஆகியோர்க்கும் எங்கள் வீட்டுக் குழந்தைகளான செ.மோகனா, செ.கோகிலா, கா.நவீன்குமார், கா.தேவஸ்ரீ, நா.சிவபாலன், நா.கோபிகா ஆகிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரிப் படிப்பு முதல் இன்றுவரை நான் தங்கிப் பயில இடம் தந்து உதவிய காரைக்குடி ரேணுகா மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் திரு.க.திருநாவுக்கரசு குடும்பத்தார்க்கும் பள்ளியில் பயின்ற முன்னாள் இன்னாள் மாணவ மாணவிகள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பாசமிகு அண்ணன் மீ.பழனியப்பன் குடும்பத்தார்க்கும்

அன்பிற்கினிய மச்சான் ச.கணேசமணி குடும்பத்தார்க்கும் என் இதயம் கனிந்த நன்றி.

ஆய்வுப் பணியில் பல்வேறு உதவிகள் புரிந்த உடன் பிறவாச் சகோதர சகோதரிகளான முனைவர் ம.தமிழரசன், முனைவர் ஆ.அருள்சாமி, லெ.பொ.பிரியா, மு.செண்பகவள்ளி, கா.சுபா ஆகியோர்க்கும் தமிழ்ப் பண்பாட்டு மையம் மற்றும் தமிழ்த்துறை முனைவர் பட்ட ஆய்வாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்விற்கு வேண்டிய தரவுகளைச் சேகரிக்க உதவி புரிந்த அழகப்பா பல்கலைக்கழக நூலகத்தாருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது ஆய்வினை மிகச் சிறப்பாகத் தட்டச்சு செய்து தந்த பழ.மெய்யம்மை ஆச்சி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

அன்புடன்

பெ.குபேந்திரன்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

உரை.	-	உரையாசிரியர்கள்
தொல்.	-	தொல்காப்பியம்
நன்.	-	நன்னூல்
நம்பி.	-	நம்பியகப்பொருள்
அகநா.	-	அகநானூறு
குறள்.	-	திருக்குறள்
சீவக.	-	சீவகசிந்தாமணி
சிலப்.	-	சிலப்பதிகாரம்
அணிந்.	-	அணிந்துரை
பதி.	-	பதிகம்
அரும்.	-	அரும்பத உரைகாரர்
அடியா.	-	அடியார்க்கு நல்லார்
ந.மு.வே	-	ந.மு.வேங்கடசாமி நாட்டார்
மதுரைக்.	-	மதுரைக்காஞ்சி
புகார்.	-	புகார்க்காண்டம்
மதுரை.	-	மதுரைக்காண்டம்
வஞ்சி.	-	வஞ்சிக்காண்டம்
பரி.	-	பரிபாடல்
கலித்.	-	கலித்தொகை
நற்.	-	நற்றிணை

குறுந்.	-	குறுந்தொகை
ஐங்.	-	ஐங்குறுநூறு
பதிற்.	-	பதிற்றுப்பத்து
நாலடி.	-	நாலடியார்
நூற்.	-	நூற்பா
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
ப.ஆ.	-	பதிப்பாசிரியர்
பா.	-	பாடல்
மு.ப.	-	முதற்பதிப்பு
மேலது.	-	மேற்கூறிய நூல்
P.	-	Page

பொருளடக்கம்

முன்னுரை

தமிழுக்குச் செம்மொழி எனும் தகுதிப்பேற்றைப் பெற்றுத்தந்த நூல்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இச்சிலப்பதிகாரம் ‘குடிமக்கள் காப்பியம்’ என்று போற்றப்பெறுகின்றது. மன்னர்களைப் பற்றி மற்றவர்கள் எழுதும் படைப்புகளே பெருமையும் உயர்வும் பெறும் நிலையினின்று மாறி அரச குலத்தவரான இளங்கோவடிகள் வேற்று நாட்டின் குடிமக்களான கோவலன், கண்ணகி ஆகியோரைப் பற்றி எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். மேலும் இசைக் கலை, ஆடற்கலை, அரங்கக் கலை, அரங்க அமைப்புக் கலை, நாடகக் கலை, கட்டடக் கலை, கோயில்கலை போன்ற பல கலைகளையும் தமிழர்தம் அரசியல், பண்பாடு, வணிகமரபு, குலமரபு போன்றனவற்றையும் தன்னுள் உள்ளடக்கியதாகச் சிலப்பதிகாரம் திகழ்கின்றது.

சிலப்பதிகாரம் எழுந்த காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்பும் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்புமாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சிலப்பதிகாரத்திற்குப் பலரும் உரை வரைந்துள்ளனர். கி.பி பதினான்காம் நூற்றாண்டிற்கு முன்னதான உரையாக அரும்பத உரைகாரரின் உரை அமைகின்றது. கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றியதாக அடியார்க்கு நல்லார் என்பவரின் உரை அமைகின்றது. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் என்பவரின் உரை அமைகின்றது. சிலப்பதிகார மூலத்தினை முற்றும் உணர்ந்து கொள்ள இவ்வுரைகள் இன்றியமையாதன ஆகின்றன.

இவ்வுரைகளின் பண்புகளை, வரலாற்று அடிப்படையிலான வளர்ச்சிகளை, காலந்தோறும் அவை கடந்து வந்துள்ள விரிவான மாற்றங்களை, உரை மேம்பாடுகளை எடுத்துரைக்கும் நோக்கில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

ஆய்வுத் தலைப்பு

“வரலாற்றியல் நோக்கில் சிலப்பதிகார உரைகள்” என்பது இவ்வாய்வின் தலைப்பாகும். சிலப்பதிகாரக் காப்பியத்திற்கு காலந்தோறும் உரைகள் எழுதப் பெற்றுள்ளன. பழைய உரைகாரர்கள் என்ற நிலையில் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகியோர் உரை வரைந்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து பலர் உரை வரைந்துள்ள நிலையில் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரை விரிவும் தற்காலத் தன்மையும் கொண்டு அமைந்துள்ளது. இம்மூன்று உரைகளும் ஐந்து நூற்றாண்டு கால எல்லையில் ஒன்றை ஒன்று பின்பற்றிச் செய்யப்பெற்றுள்ள அடிப்படையில் இவற்றை வரலாற்றியல் நோக்கில் ஆராய்வதாக இத்தலைப்பு அமைந்துள்ளது.

ஆய்வு நோக்கம்

சிலப்பதிகாரத்திற்கு எழுந்துள்ள உரைகளின் வரலாற்றுப் பின்னணிகளை ஆராய்வதும் உரைகளில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்து அறிவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

சிலப்பதிகார உரைகளான அரும்பத உரைகாரர் உரை, அடியார்க்கு நல்லார் உரை, பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரை ஆகிய மூன்று உரைகளும் ஆய்வின் எல்லையாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு சிலப்பதிகாரத்திற்கு எழுந்த உரைகளின் காலம் மற்றும் அவ்வுரையாசிரியர்களின் வரலாறு போன்றவற்றை ஆராயும் நிலையில் வரலாற்றியல் அணுகுமுறையும் உரையாசிரியர்களின் கருத்துகளை ஒப்பிடும் நிலையில் ஒப்பியல் அணுகுமுறையும் உரைநெறிகளைக் காணும் நிலையில் விளக்கவியல் அணுகுமுறையும் இவ்வாய்வில் அணுகுமுறைகளாக மேற்கொள்ளப்பெற்றுள்ளன.

ஆய்வின் கருதுகோள்

மூல நூல் ஆசிரியரின் கருத்தினை அறிவதற்கும் விளக்குவதற்கும் உரைகள் பெரிதும் துணை செய்கின்றன என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

இயல் பாகுபாடு

“வரலாற்றியல் நோக்கில் சிலப்பதிகார உரைகள்” என்னும் தலைப்பிலான இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள. அவை,

1. **சிலப்பதிகார உரையின் தோற்றப் பின்புலங்கள்**
2. **சிலப்பதிகார உரைநெறிகள்**
3. **சிலப்பதிகார உரை வேறுபாடு**
4. **நடையியல் நோக்கில் உரைகள்**

என்பனவாகும்

இயல் ஒன்று

“சிலப்பதிகார உரையின் தோற்றப் பின்புலங்கள்” என்பது முதலாவது இயலாகும். இவ்வியலில் சிலப்பதிகாரம் எழுந்த காலம் தொடங்கி அதற்குச் செய்யப்பெற்ற உரைகள் பற்றிய செய்திகள், அவை எழுந்த நிலைக்கான பின்புலங்கள் ஆகியன வரலாற்று நோக்கில் ஆராயப்பெற்றுச் செய்திகள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. குறிப்பாக அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் ஆகியோரின் உரைகள் தோற்றம் பெற்ற நிலை, அவற்றின் காலப் பின்புலம் ஆகியன இவ்வியலில் ஆராயப்பெற்றுள.

இயல் இரண்டு

‘‘சிலப்பதிகார உரை நெறிகள்’’ என்பது இரண்டாவது இயலாகும். இவ்வியலில் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் ஆகியோர் தம் உரைகளில் காணப்படும் பொது நெறிகள், சிறப்பு நெறிகள் ஆகியன ஆராயப்பெற்றுள.

இயல் மூன்று

‘‘சிலப்பதிகார உரை வேறுபாடு’’ என்பது மூன்றாம் இயலாகும். இவ்வியலில் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் ஆகிய மூவரின் உரைகளில் காணப்படும் ஒத்த கருத்துகள், வேறுபட்ட கருத்துகள் தொகுத்து உரைக்கப்பெற்றுள்ளன. அரும்பத உரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் கருத்துகளால் ஒன்றுபட்டு நிற்க, பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் தன் உரையால் வேறுபடும் நிலையை இவ்வியல் ஆராய்ந்துள்ளது.

இயல் நான்கு

‘‘நடையியல் நோக்கில் உரைகள்’’ என்பது நான்காம் இயலாகும். இவ்வியலில் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் ஆகியோரின் உரைகளில் காணப்படும் நடையியல் கூறுகள் காண்டிகை உரை, விருத்தி உரை என்னும் இருநிலைகளில் அமைந்துள்ள விதம் இவ்வியலில் ஆராயப்பெற்றுள.

ஆய்வில் கண்ட முடிவுகள் முடிவுரையில் இடம் பெற்றுள. இதனையடுத்து ஆய்வுக்குத் துணை நின்ற நூல்களின் துணைநூற்பட்டியலும் பின்னிணைப்புகளும் இடம் பெற்றுள.

இயல் - 1

சிலப்பதிகார உரையின் தோற்றப் பின்புலங்கள்

சங்கம் மருவிய காலத்தில் இளங்கோவடிகளின் சீரிய சிந்தனை ஆற்றலால் உருவாக்கப்பெற்ற நூல் சிலப்பதிகாரம் ஆகும். தமிழின் முதல் காப்பியம் என்னும் பெருமையுடைய சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் வாழ்வியல் கூறுகளான காதல், வீரம், கலை, பண்பாடு, அரசியல் போன்ற சமூகப் பின்புலங்களோடு தமிழகத்தின் எழிலையும் வளமையையும் சிறப்புற உரைக்கும் இக்காப்பியத்திற்கு அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் ஆகியோர் சீரிய உரை எழுதியுள்ர். இவ்வுரையாசிரியர்கள் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதுவதற்கான காரணம், அதற்கான சமூகப் பின்புலங்கள் போன்றவற்றை ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

உரையின் தோற்றம்

மூல நூலின் தன்மையை வெளிப்படுத்துவது உரை ஆகும்.'' உரை என்பது இருவகைப் பொருளில் ஆளப்படுகிறது. ஒன்று பாட்டுக்குக் கூறப்படும் கருத்து, மற்றொன்று அடிவரையறைக்கு உட்படாது தொடர்ந்து நடப்பது; ஆயின் காலப்போக்கில் உரை என்பது ஒரு பொருளையும் (Commentary) உரைநடை என்பது மற்றொரு பொருளையும் (Prose) குறிக்கத் தொடங்கின''[1]. ''இலக்கண இலக்கியக் கல்வியில் ஈடுபடும் அறிஞர்களின் எண்ண ஆராய்ச்சியே உரை'' ஆகும்[2] என்பர் கி.ஆதிநாராயணன். கழகத் தமிழ் அகராதி உரை என்னும் சொல்லுக்கு,

> **''சொல், சொற்பொருள், அறிவுரை, பழிப்புரை, பொன்,**
>
> **நூல், புகழ், மாற்று, எழுத்தின் ஒலி, புகழுரை,**
>
> **விரிவுரை, விடை, ஆசிரிய வசனம், ஆகமப்பிரமாணம்**
>
> **உரையென்னேவல் என்று பொருள் உரைக்கிறது''[3]**

இலக்கிய வகைகள் பற்றித் தொல்காப்பியர்,

"பாட்டு, உரைநூலே வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்

நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்

யாப்பின் வழியது என்மனார் புலவர்"[4]

என்று குறிப்பிடும் போது 'உரை' என்பதனையும் கூறுவர். முற்காலத்தில் இலக்கியம் தோன்றிய போதே உரைகள் தோன்றவில்லை. மக்கள் மூலநூலைப் படித்துப் புரிந்துகொள்ளும் அளவிற்கு அறிவுடையவர்களாக இருந்தனர். எனவே நூல்கள் தோன்றிய காலத்தில் உரைகள் தோன்றவில்லை. "உரையும் விளக்கமும் இல்லாத மூல நூல்களே அனைவரும் கற்று மகிழும் இயல்பினவாய் இருந்தன"[5] என்பர் மு.வை.அரவிந்தன். 'கற்றலின் கேட்டலே நன்று' என்பது அக்காலத்தவர் கொள்கையாக இருந்தது. ஆசிரியர் தம் மாணவர்களுக்கும் தந்தை தம் மக்களுக்கும் வாய்மொழியாகப் பழைய நூல்களுக்கு உரையும் விளக்கமும் கூறி வந்தனர். இதன் பயனாக ஒரு நூல் பல தலைமுறைகளைக் தாண்டி வரும்போது ஒவ்வொரு தலைமுறைக்கும் உரிய கருத்துகளையும் விளக்கங்களையும் சேர்த்துக் கொண்டு வளர்ந்து வந்தது. இங்ஙனம் வாய் மொழியாகப் பல்லாண்டுகள் வழங்கி வந்த இக்கருத்துகளும் உரை விளக்கங்களும் காலப்போக்கில் ஏடுகளில் எழுதப்பட்டன. "வாய்மொழி வாயிலாக வளர்ந்து வந்த உரை, ஏட்டில் எழுதப்பட்ட பின்னரும் உரையாடுவது போன்ற நிலையிலேயே அமைந்தது. ஆசிரியர் பாடம் கூற, அதைக் கேட்கும் மாணாக்கன் ஐயங்களை எழுப்ப, ஆசிரியர் அவற்றிற்குத் தக்க விடைகளைச் சொல்லி விளக்கும் முறையிலேயே உரைகள் அமைந்தன"[6]

ஒரு மூல நூலோ உரையோ எழுதப்பெற்று அரங்கேற்றம் காணும்போது தான் உரையின் தோற்றம் முழுவடிவத்தைப் பெறுகிறது. வாய்மொழியாக

வழங்கிவந்த உரை, உரையாடுதல் என்னும் நிலையிலேயே இருந்தது. மாணவருக்குப் பாடம் கற்பிக்கும் போது கொடுக்கப்படும் விளக்கமும் வினா ஐயங்களுக்குத் தரப்படும் விடையும் உரை வளர்ச்சிக்கு வித்திட்டன. "உரையாசிரியர்கள் என்று நாம் போற்றும் முன்னோரெல்லாம் பாடஞ்சொல்லிய வகுப்பாசிரியர்கள் என்பதனை நினைவு கொள்ள வேண்டும். பாடத்திற்குச் சொல்லிய உரைகளே அவர்கள் எழுதிய உரைகளாம் என்பர் வ.சுப. மாணிக்கனார்"[7] மேலும், "உரையாசிரியர்கள் தம் உரை விளக்கங்களின் இடையிடையே என்னை எனின்: என்னுதலிற்றோ எனின்: என்ன பெயர்த்தோ எனின் வந்த வழிக் கண்டு கொள்க: வல்லாரைக் கொண்டுணர்க: வல்லார் வாய்க்கேட்டுணர்க: உதாரணம் முன்னர்க் காட்டுதும், பின்னர்க் கூறுதும், என்னை, எற்றிற்கு, யாங்ஙனம், அற்றன்று, நன்று கூறுவாரும் உளர் என்று எழுதிச் செல்லும் தொடர்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவையாகும்"[8] என்று இரா. மோகன் உரையின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

உரையின் வளர்ச்சி

உரை என்ற வகையில் முதலில் தோன்றிய உரை இறையனார் களவியல் உரையே ஆகும். "கி.பி.எட்டாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான இடைக்காலத்தில் பழந்தமிழ் நூல்களுக்கெல்லாம் உரையெழுதப் பட்டு வந்திருக்கிறது."[9] என்று உரை தோன்றிய காலம் பற்றி அறிஞர் கூறுவர். வாய்மொழியாக உரைகேட்டுப் பழகியவர்கள் தொடக்க காலத்தில் விரிவாக உரை எழுதவில்லை. அவர்கள் அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுதலும் சொற்களைக் கொண்டு கூட்டி வினைமுடிவு காட்டுதலும் சில வரலாற்றுக் குறிப்புகளும் இலக்கணக் குறிப்புகளும் தந்து சென்றனர். காலம் செல்லச்செல்ல எல்லா நிலையிலும் வளர்ச்சி ஏற்பட்டது போன்று உரைகளும் வளர்ச்சி பெற்றன. குறிப்புரை விளக்கவுரையாக வளர்ந்தது.

உரையானது ஒரே நாளில் வளர்ச்சி பெற்றுவிட வில்லை. காலமாற்றமும் கருத்து வேறுபாடுகளும் உரை வளர்வதற்கு ஆதாரமாக இருந்தன. "பழங்காலத்தில் நூல்களைக் கற்றறிந்தவர், வழிவழியாகப் பிறருக்கு அந்நூலின்

நுட்பங்களைச் செவிவழியாக எடுத்துக் கூறி வந்தனர். ஆசிரியர் தம் மாணவர்களுக்கு வாய்மொழியாகப் பழைய நூல்களுக்கு விளக்கம் கொடுத்து வந்தனர். இவ்வாறு ஒரு நூல் பல தலைமுறைகளைத் தாண்டி வரும் போது ஒவ்வொரு பரம்பரைக்கும் உரிய கருத்துகளையும் விளக்கத்தையும் சேர்த்துக் கொண்டு வந்தது. வழிவழியாகப் பாடம் சொல்லச் சொல்ல நூல்களுக்குரிய விளக்கம் பெருகியது. அதன் பின்னர் வந்தோர் முன்னோர் கருத்துகளுடன் தம் கருத்துகளையும் விளக்கவுரையாகச் சேர்த்துக் கொண்டனர். பொருந்தாதவற்றை மறுத்துரைத்தனர். சிலவற்றைக் கூட்டினர். மாணவர்களது ஐயங்களைப் போக்கினர் மாணவர்கள் கேட்ட வினாக்களுக்கு ஆசிரியர்கள் தாம் மனங்கொண்ட கருத்துகளையும் விடையாகத் தந்தனர். இவ்வாறாகவே உரை வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்”[10] என்பர் மு.வை.அரவிந்தன். மேலும் உரையானது ஆசிரியர் மாணவன், தந்தை மகன் என்ற நிலையிலும் வளர்ந்ததெனக் குறிப்பிடுகிறார்.

விளக்கவுரை

நூலுக்கு உரை தோன்றும் நிலை வளர்ந்து ஒரு நூலுக்குப் பல உரைகள் தோன்றியது உரையின் வளர்ச்சி நிலையாகும். அவ்வாறு தோன்றிய உரைகள் முன்னைய உரைகளைவிட விளக்கமானவையாக அமைந்தன. பின்னைய உரைகள் தனக்கு முன் தோன்றிய உரைகளின் கருத்துகளைத் தொகுத்துத்தரும் வாய்ப்பினையும் மறுத்துக்கூறும் உரிமையினையும் பெற்றன.

உரைக்கு உரை

மூல நூல்களுக்கு உரை தோன்றியதைப் போன்றே உரைக்கும் உரை தோன்றியது. பரிமேலழகரின் திருக்குறள் உரைக்குத் திருமேனிகாரி இரத்தின கவிராயர் என்பவர். ‘நுண்பொருள் மாலை’ என்ற பெயரில் உரை வகுத்தார். இவரைத் தொடர்ந்து சரவணப்பெருமாள் ஐயர், முருகேச முதலியார், குப்புசாமி முதலியார், வை.மு.கோபால கிருட்டிணமாச்சாரியார் போன்றோர் பரிமேலழகர் உரைக்கு விரிவுரை எழுதினர். ‘‘திருக்குறள் பரிமேலழகர் உரைக்கும், நாலாயிர

திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களுக்கும், தொல்காப்பிய உரைகளுக்கும் உரை விளக்கங்கள் தோன்றியுள்ளன"[11] என்பர்.

செய்யுள் வடிவ வரை

உரைகள் உரைநடை வடிவில் மட்டுமன்றிச் செய்யுள் வடிவிலும் சில தோன்றின. "ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுள் உருவத்திலேயே உரை இயற்றுவதும் உண்டு. இது வட மொழியில் பெருவழக்கு. தமிழ் நூல்களிலும் சிவஞான போதத்துக்குரிய உதாரண வெண்பாக்களும், சித்தியார் முதலியனவும் உரைநிலையிலேயே உள்ளன. தேவாரப் பதிகங்களில் பாசுரம் முதலிய சிலவற்றிற்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் சொல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுள் உருவத்தில் உரையுண்டு. தனியே குறளுரை என்னும் பெயர் பெறாவிட்டாலும், அவை உரைகளின் தன்மையை உடையனவே என்பர் உ.வே.சாமிநாத ஐயர்"[12] அகநானூற்றுக்குப் பழங்காலத்தில் அகவற்பாக்களால் ஆன உரை இருந்ததை அதன் உரைச் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம். திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் பல உரைகள் தோன்றியுள்ளன.

நூலாசிரியரே எழுதிய உரைகள்

ஒருவரது நூலுக்குப் பிறர் உரை எழுதும் நிலைமாறி நூலாசிரியரே உரை எழுதும் வழக்கம் ஏற்பட்டது. இம்முறை, வடமொழியாளரைப் பின்பற்றித் தோன்றியதாகும். இப்போக்கினை இருபதாம் நூற்றாண்டிலும் காணமுடிகிறது. தமிழ் மொழியில், நூலாசிரியரே உரை எழுதும் வழக்கத்திற்குக் கால்கோள் செய்தவர் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய ஐயனாரிதனார் ஆவார்.

இலக்கியங்களில் உரை பற்றிய குறிப்புகள்

இலக்கியங்களில் இலக்கணத்தைப் போன்று உரை பற்றிய விளக்கங்கள் மிகுதியாக இல்லை. ஆனால் உரை என்னும் சொல் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன. நற்றிணையில்,

"உரை அவற்கு உரையாம்"[13]

என்னும் இடத்தில் உரை என்பது 'சொல்' என்னும் பொருளில் வரப்பெற்றுள்ளது. குறுந்தொகையில்,

"நமக்கு உரைத்தோறும் தாமே"[14]

என்னுமிடத்தில் உரையானது 'சொல்லுதல்' என்னும் பொருளில் வந்துள்ளது. ஐங்குறுநூற்றில்,

"உரைத்தெனென் அல்லனோ அ.்.து என் யாய்க்கே"[15]

என்னுமிடத்தில் உரை என்பது 'சொல்லுதல்' என்னும் பொருளில் வந்துள்ளது. பதிற்றுப்பத்தில்,

"உரைசான் றனவால் பெருமைநின் வென்றி"[16]

என்னுமிடத்தில் உரையானது 'புகழ்' எனும் பொருளைக் குறித்து வந்துள்ளது. பரிபாடலில்,

"உரைச்சிறைப் பறை எழஊர் ஒலித்தன்று"[17]

என்னுமிடத்தில் உரையானது 'சொல்' எனும் பொருளில் வந்துள்ளது. கலித்தொகையில்,

"உரைசெல உயர்ந்து ஓங்கிச் சேர்ந்தாரை ஒருநிலையே

வரைநில்லா விழுமம் உறீஇ நமக்கு உரைத்துத்

தெறமல்மலை"[18]

என்னுமிடத்தில் உரை என்ற சொல் 'புகழ்' என்னும் பொருளைக் குறித்து வந்துள்ளது.

நாலடியார் குறிப்பிடும் உரையின் வகைகள்

· நாலடியார் உரையின் வகையினை,

"பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கின்

கொழித்தகலங் காட்டாதார் சொற்கள் - பழிப்பில்

நிரையாமா சேர்க்கும் நெடுங்குன்ற நாட!

உரையாமோ நூலிற்கு நன்கு?''[19]

என்று குறிப்பிடுகின்றது. திரண்ட பொருளைச் சொல்லுதல், விரித்துரைத்தல், கடாவும் விடையுமாகச் சொல்லுதல், இலேசான பொருளை உரைத்தல், எச்சவும்மைகளால் எஞ்சிய பொருளை உரைத்தல் என்னும் வகையால் ஆராய்ந்து விரிவான பொருளை எடுத்துரைக்காத சொற்கள் நல்ல உரைக்கு உண்டான தகுதியைப் பெறாது என்பது நாலடியார் பாடலின் விளக்கமாகும்.

முதல் உரை நூல்

உரை என்னும் பெயரில் அமைந்த முதல் நூல் இறையனார் களவியல் உரையாகும். இது இறையனார் அகப்பொருள், இறையனார் களவியல் என்றும் அழைக்கப் பெறுகிறது. தொல்காப்பிய உரைகளுக்கு எல்லாம் மூத்த உரையாக இவ்வுரை நூல் திகழ்கிறது. "மாணவர் ஆசிரியரான போது மகன் தந்தையான போது, முன்னோர் மொழிந்தவற்றைப் பின்னோர்க்கு அவர்கள் எடுத்துரைத்தனர். இவ்வாறு வாழையடி வாழையாக உரைகள் பல்கிப் பரவி வந்திருத்தல் வேண்டும். கேட்போர் நெஞ்சில் நிலைபெற்று வாய்மொழியாகப் பரவி வந்த உரைகள் பல உண்டு. இறையனார் களவியல் உரை இவ்வாறு பல தலைமுறைகள் வாய்மொழியாக வழங்கி வந்திருக்க வேண்டும்"[20] என்பர் மு.வை. அரவிந்தன் குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது.

உரைகளின் தேவை

இலக்கிய நூலைக் காட்டிலும் இலக்கண நூல்களுக்கு உரை இன்றியமையாத ஒன்றாகும். உரை இல்லாமல் இலக்கண நூல்களைப் புரிந்து கொள்வது அரிது. உரை நூல்களின் தேவையானது முதன் முதலில் நூற்பா யாப்பினால் ஆன இலக்கண நூல்களுக்கே அவசியமென உணரப்பட்டிருக்க வேண்டும். இலக்கண நூல்களைப் போன்று செவ்வியல் இலக்கியங்களுக்கும் உரை அவசியமாகக் கொள்ளப்படுகிறது. உரைகளால் எளிதில் பொருள்

விளங்காத பகுதிகள் விளக்கப்பெற்றுள்ளன. குறிப்புரைகள் பொழிப்புரையாகவும் விளக்கவுரையாகவும் வளர்ச்சி பெற்றன. ஒவ்வொரு நூலும் அது தோன்றிய காலத்தில் விளங்கும் நிலையில் இருந்திருக்கும். காலமாற்றத்தால் பின்னாளில் அந்நூல் புரியாத நிலையினை அடையும்போது உரை தேவைப்படும்.

உரையின் பயன்

இலக்கிய உலகில் உரைகள் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகின்றன. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கும் உரைகள் பெருமளவில் துணைபுரிகின்றன. உரையானது மூலத்திற்கும் வாசகருக்கும் இடையே ஓர் உறவுப்பாலமாகச் செயல்படுகிறது. உரைகள் மூல நூலின் காலத்தோடு உரையின் காலத்தினையும் வழக்கத்தினையும் எடுத்துரைக்க வல்லது. உரைகள் தோன்றியிராவிடில் பழமையான இலக்கிய இலக்கணங்கள் அழிந்தும் வழக்கொழிந்தும் போயிருக்கும். எஞ்சிய இலக்கிய இலக்கணங்களும் பொருள் விளங்கா நிலையில் இருந்திருக்கும். இலக்கணத்திற்கு முதலில் உரைகண்ட மரபுரையாசிரியர்களின் பங்கு அளப்பரியது.

முதற்காப்பியங்கள்

தமிழில் முதன்முதலாகத் தோன்றிய காப்பியங்கள் அல்லது கிடைத்திருப்பனவற்றில் முற்பட்டனவாக உள்ள காப்பியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே இவை முறையே கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக் காலத்தை ஒட்டியும், பின்பும் தோன்றின. இவற்றிற்கு முன்பு காப்பியங்கள் தோன்றவில்லை அல்லது கிடைக்கவில்லை. தொல்காப்பியர் கூறும் உரை என்ற புகழ் மரபுக் கதை வகைகள் இருந்தன. ஆதிகாலத்துக் குரவையில் பாடப்பட்ட உரை ஆடலுடனும் பாடலுடனும் கூடிய முறையில் பொது மன்றில் நிகழ்த்தப்பட்டது. மேலும் மன்னர்களின் புகழ் மரபு பற்றிய உரை ஆகியவை இருந்தன. இவை தவிர தொல்காப்பியத்தில் காணப்படும் எட்டு வனப்புகளில் ‘தொன்மை’ என்பவை பற்றி விளக்கும் போது இவற்றைக் காப்பிய வகைகள் என்றே உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் கூறி வந்துள்ளனர் என்பதை,

"தொன்மை தானே

உரையொடு புணர்ந்த பழமைமேற்றே"[21]

என்னும் சூத்திரம் தொன்மை வனப்பு பற்றியது. உரையோடு புணர்ந்த பழங்கதை எனப் பொருள் கொண்டு இதனைப் பழங்காப்பியம் என்றும் கூறுவர் பேராசிரியரும், தொன்மை என்பது உரை வீராய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது என்றவாறு"[22] என்பார் இதற்குச் சான்றாகப் பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதத்தையும் தகடூர் யாத்திரையையும் காட்டுவார். பாட்டிடையே உரையும் விரவிச் சொல்லப்படுவது தொன்மை எனலாம். பழமை என்பதற்குப் பழமைக் கதை என்றே உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். எனவே பழங்கதை, பாட்டிடையே உரை விரவிச் சொல்லப்படுவதே தொன்மையாகும். தொல்காப்பியத்தில் காணப்படுவது தவிர இச்சொல் வேறு எங்கும் இப்பொருளில் காணப்படவில்லை.

காப்பிய உரையாசிரியர்கள்

காப்பிய உரையாசிரியர்களில் குறிப்பாகச் சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். உரையாசிரியர்கள் என்னும் நூலில் மு.வை. அரவிந்தன் காப்பிய உரையாசிரியர்கள் வரிசையில் அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் ஆகிய இருவரை மட்டும் சுட்டியிருப்பதும் மற்றவர்களை சுட்டாமல் இருப்பதும் எமது ஆய்வுக் களத்திற்கு இடம் தந்துள்ளது. மற்றும் இவர்கள் சிலம்பிற்கு உரை எழுதிய காரணம், எழுதிய காலச் சூழல், சமூகப் பின்னணி போன்ற தோற்றப் பின் புலங்கள் குறித்தும் உரையாசிரியர்கள் என்னும் நூலில் இடம் பெறாததால் காப்பிய உரையாசிரியர்கள் குறித்த ஆய்வுப் பார்வையில் இம்முயற்சி புது முயற்சியாய் அமைந்து காணப்படும்.

அரும்பத உரைகாரர்

காப்பியங்களில் முதல் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்குப் பண்டைய உரைகள் இரண்டு உள்ளன. அவற்றுள் காலத்தால் முந்தியது அரும்பதவுரை, பிந்தியது அடியார்க்கு நல்லார் உரை ஆகும். இவ்விரு உரைகளையும் உ.வே.சா. அவர்கள் மூன்று முறை பதிப்பித்துள்ளர். காலத்தால் முந்திய அரும்பத உரையின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.இந்த உரை நூல் சிலப்பதிகாரம் முழுமைக்கும் உளது. பிந்தியது எனும் அடியார்க்கு நல்லார் உரை கானல் வரி நீங்கலாக 19 காதைகளுக்கு மட்டுமே உளது. ஆதலின் அரும்பத உரை ஒன்றே சிலப்பதிகாரம் முழுமையும் பொருள் செய்து கொள்வதற்கு உதவுகின்ற கருவியாக அமைந்திருக்கிறது. இவ்வுரையில் உள்ள முடிபுகளும் பொருளும் இல்லையாயின், அடியார்க்கு நல்லாருடைய உரை கிடையாத பாகங்களுக்குப் பொருள் காண்பது அரிது.

அரும்பத உரைகாரர் எனும் பெயர்

இவ்வுரைகாரரை அரும்பத உரைகாரர் என்று முதன் முதலில் குறிப்பவர் அடியார்க்கு நல்லார் ஆவர். சிலப்பதிகாரத்தில் இந்திர விழவூர் எடுத்த காதை என்ற ஐந்தாம் காதையில்,

ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்

அரச குமரரும் பரத குமரரும்

கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்

இவர்பரித் தேரினர் இயைந்தொருங்கு ஈண்டி (சிலம்பு.157-160)

என வரும் அடிகளில் எண்பேராயம் குறித்து மொழிகையில் "கரணத்தியல்வர் கருமகாரர், கனகச் சுற்றமங் கடைகாப்பாளர், நகரமாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீரர் இவுளி மறவர், இனையரெண்பேர் ஆயமென்ப எனுமிவர் இனி சாந்து பூ--------அவைகளத்தாரைந்து (157 உரை) எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்"[23] எனக் குறிப்பதன் வழி அறிய முடிகின்றது.

அரும்பதவுரைகாரரின் பெயர் முதலான வரலாறுகள்

ஒரு காலத்தில் அரும்பதவுரைகாரரின் பெயர் முதலான வரலாறுகள் நன்கு விளக்கம் பெற்றிருந்தன போலும். இன்று சிந்தாமணிக்காரர், குறளாசிரியர் என்ற தொடர்கள் பொருளுடையனவாய் இருத்தல் போல அடியார்க்கு நல்லார் காலத்தில் அரும்பதவுரைகாரர் என்ற பெயர் இருந்திருக்கலாம். பிற்காலத்தில் எத்தனையோ நூல்களும் வரலாறுகளும் செய்திகளும் மறைந்து போயினமை போல இவர் வரலாறும் பெயர் கூட அறிய இயலாத படி மறைந்து போயிற்று போலும். மற்றும் அடியார்க்குநல்லார் காலத்தில் அரும்பதவுரைகாரருடைய பெயர் முதலான வரலாறுகள் மறைந்து போயின என்று கருதுவதற்கு இடமுண்டு எனினும், சிலப்பதிகாரப் பயிற்சி குன்றிய பிற்காலத்தில் தான் அரும்பதவுரைகாரர் வரலாறு மறைந்து போயிற்று என்றும் எண்ணலாம். அடியார்க்குநல்லார் பெயர் சிறப்புப் பாயிரம் முதலான பாடல்களில் ஏறினமையாலும் நன்கு தெரிந்த ஒரு வள்ளலுடைய ஆதரவை அவர் பெற்றிருந்தமையாலும் அவருடைய வரலாறு இலக்கிய வரலாற்றில் விளக்கம் பெற்றிருக்கிறது. ஆயின் அரும்பதவுரைக்குச் சிறப்புப் பாயிரம் இன்மையாலும் பிற வரலாறுகள் இன்மையாலும் அடியாருக்கு நல்லார் உரை போல எல்லோரும் படித்துப் பயனடையுமாறு இல்லாது கற்றோர் மட்டுமே பயன்படத்தக்க சுருக்கவுரையாக இருத்தலாலும் இவருடைய வரலாறு விளக்கம் பெறவில்லை என்று கருதுவதற்கு இடமுண்டு.

அரும்பதவுரைகாரர் செயங்கொண்டாரா?

நீர்ப்படைக் காதையில்,

‘செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக

உயிர்த்தொகை உண்ட ஒன்பதிற் றிரட்டியென்று

யாண்டும் மதியும் நாளும் கடிகையும்

ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள’ (சிலப்: 27:7-10)

என்று வரும் அடிகளுக்கு அரும்பதவுரைகாரர் உரிய விளக்கம் தருகின்றார். “கூற்றுவன் செல்கின்ற உயிரைக் கவரும் தொழில் பெருகும் படியாக, உயிர்த்தொகை உண்டவனாகிய ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற்றிரட்டியென்று அவற்றோடே கூட்டி யெண்ண: தேவாசுர யுத்தம் பதினெட்டாண்டிலும், இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவனும் கனக விசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தவென்றெண்ண.”[24] இந்த யுத்தங்களை இதே முறையில் கலிங்கத்துப் பரணியின் செயங்கொண்டார் கலிங்கப் போரைச் சார்த்தி சொல்லுகிறார். அது,

“தேவாசுர ராமாயண மாபாரத முளவென்

றோவாவுரை யோயும்படியுளதப்பொரு களமே”[25]

என்பதாகும். இவ்வாறு எழுதியவர் தஞ்சைத் தமிழ்ப் பேரறிஞர் சீனிவாசப் பிள்ளை அவர்கள் ஆவர். “சீனிவாசப் பிள்ளையின் கருத்தைச் சேகரித்து தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலைப் பட்டியல் தயாரித்த உலகநாதம் பிள்ளை ஜெயங்கொண்டார் செய்த அரும்பதவுரை (முதல் தொகுதி 1925, பக்கம் 149) என்று குறிப்பிடுகின்றார்.”[26] ஆயின் இது பொருத்தமன்று. செயங்கொண்டார் முதற் குலோத்துங்கன் காலத்து வாழ்ந்தவர். அரும்பதவுரைகாரர் இராசராசன் காலத்து வாழ்ந்தவர். இருவரும் ஏறக்குறைய 80-100 ஆண்டு இடைவெளியிட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். அன்றியும் “தேவாசுர யுத்தம் என்ற கருத்து தமிழ் இலக்கியப் பரப்பில் சிந்தாமணியிலும்”[27] வேறுயிடங்களிலும் வருவதால் அரும்பதவுரைகாரர் செயங்கொண்டார் இல்லை என்பது ஆய்வாளர் முடிபாகும்.

உரை எழுதக் காரணம்

அரும்பதயுரையாசிரியர் உரை எழுதுவதற்கு முன்பே சிலப்பதிகாரத்திற்குக் குறிப்புரைகள் இருந்தன என்பதைப் பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்கிறார். அடைக்கலக்காதையில், “ஐய வித்துலாம், கைபெயரூசி பனை

(முரசென்பாருமுளர்) என்பவற்றுக்கு வேறு உரை சொல்வாரும் உளர் என்று குறிப்பிடுகிறார்"[28] 'ஆடக மாடம் - திருவநந்தபுரம்: இரவிபுரம் என்பாருமுளர்"[29] அரங்கேற்றுக் காதையில் "எழுத்தை எழுத்தாக இசைக்கும் குழலோன் என்றவிடத்து, 'அன்றியும் சரிகம பதநி என்பாருமுளர் என்று எழுதுகிறார்."[30] "அரங்கம் - திருவரங்கம்: ஆற்றிடைக்குறை என்பாருமுளர்."[31] என்பதால் இவருக்கு முன்னர் சிலப்பதிகாரத்திற்கு நிகண்டு தன்மையில் உரை இருந்ததை அறியமுடிகின்றது. இவர் பாடம் கொண்ட தன்மையாலும் இவருக்கு முன் சிலப்பதிகாரத்திற்கு உரை இருந்தமை புலப்படுகிறது. "கூற்றக்கொண்டிச் சேரன்-கூற்றங் கொண்டிச் சேனை என்பது பாடமாயின், கூற்றம் பின் செல்ல இப்படை செல்லுகிற படியை என்க."[32] "விலங்கி நிமிர் நெடுங்கண்: விலங்கு பாடமாயின் பக்கமென்க என்று எழுதுவர்."[33] "நவைநீர்- குற்றத்துக்காகக் கண்ணீர் உகுக்குகையால் நவைநீர் என்றார். நவநீர் என்று பாடமோதி புதிய நீர் என்பாரும் உளர்."[34] "புன்மலரோங்கி- பன்மரமோங்க என்றும் பாடம். அருளால் என்று பாடமோதி, அருளாற் சாபம் நீங்கிய என்றுமாம்."[35] தன் கணவனை எங்கணா என்ன என்று அடியார்க்கு நல்லார் பாடம் கொண்டிருக்க, இவர் எங்கணாய் என்று கொண்டு எங்குற்றாய் என்று உரை கூறுகிறார்"[36] சில சமயம் இவர் ஒருரையைக் கூறிவிட்டுப் பின்னர் மற்றோர் உரையைக் கூறுதலும் உண்டு. 'வழக்குரை காதையில் 'செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்' என்ற அடிக்குப் பின்வருமாறு எழுதுவார். "செறுகை-முகக் கோட்டம், செயிர்க்கை-மனக் கோட்டம், அன்றி செற்றனன் போலும் மாற்சரியமுடையாள் போலும், செயிர்த்தனள் போலும் மிக்க கோபமுடையாள் போலும் என்றுமாம்"[37] "வழங்குவில் தடக்கை - வில் வழங்கு தடக்கை, வழங்கு வில் - அம்பை வழங்கும் வில்லென்றுமாம், ஆரம்-சந்தனம், ஆத்தியுமாம், ஐந்து கேள்வி- திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்று சொல்லிவிட்டுப் பின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசக்கோளுமாம்"[38] என்று கூறுகிறார். இதன்வழி சிலம்புக்கு குறிப்புரை இருந்ததை அறியமுடிகிறது.

இவ்வாறு உரையாசிரியர் காட்டும் முன்னைய உரைகளும் இவர் பாடங் கொள்ள வைக்கும் தன்மையில் அமைந்த உரைகளும் இருந்தமையால் அவற்றிலிருந்து விளங்கும் வகையில் ஓர் உரை வேண்டும் என்று உணர்ந்தமையால் சிலப்பதிகாரச் செய்யுள் அடிகளில் வரும் அரும் பதங்களுக்கு இவர் உரை கண்டார் என்று கருத இடமுண்டு.

“அகத்தியச் சொல்லதிகாரச் சூத்திரம்”[39], “இசைத் தமிழ் பதினாறு படலத்துட் கரணவோத்து”[40] “செயிற்றியனார்”[41] என்பன பெயர் குறிப்பிட்டுச் சொல்கிறார். ஆனால் இன்று இந்நூல்கள் இல்லை.

இவர் தோன்றிய காலம் சைவ சமயம் பெருமலர்ச்சி பெற்று வந்த சோழர் காலம். அதாவது முத்தமிழிலும் பெரும் புலமை எய்தியிருந்த இப்பேராசிரியர், தம் புலமை வெளிப்பாட்டுக்குத் தக்க முத்தமிழ் திறம் வாய்ந்த காப்பியம் எதுவும் வேறு இல்லாமையால் சிலப்பதிகாரத்தை உரை இயற்றுவதற்கு உரியதாகக் கொண்டார் எனும் செய்தி இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதக் காரணம் எனக் குறிப்பிடலாம். இவர் விரிந்த சமய நோக்குடையவராய் இருந்தமையும், இளங்கோவடிகள் செய்த காப்பியமும் விரிந்த சமய நோக்குடையதாய் இருந்தமையும் இவர் நூலைத் தாம் உரை எழுத தேர்ந்து கொண்டார் எனலாம்.

அரும்பதவுரைகாரரின் காலம்

இவ்வுரையாசிரியர் காலத்தை அறிவதற்குத் திட்டமான ஆதாரங்கள் இல்லை. இருப்பின் உரையின் தொடக்கத்தில் விநாயகர் வணக்கம் இருப்பதைக் கொண்டு இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்று இலக்கிய வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவர். ஆயின் இதில் ஐயப்பாடு உள்ளது. இவர் மேற்கோள் காட்டும் இலக்கியங்களில் புறப்பொருள் வெண்பாமாலை முதலிடம் பெறுகிறது. அந்நூலின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. ஆதலின் இவர் ஒன்பதாம் நூற்றாண்டு எனக் கூறினார் போலும். அத்துடன் “நரசிம்ம வர்மனுடைய படைத்தலைவராக மேலைச் சாளுக்கியர் மீது படை நடத்தி வாதாபியை அழித்த சிறுதொண்டர் வாதாபியிலிருந்து விநாயகரைக் கொண்டு வந்து தீபங்குடியில் பிரதிட்டை

செய்தார். அவ்விநாயகர் வாதாபி கணபதி என்ற பெயரால் இன்றும் வழங்கப் பெறுகிறது. அக்காலம் முதற் கொண்டே தமிழ் நாட்டில் தனி விநாயகர் வணக்கம் ஏற்பட்டது. இது நடந்தது கி.பி 7ஆம் நூற்றாண்டு ஆகும்."[42] ஆதலால் நூல் முகப்பில் விநாயக வணக்கம் கூறுவது நீண்ட நாள் பிற்பட்டே ஏற்பட்டிருக்கும். எட்டு ஒன்பது நூற்றாண்டுகளுக்குப் பின்னரே இவ்வமைப்பு ஓர் இலக்கிய மரபாகி விட்டது எனலாம். இதன்படி பார்த்தாலும் கூட விநாயகர் காப்புச் சொல்லி உரை செய்யத் தொடங்கும் இவ்வரும்பதவுரைகாரர் 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டினர் ஆகலாம். இவரையடுத்து அடியார்க்கு நல்லார் தோன்ற இவ்வுரையை நன்கு பயின்று தாமும் சிலப்பதிகார விரிவுரை ஒன்று எழுதினார். அவர் காலம் 1150-1175 ஆதல் பொருந்தும். இக் கருத்தை வலியுறுத்தும் வகையில் இரு சான்றுகள் உள,

அத்திர என்ற ஒரு சொல்லை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். கடலாடச் சென்ற கோவலன் அத்திரி மீது இவர்ந்து சென்றான் என்கிறார். "வான வண் கையன் அத்திரி ஏற"[43] என்பது அவர் கூற்று. அத்திரி என்பது மூலம் விளங்காத ஒரு சொல். கழுதை என்று திவாகரமும் ஒட்டகம் என்று பிங்கலமும் கூறுகின்றன. மனப் பேரத்தரி என்ற விடத்து மனமென்னும் குதிரை என்று ஞானாமிர்தவுரை(12ஆம்நூ) கூறுகிறது. திவாகரமும் பிங்கலமும் 9,10ஆம் நூற்றாண்டுகள். அரும்பதவுரைகாரர் அத்திரி என்பது கோவேறு கழுதை, குதிரையில் ஒரு சாதி என்று எழுதுகிறார். இதை அடியார்க்கு நல்லார் அப்படியே ஏற்றுக்கொண்டு கோவலன் இராசவாகனத்தின் மீது சென்றான். இராச வாகனம் என்ற பெயர் கோவேறு கழுதை என்பதன் வட மொழிபெயர்ப்பு என்று தெளிவாகப் புலப்படும். 9 ஆம் நூற்றாண்டில் கழுதையாக இருந்த சொல் 12 ஆம் நூற்றாண்டில் குதிரையாக மாறிய போது, இடையில் கோவேறு கழுதை என்ற நிலை வழியாக வளர்ந்திருந்தது என்று கொள்தல் பிழையாகாது. அப்படியானால் கோவேறு கழுதை என்று பெயர் சொல்லுகிற அரும்பத உரைகாரர் காலம் 9க்கும் 12க்கும் இடைப்பட்ட காலம். ஆதலின் 11 ஆம் நூற்றாண்டு என்று கருதலாம். மேலும், கண்ணகிக்குச் செங்குட்டுவன் கோவில் அமைத்து அருச்சருக்கு மானியம் அளித்தான் என்று கூறுமிடத்து,

இளங்கோவடிகள்,'பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து' என்று கூறுவர். "பத்தினிக் கோட்டம் - கண்ணகி கோவில் . படிப்புறம் - அர்ச்சனா போகம் என்று அரும்பதவுரைகாரர் எழுதுவர்."[44] அர்ச்சனா போகமாவது, கோவில் அர்ச்சகருக்கு மானியமாக அளிக்கும் நிலம். படிப்புறம் என்றசொல்லுக்கு அர்ச்சனா போகம் என்று உரை எழுதுகிறார். இச்சொல் இவர் காலத்தில் நன்கு பழக்கமான பெரிதும் வழக்கிலுள்ள, ஒரு தொடர் போலும். இவர் காலத்தில் சோழ மன்னர் ஆட்சி பொன்னி நாட்டில் நிலைபெற்று வளர்ந்து வந்தது. இவர்கள் எண்ணற்ற கற்கோவில் கட்டி அவற்றில் வழிபாடு முதலிவற்றுக்காக அளவில்லாத பொருளும் நிபந்தங்களும் நிலங்களும் அளித்தார்கள். "முதன் முதலாக நாம் அறிவது முதற் பராந்தக சோழன் (907-953) தனது 28ஆம் ஆட்சி ஆண்டில் இன்றைய தென்னார்க்காடு ஜில்லா செம்பியூரில் உள்ள கடம்பவனேசுவரர் கோவிலில் அர்ச்சனா போகம் அளித்தான் என்பது கல்வெட்டுச் செய்தி. இதன் காலம் கி.பி.935. இதன் பின்னர் கி.பி.1118 - 1135 இல் அரசாண்ட விக்கிரம சோழன் மன்னனது நான்காம் ஆட்சியாண்டில் (1122) திருக்கடவூர் மகாசபையர் மூன்று வேலி நிலம் அர்ச்சனா போகம் அளித்தனர். என்று சாசனம் கூறுகிறது. கி.பி.1129 இல் திருக்கண்ணபுரத்திலும், 1144 உத்திரமேரூரிலும் அர்ச்சனா போக இறையிலி அளிக்கப்பெற்ற செய்திகள் தெரிகின்றன. முதல் பராந்தகன் காலத்தில் 935 இல் முதலாவதாக அர்ச்சனா போகம் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக பிற்காலச் சோழ மன்னர்கள் அளித்த நிபந்தனைகளும் நன்கு ஆட்சி பெற்றிருக்கிறது. இதனால் அரும்பதவுரைகாரரின் அடுத்து வாழ்ந்திருக்கலாம். அதனானின் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எனப் பொருந்துமென்று தோன்றுகிறது. பெருஞ் சிறப்போடு சோழ சாம்ராஜியத்தை நிலை நாட்டிப் பரப்பிக் கோவில் திருப்பணிகளை வளர்த்த பேரரசன் இராசராசன். இவன் காலம் 985-1014. இவனுக்குப் பின்னரே நாட்டில் சிவாலய தருமங்கள் அதிக வழக்குப் பெற்றன. இவை பற்றிய சொல்லாட்சிகளும் பெருகின. எனவே படிப்புறம் - அர்ச்சனா போகம் என்று குறிப்பிடுகின்ற இவ்வுரையாசிரியர் பராந்தகனுக்கு ஒரு நூற்றாண்டு பின்னரும் இராசராசன் காலத்தில் அல்லது அதையடுத்தும் வாழ்ந்தார் என்று

கருத இடமுளது”[45] என்னும் கருத்தாக்கங்கள் அரும்பத உரைகாரரின் கால ஆய்வினை வெளிப்படுத்துகின்றன.

அரும்பதவுரைகாரரின் சமயம்

உரைகாரின் சமூகப் பின்னணி பற்றி ஆய்கையில் சமயம் முதலிடம் பெறுகிறது. அவ்வகையில் இவ்வுரையாசிரியர் தம் உரைத் தொடக்கத்தில் விநாயகர் காப்பாக ஒரு வெண்பாவை அமைத்துளர். அது,

கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்

விரும்பும் விநாயகனை வேண்டி – அரும்பவிழ்தார்ச்

சேரமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்

சாரமாய் நாவே தரி

என்பதாகும். இது கொண்டு இவர் சைவ சமயத்தினர் என்று சொல்லுவர் இதற்கேற்ப சைவத்தலங்கள் முதலியவற்றை மிக்க பக்தியோடு குறிப்பிடுவர். “ஊர் கோட்டம் - ஸ்ரீ கைலாயம் நிற்கும் கோயில்”[46] “வாரணம்-ஸ்ரீவாரணாசி”[47] “நெடுவேலோன் குன்று – திருச்செங்கோடு”[48] சைவசமயத்தர் வினையைப் பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்று மூன்றாகச் சொல்லுவர். இம்மூன்றினுள் பிராரத்தம் என்ற வினைப் பகுதியே ஊழ்வினையாகிய பழவினை எனப்படும். இந்நூற் பதிகவுரையில் இவ்வுரைகாரர் ஊழ்வினை முறைமையாகிய பழவினை என்று எழுதியிருப்பது இச்சைவத் தத்துவத்தை உணர்ந்து எழுதியது போல் தோன்றுகிறது. ஆதலால் இவர் சைவசமயத்தைச் சார்ந்தவர் என நினைக்க வாய்ப்பிருக்கிறது. மற்றும் ‘அர்ச்சனா போகம்’ என்பதற்கு உரை எழுதும் இவர் சைவ சமயம் சார்ந்தவர் என்று புலப்படுகிறது.ஆயின் இவர் பிற சமயத் தெய்வங்களைப் பற்றிக் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. “நெடுமால்- ஸ்ரீ இருந்த வளமுடையார்”[49] “அரங்கம்- திருவரங்கம்”[50] “அருகன் கோயிலை எங்கும் ஸ்ரீகோயில்”[51] என்றே குறிப்பிடுவர். “கந்தன் பள்ளி - உறையூர் ஸ்ரீகந்தன் பள்ளி”[52] “மங்கல மடந்தைக் கோட்டம்”[53] “ஆயிழை கோட்டம்”[54] என்று சைவம்

சமணம் சார்ந்த கோவில்களை இவர் குறிப்பிடுகையில் ஶ்ரீ என்னும் அடைகொடுத்து எழுதுவது இவரை வைணவப் பற்றாளராகக் காட்டுகிறது. மேலும். இவர் உரையில் வடமொழியின் சொற்களும் தொடர்களும் பயின்று வருகின்றன. எடுத்துக்காட்டாக, "கையுறை - பாகுடம்"[55], "வஞ்சமோ - கிருத்திரிமமானது"[56], "உள்வரிக்கோலம் - கிருத்திரிமவேடம்"[57] "கருணை மறவ - கிருபா வீரனே"[58], "வானவர் போற்றும் வழி - மோட்சமார்க்கம்"[59] "கோமுறை - இராசநீதி."[60] "வேள்வேற்கொற்றம் - இராசநீதி"[61] ஆகியன உரைகாரர் தரும் வடசொல் விளக்கமாகும். தொடர்களுக்கு "நான்மறை அந்தணர் நவின்ற ஓசை என்றவிடத்து, முனிவர் சத்திரமோதுகின்ற ஓசை என்று குறிப்பிட்டு எழுதுவது சான்றாக அமைகிறது. மேலும், அடைக்கலக் காதையில் வரும் 'வடமொழி வாசகம் செய்த நல்லேடு' என்ற இடத்தில் வடமொழி வாசகமாவது ஒரு கிரந்தம்: அது,

அபரீக்ஷ்ய நகர்த்தவ்யம் கர்த்தவய்ங் ஸுபரீக்ஷிதம்

பஸ்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம் யதா

என்பது பஞ்ச தந்திரப் பாடலைத் தெரிந்து இவர் குறிப்பிடுகிறார்"[62] கிரந்தம் என்பது வடமொழியில் 32 எழுத்துக் கொண்ட ஒரு செய்யுள். இப்பாடல் ஒரு கிரந்தம் என்று தெரிந்து கூறுவது என நோக்குகையில் இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்று அறியப் பெறுகிறது. மேலும், அரும்பதம் என்ற தொடர் வைணவ மரபில் ஆட்சியில் உள்ளது. ஜீயர் அரும்பதம் என்பது போன்ற சொல்லாட்சிகள் அங்கு அதிகம். இவர் தம் உரையில் ஶ்ரீ என்ற வைணவ மரபு காணப்படுவதாலும் இவர் வைணவர் என்பது உறுதியாகிறது.ஆனால் விநாயக வணக்கம் இங்கு இடையூறு ஆகிறது. ஆதலால் விநாயகர் வணக்கம் இடைச்செருகலாக அமைய வாய்ப்பு உளது. ஏனெனில் விநாயக வெண்பா எளிய பதங்களுடன் 'சிலப்பதிகாரக் கதையைச் சாரமாய் நாவே தரி' என வருகிறது. உரை சொல்ல வந்தவிடத்தில் கதை எதற்கு. கதை வாய்மொழியாக மக்களுக்குத் தெரிந்த ஒன்று. சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள சொற்பதங்களுக்குக் கல்வியாளரும் கூட பொருள் தெரியாத நிலையில் பொருள்

கூறும் அரும்பதகாரர் இப்படியொரு வெண்பா செய்திருப்பார் என்ற ஐயப்பாடுள்ளது.

அடியார்க்கு நல்லார்

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் வரலாறு, காலம், சமயம் போன்றவைஇன்றுவரை தெளிவாக்கப்படாமல் உளது. அது போல் சிலப்பதிகாரத்திற்கு முத்தமிழைப் பிரதிபலிக்கின்ற வகையில் உரைசெய்த அடியார்க்கு நல்லார் வரலாறும் வெளிப்படையாக எங்கும் இல்லாமல் கருத்து வேறுபாடுகளுடன் நிலவுகின்றது. இருப்பின் அடியார்க்கு நல்லார் குறித்து ஆய்ந்த தமிழ் அறிஞர்களின் நடுநிலைச் சிந்தையோடு அவருடைய வரலாறு மற்றும் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதுவதற்கான பின்புலம் போன்றவை பின்வரும் பகுதியில் விளக்கப்பெறுகிறது.

பெயர்

அடியார்க்கு நல்லார் எனும் பெயரை முதன் முதலில் அவர் உரைக்கு அமைந்த சிறப்புப் பாயிரத்தால் அறியமுடிகின்றது. ‘‘இப்பாயிரம் யார் இயற்றினார் என்பது தெரிந்திலது. இருப்பின் இப்பாயிரப்பாடல்கள் ஒவ்வொரு காதையிலும் உரையின் இறுதியில் இருந்ததாகவும், பண்டைக் காலத்தைச் சார்ந்தவை என்றும் உ.வே.சா. அவர்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.’’[63] சிறப்புப்பாயிரப் பாடல்களான,

‘‘பருந்து நிழலுமெனப் பாவு முரையும்

பொருந்துநெறி யெல்லாப் பொருளும் - தெரிந்திப்

படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்

அடியார்க்கு நல்லானென் பான்’’[64]

என வரும் வெண்பாவும்,

‘‘ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்

சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்

ஆருந் தெரிய விரித்துரைத் தானடி யாக்குநல்லான்

காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே"[65]

என வருவனவும்,

"காற்றைப் பிடித்துக் கடத்தி வடைத்தக் கடியபெருங்

காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனும்

கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த

சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல் வித்தே"[66]

என வருவனவும் அடியார்க்கு நல்லார் வரலாற்றை அறிவதற்குத் துணை செய்கின்றன.

மேற்சுட்டிய பாடல்கள் அடியார்க்கு நல்லார் பற்றி,

1.சேர இளவல் இளங்கோவடிகள் செய்த முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திற்கு விரித்துரை எழுதியவர் அடியார்க்கு நல்லார் எனும் புலவர் ஆவர்.

2. இவர் மழை போன்றும் கற்பகத்தரு போன்றும் சிலப்பதிகாரத்திற்கு உரை வரைந்தார்.

3. இவருக்கு 'நிரம்பையர் காவலர்' என்ற மற்றொரு பெயரும் வழங்கப்பட்டிருக்கிறது.

4. இவரை ஆதரித்து உரை செய்வித்தவன் பொப்பண்ண காங்கேயர்கோன் என்னும் புரவலனாவான் என்று எடுத்துரைக்கின்றது.

சமயம்

அடியார்க்கு நல்லார் எனும் பெயர் சைவப் பெயரா? எனும் வினா முதலில் எழுகிறது. அதற்குக் காரணம் சம்பந்தர் தேவாரத்தில்,

கண்ணு ளார்கரு வூருள் ஆனிலை

அண்ண லார் அடி யார்க்கு நல்லரே

என்று திருக்கருவூரானிலைப் பதிகம் குறிப்பதால் "அடியார்க்கு நல்லார் எனும் பெயர் சிவபெருமானைக் குறிப்பதால் இவர் சைவர் என்பர்."[67] மற்றும் "கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் கந்தரலங்காரம் பாடிய அருணகிரிநாதர் முருகனை 'அடியார்க்கு நல்ல பெரும' என்று குறிப்பர். இவ்வாறு இலக்கியங்கள் 'அடியார்க்கு நல்லார்', 'அடியார்க்கெளியன்', அடியார்க்குப் பெருமாள்', எனும் சொல்லாட்சிகள் காணப்படுவதால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பர்."[68]

துறவறத்தைக் கூறுமிடத்து, "அதன் துறை சரியை,கிரியை, யோகம், ஞானம் என்பன, சரியை அலகிடல் முதலியன, கரியை பூசை முதலியன, யோகம் எண்வகையன, அவை இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்பன, என்று கூறி எட்டையும் விளக்கும் எட்டு நூற்பாக்களை எடுத்துரைக்கின்ற காரணத்தால் சைவர்"[69] எனபர்.

"திருக்கோவையார்த் தொடர்களை மேற்கோள் தந்தும் உரைநடையாகவே வைத்தும் எழுதுவதால். இவரைச் சிறந்த சைவர் என்றும், சிவபிரானையே பரம்பொருளாகக் கொண்டவர் என்பது தெளிவு என்பர் மு. அருணாசலம்."[70]

மேற்குறித்த சான்றுகளை உற்று நோக்கின் சிவபிரானைக் குறிக்கும் 'அடியார்க்கு நல்லார் என்ற பெயரைத் தமக்குப் பெயராகக் கொண்டுள்ளார் என்பதை விட பொதுவாக இறைவனைக் குறித்த தொடரைத் தம் பெயராகக் கொண்டுள்ளார் என்பது பொருந்தும்."[71] சம்பந்தர் தேவாரம் தவிர இத்தொடர் பிற இடங்களில் சிவபெருமானைக் குறிக்கவில்லை. சிவன் கோவில்களில் அடியார்க்கு நல்லார் என்ற பெயரில் சிவபெருமான் குறிக்கப்படுகிறார் என்பதற்குச் சான்றுகள் இல்லை. இறைவன் என்ற பொதுப் பெயர் எல்லாக் கடவுளரையும் குறிக்கும். இறைவன் சொல்லைச் சிவனுக்கு மட்டுமின்றி அருகதேவரையும் குறிக்க அடியாரக்கு நல்லார் பயன்படுத்துகிறார்,

"உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்

பெருமகன் றிருமொழி பிறழா நோன்பும்

உடையீ ரென்னே வுறுக ணளரிற்

கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென" (சிலப்:10:46-49)

என்னும் அடிகளுக்கு உரை எழுதும் போது இந்நிலை காணப்படுகிறது. பெருமகன் என்ற சொல்லுக்கு 'அருகதேவன்' என்று பொருள் கூறி, திருமொழியை 'அவன் அருளிச் செய்த ஆகமம்' எனக்குறித்து 'இறைவனூலிற் கூறிய விரதந் தப்பாமை' என்பதால், அருகதேவனை இறைவன் என்றே குறிக்கின்றார். நல்லார், அருகனைப் போற்றுகின்ற அளவிற்கு சிவபிரானைப் போற்றவில்லை இதனை அவர் உரை வழி அறியமுடிகின்றது.

நிரம்பையர் காவலர் பெயர்க் காரணம்

அடியார்க்கு நல்லாருக்கு 'நிரம்பையர் காவலர்' எனும் பெயர் ஊரால் வந்தது என்றும், நிரம்பை எனும் ஊர் கொங்கு மண்டலத்தில் குறும்பு நாட்டில் பெருங்கதை ஆசிரியராகிய கொங்குவேளிர் பிறந்த விசயமங்கலத்தின் பக்கத்தில் உள்ளது என்றும் கொங்குமண்டல சதகம் தெரிவிக்கின்றது என்பர் உ.வே. சாமிநாதையர். இதனை,

"குருவை யுணர்ந்த இளங்கோ வடிகளுட் கொண்டு சொன்ன

தருவை நிகருஞ் சிலப்பதி காரத் தனித்தமிழுக்

கருமை யுரைசெய் அடியார்க்கு நல்லார் அவதரித்து

வருமைப் பொழில்நிரம் பைப்பதி யுங்கொங்கு மண்டலமே"[72]

என்னும் பாடல் விளக்கும். ''நிரம்பை எனும் ஊர் இன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெருந்துறையை அடுத்துள்ளது என்பர்.''[73] ஆதலின் அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தில் உள்ள நிரம்பை என்னும் ஊரினர் என்பது தெரியவருகிறது.

நிடும்பரையே நிரம்பையானது

"அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டினர் அல்லர், தீபங்குடி அருகே உள்ள நிடும்பரைத் தீர்த்தத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும் என்றும், இந்நிடும்பரைத் தீர்த்தமே பாயிரத்தில் நிரம்பை எனத் திரிந்திருக்க வேண்டும் என்றும், தீபங்குடி திருவாரூர் அருகில் முன்னொரு காலத்தில் சைனர் குடியிருப்பாய் இருந்தது என்றும், இன்றும் சைனர் அதிகமாய்க் குடியிருக்கின்ற ஊராய் திண்டிவனம் பக்கத்தில் தீபங்குடி உள்ளது என்றும், எனவே தீபங்குடி அருகில் உள்ள நிடும்பரைத் தீர்த்தத்தில் நல்லார் வாழ்ந்திருக்க வேண்டும்"[74] என்றும் கருதுவர் து.அ.கோபிநாத்ராவ் அவர்கள்.

சிங்கை நகரில் வாழ்ந்த நல்லார்

அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டிலுள்ள நிரம்பையூரர் என்பதை பொ. செகந்நாதன் ஏற்பர். இருப்பின் நல்லார் நிரம்பையில் வாழ்ந்து அங்கேயே உரை இயற்றினார் என்பதை மறுப்பர். காரணம், உரைசிறப்புப் பாயிரத்தில் அடியார்க்கு நல்லார் வரலாறு முழுமையாகக் கூறவில்லை என்றும் நிரம்பையில் வாழ்ந்த ஒருவரை நிரம்பைக் காவலர் என்று அழைக்கவேண்டிய தேவையில்லை, அவர் நிரம்பையை விட்டு வேறு ஒரு இடத்தில் காவருக்குரிய சிறப்போடு வாழ்ந்த காரணத்தால் அவ்வாறு அழைக்கப்பட்டார் என்பர். "இலங்கையில் சிங்கை நகரை ஆட்சி செய்த குணபூசணன் (கி.பி.1324-1371) தொண்டை நாட்டிலிருந்து பொப்பண்ண காங்கேயர் கோனை வரவழைத்துச் சேனாதிபதி ஆக்கினான் அவனே அடியார்க்கு நல்லாரை அமைச்சன் ஆக்கினான் என்று கூறி, அமைச்சனான அடியார்க்கு நல்லார் இலங்கையில் இருந்து சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றினார் எனும் கருத்துரைப்பர்."[75]

நல்லார் உரையில் ஈழநாடு பற்றிய செய்தியின்மை

தமிழகத்தில் இருந்த பல வழக்குகளைக் குறிப்பிடும் அடியார்க்கு நல்லார் சிங்கை நாட்டில் வாழ்ந்திருந்தால் அந்நாட்டு வழக்கையும் தம் உரையில் எங்காவது குறிப்பிட்டிருக்க வேண்டும். அங்ஙனம் நோக்கின் புகார் காண்டத்தில் கானல் வரி தவிர ஏனைய பகுதிகளுக்கும் மதுரைக் காண்டத்தில் ஊர்சூழ்வரி வரையிலும் இவருடைய உரை கிடைத்துள்ளது. இப்பகுதிகளில் சிங்கை நாடு

பற்றிய செய்தியில்லை. வஞ்சிக் காண்டத்திற்கு இவருடைய உரை முழுமையாகக் கிடைத்திருந்தால் ஒரு வேளை சிங்கை நாடு பற்றிய செய்தி நமக்குக் கிடைத்திருக்கும். ஏனெனின் வஞ்சிக்காண்டத்தில் வரந்தரு காதையில் இலங்கை மன்னன் கயவாகு பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது என்பது நோக்கத்தக்கது.

காலம்

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரம் வேனிற் காதையில் நக்கீரனார். உரைத்த இறையனார் பொருளுரையானும் உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பிறவற்றானும் பெரிதும் என்று குறிப்பிடுகின்றார். இதனால் நல்லார் உரையாசிரியர்களாய நக்கீரர் காலத்துக்கும் இளம்பூரணர் காலத்துக்கும் பிற்பட்டவர் என்பது தெளிவு. இதனை அடிப்படையாகக் கொண்டு மு. அருணாசலம் நல்லாரின் காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு என்பர்.''[76]

இந்திரவிழவூர் எடுத்த காதை, 157-160 ஆம் அடிகளுக்கு உரை எழுதும் போது எண்பேராயம் என்பதற்கு விளக்கம் தந்து விட்டு 'இனி,'சாந்துபூ…. அவைக்களத்தாரைந்து' எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்' எனச் சுட்டுகின்றார். எனவே அடியார்க்கு நல்லார் அரும்பதைவுரையாசிரியருக்குப் பிற்பட்டவர் ஆகின்றார். அதனால் நல்லார் கி.பி. 1025- க்குப் பிற்பட்டவர் என்பது அறியவருகின்றது.

கலிங்கத்துப் பரணி பாடல்களை மூன்று இடங்களில் மேற்கோள் காட்டுகின்றார். இக் கலிங்கத்துப் பரணி கொண்ட குலோத்துங்க சோழன் காலம் கி.பி.1070-1120. கலிங்கப் போரின் காலம் கி.பி.1112-க்குப் பின் என்பர். ஆதலால் பரணி நூலை மேற்கோள் காட்டும் நல்லார் கி.பி.1120-க்குப் பிற்பட்டவர் எனலாம்.''[77]

“இராமனுசரால் வைணவ மதத்துக்கு மாற்றப்பட்ட போசள விஷ்ணுவர்த்தன மன்னனின் மந்திரியும் படைத்தலைவனுமாகிய கங்கராசனின் புதல்வன் பொப்பண்ண காங்கேயர் கோன் ஆவான். இவன் அடியார்க்கு நல்லாரை ஆதரித்த வள்ளல் ஆவான். சமயத்தால் இவன் சைனன். இவனுடைய

காலம் கி.பி.1137 ஆகும்."[78] ஆதலால் அடியார்க்கு நல்லார் இவன் காலத்தைச் சேர்ந்தவர் எனக் கருத இடமுண்டு.

உரை தோன்றிய பின்புலம்

மேற்குறிப்பிட்ட கால ஆராய்ச்சியின் அடிப்படையை நோக்கின் அடியார்க்கு நல்லார் காலம் கி.பி.11 நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி.12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதை அறியலாம். இக்காலக் கட்டம் சைவ, வைணவத்தின் எழுச்சிக் காலம். இராசராசன் தொடங்கி இராசேந்திரன், முதற் குலோத்துங்கன் ஆண்ட கால கட்டம். இக்கால கட்டத்தில் சைன மரபுடைய அடியார்க்கு நல்லார் உரையை நச்சினார்க்கினியர் மறுப்பது கொண்டு அறியலாம். 'தொடர்நிலைச் செய்யுள் என்பதனைக் காப்பியம் என்று வழங்கலாம் என்ற அடியார்க்கு நல்லார் கருத்தை (சிலம்பு. பாயிரவுரை) நச்சினாக்கினியர் சீவகசிந்தாமணி யுரையின் தொடக்கத்தில் மறுப்பர்."[79] இம்மறுப்பு சமயத்தின் அடிப்படையில் தோன்றியது எனலாம். ஆதலால் சிலப்பதிகாரத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு சமண சமயத்தின் கருத்தை நிலைநாட்ட முயன்றதை அடியார்க்கு நல்லார் உரை செய்த பகுதி கொண்டு உணரலாம். இதுவே இவர் உரை தோன்ற பின்புலமாக அமைகிறது. கானல் வரி, வஞ்சிக் காண்டம் ஆகிய பகுதிக்கு இவர் எழுதிய உரைக் குறிப்புகள் பிற காதைகளில் காணப்படுவதால் சைவ, வைணவ எழுச்சி காலத்தில் சமயக் காழ்ப்புணர்ச்சி காரணமாக அடியார்க்கு நல்லார் உரை மறுக்கப்பட்டிருக்கலாம் அல்லது மறைக்கப்பட்டுக் கால வெள்ளத்தில் மறைந்து போயிருக்கலாம்.

பெருமழைப் புலவர் பொ.வே சோமசுந்தரனார்

பெருமழைப் புலவர் தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியை அடுத்து மேலைப்பெருமழை என்னும் ஊரில் 05.09.1909 ஆண்டு பிறந்தார். திண்ணைப் பள்ளி வரை கற்க அவருடைய தந்தையார் வேலுத்தேவர் அனுமதித்தார். அதன் பயனாகத் திண்ணைப் பள்ளியில் அரிச்சுவடி, ஆத்திசூடி, வெற்றிவேற்கை, நிகண்டு நூல்கள், நைடதம், கிருட்டிணன் தூது, அருணாசலப் புராணம், முதலான நூல்களைக் கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். இக்கல்வி வாய்ப்பு அவரின் ஐந்தாம் அகவை வரை நிகழ்ந்தது. பின்னர் திண்ணைப் பள்ளியின்

ஆசிரியரின் பாரதச் சொற்பொழிவு ஆற்றல் சோமசுந்தரனாரை ஆட் கொண்டதால் தம் ஆசிரியர் போல் படிக்க விரும்பி மடம். கோவில்களுக்குச் சென்று பெற்றோருக்குத் தெரியாமல் பாரதம், இராமாயணம் முதலான நூல்களைப் படிப்பதில் கவனம் செலுத்தினார்.

தாய் மரணமும் சர்க்கரைப் புலவர் ஆற்றுப்படுத்துதலும்

பெருமழைப் புலவருக்கு அகவை பத்து ஆகும் பொழுது அன்னையார் மறைந்தார். தந்தையார் வேலுத் தேவர் மறுமணம் செய்து கொண்டதால் புலவர் தம் தாய்மாமன் இல்லத்தில் தங்கியிருந்தார். அங்கு புலவருக்குக் கல்வி பயில ஒத்துழைப்பு இல்லாமல் போனது. மேலைப் பெருமழைக்கு அருகில் உள்ள ஆலங்காடு என்னும் ஊரில் வாழ்ந்த சர்க்கரைப் புலவரிடம் தம் புலமை நலம் தோன்ற சில பாடல்களை எழுதிச் சென்று காட்ட புலவரின் கவிபுனையும் ஆற்றலையும் கல்வி ஆர்வத்தையும் கண்ட சர்க்கரைப் புலவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று பயில ஆற்றுப்படுத்தினார்.

அண்ணாமலைப் பலக்லைக் கழக வாழ்வு

தமிழ் இலக்கியங்கள் மீது இணையில்லா ஈடுபாடு கொண்ட பெருமழைப் புலவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மிகப் பெரிய தமிழறிவை வழங்கியது. இவர் பயின்ற காலத்தில் சோழவந்தான் கந்தசாமியார், விபுலானந்த அடிகள், பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், பொன்னோதுவார், பூவராகன் பிள்ளை முதலான பேரறிஞர்களின் தமிழ் அறிவினைப் பெரும் வாய்ப்புக் கிட்டியது. பன்னிரண்டு ரூபாய் உதவித் தொகையுடன் குடும்பத்தின் உதவி இல்லாமல் ஐந்தாண்டுகள் வறுமையோடு தமிழைப் பயின்றார்.

பண்டிதமணியின் உதவி

பெருமழைப் புலவருக்குப் பேராதவராகப் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் இருந்துள்ளதைப் பண்டிதமணி வரலாறு எழுதும் போது பெருமழைப் புலவர் நன்றிப் பெருக்குடன் பின்வருமாறு கூறுவர்.

“யான் பண்டிதமணியவர்கள் இல்லத்தே இரண்டாண்டுகள் ஊடாடிப் பழகும் பேறுபெற்றேன். என்பால் பண்டிதமணி அவர்களும் திரு ஆச்சியார் அவர்களும் பிள்ளை முறைகொண்டு அன்பு பூண்டொழுகினர்”[80]

“அக்காலத்தில் யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே ஒரு தமிழ் மாணவனாக இருந்தேன் பண்டிதமணியவர்கள் அரசர் வேண்டுகோட்கிணங்கிப் பல்கலைக் கழகத்திற்கு வரப்போகிறார்கள் என்ற செய்தி பரவியது. என்போன்ற மாணவர்களும் ஆசிரியர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை”[81]

கௌடலிய மொழிபெயர்ப்புக்குத் துணை

புலவர்கள் கௌடிலிய நூலை பண்டிதமணி அவர்களுடன் இருந்து மொழி பெயர்த்ததை “வடமொழியிலேயே சாணக்கியர் என்னும் பேராசிரியராலே ஆக்கப்பெற்ற கௌடலியம் என்னும் பெருநூலைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார்கள். இம்மொழி பெயர்ப்புப் பணியில் யானும் ஒரு வடமொழிவாணரும் நம் பண்டித மணியாருக்கு அருகிருந்து துணைசெய்யுமாறு நியமிக்கப்பட்டோம். அக்காலத்தே அவர்களுடன் நனி அணுக்கனாயிருந்து எளியேன் எய்திய நலங்கள் மிகப்பல”[82] எனக் கூறுவர்.

வேலைக்குச் செல்லும் வேட்கை இல்லாதவர்

பெருமழைப் புலவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவராகத் தேறினாலும், அவர் பல்கலைக்கழகத்திற்கு வந்தது கல்வி கற்கவே ஒழிய வேலைக்கு இல்லை. ஆதலின் அன்றைய ஆளுநர் வழங்கிய புலமைச் சான்றைப் பயன்படுத்திப் பல்கலைக் கழகப் பேராசிரியராகவோ, பள்ளி ஆசிரியராகவே விரும்பாமல் தன் ஊரடைந்து தன் மாமன் மகள் மீனம்பாளைத் திருமணம் செய்து கொண்டு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டார்.

உரை எழுதுவதற்கானத் தோற்றப் பின்புலங்கள்

பெருமழைப் புலவர் உரையின் தோற்றப் பின்புலங்களாக இரண்டு நிகழ்வுகளைச் சுட்டலாம். முதலில் பண்டித மணிக்குத் துணையாகத்

திருவாசகத்திற்கு உரை வரைந்தது. இரண்டாவதாக மருதவனம் கு. குப்புசாமி வாயிலாகக் கருப்பக்கிழார் சு.அ. இராமசாமி அவர்களின் தொடர்பால் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தொடர்பு அமைந்ததே அவர் தமிழ் இலக்கியங்களுக்கு உரை வரையக் காரணமாயிற்று.

திருவாசக உரைப்பணி

அண்ணாமலை நகரில் இருந்த பண்டிதமணியாரைப் பார்க்க புலவர் ஒரு முறை சென்றபோது அவர் வரைந்த திருவாசக உரைப்பணியில் இவரை ஈடுபடுத்தினார். நாற்பது ரூபாய் ஊதியத்துக்குப் பண்டிதமணியார் உரை சொல்லவும் அதனை எழுதி வழங்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தினார். பண்டிதமணியாருடன் பணி செய்து உரைவரையும் போக்கினைத் தெரிந்துகொண்ட பெருமழைப் புலவருக்கு பின்னாளில் உரைவரையும் வாய்ப்புத்தேடி வந்தது.

மருதவனம் கு. குப்புசாமி தொடர்பு

பெருமழைப் புலவருக்கு மருதவனம் குப்புசாமி என்பவர் நண்பராக விளங்கினார். அவர்கள் வழியாக அந்நாளில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த புலவர் சு.அ. இராமசாமி அவர்களைக் கண்டு கழகத்தின் தொடர்பைப் பெற்றார். அது நாள்வரை எரிமலை போல் உள்ளுக்குள் இருந்த புலமைநலம் யாவும் பல்வேறு உரைநூல்கள் வழி உலகம் முழுவதும் பரவின.

பெருமழையாரின் படைப்பு நூல்களும் சூளாமணி உரையும்

முதலில் பெருமழையாரின் படைப்பு நூல்களான செங்கோல் (நாடகம்), பண்டிதமணி, பெருங்கதை மகளிர், மானனீகை (நாடகம்) முதலியன வெளிவந்தன. பின்பு சு.அ. இராமசாமி அவர்களுடன் இணைந்து சூளாமணிக்கு உரை வரைந்தார்.

சங்க நூல்களுக்கும் பிற நூல்களுக்கும் செய்த உரை

சூளாமணியின் உரையைத் தொடர்ந்து நிரலாக மணிமேகலை, சிலப்பதிகாரம், அகநானூறு, பெருங்கதை, உதயணகுமாரகாவியம், வளையாபதி, குண்டலகேசி, ஐங்குறுநூறு, புறப்பொருள் வெண்பாமாலை, கல்லாடம், பட்டினத்தார் பாடல்கள், பரிபாடல், குறுந்தொகை, நற்றிணை, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, சீவகசிந்தாமணி, கலித்தொகை, திருக்கோவையார் முதலிய நூல்களுக்கு இவர்தம் உரையும் விளக்கமும் அமைந்துள்ளன. பெருமழைப் புலவருக்கு உரைவரையும் ஆற்றல் அமைந்ததுடன் உரைநடை எழுதுவதிலும் வல்லவராக விளங்கினார் என்பதற்குச் சான்றாக அமைவது பெருங்கதை உரையாகும்.

தனிப்பாடல்கள்

பெருமழைப் புலவர் தனிப்பாடல்கள் இயற்றுவதிலும் வல்லவர் ஆவர். 1952-இல் புயல் பற்றி இவர் பாடிய பாடல்களும், 1966 இல் மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்ட பொழுது மழை வேண்டி இவர் பாடிய பாடல்களும்இவர் எழுதிய தனிப்பாடல்களுக்குச் சான்றாக அமைகின்றன.

சிலப்பதிகார உரையின் சிறப்பு

பெருமழையார் தமக்குத் தெரியாத, தொடர்பில்லாத சில மதம், சமயம், கூத்து சார்ந்த பகுதிகளுக்கு விளக்கம் எழுதுவதற்கு அத்துறை வல்லாரை அணுகி உரை வரைந்துள்ளமை அவர் தமிழ் இலக்கியங்கள் மேல் கொண்டிருந்த பற்றிற்குச் சான்று மட்டுமாகாது உண்மை அறிந்து உரை கூறும் பண்பாளர் என்பதற்கு இலக்கணமாக உள்ளது. சான்றாகச் சிலப்பதிகாரத்திற்கு உரை வரையும் பொழுது இசைப் பேரறிஞர் இராமநாதரிடம் இசை நுணுக்கங்களை அறிந்து சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்புரை

- ❖ முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்திற்கு முதல் உரை எழுதியவர் அரும்பதவுரைகாரர் ஆவார். இவரைத் தொடர்ந்து அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் ஆகியோர் திறம்பட உரை வரைந்துள்ளனர்.
- ❖ மூலநூலின் தன்மையினை வெளிப்படுத்துவது உரையாகும். உரைகள் தலைமுறைகளைத் தாண்டியும் பிற்காலத்தியவர்கள் இலக்கியங்களின் தளங்களை அறிந்து கொள்வதற்கும் அதன் சிறப்பைப் புரிந்து கொள்வதற்கும் உதவுகின்றன.
- ❖ இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நுண்மையான பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் அறிந்து கொள்வதற்கு உரைகள் உதவுகின்றன.
- ❖ உரையானது விளக்கவுரை, உரைக்கு உரை, செய்யுள் வடிவ உரை, நூலாசிரியனே எழுதும் உரை என அமையப் பெற்றன.
- ❖ கால மாற்றமும் கருத்து வேறுபாடுகளுமே உரை வளர்ச்சி பெறுவதற்கு ஆதாரமாக அமைகின்றன. உரையானது ஆசிரியர் – மாணவர், தந்தை - மகன் என்ற நிலையில் வளர்ச்சி அடைந்துள்ளன.
- ❖ உரை என்னும் பெயரில் அமைந்த முதல்நூல் இறையனார் களவியல் உரையாகும். தொல்காப்பிய உரைகளுக்கு எல்லாம் மூத்த உரையாக இவ்வுரை நூல் திகழ்கின்றது.
- ❖ உரையானது மூலத்திற்கும் வாசகருக்கும் இடையே ஓர் உறவுப்பாலமாகச் செயல்படுகிறது. உரைகள் மூலநூலின் காலத்தோடு உரையின் காலத்தினையும் வழக்கத்தினையும் எடுத்துரைக்க வல்லது. உரைகள் தோன்றியிராவிடில் பழமையான இலக்கிய இலக்கணங்கள் அழிந்தும் வழக்கொழிந்தும் போயிருக்கும்.
- ❖ அரும்பதவுரைகாரரின் இயற்பெயர் அறியுமாறில்லை. இவரது காலம் கி.பி.11ஆம் நூற்றாண்டு. சிலப்பதிகாரம் விரிந்த சமய நோக்குடன் இருந்தமையே இவர் உரை எழுத காரணமாய் அமைகின்றது.

- அடியார்க்கு நல்லார் எனும் பெயர் அவர் உரையின் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் ஆவார்.
- பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டியை அடுத்த மேலைப் பெருமழை என்னும் ஊரைச் சார்ந்தவர். இவர் தனது உரையின் சிறப்பினால் 'பெருமழைப் புலவர்' என்றழைக்கப்பட்டார். இதனைச் சிலப்பதிகார உரை புலப்படுத்தும்.

சான்றெண் விளக்கம்

1. நா.செயராமன்,அரங்கேறிய ஆய்வுகள், ப.229
2. கி.ஆதிநாராயணன், உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.14
3. கழகத் தமிழ் அகராதி, ப.172
4. தொல்காப்பியம், நூ.460
5. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.62
6. இரா.மோகன், ந.சொக்கலிங்கம், உரைமரபுகள், ப.12
7. மேலது, ப.12
8. மேலது, ப.13
9. தமிழண்ணல், உரைவிளக்கு, ப.6
10. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், பக்.63-64
11. இரா.மோகன், ந.சொக்கலிங்கம், உரைமரபுகள், ப.15
12. மேலது, ப.15
13. நற். 263:4
14. குறுந். 135:3
15. ஐங். 280:5
16. பதிற்.35:2
17. பரி.6:24
18. கலித்.146:1
19. தி.சு.பாலசுந்தரம் பிள்ளை, நாலடியார், ப.255
20. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், பக்.63-64
21. தொல்காப்பியம், செய்யுளியல், ப.235
22. பேராசிரியர், தொல்காப்பியம், ப.428
23. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.449
24. சிலப்.மூ.அரும்.அடியா உரையும், ப.543

25. மேலது, ப.543

26. மு.அருணாச்சலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற், ப.80

27. சீவக சிந்தாமணி, பா.2353

28. சிலப்.மூ.அரும்.அடியா உரையும், ப.398

29. மேலது, ப.532

30. மேலது, ப.67

31. மேலது, ப.398

32. மேலது, ப.537

33. மேலது, ப.126

34. மேலது, ப.145

35. மேலது, ப.282

36. மேலது, ப.459

37. மேலது, ப.478

38. மேலது, ப.310

39. சிலப், உரைப்பாயிரம், பக்.7-8

40. சிலப்.மூ.அரும்.அடியா உரையும், ப.203

41. மேலது, ப.82

42. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கட் பண்பாடும், ப.54

43. மேலது, ப.180

44. மேலது, ப.585

45. மு.அருணாச்சலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற். ப.68

46. சிலப்.மூ.அரும்.அடியா உரையும், ப.239

47. மேலது, ப.397

48. மேலது, ப.507

49. மேலது, ப.458

50. மேலது, ப.288

51. மேலது, ப.255

52. மேலது, ப.288

53. மேலது, ப.580

54. மேலது, ப.581

55. மேலது, ப.219

56. மேலது, ப.459

57. மேலது, ப.150

58. மேலது, ப.389

59. மேலது, ப.565

60. மேலது, ப.502

61. மேலது, ப.504

62. மேலது, ப.390

63. உ.வே.சாமிநாதையர் (ப.ஆ), சிலப்பதிகாரம், ப.11

64. ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், முகவுரை, ப.15

65. மேலது, ப.15

66. மேலது, ப.15

67. மேலது, ப.16

68. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற், ப.536

69. ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், முகவுரை, ப.17

70. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற், ப.535

71. ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், முகவுரை, ப.17

72. மேலது, ப.17

73. மேலது, ப.17

74. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற், ப.536

75. பெ.செகந்நாதன், அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி, இரண்டாம் பகுதி, ப.2

76. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற், ப.535

77. K.A.Nilakandasastri, The Cholas, P.321

78. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற், ப.535

79. மேலது, ப.535

80. பொ.வே.சோமசுந்தரனார், பண்டிதமணி, ப.46

81. மேலது, ப.50

82. மேலது, பக்.93-94

இயல் - 2

சிலப்பதிகார உரை நெறிகள்

சிலப்பதிகாரம் உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள் என்னும் உரையும் பாட்டும் கலந்த இக்காப்பியத்திற்கு இதன் நுண்பொருள் விளங்கும்படி உரை வரைந்தோர் பலராவர். அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார், புலியூர்க்கேசிகன், ச.வே.சுப்பிரமணியன் போன்ற பலர் சிலப்பதிகாரத்திற்கு உரை கண்டுள்ளனர். சிலப்பதிகாரத்தின் மூல ஆசிரியர் கருத்தை ஒட்டிச் செல்லும் நன்முறையில் இவ்வுரைகள் அமைந்து அந்தந்த உரையாசிரியர்களின் தனித்திறம் வெளிப்படுமாறு உரைகள் எழுதப்பெற்றுள்ளன. இவ்வுரையாசிரியர்களின் உரைத்திறன் என்பது உரையாசிரியர்களின் ஆளுமைக்கு ஏற்ப மாறுபடுகின்றது. அவற்றை நுணுகி ஆராயும் நிலையில் அவ்வவ் உரையாசிரியரின் புலமைத்தன்மை வெளிப்பட்டு நிற்கும். இவ்வியலில் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் ஆகியோர் தம் உரை நெறிகள் ஆராயப்பெற்று எடுத்துரைக்கப்பெறுகின்றன.

அரும்பத உரைகாரரின் உரைத் திறன்

தமிழ் உரை மரபில் முதன்முதலாகத் தோற்றம் பெற்றது அரும்பதங்களுக்கு உரை சொல்லும் குறிப்புரை ஆகும். இதனை முதன்முதலில் தோற்றுவித்தவர் என்ற நிலையில் அரும்பத உரைகாரர் குறிப்பிடப்படுகிறார். இவரின் இயற்பெயர் தெரியாத நிலையில் இவரின் உரைத்தன்மை கொண்டே இவருக்கு இப்பெயர் அமைந்துவிட்டது. பின்னாளில் உ.வே.சாமிநாதையர் தமிழ்விடுதூது போன்றவற்றிக்கு அரும்பத உரையாகிய இக்குறிப்புரை வரைதல் முறையைப் பயன்படுத்தியிருப்பினும் அரும்பத உரைகாரர் என்ற பெயர் சிலப்பதிகாரத்திற்கு உரை வரைந்த அரும்பத உரையாசிரியருக்கே உரியதாக தமிழ் உரை மரபில் நிலைத்துவிட்டது.

‘‘சிலம்பின் அரும்பதவுரை, வெறுமனே அரும்பதங்களுக்கு, அதாவது கடினமான சொற்களுக்கு மட்டும் உரை தரவில்லை. மாறாகப் பல இடங்களில்

நீண்ட தொடர்களையும் திரண்டகருத்துகளையும் காட்சிகளையும் சிலம்புக்குத் தேவைப்படும் பிற கலைவடிவங்களையும் விளக்கமாகவே கூறுகின்றது. அரங்கேற்று காதையில், மேடைஅரங்கம் பற்றிய செய்திகளும் பாடலாசிரியன், யாழ் ஆசிரியன், குழல் ஆசிரியன் முதலிய கலைஞர்கள் - கலை வடிவங்கள் பற்றிய செய்திகளும் சுருக்கமாகவும் குறிப்பாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அரும்பதவுரையாசிரியர், இவற்றை விளக்கியுரைக்கிறார். மேலும், இசை, நடனம், முதலிய கலைகள் பற்றித்தெளிவாகப் பேசுகிறார்''[1] என்று அரும்பத உரையாசிரியரின் உரைத்திறனை மதிப்பிடுகிறார் தி.சு. நடராசன்.

அரும்பத உரையின் இயல்பினை ''இவ்வுரை அரும்பதவுரை மட்டுமன்று. வினைமுடிபு காட்டுதல், பொருள் தொடர்பு காட்டுதல், அரங்கேற்றுக் காதையிலும் கானல் வரியிலும் இன்று அடியார்க்கு நல்லார் உரை இல்லாத பிற பகுதிகளிலும் விரிந்த உரையும் விரித்துக் கூறுதல், மேற்கோள் தருதல் முதலிய பகுதிகளைப் பார்க்கும்போது, இவ்வுரை அரும்பதவுரை அன்று, அரிய உரை என்றே கருதத் தோன்றும். சில இடங்களில் விரிவான பொழிப்புரையே கூறியிருக்கிறார். (சிலப்:3:26) இதைத் தொடர்ந்து அரும்பதவுரை மட்டுமல்லாமல் விளக்கவுரையே கூறிவருகிறார். இவற்றால் இவர் விரிவு பெற்ற உரை எழுதவல்ல முத்தமிழாசிரியர் என்பது நன்கு விளங்கும்.இளங்கோவடிகள் முத்தமிழ்ப் புலமை வாய்ந்த பேராசிரியரும் பெரும்புலவருமாவாரோ, அப்படியே இவ்வரும்பதவுரை எழுதிய உரைகாரரும் முத்தமிழ்ப் புலமை பெற்றிருந்தமை இளங்கோவடிகள் நூல்செய்த பாக்கியம்''[2] என்று அரும்பத உரையின் இயல்பினைச் சிறப்பித்துச் சுட்டுகிறார் மு.அருணாசலம்.

''அரும்பதவுரையாசிரியர் ஆராய்ச்சித் தெளிவும், ஆழ்ந்த புலமையும் அமைதியான உள்ளமும், பண்பட்ட நல்லியல்பும், அரிய உழைப்பும் கொண்டவர் என்பதை இவரது உரை உணர்த்துகின்றது. உலகியல் அறிவுமிக்கவர் என்றும் உரை அறிவிக்கின்றது. இவரது உரை, நூல் முழுமைக்கும் உள்ளது. எல்லா இடங்களிலும் அருஞ்சொற்பொருள் கூறுகின்றார். தேவையான இடங்களில் இலக்கணம் காட்டுகின்றார். மிகச் சில இடங்களில் வினைமுடிபு காட்டுகின்றார்.

தொடர்களுக்குப் பொழிப்புரை கூறுகின்றார்.''[3] என்று இவ்வுரையின் நலம் பற்றிக் குறிப்பிடுகிறார் மு.வை.அரவிந்தன்.

இவ்வழி அரும்பத உரைகாரரின் சிலப்பதிகார உரை நெறிகள் பொது நிலையிலும் சிறப்பு நிலையிலும் அமைந்துள்ள பாங்கினைப் பின்வரும் பகுதிகள் ஆராய்கின்றன.

உரையின் பொதுநெறிகள்

அரும்பத உரைகாரின் உரைநெறியைக் காணுகையில் பொதுவான சில நெறிகள் தமிழ் உரை மரபு வரலாற்றில் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றில் சொற்பொருள் கூறுதல், பொழிப்புரை கூறுதல், வினை முடிபு கூறுதல், இலக்கணக்குறிப்பு காட்டல், மேற்கோள் காட்டல் போன்றவை உரையின் பொது நெறிகளாகக் கொள்ளத்தக்கன. அரும்பத உரைகாரர் அரும்பத உரை செய்யும் மரபின் தொடக்குநர் என்பதால் இவர் சார்ந்தே இம்முறைகள் தொடங்கப்பெற்று பின்பற்றப்பெற்று வந்திருக்க இயலும். இதன் காரணமாக அரும்பத உரைகாரர் காட்டிய நெறிகளே பின்வருவோருக்குப் பின்பற்ற வேண்டிய முறைகளைத் தந்திருக்கின்றன என்பதை உணர முடிகின்றது.

அரும் பதங்களுக்குப் பொருள் காட்டல்

அரும்பத உரைகாரர் அரிய சொற்களுக்கு விளக்கம் தரும் நிலையில் தன் உரையை அமைத்துள்ளார். எடுத்துக்காட்டிற்குப் பின்வரும் பகுதிகளைச் சுட்டலாம்.

''ஆடல், பாடல், இசையே, தமிழே''என்ற சிலப்பதிகார அடிக்கு அரும்பத உரைகாரர் ''தமிழாவது –வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும், இயலிசை நாடகங்களும் என்று சொல்லப்படா நின்ற மூன்று தமிழ்களும்''[4] என்ற நிலையில் பொருள் தருகிறார். தமிழுக்கு அரும்பத உரைகாரர் தந்துள்ள விளக்கம் இனிதாகும்.

‘‘வாயிற் கடைமணி நடுநா நடுங்க

ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத் தான்றன்

அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே யவ்வூர்’’(சிலப்:20:53-56)

என்னும் அடிகளில் உள்ள பகுதிக்கு வரையப்பெற்ற அரும்பத உரை,

“நடுங்க –அசைய;

கடைமணி- கண்மணிக்கடை”[5]

என்ற நிலையில் அரும்பொருள் உரைக்கப் பெற்றுள்ளது. மேலும் ‘‘ஆசான்– புரோகிதன், பெருங்கணி – கணிதவிவரத்தகன், அறக்களத் தந்தணர் – தன் மாசனத்துக் கருத்தாக்கள்’’[6] என்ற பகுதி அரும்பதங்களுக்குப் பொருள் காட்டும் பகுதியாகும். இவ்வாறு ஒவ்வொரு அடியில் காணலாகும் அரும்பதங்களுக்கு மட்டும் பொருள் வழங்கும் நிலையில் உரை செய்யப்பட்டுள்ளமை இதன் வழித்தெரிகிறது. அதிலும் முதலாவதாக பாடலடி எண் தரப்பெற்று,அதன்பின் அவ்வடியில் அரும்பதம் மட்டும் காட்டப்பெற்று அதன் பிறகு அதற்கான பொருள் வழங்கப்பெறும் உரை முறை அரும்பத உரைகாரரின் உரை முறையாக உள்ளது.

‘‘வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை

கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்

தேவந் தினகயைச் செவ்விதி னோக்கி

வாயெடுத் தரற்றிய மணிமே கலையார்

--

தளரிடை நுணுகலுந் தகையல்குல் பரந்தது’’(சிலப்:30:1-17)

என்ற வரந்தரு காதைக்கு, பதினேழு அடிகளுக்குப் பின்வரும் நிலையில் அரும்பத உரை அமைகின்றது.

‘‘வடதிசை வணக்கிய- வடதிசையிலுள்ளாரை வணக்கிய; கட்புலம் புகுகை – கண்ணறிவிற்கு வெளிப்படுகை; விழுந்தன- நேராகவெழுந்தனவில்லை; புல்லகம் – புல்லப்படுகிற மார்பு’’[7] சொற்களுக்கு உணரமுடிகின்றது. மேலும் பதிமூன்று அடிகளில் அரும்பதங்கள் இல்லாத நிலையில் அவை விடுக்கப்பெற்றுள்ளன. அதுபோன்று, விழுந்தன என்பதற்கு நோராகவெழுந்தனவில்லை என்று பொருள் தரப்பெற்றுள்ளது.

இதனைக் காணுகையில் அரும்பதங்கள் என்பதற்காக அளவுகோல் ஒன்றை அரும்பத உரைகாரர் கையாண்டுள்ளார் என்பது தெற்றெனத் தெளிவாகின்றது. மேலும் அரும்பதம் என்பது பொதுநிலையில் கொள்ளப்பெறாமல் சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பு முறையில் அரும்பதங்கள் காணப்பட்டு அவை சிலப்பதிகாரச் சூழலுக்கு ஏற்ற நிலையில் அரும்பொருள் கொள்ளப்பெற்றுள்ளன என்பதும் தெரியவருகின்றது.

பொழிப்புரை வழங்கல்

அரும்பதங்களுக்கு மட்டும் பொருள் சொல்லாமல் பல இடங்களில் பொழிப்புரை நிலையிலும் அரும்பத உரையாசிரியர் உரை கண்டுள்ளார். அவரே அதனை பொழிப்புரை என்றும் சுட்டிச் செல்கிறார்.

‘‘இருவகைக் கூத்தின்... .ஆடற்கமைந்த வாசான் றன்னொடுமென்றது தேசியும் மார்க்கமுமென்று சொல்லப்படாநின்ற இரண்டு வகைப்பட்ட அகக்கூத்தினது இலக்கணங்களை அறிந்து, பலவகைப்பட்ட புற நடனங்களையும் விலக்குறுப்புக்களையுச் சேரப்புணர்க்கவும் வல்லனாகி, அல்லியம் முதலாகக் கொடுகொட்டி ஈறாகக் கிடந்த பதினொரு கூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுகளும் அவற்றுக்கு அடைத்த வாச்சியக் கூறும் நூல்களின் வழியே தெரியவறிந்து, அக்கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழியே வந்த தூக்குகளும் தம்மிற் கூடி நிகழுமிடத்துப் பிண்டி, பிணையல் எழிற்கை,

தொழிற்கை யென்னும் அந்த நான்கினையும் நூல்களினகத்துக் கொண்ட கூறுபாட்டையறிந்து அகக்கூத்தினிடத்துக் கூடைக் கதியாகச் செய்த கைவாரக்கதியிற் புகுதாமலும், வாரக்கதியாச் செய்த கை கூடக்கதியிற் புகுதாமலும், புறக்கூத்தில் ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும், அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமலும், குரவைக் கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியும் செலுத்த வல்ல ஆடலாசியரியனுமென்றவாறு இது பொழிப்புரை.''[8] என்ற நிலையில் ஆடல் ஆசிரியனுக்கான இலக்கணத்தைப் பொழிப்புரையாகத் தருகிறார் அரும்பத உரைகாரர். இன்னும் சில சான்றுகள் பின்வருமாறு.

'அறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசம்

சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற

எல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப

மல்லன் மூதூர் மாலை வந்திறுத்தென'(சிலப்:4:17-20)

என்ற பகுதிக்கு அமைந்த உரையில் ''அறுகால் – ஆறுகாலையுடைய வண்டு. குறும்பென்றார். தென்றல் தளிர்ப்பித்தும், பூப்பித்துஞ் செய்யத்தான் நடுவே புகுந்து உண்டலான். சிறுகாற் செல்வன்- மந்தமாருதமாகிய செல்வன். இறுத்தென - இறுத்ததாக''[9] என்ற பகுதியில் குறும்பு என்பதற்கு பொழிப்புரை வழங்கப்பெற்றுள்ளது. மற்றவற்றிற்கு அரும் பொருள் தரப்பெற்றுள்ளது.

மேற்காட்டிய பகுதி உள்ளடக்கிய சிலப்பதிகார மூலப்பகுதி அடி எட்டு முதல் இருபது வரை ஒரே பொருள் சுட்டப்படுகிறது. இதனைப் பின்வரும் நிலையில் ''அல்லற் காலையிலே, பிரிந்தோர் துயரெய்தப் புணர்ந்தோர் மகிழ்வெய்தத் தும்பி ஊத வாசத்தைச் செல்வன் தூற்ற மகளிர் விளக்கெடுப்ப விருந்தின் மன்னரைப்போல மாலை வந்திறுத்ததென்க''[10] என்ற நிலையில் பொருள்முடி சொல்லும் பொழிப்புரையும் இவ்வுரையாசிரியரிடம் காணப்பெறுகிறது.

ஒருபொருள் பட அமைந்த அடிகளை ஒட்டு மொத்தமாகப் பொழிப்புரை தரும் அரும்பத உரைகாரரின் இயல்பிற்கு பின்வரும் பகுதியும் சான்றாகிறது.

‘‘அரசனுக்கு ஆடிப் பாடினாருள் ஒருத்தி மேல் உள்ளஞ்சென்ற தென்று தேவி ஊடி நீங்க மந்திரச் சுற்றம் நீங்கி அரசன் அவள்வயிற் குறுகினவளவிலே தட்டான் தொழுதேத்தி’’[11] என்ற பகுதியிலும் நிகழ்ச்சிகள் ஒரே தொடரில் காட்டப்பெற்று பொழிப்புரை வழங்கப்பெற்றுள்ளது.

‘‘ஒரு கள்ளனை யான் கண்டேன்; கைவாளை உறைவிட்டு நீக்க அவனை ஓரிடத்திலுங் கண்டிலேன்; ஆதலின் இவர் செய்தி தெரியது; இவனை நாம் கொல்லாதே தப்பவிடின் அரசன் நம்மை வருத்தும்; இனி உரியது செய்கவென, ஒருவன் வாளாலெறிந்தான். அது விலங்க ஊடறுத்தது’’[12] என்ற பகுதியும் பொழிப்புரை காட்டும் பகுதியாகும் அமைகின்றது.

பொருள் கொள்ளும் முறை (அல்லது) வினை முடிபு காட்டல்

சிலப்பதிகாரம் நெடும் செய்யுளால் அமைந்த காப்பியமாகும். இச்செய்யுளுள் பல இடங்களில் பொருள் கொள்ளும் முறை முன்னும் பின்னுமாக அமைந்திருக்கலாம். அதனைச் சுட்டிக்காட்டி இவ்வடிகளை இவ்வளவில் வைத்துப்பொருள் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று முடிவெடுத்து அரும்பத உரைகாரர் பொருள் கொள்ளும் முறையையும் தம் உரைக்குள் சுட்டுகிறார்.

‘‘வேனிற் பள்ளியேறி (23) யாழ் கை வாங்கி (24) மயங்கி (48) மாலையின் நடுவு வைத்துத் தொடுத்த (49), தாழைப் பூந்தோட்டிலே (67) எழுதி (69) அம்மாலையை வசந்த மாலை கைக் கொடுத்து (71) அவனைக் கொண்டு வருகவென (72) அவள் (73) சென்று கொடுத்துழி, கோவலன் வரியைப் பாராட்டி இப்பண் (110) பாடுபெற்றனவென்று சொல்லக்கேட்டு (112)இரங்கிச் (114) சென்றுரைப்ப (115) வராராயினும் (116) காலை காண்போமெனச் செயலற்றுப் (117) பாயலிற் பொருந்தாது வதிந்தானளெனக் கூட்டுக’’[13] என்ற நிலையில் பதினெட்டாவது அடி தொடங்கி ஏறக்குறைய நூறு அடிகளுக்கு உரிய பொருள்

முடிவைக் கூட்டி முடிக்கும் உரை நிலையும் அரும்பத உரைகாரரிடம் காணப்பெறுகிறது.

இம்முறையை, “(4) விஞ்சை வீரன், தெய்வ யாக்கையை மறைத்து வந்து (27) வணங்குது நாமெனச்சொல்லிக் (31) காட்டிப் பின்னரப் (32) புகாரெய்தி (34) விழாக்காண்போன் இவற்றைக் (67) காணாயென்று (70) காதலிக்குரைத்துக் கண்டு மகிழ்வெய்திய (71) விஞ்சையனென்க”[14] என்று நிலையில் என்னும் சான்றுப்பகுதியும் விளக்கும். இதனை வினை முடிவு காட்டல் என்ற உரை உத்தியாகக் கொள்ள இயலும்.

இலக்கணம் காட்டல்

அரும்பத உரைகாரர் இலக்கணப் பேரறிவு நிரம்பியவராக உள்ளார். அவரின் உரையில் பல இடங்களில் இலக்கணக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன அவை,

“உறையாமை முதலாக எண்ணிய உம்மைகளுக்கு உறையாமையாலு மென்று மூன்றாம் வேற்றுமை விரிக்க”[15] என்ற இலக்கணக் குறிப்பு வேற்றுமை இலக்கணம் சார்ந்ததாகும்.

“திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும்

ஞாயிறு போற்றுது ஞாயிறு போற்றுதுங்

மாமழைபோற்றுது மாமழை போற்றுதும்

பூங்பகார் போற்றுது பூங்பகார் போற்றுதும” (சிலப்:1:1-10)

என்னும் மங்கல வாழ்த்துப்பாடலில், அடிகளுக்கு “இவை நான்கு சிந்தியல் வெண்பாவும் செம்பியனையும் புகாரினையும் சிறப்பித்தன”[16] என்ற பகுதியில் சிந்தியல் வெண்பா என்ற குறிப்பு யாப்பு நிலையைக் காட்டுவதாக உள்ளது.

“கறைகெழுகுடிகள் கண்ணகி முதலான தாழ் துணை துறந்தோர்க்கு உவமை; விருந்தின் மன்னர் மாதவி முதலான காதலர்ப் புணர்ந்தோர்க்கு உவமை”[17] என்ற குறிப்பு அணி இலக்கணம் சார்ந்ததாகும்.

“கானல் வரியில் இடம்பெறும் 32 ஆம் பாடல் முதல் 36 ஆம் பாடல் வரையானவற்றை இவை ஐந்தும் காமமிக்க கழிபடர்கிளவி”[18] என்ற பகுதி அக இலக்கணக் குறிப்பினைத் தரும் பகுதியாகும்.

‘துறைப்பாட்டு மடை என்பதற்கு’ துறைப் பாட்டு- வெட்சித் துறை சொன்ன பாட்டு”[19] என்பது புறத்திணை இலக்கணமாகும்.

“குழல் வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு

மழலைத் தும்பி வாய்வைத்தூத”[20]

என்ற பகுதிக்கு நிரல் நிறை அணி என்றுசுட்டுகிறார்.

இதில் குழல் கோவலர் ஊத, முல்லை மலரை வண்டு ஊத என்ற நிலையில் இது நிரல் நிறையாகின்றது.

“விரையினர் மலரினராகிய விளங்கு மேனியர்; பிறவுமன்ன இவை வினைக்குறிப்புப் பெயர்”[21], “உலகினருந்ததி – இல்பொருள் உவமை”[22], “நன்னுதல்- முன்னிலைப் பெயர்”[23], “தெய்வ மால்வரை- பொதியின்மலை, தெய்வத்தன்மையையுடைய வரை, உருபு தொக்குத் தெய்வமால் வரை யென்றாயிற்று”[24], “இவளுக்குப் பரியமென்னாதே மாலைக்குப் பரியமென்றது இடக்கரடக்கு”[25], “என்னென்றது - ஈற்றசை”[26], “இரவுத்தலை - தகரவொற்று விகாரம்”[27], “காதற் கொழுநனை ... மாதவியென்றது சிலேடை”[28], “கொன்றையஞ் சடைமுடி - ஆகுபெயர்”[29], “பைந்தொடி - முன்னிலைப் பெயர”[30], “ஏவலன் - தன்மை யொருமை”[31], “பொய்த்தாரென்றது - முன்னிலைப் படர்க்கை”[32], “ஓ - வியப்பு”[33], “எவ்வமு மென்னுமும்மை தொக்கது”[34], “வேற்கண் - வேற்கண்ணை யுடையாள், ஆகுபெயர்”[35], “எவ்வமுமென்னுமும்மை

தொக்கது''[36], ''ஓதம் - எழுவாய்''[37], ''விட்டாரோ - ஏகாரம் ஒழியிசை''[38], ''இளையிருள்- இளையவிருள் விகாரம்''[39], ''ஆங்கு- அசை''[40], ''மகளை - ஐ இடைச்சொல்''[41], ''வாயிலென்றது- ஆகுபெயராற் கதவை''[42], ''நீர்நாய் - எழுவாய்''[43], ''தான் - அசை''[44], ''இத்தாழிசைகளிற் போலுமென்றது ஒப்பில் போலி''[45], ''செய்குவாய் - விளி''[46], ''பகைப் புறத்து- பகையிடத்து, புறம் - இடம்; பகைப்புறமென்பதனைப் பகை புறமென்றது விகாரம்''[47] ''அமரர் - எழுவாய்''[48], ''தோடார் குழலி- தோட்டார் குழலியென விகாரம்''[49], ''நாணினை யுடைய பாவாய் - சாரியை நிற்க உருபு தொக்கது''[50] என்பனவும் அரும்பத உரையாசிரியர் தம் உரையில் உள்ள இலக்கணக் குறிப்புகள் ஆகும்.

இவ்வாறு பல்வகை இலக்கணக்குறிப்புகளுக்கு இடமளித்து உரையை விளக்கம் செய்துள்ளார் அரும்பத உரைகாரர்.

மேற்கோள் காட்டல்

அரும்பத உரைகாரர் பல இலக்கிய அடிகளையும் தம் உரையில் மேற்கோளாக்கி உரைக்கின்றார். இதன் காரணமாக அவரின் பல்துறை இலக்கியப் பயில்வு தெரியவருகிறது. மேலும் உரைப்பகுதி இலக்கிய வளம் மிக்கதாக மிளிர்கிறது. தொல்காப்பிய நூற்பாவினை அரும்பத உரைகாரர் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

''புள்ளின் இயல்புடைய குதிரை. இது மாவின் கடுமை கூறிற்று. ''புள்ளியற் கலிமாவுடைமை யான''**[51]** (தொல்.கற்பு:53) என்ற நிலையில் தொல்காப்பிய கற்பியல் நூற்பா மேற்கோளாகக் ஆக்கப்பெற்றுள்ளது.

''விளரி யென்றார், விளரி இரங்கினார் பாடு பண்ணாதலால் இது விளரிப் பண் கண்ணனினார் பாணர்''[52] (பு.வெ.137) என்பதில் புறப்பொருள் வெண்பாமாலை மேற்கோளாகச் சுட்டப்பெற்றுள்ளது.

''நிலம், கலம் கண்டமென்னும் நெறி மூன்றினும் கண்டமல்லது நிரம்பக் காட்டக், கருவிக் கின்பங் கொடுப்பது மது.... பொருவரு நிலத்தைப் புணர்ப்ப

ததுவே"[53] என்னும் சொல்லக்கத்தியச் சூத்திரத்தானும் முற்படக் கண்டத்தாலே பாடியெனவும் செம்பாலைப் பண்ணையாழினும் பாடினாளெனவும் கொள்க என்பதில் சொல்லகத்தியச் சூத்திரத்தில் இருந்து மேற்கோள் எடுத்தாளப்பெற்றுள்ளது. இந்நூல் தற்போது கிடைக்காத நிலையிலும், இதனைப் பற்றிய குறிப்புகள் அறியக் கிடைக்காத நிலையிலும் இப்படி ஒரு நூல் இருந்தது என்பதை இவர்தம் மேற்கோள் வழியே அறிந்து கொள்ளமுடிகின்றது.

"மங்கலம்- அட்டமங்கலம்; செங்கயலிரட்டை திரு வார்சுடர்க்கணாடி பொங்குகொடி வார்முரசந் தோட்டி புணர் கும்பம் மங்களங்களெட்டும்"[54]

மதிகண்டு ஆம்பல் மலருமாதலால், "உடைதிரை முத்தஞ் சிந்தவோசனிக் கின்ற வன்னம்... ஆம்பல்"[55] என்றும் முற்பட மிடற்றிற் பாடிய பண்ணே யாழின்மேல் வைப்பதாகலின் ஈண்டு மிடற்றுப் பாடல் சொல்லிற்றிலர். அது "பருந்து மதனிழலும் பாட்டு மெழாலும் என்பதனாற் கொள்க்"[56]

சோவரணை அழித்தது. 'சோவி, உருமை யழித்த மகன்' (நான்மணிக் கடவுள்) (சோவி, னருமை யழித்த மகன்) 'உவப்பினின் னமுத மூறி யொழுகுமால் சரிதங் கேளாச், செவித்துளை நச்சு நாகஞ் செறிவதோர் துளைமற்றாமால்' (பா.சௌனகாதியர்.6)

'கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும், செய்ய கரிய திருமாலே' (விக்கிரம சோழனுலா,158) கண்ணை இகழ்தல். 'மழைத்துளி மறுத்த கானின் வற்றனீண் மரமு மந்தண், குழைதரவன்றிண் குன்றுங் குழைதர வமுத மூறும், கழையிசை வடித்தான் செவ்வி காண்கிலாக் கண்கண் மஞ்ஞைத், தொழுதியங் கலவ மேய துஞ்சலில் வறுங்க ணன்றே' (பாக. சௌனகாதியர்.2) "மைதவழ் வெற்பன் மணவணி காணாமற், கையாற் புதைபெறூஉங் கண்களுங் கண்களோ"[57] என்னும் பகுதிகள் முழுக்க மேற்கோள்களால் தொடுக்கப்பெற்றுள்ளன.

மேற்சுட்டிய பகுதியில் நான்மணிக்கடவுள், சௌனகாதியர்,விக்கிரம சோழனுலா,கலித்தொகை, பரிபாடல் போன்ற பல இலக்கியப் பகுதிகள்

மேற்கோளாக ஆக்கப்பெற்றுள்ளன. இதன்வழி அரும்பத உரைகாரரின் பல் இலக்கியப் பயில்வுத்திறன் வெளிப்படுகிறது.

சிறப்பு நெறிகள்

அரும்பத உரைகாரர் பல சிறப்பு உரை நெறிகளைக் கையாண்டுள்ளார். குறிப்பாக அரங்கேற்றுக் காதை, கானல்வரிகளுக்கான உரைகள் பல்வகைச் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. இசைக்குறிப்பு, இசை வகைகள், இசைக் கருவி வகைகள், கலைஞர்களின் எண்ணிக்கை வகைகள் போன்றனவற்றை வழங்குவதாக அரங்கேற்றுக் காதையின் உரை அமைந்துள்ளது. இவை தவிர பாத்திர மாண்பு காட்டல், மூல நூலாசிரியரைச் சிறப்பித்தல், சிக்கல்களுக்கு முடிபு காணல் போன்ற சிறப்புப் பண்புகளும் அரும்பத உரைகாரரின் உரையில் சிறப்பு உரைப் பண்புகளாக அமைந்துள.

அரங்கேற்றுக் காதை உரையின் சிறப்புக் கூறுகள்

அரங்கேற்றுக் காதை என்பது மாதவியின்ஆடல் குறித்த செய்திகளையும், அவளின் ஆடுகளத்தையும் இசை வாணர்களின் இயல்பினையும் காட்டும் பகுதியாகும். இக்காதை வழி மூல நூலாசிரியரான இளங்கோவின் இசைப் புலமை, நாட்டியப் புலமை முதலியன தெரியவருகின்றன என்றாலும் இதற்கு உரை செய்த அரும்பத உரைகாரரின் இசைப் புலமை, நாட்டியப் புலமைத் தகுதிகளும் வெளிப்பட்டு நிற்கின்றன.

இசை பற்றிய சிறப்புச் செய்திகள்

“யாழுங் குழலுஞ் சீரும் மிடறும்

தாழ்குரற்றண்ணுமை யாடலொடிவற்றின்

இசைந்த பாட லிசையுடன் படுத்து

வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்”(சிலப்:3:26-29)

என்னும் அடிகளுக்கு அரும்பத உரைகாரர்,

“யாழுமென்றது.... கோட்டின தமைதியும்... வகையே என முடிக்கப்பட்ட யாழப்பாடலுமென்றவாறு.குழலுமென்றது - பருமையும் நீளமும் இலக்கணத்துடன் அமைந்து விரலிடையிட்ட விரலுளர்துளையும் ஊதுதுளையும் உடைத்தாய்ச் சுர பேதங்கள் நிலைகுலையாமல் அளவறுக்கப்பட்டு நின்ற வங்கியப் பாடலுமென்றவாறு, சீறுமென்றது - ‘செம்முறை - நிமிர்த்தல்’ என்று சொல்லப் படாநின்ற வண்ணக் கூறுபாட்டையும் இருவகைத்தாளக் கூறுபாட்டையும் பாவை நிலை குலையாமல் அளவறுக்கப்பட்டு நின்ற வங்கியப் பாடலுமென்றவாறு. மிடறுமென்றது - மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தாலியக்கி ஒன்றெனத்தாக்கி இரண்டெனப்பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப்பாடலுமென்றவாறு.தாழ் குரற்றண்ணுமையென்றது- தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக் கருவி முதலாயின வாசித்தலு மென்றவாறு.ஆடலொடென்றது - அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்று சொல்லப்படாநின்ற ஆடலுமென்றவாறு.”[58] என்று இசைக்குறிப்புகள் கொண்ட உரையைத் தருகிறார்.

பண் என்பதற்கும் விளக்கம் காண்கிறார் அரும்பத உரைகாரர். “பண்ணென்றது நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படா நின்ற பண்ணும், பண்ணியற்றிறமும், திறமும், திறத்திறமும், “பாணியென்றது – இருவகைத் தாள விகற்பங்களும்; தூக்கென்றது – செந்தூக்கு முதலாய ஏழு தூக்குக்களும்; முடமென்றது – இசையிற்றின் குற்றங்களும்”[59] என்று அவர் விளக்கம் தருகிறார். இவ்வகையில் இசைநுட்பம் வாய்ந்த உரை அரும்பத உரை என்பதை அறியமுடிகின்றது.

அரங்கம் பற்றிய சிறப்புச் செய்திகள்

அரங்கம் பற்றிய செய்தியாக,

‘தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்

கொருமுக வெழினியும் பொருமுக வெழினியும்

கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்' (சிலப்:3:108-110)

என்னும் அரங்கேற்று காதை அடிகலுக்கு, ''தூணிழற் .... கெடுத்ததென்றது- தூண்களினிழல் நாயகப் பத்தியின் கண்ணும் அவையின் கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்டு விளக்கை யேற்றி என்றவாறு; ''ஒரு முகவெழினியும்... வகுத்தென்றது – இடத்தூணிலையிடத்து ஒருமுகவெழினியும் இரண்டு வலத்தூணிலையிடத்துப் பொருமுகஎழினியும் மேற்கரந்து வரலெழினியுமாகச் செயற்பாட்டுடனே வகுத்தென்றவாறு''[60] என்னும்பகுதியில் நாடக அரங்கம் பற்றிய குறிப்புகளும் அரும்பத உரையில் காணக்கிடைக்கின்றன.

இவ்வகையில் அரங்கேற்றுக் காதையில் உள்ள நாடக, நடன, இசைக் குறிப்புகள் அரும்பத உரையாசிரியரின் கலையறிவுத் திறனுக்குச் சான்றாக அமைந்து உரைக்கு வலிமை சேர்க்கின்றன.

கானல்வரி உரையின் சிறப்புக் கூறுகள்

கானல்வரிக்கு அடியார்க்கு நல்லார் உரை இல்லாத நிலையில் அரும்பத உரைகாரரின் உரையே பெரிதும் துணை நின்று பொருள் உணர வாய்ப்பளிக்கின்றது. கானல் வரியின் உரைப்பகுதிகள் நுட்பத்திறன் வாய்ந்தனவாகும்.

இனி வரிப்பாடலாவது, பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்த கருதப்பட்ட சத்தியும் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும். அதுதான் தெய்வஞ்சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும்.

அவற்றுள், தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டு வருமாறு, ''அழலணங்கு தாமரை யருளாழி யுடையகோ னடிக்கீழ்ச் சேர்ந்து, நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும், நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றுமாயின், தொழலணங்கு மன்புடையார் சூழொளியும் வீழ்கரியுஞ் சொல்லா வன்றே.'' இது கூடைச் செய்யுள். 'கூடை

யென்பது கூறுங்காலை, நான்கடியாகி யிடையடி மடக்கி, நான்கடி ய.ஃகி நடத்தற்கு முரித்தே’, ‘வார மென்பது வகுக்குங் காலை, நடையினுமொலியினு மெழுத்தினு நோக்கித், தொடையமைந் தொழுகுந் தொன்மைத்தென்ப.’’[61] இவை அடிவரையிட்டன என்று வரிப்பாடலுக்கு உரை தருகிறார் அரும்பத உரைகாரர். இவ்வகையில் கானல்வரியின் உரைப்பகுதி படிப்பவர்க்குச் சிறந்த வழிகாட்டலாக விளங்குகிறது.

இலக்கியத்தன்மை

அரும்பத உரையாசிரியரின் உரை இலக்கியத் தரம் மிக்கதாக விளங்குகின்றது. நீர்ப்படைக் காதையில் செங்குட்டுவன் செய்த போர் பதினெட்டு நாழிகை நடைபெற்றது. வெற்றியைச் சேரனுக்குத் தந்தது என்ற குறிப்பு சிலப்பதிகாரத்தில் உள்ளது.

இதற்கு உரை எழுத வந்த அரும்பத உரைகாரர் ‘‘உயிர்த்தொகை உண்டனவாகிய ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற்றிரட்டியென்று அவற்றோடே கூட்டியெண்ண - தேவாசுரயுத்தம் பதினெட்டாண்டிலும், இராமராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவனும் கனகவிசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்த வென்றெண்ண’’[62] என்ற நிலையில் பிற இலக்கியச் செய்திகளைப் புகுத்தி இலக்கிய நலமுள்ள உரையாக தம் உரையை அமைத்துள்ளார் அரும்பத உரைகாரர்.

கவிஞனுக்குரிய இலக்கணத்தைச் சிலப்பதிகாரம் சொல்லும் இடத்து, இமிழ்கடல் வரைப்பில் தமிழக மறியத் தமிழ் முழுதறிந்த தன்மையனாகி என்று குறிப்பிடுகிறது. இதற்கு உரை வரைந்த அரும்பத உரைகாரர் ‘‘ஆராவரத்தினையுடைய கடல் சூழ்ந்த நிலத்தில் வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடங்குமரி தீம்புனற் பௌவமெனத் தமிழோரால் எல்லை கூறப்படா நின்ற தமிழ்த்தேசத்தாரறிய மூன்று தமிழும் போமென்னும் தன்மையுடயனாகி என்றவாறு’’[63] என்ற நிலையில் தமிழின் முழுதறிந்த நிலையைக் காட்டுகிறார் அரும்பத உரைகாரர்.

நுட்ப உரை

அரும்பத உரைகாரரின் உரை நுட்ப உரையாகவும் விளங்குகின்றது. ஊர்காண் காதையில் மதுரையில் விற்பனைக்கு இருந்த விலையுயர்ந்த பொருள்கள் பற்றிய செய்திகளை அரும்பத உரைகாரர் பின்வருமாறு காட்டுகின்றார்.

“காகபாதம், களங்கம், விந்து, இரேகை யென்னும் நான்கு குற்றமுமின்றிக் கோடியும் பலவகையுமுள்ள நல்ல வயிரம்; ஏகையும் மாலையும் இருளும் மரகதத்துக்குக் குற்றம். இக்குற்றமற்றுப் பசுங்கதி ரொளியை உடையன மரகதம்; பதுமமும் நீலமும் விந்தமும் படிதமுமாகிய, விதிமுறையிற் சொல்லுகிற குற்றமின்றி விளங்குகின்ற சாதி மாணிக்கம்; பூனைக்கண் போன்று பொன்னைத் தேய்த்தாற் போன்றவை புரடராகம்; ஒளியினையுடைய மட்டு நிறமாயிருப்பன கோமேதகம்; இருள் தெளித்தனைய நிறத்தினையுடைய நீலம். இருவேறுருவினையுடைய வயிடூரியம்; ஒருமைத்தோற்றம் – ஓரிடத்தே தோற்றல், ஓரிடமென்றது பளிங்கை; காற்று முதலான இக்குற்றம் நீங்கினவும் குற்றமென்றது முன்பு சொன்ன குற்றங்களை; சந்திர குரு – வெண்முத்து, அங்காரகன் – செந்நீர் முத்து, வட்டத்தொகுதி ஆணிமுத்து; கருப்பத்துளை – உள்ளே துளையாகை (பா) கல்லுடை முடங்கல் - கல்லையுள்ள வளைவு; திருக்கு –திருகல், இவை மூன்று குற்றமும் நீங்கிய செங்கொடி வல்லி- பவளம்சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூந்தமென்னும் இவை நான்கும் பொன்னின் சாதி”[64] என்று விலையுயர்ந்த கற்கள் பற்றிய செய்திகளை அரும்பத உரைகாரர் வழங்குகிறார். இவ்வளவில் பொருள்களின் நுட்ப அறிவுத் திறன் பெற்றவராக அதனை எடுத்து மொழிபவராக அரும்பத உரைகாரர் அமைந்துள்ளார் என்பதை அறியமுடிகின்றது.

ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பன மன்னனுக்கு அறிவுரை சொல்லும் குழுக்கள் ஆகும். இவை பற்றிய குறிப்புகளையும் அரும்பத உரை வழங்குகின்றது. “சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுக நெய், ஆய்ந்த விவரெண்ம ராயத்தார் – வேந்தர்க்கு, மாசனம் பார்ப்பார், மருத்தர்,

வானிமித்தரோடமைச்சர், ஆசிலவைக் களத்தார் ஐந்து''[65] என்ற நிலையில் இருகுழுவினரும் அமைந்ததாக அரும்பத உரைகாரர் குறிப்பிடுகிறார். எண்பேராயத்தார் என்பவர்கள் மன்னர்களுக்குச் சந்தனம், பூ, கச்சு, ஆடை, பாக்கு, வெற்றிலை, கஞ்சுகம், நெய் ஆகியவற்றைஆராய்ந்துகொடுப்போர் என்பது அரும்பத உரைகாரரின் உரையாகும். இவ்வுரையும் நுட்பமான செய்திகளைக் காட்டுவதாகும்.

சிக்கலைத் தீர்க்கும் உரை

அரும்பத உரைகாரர் மூல நூலில் உள்ள சில சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நிலையில் உரை வரைந்துள்ளார்.கண்ணகி உடைத்தது எந்தச் சிலம்பு என்பது சற்றுப் புதிரானது ஆகும். ''கண்ணகி யணிமணிக் காற்சிலம்புடைப்ப'' (சிலப்.20:71) என்று இளங்கோவடிகள் காட்டுவார். இவ்வடி வழியாக கண்ணகி எந்தச் சிலம்பினை உடைத்தாள் என்பதைத் தெளிவாக உணர இயலவில்லை. கண்ணகி தான் கொண்டு வந்த சிலம்பினை உடைத்திருக்கலாம். அல்லது கோவலன் கையில் இருந்து, பொற்கொல்லன் பெற்ற சிலம்பினை உடைத்திருக்கலாம். எந்தச் சிலம்பு என்பதை அறிவது சற்று குழப்பமானதே ஆகும்.

''மணிக்கால் – மணியை இடத்திலேயுடைய, சிலம்பு – தட்டான் வாங்கிக் கள்ளப்படி செய்வார் கையிற் கொடுத்த பொற் சிலம்பு''[66] என்ற நிலையில் கண்ணகி தன் கையில் ஏந்திய சிலம்பினை உடைக்கவில்லை என்பதும் கோவலன், பொற்கொல்லனிடம் தந்த சிலம்பினை உடைத்தாள் என்பதும் தெளிவுபட அரும்பத உரைகாரரால் காட்டப்பெற்றுள.

அடியார்க்கு நல்லார் உரை நெறிகள்

சிலப்பதிகாரத்திற்கு மிக விரிவான உரை வரைந்தவர் அடியார்க்கு நல்லார் ஆவார். இவர் தம் உரைத்திறத்தை, ''மேலைநாட்டுத் திறனாய்வாளரைப் போல், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். காப்பிய அமைப்பு, கதையின் கட்டுக்கோப்பு, நூலாசிரியரின்

ஆழ்ந்திருக்கும் கவியுளம், செயல் நிகழும் கால எல்லை, இடம் - ஆகியவற்றை எல்லாம் அடியார்க்கு நல்லார் நுணுகி நோக்கி ஆராய்ந்து திறம்படக் கூறுகின்றார்.''[67] என்பர்.

''அடியார்க்கு நல்லார் உரை அதிசயமான உரை. நாடக நூல் இசை நூல் முதலியவைகளிலிருந்து மேற்கோள்கள் காட்டியிருப்பதால் அந்நூல்கள் அவர் காலத்தில் இருந்தன என்று தெரிகிறது. மற்ற உரையாசிரியர்கள் போலன்றிப் பெரும்பாலும் மேற்கோள் காட்டும் இடங்களிலெல்லாம் இ∴து இன்ன நூலென்றாவது இன்ன நூலாசிரியர் வாக்கு என்றாவது அடியார்க்கு நல்லார் புலப்படுத்திச் செல்வார்''[68] என்று உ.வே. சாமிநாதர் அடியார்க்கு நல்லார்தம் உரைத்திறன் பற்றிக் குறிப்பிடுகிறார்.

அடியார்க்கு நல்லாரின் உரைத் திறனை ஆராய்ந்த ச.வே. சுப்பிரமணியன் அவரின் உரைத் திறனை இலக்கியப் புலமை, 'இலக்கணப் புலமை, இசைக்கலைப் புலமை, கூத்துக்கலைப் புலமை, பிறதுறைப் புலமை, உரைநயம்' போன்ற தலைப்புகளில் அடியார்க்கு நல்லார் உரைநலனை இவர் அறிவித்துள்ளார். மேலும் ''ஐந்திணை, உடற் கூற்றமைப்பு, பழங்கதை, சங்கங்களும், பழந்தமிழகமும், அணிகல வகை முதலான பல்வேறு துறைகளிலும் நல்லார் நன்கு பயிற்சி பெற்றிருந்தார் என்பது ஆங்காங்கே அவர்தம் உரை வாயிலாக வெளிப்படுகிறது"[69] என்பர்.

அடியார்க்கு நல்லாரின் உரைப் பொதுநெறிகளாக, "சொற்பொருள் விளக்கம், சொற்பொருளை வேற்றுமைப் படுத்தல், இலக்கணத் திறன் பயிற்சி, பன்னூல் பயிற்சி, பல்கலைப் புலமை, அணிநலன்களை எடுத்துரைத்தல் உலகியல் அறிவு"[70] போன்றனவற்றைக் குறிப்பிடுகிறார் நெல்லை ந.சொக்கலிங்கம்.

உரையின் பொது நெறிகள்

அரும்பத உரைகாரர் குறிப்புரைகளை மட்டும் தர அடியார்க்கு நல்லார் அக்குறிப்புரைகளை அடியொற்றி விளக்கமான உரையை வரைந்து தருகிறார்.

சொற்களுக்குப் பொருள் தருதல், இலக்கணக் குறிப்புக் காட்டுதல், சிறப்புரை நல்கல் போன்றன இவரின் உரை அமைப்பாக உள்ளது. இவரின் உரை நண்பகல் வேலையில் பருந்தும் நிழலும் ஒன்றுடன் ஒன்று அமைதல் போல மூல நூலாசிரியர் கருத்திற்குச் சற்றும் விலகாத நிலைப்பாடு உடையது என்பதை,

''பருந்து நிழலுமெனப் பாவு முரையும்

பொருந்துநெறி யெல்லாப் பொருளும் -- தெரிந்திப்

படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்

அடியார்க்கு நல்லானென் பான்''[71]

என்னும் பாடல் விளக்கும்.

உரை அமைப்பு

அடியார்க்கு நல்லாரின் உரை அமைப்பு மூல பாடத்தை முழுவதும் தந்துவிட்டு, உரைப்பகுதிகளைப் பொருள் முடிபு கருதி சிற்சில அடிகளை இணைத்துப் பொருள் சொல்லும் முறையில் அமைகின்றது. எடுத்துக்காட்டுக்குப் பின்வரும் பகுதிகளைச் சான்றாக்கலாம்.

''மூவாமருந்தின்...... இடையென இந்திரன் அசுரரையழித்துச் சுரரைக் காத்தற்காக எடுத்த வச்சிரப் படையை நினக்கு இடையாகவெனத் திருத்தித் தரக்கடவன்; அ∴து எற்றாலெனின், இமையவர்க்கு மரணமின்மையைப் பயக்கும் அமிழ்திற்கு நீ முற்பிறத்தலானென்க. ஆகவென ஒரு சொல் வருவிக்க மூவா. மூத்த வென்னும் பெயரெச்ச எதிர்மறை. எனவே மூப்புக்கும் பிணிக்கும் மருந்தென்பதாயிற்று. என்றது அமிர்தத்தை மருந்தின் உருபுமயக்கம். நீ அமுதாகலின், நினக்கு முன்னர் வச்சிரம் பிறத்தலானெனினும் அமையும். வச்சிரமும் அமுதமும் கடல் கடைகின்ற காலத்துப் பிறந்தவெனப் புராணம் கூறும். வச்சிரம் இருதலைச் சூலமாய் நடுவுபிடியாயிருத்தலான் அதனிடையை 'நுசுப்புக்கு உவமங் கூறுப. இறைவன் காமன் இந்திரனென்னுமிவர், பிறை கரும்பு வச்சிரமென்னுமிவற்றை நுதல் புருவம் இடையாகத் தருக ஈக்க அளிக்க

உடன் பிறப்புண்மையிற் பண்புண்டாகலின் முன்னர்த் தோன்றலினென உய்த்துரைக்க"[72] என்கிறார்.

முதலில் மூலப்பகுதியின் பொருள் தொடங்கி முடிக்கும் அடி வரை எண்களைத் தரும் நிலை காணப்படுகிறது. அதன்பின் பொருள் தொடங்கும் சொல்லைத் தந்து அதன்பின் சிறு புள்ளிகள் சில வைத்து அதன்பின் பொருள் முடிக்கும் முடிவுச் சொல்லைத் தந்து அதன்பிறகு அதன் பொருளைத் தரும் நிலையில் இதன்பொருள் என்பதன் சுருக்கமாக (இ.ள்) என்ற சுருக்கக்குறியீடு தரப்பெற்று, பொருள் வழங்கப்படுகிறது.

முதல்பகுதி பொருள் தரும் நிலையில் அமைய, அதன்பின் இலக்கணக்குறிப்பு வழங்கப்படுகிறது. தொடர்ந்து பொருள் விளக்கம் தரப்பெறுகிறது. இம்முறை இவரின் உரை முழுவதும் காணப்படுகிறது. சில இடங்களில் இதன்பொருள் மட்டும் தரப்படுவதும் உண்டு. அதற்கான சான்று பின்வருமாறு.

"கழனி...கானத்து (இ-ள்) அங்ஙனம் ஒலித்தல் செல்லாக் கழனியிற் செந்நெலும் கரும்புஞ் சூழ்ந்த இடத்தையுடைய நீர் நிலைச் செறுவிலுண்டாகிய தாமரைக் காட்டிலென்க."[73]

மேற்காட்டிய பகுதியில் இதன்பொருள் என்ற பகுதி மட்டும் உள்ளது. இவ்வடிகளில் இலக்கணக் குறிப்புகள் சிறப்பில்லா நிலையில் இருந்த காரணத்தால் இங்கு அது விரிக்கப்படவில்லை.

மேலும் இவரின் உரையில் கட்டளைத் தொடர்கள் பல காணப்பெறுகின்றன. இதுவும் இவர் உரையின் பொது அமைப்பாக உள்ளது.

தலைப்பிடுதல்

சொற்பொருள் முடிவு கருதி அரங்கேற்றுக் காதையில் மட்டும் தலைப்பு தரும் பாங்கு அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படுகின்றது.

"கூத்தியது அமைதி"[74]

ஆடலாசிரியன் அமைதி"[75]

"கவிஞன் அமைதி"[76]

"தண்ணுமையோன் அமைதி"[77]

என்பன இதற்குத்தக்க சான்றுகள் ஆகும்.

தொகுத்து உரைத்தல்

இவரின் உரையானது காதையின் பொருளைத் தொகுத்தோ, அல்லது பகுதிப் பொருளைத் தொகுத்தோ வரையும் தன்மையும் கொண்டதாகவும் உள்ளது. இதற்குப் பின்வரும் பகுதிகள் சான்றுகளாகும்.

"இனிக் கரியவன் புகையினுமென்பதற்குச் சனிவாரம் புகையினுமெனவுமாம். இனிப் புகையினும் தோன்றினும் படரினும் சுரப்ப எதிர நீர் வாய்த்தலை ஓவிறந்தொலிக்குமொலியல்லது ஆம்பி முதலிய ஒலித்தல் செல்லாமைக்குக் காரணமாகிய காவிரியென முடிப்பினும் அமையும். புகையினும் தோன்றினும் படரினுமென்ற உம்மைகள், மழை பெய்தொழில் மாற இவற்றில் ஒன்றே அமையுமாகவும் இவையெல்லாம் சேரினும் கடல் வளனெதிர நெரிக்குமெனக் காவிரியின் சிறப்பை விளக்கி நிற்றலிற் சிறப்பும்மைகள்"[78]

"ஆடல் முதலிய காட்டல் வேண்டி ஆடலோனும் இசையோனும் இயற்புலவனும் தண்ணுமையோனும் குழலோனும் யாழோனுங் கூடி வகுத்தனர் கொண்டு தொழுதனரேத்த எழுதி வைத்து எடுத்து வகுத்து நாற்றிக் கிடந்த அரங்கத்துக்கொண்டு ஒழுக்கிப்போக்கி ஆகெனச் செய்து ஏந்தி அணிந்து கொண்டு இயம்ப ஆர்ப்பச் செய்து கொடுப்ப வைத்தபின் நிற்ப ஏறிப் பொருந்திச் சேர்ந்த மகளிரும் பொலிய நீங்கப் பாட இசைக்கும், கருவிகளெல்லாம்நின்றது; நின்றது; நின்றது; நின்றிசைத்தது. பதினொன்று போக்கி, அம்முறை போக்கி, வகுத்தெனக் கடைப்பிடித்துக் காட்டினளாதலின் எய்தி ஏறிப் பெற்றனள். பெற்று நிறுத்தக் கோவலன் வாங்கி மனைபுக்கு அயர்ந்து, மயங்கி மறந்து

விருப்பினனாயினானென்க''[79] என்ற பகுதி அரங்கேற்றுக் காதையின் தொகுப்புரையாக அமைகின்றது. இவ்வாறு ஆங்காங்கே தொகுத்து உரைக்கும் நிலை காணப்பெறுகிறது.

சொற்பொருள் உரைத்தல்

மூல பாடத்திற்கு உரை இதன் பொருள் என்று உரை எழுதிய பிறகு, அடுத்த பத்தியில் அரும்பொருள்களுக்கான விளக்கங்களைத் தருகிறார் அடியார்க்கு நல்லார். இதற்கு,

''புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்

பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து

துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்

பெருநில மன்ன னிருநில மடங்கலும்

பசியும் பிணியும் பகையு நீங்கி

வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி

மாதர்க் கோலத்து வலவையி னுரைக்கும்

மூதிற் பெண்டி ரோதையிற் பெயர''[80]

என்ற மூலப் பகுதிக்கான சொற்பொருள் விளக்கம் பின்வருமாறு.

''புழுக்கல் – முதிரைப் பண்டம். அவரை துவரை முதலியன. 'புழுக்குவ புழுக்கல்' என்றாராகலின்; நோலை- எட்கசிவு; விழுக்குடை மடை – நிணச்சோறு; பொங்கல் – கள்ளு (பொங்கற் சோறுமென்ப); துணங்கை- துணங்கைக் கூத்து. என்னை?

''முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித் துடக்கிய நடையது துணங்கையாகும்'' (திவா.9) என்றாராகலின். இதனைச் சிங்கியென்பாருமுளர்.

குரவை- கை கோத்தாடுங் கூத்து; அணங்கெழுந்தபடி - தேவர் ஏறியாடி; பகை - உட்பகை; வசி - மழை. ‘வசித்தொழிலுதவ மாதிரங் கொழுப்ப’ (மணி.14:57) என்றார் பிறரும். வசியமுமாம் - மாதர் கோலம் – கண்டு எவருங் காதலிக்கப்படும் ஒப்பனை; ‘வலவையின் – நாணிலிகளைப் போல வலவைகளல்லாதார்’ என்றார் பிறரும். வல்லபத்தாலென்பாருமுளர். (நாலடி.268) மூதிற் பெண்டிர் – மறக்குடி மகளிர்; சேர்ந்ததாக அந்நாள் ஒளி கதிர் பரப்பா நிற்பப் புழுக்கல் முதலியன பீடிகையிலேயே சொரிந்து பெண்டிர் வாழ்த்தி ஆடிப் பெயரவென்க.இவர் அரசன் கோயில் அகப்பரிசார மகளிர்”[81] என்ற நிலையில் சொற்பொருள் விளக்கப்படுகிறது.

இவ்வமைப்பில் சொல்லுக்கான பொருள் முதலில் தரப்பெறுகிறது. அதன்பின் அச்சொல் பயின்று வரும் இலக்கணம், அல்லது இலக்கியம் ஆகியவற்றின் சான்றுகள் மேற்கோள் நிலையில் காட்டப்பெறுகின்றன. அவ்வகையில், இச்சொற்பொருள்களை முடிக்கும் நிலையில் இறுதிப்பகுதி அமைகின்றது.

அடியார்க்கு நல்லார் சொற்பொருள் விளக்கும்போது அரிய சொற்களுக்குப் பொருள் தருகிறார் என்றாலும் சொல்லுக்குச் சொல் பொருள் தரும் நிலையில் இதன் பொருள் என்ற பொருள் சொல்லும் பகுதியில் விடுத்தனவற்றிற்கும் விரித்துச் சொற்பொருள் அமைப்பு நிலையில் பொருள் தருகிறார் என்பது குறிக்கத்தக்கது.

மேற்காட்டிய பகுதிக்கு இதன் பொருள் என்ற நிலையில் பின்வரும் பகுதி அமைகின்றது.

‘‘சித்திரை மாதத்துச் சித்திரை நாளிலே நிறைமதி சேர்ந்ததாக அந்நாளிலே நாணிலிகளைப் போல வாய்சோர்ந்துரைக்கும் மாதர்க் கோலத்து மறக்குடிப் பெண்டிர் அப்பீடிகைக்கண்ணே புழுக்கல் முதிலியவற்றை உகுத்து எம்மன்னனுடைய நிலமுழுதும் பசி முதலியன நீங்கி வசி முதலியன சுரக்கவென வாழ்த்தி துணங்கையராய்க் குலவையராய் அணங்கெழுந்தாடிக்

கொக்கரிப்போடே பெயரவென்க”[82] என்ற நிலையில் அமைகிறது. இங்கு புழுக்கல் முதலியவற்றை என்றே குறிக்கப்பட்டுள்ளதால் அதனுடன் பெய்யப்பெற்ற பொருள்களின் இயல்பினைச் சொற்பொருள் விரிக்கும் பகுதியில் விரித்து எழுதியுள்ளார்.

இதன் காரணமாக அடியார்க்கு நல்லார் கூறியது கூறல் என்ற பிழையினின்று தன் உரையினைக் காத்துக் கொள்கிறார்.

அடியார்க்கு நல்லார் மூலப் பகுதியில் சொல்லப்பட்டவற்றிற்கு மட்டும் இதன்பொருள் என்ற நிலையில் பொருளுரைக்கிறார். விரிவான விளக்கங்களைச் சொற்பொருள் பகுதியில் அமைத்துக்கொள்கிறார். இதன் காரணமாக மூல ஆசிரியர் கருத்தைப் பொன்னே போல் போற்றும் அவர் திறம் தெரியவருகிறது.

நாடுகாண் காதையில்,

“வான்கண் விழியா வைகறை யாமத்து

மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்

காரிரு ணின்ற கடைநாட் கங்குல்”(சிலப்.10:1-3)

என்று இளங்கோவடிகளால் தொடங்கப்படுகிறது. இதற்கு அடியார்க்கு நல்லார் தரும் விளக்கம் பின்வருமாறு.

“உலகிற்குக் கண்ணாகிய ஆதித்தன் தோன்றி விளங்காத வைகறையென்னும் யாமத்திடத்து மீனோடு அழகு பெற்றொழுகும் வெண்மதியானது விசும்பினின்றும் நீங்கிற்றாகக் கரிய இருள் கடைக்கணின்ற கங்குற் பொழுதிலென்க

என்பது அந்தச் சித்திரைத் திங்கட் புகுதி நாள் – சோதி, திதி - மூன்றாம் பக்கம், வாரம் – ஞாயிறு. இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூராணையுங் கூடிய சனி வாரத்திற் கொடியேற்றி ‘நாலேழ் நாளினும்’(மணி:1:8) என்பதனான் இருபதெட்டு நாளும் விழா நடந்து கொடியிறக்கி வைகாசி

இருபத்தெட்டினிற் பூருவ பக்கத்தின் பதின் மூன்றாம் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க் கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத் திருளிலேயென்றவாறு. அது பூருவ பக்கமென்பது தோன்றக் 'காரிருணின்ற கடைநாட் கங்குல்' என்றார். குண முதற் றோன்றிய வாரிருண் மதியிற், றேய்வன கெடுக நின் றெவ்வராக்கம்'' என இருண்மதியென்றார் மதுரைக்காஞ்சியுள்ளும் கண்- இறைவன் கண் என்பாருமுளர். விழித்தல் – விளங்குதல், அது செய்யாத வைகறை, ஆகுபெயர். வைகல்- துயிறல், அறல் அறையாயிற்று. 'பொறியறை' (திரி.15) போல''[83] என்ற நிலையில் வான் கண் விழியா வைகறை என்ற தொடருக்குச் சொற்பொருள் விளக்கம் விரிவாகத் தரப்பெற்றுள்ளது. மேலும் அடியார்க்கு நல்லாரின் நாள், கோள் பற்றிய அறிவும் இதனுள் வெளிப்பட்டு நிற்கிறது. இந்திரவிழா தொடங்கப்பெற்ற நாளினைத் தெளிவுபட உரைக்கும் அவரின் கால அறிவு குறிக்கத்தக்கது.

அரங்கேற்றுக் காதையில் இன்னும் விரிவான விளக்கங்கள் உரைப்பகுதியில் அமைகின்றன. ஆடலாசிரியன் அமைதி பற்றி விளக்கம் சொல்லுகையில் இருபது பக்கங்களுக்கு விரிவான உரை கண்டுள்ளார் அடியார்க்கு நல்லார்.

இலக்கணம் காட்டல்

மூல ஆசிரியர் காட்டிய பகுதிகளுக்கு இலக்கணக் குறிப்பு தருதல் என்பது உரையாசிரியர்தம் பொது மரபுகளுள் ஒன்றாகும். அடியார்க்கு நல்லார் இலக்கண அறிவு மிக்கவர் என்பதால் அவரின் உரைகளில் இலக்கணக் குறிப்புகளும் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளன.

பதிகத்தின் முதலிரண்டு அடிக்கு அவர் காட்டியுள்ள பொருள்நிலை அவரின் தமிழ் இலக்கண அறிவின் முழுமையைக் காட்டுவதாக உள்ளது. இதனை ''இவர், பதிகத்தின் முதல் இரண்டடிகட்கு உரை கூறுமிடத்து அவற்றிலுள்ள புணர்ச்சி முடிபு சொன் முடிபுகளை இலக்கணங் காட்டி

விளக்கியிருப்பதும், பொருளாராய்ச்சியை மேற்கொண்டு ஐந்திணைக்கு முரிய கரு உரிப்பொருள்களின் வகைகள் பலவற் றிற்கும் இந்நூலிலிருந்தே மேற்கோள் காட்டியிருப்பதும் இவரது இலக்கணவறிவின் சிறப்பையும் இந்நூலின்கண் இவருக்குள்ள அழுந்திய பயிற்சியையும் புலப்படுத்துவனவாம்''[84] என்று ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் மொழிகின்றார்.

''இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய: அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழக்கு, இடமென்ப; அவற்றுள் திணை இரண்டு: அகத்திணை புறத்திணையென்பன; பால் பதினான்கு: ஆவன. கைக்கிளை முதல் பெருந்திணையிறுவாய் ஏழும், வெட்சி முதல் பாடாண் திணை இறுவாய் ஏழும், செய்யுள் அறுவகை: ஆவன: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடற்பா, மருட்பா வென்பன;

நிலன் நால்வகை: ஆவன: முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன.

காலம் பன்னிரண்டு: ஆவன: சிறுபொழுதாறும், பெரும்பொழுதாறும்.

வழு பதினான்கு: ஆவன: அகத்திணை வழுவேழும், புறத்திணை

வழுவேழும்.

வழக்கு இருவகை: ஆவன: நாடக வழக்கும், உலகியல் வழக்குமென்ப.

இடம் இருவகை: ஆவன: வழக்கிடமும் செய்யுளிடமும்.''[85]

என்ற பகுதி அடியார்க்கு நல்லாரின் தேர்ந்த இலக்கண அறிவைக் காட்டும் பகுதியாகும். இப்பகுதி இன்னும் ஐந்து பக்கங்களுக்கு விரிகின்றது.

''இச்சொல்லப்பட்ட ஐந்திணையின் முதல், கரு, உரிப்பொருளும் பிறவுமாகிய அகத்திணைப் பொருட்பயன் உடம்பொடு புணர்த்தியுணர்த்திப் புறத்திணைப் பொருட்பயனும் பிறவும் இவ்வாறு உடம்பொடு புணர்த்தி உணர்த்துங்காற் புனைந்துரைக்கப்பட்டுக் கேட்போர்க்கு இன்பம் பயவாது உணர்வு சலிக்குமாதலின் வந்தன வந்துழிக் காட்டுதலைக் கருதிற்று இவ்வுரை என்க...இனிப் பதிகச் செய்யுளுள் முதலீரடியும் போல யாண்டும் விரியாதது

உரை பெருகுமென்பதனைக் கருதியே கொள்க''[86] என்ற நிலையில் விரிவாகத் தான் விளக்கம் எழுதிய நிலையை அடியார்க்கு நல்லார் குறித்துள்ளார். இவ்வகையில் இலக்கண அறிவு மிக்கவர் அடியார்க்கு நல்லார் என்பது தெரியவருகின்றது.

''குணவாயில் - திருக்குணவாயிலென்பதோரூர். அது வஞ்சியின் கீழ்த்திசைக்கண் உள்ளது. அஃது ஆகுபெயர். அது குணக்கண் வாயில் குணவாயில்; குணக்கின் கண்வாயில் குணவாயிலெனச் சாரியை பெறாதும் பெற்றும் வரினும் அமையும். என்னை? 'ஏழனுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச் சாரியைக் கிளவி இயற்கையுமாகும்' (தொல். உருபு-29) என்றாராகலின் வாயிற்கோட்டமென்பது 'லகார விறுதி னகார வியற்றே' (தொல்.புள்ளி-71) என்பதானல், ஏழுனுருபின்கண் வந்த சாரியை லகாரவீறு வருமொழி முதல் வல்லெழுத்து வர னகாரம் வேற்றுமைக்கண் திரிந்து றகாரமாயிற்றே போலத் திரிந்தது. கோட்டம் – அருகன் கோயில். அது 'மஃகான் புள்ளிமுனத்தே சாரியை' (தொல்.உருபு.13) என்பதனால் ஏழனுருபின்கண் சாரியை பெற்று,'அத்தே, வற்றே யாயிரு மொழிமேல், ஒற்று மெய் கெடுத றெற்றென்றற்றே?' (தொல்.புணர்.31) என்பதனால் மகரங்கெட்டு 'அத்தி னகர மகரமுனை யில்லை' (தொல்.புணர்.23) என்பதனால் அகரங் கெட்டு முடிந்தது''[87] என்ற நிலையில் தொடர்ந்து இலக்கணக் குறிப்புகளை அடுக்கி மொழியும் தன்மையால் அடியார்க்கு நல்லாரின் இலக்கணப் புலமை அறியத்தக்கதாக உள்ளது.

அடியார்க்கு நல்லார் பெயர், வினை, இடை, உரி என்ற நாற்சொற்களின் வகைப்பாட்டினையும் தம் உரைக்குள் காட்டியுள்ளார். இவையன்றி தொகைநிலை, அணி போன்றனவற்றையும் தம் உரையில் காட்டி நிற்கிறார். அவற்றுக்கான சான்றுகள் பின்வருமாறு.

''சாயல் – மென்மை''[88] என்ற நிலையில் உரிச்சொல்லின் பொருளைத் தொல்காப்பிய நூற்பா கொண்டு விளக்குகிறார். அடியார்க்கு நல்லார் உரையில் இலக்கணக் குறிப்பு தொல்காப்பியத்தை அடியொற்றி, தொல்காப்பிய நூற்பா எண் தந்து விளக்கும் நிலை காணப்பெறுகிறது. "சிறுமலை – பெயர்"[89],

“பூங்கொடி – உவமப்பெயர்”[90] என்ற நிலையில் பெயர் பற்றிய இலக்கணக் குறிப்புகளும் அடியார்க்கு நல்லாரால் தரப்பெற்றுள்ளன.

நூலாசிரியரை ஆராய்தல்

இளங்கோவடிகள் திங்கட்செல்வன் என்று வேனிற் காதையில் குறிக்கிறார். இவ்வாறு குறிப்பது சரியா என்று ஆராய்கிறார் அடியார்க்கு நல்லார். ‘‘திங்கட் செல்வன் – ‘கால முலகம்’ (தொல்.கிளவி – 58) என்னுஞ் சூத்திரத்துள் ஞாயிறு, திங்களென்பன உயர்திணை மேலனவாய்ப் பால் பிரிந்திசையா வெனவும் ‘நின்றாங் கிசைத்த லவணியல் பின்று’ (தொல்.கிளவி.59) எனவே நின்ற முறையானே ஈறுபெற்று நின்று உயர்திணையாயிசைத்தல் இவணியல்பினறெனவுங் கூறிய ஆசிரியர், ‘இசைத்தலுமுரிய வேறிடத்தான’ (தொல்.கிளவி.60) எனக் கால் முதலாகிய சொல் உயர் திணையாயிசைத்தலுமுரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்ட வழி யென்றாராகலின் இதுவும் ஈறுதிரிந்து திங்கட் செல்வனென்றாயிற்றென்க. மேலும் இவ்வாறு வருவனவற்றிற்கும் இவ்விதி கொள்க’ என்று திங்கட் செல்வன் என்று திங்களை உயர்திணையாக்கியது சரி யென்று முடிக்கிறார்”[91] அடியார்க்கு நல்லார். மூல நூல் ஆசிரியரின் கருத்து சரியெனக் காட்டும் உரையாசிரியரின் செம்மரபு அடியார்க்கு நல்லாரிடத்து உள்ளது.

கோவலன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து பிரிந்த நிலையை இளங்கோவடிகள் அயோத்தி பிரிந்த இராமனோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

‘‘பெருமகனேவ லல்ல தியாங்கணும்

அரசே தஞ்சமென் றருங்கானடைந்த

அருந்திறல் பிரிந்த அயோத்தி போல’’(சிலப்.13:63-65)

இதற்கு உரை வரைந்த அடியார்க்கு நல்லார் ‘‘எத்துணைச் சிறு தொழிலாயினும் பெருமகன் ஏவிய பணிவிடையைச் செய்தலே அரிய பொருளாதலல்லது பணிவிடையன்றாயின் அரசாட்சி என்றும் எண்மைப் பொருட்டாமென்று கருதி

அடைதற்கரிய வெங்கானிலே சென்றடைந்த இராமன் நீங்கப்பட்ட அயோத்தியின் கண்ணுள்ளார் செயலற்று மயங்கினாற்போலப் பெரிய புகழையுடைய புகாரின்கண் உள்ளார் யாவரும் மிகவும் மயங்கிய செய்தியும்''[92] என்று இதற்குப் பொருள் விளக்கம் தருகிறார். இதன்பிறகு சொற்பொருள் விளக்கம் தரும் அடியார்க்கு நல்லார் ''பெருமகன் – தசரதன். தஞ்சம் - எண்மை. அருந்திறல் - இராமன் அன்மொழித் தொகை ஆகுபெயர்''[93] என்று விளக்கம் செய்கிறார். அருந்திறல் வாய்ந்த இராமன் என்று விரிக்கும் நிலை இல்லாது, அருந்திறல் என்று மட்டுமே தரப்பெற்றுள்ளதால் இது அன்மொழித்தொகைக் கண் வந்த ஆகுபெயர் என்று காட்டுகிறார் அடியார்க்கு நல்லார்.

''முந்நீர்-கடல். ஆகுபெயர். ஆற்றுநீர், ஊற்றுநீர், மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று. ஆற்றுநீர் மேனீராகலானும், இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றாமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று. முதிய நீரெனின் 'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும் (குறள்-17) என்பதனால் அதுவும் மேனீரன்றி அமையாமையின் ஆகாது. ஆனால் முந்நீர்க்குப் பொருள் யாதோ வெனின், முச்செய்கையுடைய நீர் முந்நீர் என்பது. முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும், மண்ணையழித்தலும், மண்ணைக் காத்தலுமாம்''[94] என்று முந்நீர் என்ற பெயருக்கு உண்மை விளக்கம் தருகிறார் அடியார்க்கு நல்லார்.

"திரு - அழகு, பெயருமாம்"[95] ''கொடுங்காயென்பது பெயர், வரி – அடை''[96] என்ற நிலையிலும் பெயர் பற்றிய இலக்கணக் குறிப்புகள் அடியார்க்கு நல்லாரால் தரப்பெற்றுள்ளன.

இளவேனில் வருவதற்கு முன்பே இளங்கோவடிகள் வந்தது என்று குறிக்கிறார். இதனை வந்தது வருமென்னும் எதிர்காலத்தை இறந்தகாலத்தாற் கூறினார். விரைவு: என்னை? "வாராக்காலத்து நிகழுங் காலத்தும் ஓராங்கு வரூஉம் பொருளவென்மனார் புலவர்'' (தொல். வினை.44) என்றாராகலின் இ∴து என் சொல்லியவாறோவெனின், காமனுக்குத் தேர் தென்றலும், புரிவி கிள்ளையும், யானை அந்தியும், சேனை மகளிருமாதலால் தேர் தென்னர் காவலும், புரவி

கிள்ளி காவலும், யானை சேரமான் காவலுமாக்கித் தானும் தன் சேனையும் புகாரில் வீற்றிருந்தானென்பது கருத்து.''[97] என்ற நிலையில் வந்தது எதிர்காலமாக வந்ததற்கு உரை செய்துள்ளார் அடியார்க்கு நல்லார். இதனுள் மூவேந்தர்களும் இளவேனில் அல்லது காமன் வருகைக்கு உரியராகக் காட்டப்பெற்றிருப்பதும் சிலப்பதிகார மூவேந்தர் மரபினுக்குத் துணைசெய்வதாக உள்ளது.

நின்றோனை ''ஆவோ வாகும்''[98] என்பதனான் முடியும் என்பது வினைச்சொல் பற்றி வந்த குறிப்பாகும்.

''உறையாமையானும், சோர்தலானும், உருகாமையானும், ஆடாடையானும், வீழ்தலானும் மென்றெண்ணிய உம்மைகளில் உறையாமையானுமென மூன்றனுருபு விரிக்க. 'உம்மை யெண்ணி னுருபு தொகல் வரையார்' என்றாராகலின். தான்-அசை''[99] என்ற நிலையில் இடைச் சொல் இலக்கணமும் அடியார்க்கு நல்லாரால் காட்டப் பெற்றுள்ளது.

''ஆங்கு – அசை''[100], ''ஆல் - அன்றே யென்னும் அசை''[101], ''ஐ - இடைச்சொல்''[102], ''மார் - இடைச்சொல்''[103], ''வாழி – இடைச்சொல்''[104], ''நாம் – நாமமென உரிச்சொல் ஈறு திரிந்தது''[105] என்பன போன்றன இடைச்சொல் இலக்கணம் தரும் பண்பிற்குச் சான்றுகளாகும்.

இவை தவிர ''காட்டுமினென்பது – சொல்லெச்சம், காணிய - வினையெச்சம்''[106], ''முடிந்ததென்பது – விகாரம்''[107], ''அ - முன்னறி சுட்டு''[108], ''அறுபொருள்' – அற்றபொருள். வினைத்தொகை''[109], ''கேட்டீமின் - கேண்மின். ஒருசொல். கேட்டைக்க – கேட்டையென்னும் வினையசைச்சொல். உடனடுக்கி வரற்பாலது. கேட்டீமினென்பதனோடு மொழியிடையடுக்காகி ஈற்று வியங்கோட் பொருண்மையாற் கேட்கவென்னும் பொருட்டாயிற்று''[110], ''கடல்வண்ணன் அண்மைவிளி. அண்மைச் சொல்லே இயற்கையாகும் என்பதனால் இது மேலுங்கொள்க''[111] என்ற நிலைகளில் இலக்கணக் குறிப்புகளைத் தந்துள்ளார் அடியார்க்குநல்லார். இவற்றின் வழி இலக்கணத்தை நன்கு உணர்ந்தவர் அடியார்க்கு நல்லார் என்பதும் தன் இலக்கண அறிவால் மூல நூல் ஆசிரியர்

கருத்துக்கு அரண் அமைத்துள்ளார் அடியார்க்கு நல்லார் என்பதும் தெரியவருகிறது.

மேற்கோள் காட்டல்

அடியார்க்கு நல்லார் தம்முரையில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் திருக்குறள், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை, வளையாபதி, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற பல நூல்களில் உள்ள செய்திகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இவ்வாறு மேற்கோள் காட்டும் நிலையில் நூற்பெயரைச் சுருங்கிய வடிவிலும், பகுப்பு, மற்றும் பாடல் எண்களைத் தந்தும் அவர் தந்துள்ள முறை நேரிய ஆய்வாளன் பின்பற்றவேண்டிய முறைமையாக உள்ளது. அவரின் மேற்கோள் காட்டும் சிறப்பிற்குச் சில சான்றுகள் பின்வருமாறு.

‘‘உலகிற்கு – உலகின்கண், ‘உருபு மயக்கம். யாதனு... சாரும்’ என்பதனான் முடிந்தது’’[112] என்ற நிலையில் தொல்காப்பியத்தை எடுத்தாளும்போது தொல் என்ற குறிப்பு தொல்காப்பியத்தைக் குறிப்பதாகவும் வேற்றுமை மயங்குதல் என்பது அதிகாரப்பெயரைக் குறிப்பதாகவும், அடுத்து எண் தரப்படும் நிலையில் அது நூற்பா எண்ணாகவும் அமைகின்றது. இந்நிலையில் அடியாரக்கு நல்லார் தம் இலக்கண நுண்ணறிவு பாரட்டுதற்கு உரியதாக உள்ளது.

‘‘குடை நிழல் மரபு’’[113] என்றதனால் கொடையும் திகிரியும் உயர்ச்சியும் புனைந்து கூறியவாறாயிற்று என்பதும் தொல்காப்பிய மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது.

சிலப்பதிகாரப் பதிகப் பகுதியில் பல நிலைகளில் தொல்காப்பியம் மேற்கோளாக்கப்பெற்றுள்ளது. இவர் காலத்தில் புறப்பொருள் வெண்பா மாலை போன்ற இலக்கணங்கள் எழுந்த நிலையிலும் இவர் தொல்காப்பியத்தையே பின்பற்றியுள்ளார். மேலும் தொல்காப்பியரை ஆசிரியர் என்றும் அழைக்கிறார்.

இதனை அடியார்க்கு நல்லார் உரைப் பாயிரம் வழியும் அறியமுடிகின்றது. “இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற

காலத்து இயற்றமிழ்நூல் தொல்காப்பியமாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தனவாதலானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க. அந்நூலிற் செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பாவும் இனமுமென நான்கினீக்கிய பாவினைத் தொகைவரையறையான் இரண்டென அடக்கியும், விரிவரையறையான் ஆறெனவிரித்தும், அவற்றை அறம்பொருளின் பத்தாற் கூறுக வென்றுங்கூறிப் பின்பு அம்மை முதலிய எட்டுவனப்பும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணமென்று கூறியவர், 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழிகினும் என்பதனால், குவிந்து மெல்லென்ற சொல்லானும் பரந்து வல்லென்ற சொல்லானும் அறம்பொருளின்பம் பயப்ப வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒரு கதை மேற் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பா வெண்கலிப்பாவானும் மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுக வென்றமையான், இத்தொடர்நிலைச் செய்யுள் அங்ஙனங் கூறிய தொடர்நிலையெனவுணர்க''[114] என்ற கருத்தின்வழி அடியார்க்கு நல்லார் தொல்காப்பிய வழியே தன் உரைமரபினை வகுத்துச் சென்றுள்ளமை தெரியவருகிறது.

''அரும்பொருளாவன - நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும்' காலின் வந்த கருங்கறி மூடையும் வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த வாரமு மகிலும், தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும், கங்கை வாரியுங் காவிரிப் பயனும், ஈழத் துணவுங் காழகத் தாக்கமும் அரியவும் பெரியவும் (185-192) எனப் பட்டினப்பாலையுட் சொன்னவும் பிறவும்."[115] என்பதும்,

''குலத்திற்குன்றுதல் - பூப்பின்கட்பிரிதல், அன்றி நடுவின்றி நன்பொருள் வெ.ஃ.கலுமாம் குலத்திற்குன்றாமை - நெடுநுகத்துப் பகல் போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவு மொப்பநாடிக், கொள்வதூமிகைகொளாது, கொடுப்பதூஉங் குறை கொடாது' (பட்டினப்.206-210) என்பதெனக்கொள்க. செல்வர்-இருவர் பிதாக்களும்''[116] என்பதும்,

"தருகவென்றது சூடினபிறை இரண்டு கலையாதலின், அதனை எண்ணாட்டிங்களாக்கித் தருக வென்பது கருத்து. என்னை? 'மாக்கட

னடுவணெண்ணாட் பக்கத்துப், பசுவெண் டிங்க டோன்றி யாங்குக், கதுப்பயல் விளங்குஞ்சிறுநுதல்' (குறுந்.129) என்றாராகலின்''[117] என்பதும்,

'''துள்ளுநர்க் கண்மார'(கலி.4.5) என்றார் போல. பெறுமுறையின்றியும் – அவ்வாறு தான் ஈத்தற்கு உரிமையின்றாகவும்"[118] என்பதும்,

வீழ்குடி- காணியாளர். ''பகடு புறந்தருநர் பார மோம்பிக், குடிபுறந்தருகுவை யாயின்' (புறநா.35) என்றார் பிறரும்"[119] என்பதும்,

''இந்திர ரமுத மியைவ தாயினும'' (புறநா.182:1-2) எனவும் சொன்னார் பிறகும்"[120] என்பதும் சங்க இலக்கியப் பகுதிகளை மேற்கோளாகக் காட்டியமைக்கான சான்றுகள் ஆகும்.

''யாவரும் விரும்புங்குடியென்றுமாம். 'உழுதுண்ட . . . . செல்பவர்' (குறள்.1033) என்பதனாற் கொள்க. குடியொடும் உழவரொடு மென்க. அன்றி உழவில் விரும்புங்குடி யெனவுமாம். உழவின்கட் காமுற்று வாழ்தல்' (திரி.42) என்றாராகலின். வேளாண் - சார்ந்த ரென்பாருமுளர்''[121] என்பன பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை எடுத்தாண்டமைக்கான சான்றுகள் ஆகும்.

''வேலொன்று இரண்டாக ஈத்தல் - நிருமித்துத் தருதல். ஓக்கிய முருகன் வைவேலான்றி ரண்டனைய கண்ணாள்'' (சீவக.12910) என்றாராகலின், வழுத்தல் - அபிமந்திரித்தல். இந்திரகுமரர் காணப்படார். அவரைப் போல இவரும் காணபடார். இந்திரர் – தேவர். ''இந்திரர்க்கும் புகழ் வரிதே'' (சீவக.173) எனவும். இனி அந்தர குமரரென்பாருமுளர் என்பதும், எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவைய என்றாராகலின், ''தவழும் புதல்வரை யொருகையாற் றழீஇப், பவழஞ் சேர்ந்த பல்காழல்குலர் (பெருங்.1.43.145-6) என்றார் கதையினும்"[122] என்பதும், துளைக்கருவியானும் நரப்புக்கருவியானும் குரல் முதலாயுள்ள ஏழிசையினும் சரிகமபதநி யென்னும் ஏழெழுத்தினையும் மூவகை வங்கியத்தினும் நால்வகையாழினும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழுதிறத்தையும் குற்றமின்றாக இசைத்துக் காட்ட வல்ல பெறுதற்கு அரிய இசைமரபையறிந்த

குழலர் பாணர் முதலாய பெரிய இசைக்காரர் இருக்குமிடங்களுமென்க என்பதும் காப்பியங்களில் இருந்து எடுத்தாளப்பெற்ற மேற்கோள்களுக்குக் காட்டாகின்றன. இவ்வாறு மேற்கோள் காட்டலில் செம்மையான முறையை அடியார்க்கு நல்லார் கையாண்டுள்ளார்.

இவ்வாறு இவரின் உரையில் பொது நெறிகள் அமைகின்றன. இவரின் உரையில் பல சிறப்பு நெறிகள் காணப்படுகின்றன. தமிழின் மேன்மை கூறல், வடமொழி இலக்கிய வளங்களை ஒப்புநோக்குதல், கூத்தின் இயல்பு அறிந்திருத்தல், இசை நுணுக்கம் அறிந்திருத்தல் போன்ற பல சிறப்புக் கூறுகள் இவரது உரையில் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வரும் பகுதிகள் விளக்குகின்றன.

தமிழின் மேன்மை உரைத்தல்

சிலப்பதிகாரத்தில் வேனிற் காதையில்,

‘‘நெடியோன் குன்றமுந், தொடியோள் பௌவமும்

தமிழ் வரம்பறுத்த தண்புன னன்னாட்டு’’ (சிலப்:8.1-2)

என்று தமிழகத்தின் எல்லை குறிக்கப்படுகிறது. இதற்குப் பின்வருமாறு பொருள் தருகிறார் அடியார்க்கு நல்லார்.

‘‘வடக்கின்கண் வேங்கடமலையும் தெற்கின்கட் குமரிக்கடலும், கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் ஒழிந்த கடல்களுமே தமிழ் நாட்டிற்கு எல்லையென்று கூறுபடுத்த மூவேந்தருடைய குளிர்ந்த புனலை உடைய நல்ல நாட்டிடத்தென்க’’[123] என்பது அடியார்க்கு நல்லார் வரைந்துள்ள உரையாகும்.

இப்பகுதிக்குச் சொற்பொருள் விளக்கம் தரும்போது, தமிழகத்தில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நன்முறையை எடுத்துரைக்கிறார் அடியார்க்கு நல்லார்.

‘‘நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்னாது பௌவமுமென்றது என்னையெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும்

நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தென்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினார் காய்சினவழுதி முதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர். அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஓரவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய ப.்றுளியென்னுமாற்றிற்கும் குமரியென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ் மதுரை நாடும் ஏழ் முன்பாலை நாடும் ஏழ் பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும் ஏழ்குண காரைநாடும் ஏற்குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல் கொண்டடொழி தலாற் குமரியாகிய பௌவமென்றா ரென்றுணர்க. இ.்து என்னை பெறுமாறெனின், “வடிவே லெறிந்த வான்பகை பொறாது, ப.்றுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள” (சிலப்.11:18-20) என்பதனாலும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும் உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும், பிறவாற்றானும் பெறுதும்”[124] என்று தலைச்சங்கத்தின் இயல்பினை எடுத்து மொழிகின்றார் அடியார்க்கு நல்லார்.

அதாவது குமரிக் கண்டம் இருந்தமைக்கான சான்றும், ப.்றுளி ஆறு ஓடிய நிலைக்குச் சான்றும் இப்பகுதியில் அறியக்கிடக்கின்றன. அவை கடல் கோளால் அழிந்து கடல் சூழுந்த நிலையில் தமிழகத்தின் எல்லை குமரிமுனை ஆகியது என்பதை விளக்க இத்தனை சான்றுகளைத் தருகிறார் அடியார்க்கு நல்லார்.இதன்வழி தலைத் தமிழ்ச் சங்கப் பெருமை வெளிப்படுகின்றது.

“இரண்டாம் ஊழியதாகிய ‘கபாடபுரத்தின்’ இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க்

கருங்கோழிமோசியாரும், வெள்ளூர்க்காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும், மதுரையாசிரியன் மாறனாரும், துவரைக் கோமகனும், கீரந்தையாரும் என்றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட கலியும் குருகும் வெண்டாளியு முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதையுள்ளும்”[125] என்ற நிலையில் இடைச்சங்க மரபும் அடியார்க்கு நல்லாரால் காட்டப்பெற்றுள்ளது. இவ்வகையில் தமிழ்ச்சங்க மரபுகளைத் தன் உரைக்குள் தந்து தமிழ் மரபினைக் காத்து நிற்கிறார் அடியார்க்கு நல்லார்.

பெருந்தேவபாணி பாடும் முறைமையைச் சொல்லும்போது தமிழின் முத்தமிழ் வகையினையும் வெளிப்படுத்தும் உரையாக அவரின் உரை அமைகின்றது. “பெருந்தேவபாணி- முத்தமிழுக்கும் பொது. அஃது இயற்றமிழில் வருங்காற் கொச்சக வொரு போகாய் வரும். வரும்வழியும் பெருந்தேவபாணி, சிறுதேவபாணி யென இருவகைத்தாய் வரும்...என்னை? இனி இசைத்தமிழில் வருங்கால் முகநிலை கொச்சகம் முரியென்ப ஒருசாராசிரியர். அன்றி இசைப்பா. இசையளவு பாவென்னும் இரு பகுதியுள் இஃது இசைப்பாவின் பகுதியென்ப இனி, நாடகத்தமிழில் தேவபாணி வருங்காற் பெருந்தேவபாணி பல தேவரையும், சிறுதேவபாணி வருணப் பூதரையும் மூவடி முக்கால் வெண்பாவால் துதிக்கின்றுழி அவரணியும் தாரும், ஆடையும் நிறனும், கொடியும் துதித்து அவராற் பெறவேண்டுவனவும் துதிக்கப்படும்”[126] என்ற நிலையில் முத்தமிழ் பகுப்பு அடியார்க்கு நல்லாரால் உரைக்கப்பெற்றுள்ளது.

வடமொழி வழி விளக்கம் அளித்தல்

அடியார்க்கு நல்லார் வடமொழி அறிவும் பெற்றவராக விளங்குகிறார். இதன் காரணமாக அவரின் உரையில் வடமொழி விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

‘வடமொழி வாசகஞ் செய்த நல்லேடு’(சிலப்.15:58)

என்ற சிலப்பதிகார அடிக்கு விளக்கம் தருகையில் அடியார்க்கு நல்லார் ‘வடமொழி - ஆரியம்’, என்று சொல்லிவிட்டு வடமொழியாலேயே ஆன பஞ்ச தந்திரம் ஸ்லோகம் ஒன்றை வடவெழுத்துகள் கொண்டே காட்டுகின்றார். (அதன் தமிழ் ஒலிபெயர்ப்பு பின்வருமாறு)

அபரீக்ஷ்ய நகர்த்தவ்யம்கர்த்தவ் யம் ஸீபரீக்ஷிதம்

பஸ்சாத் பவதிஸந்தாபம்ப்ராஹ்மணீநகுலம் யதா”[127]

என்று ஏட்டில் எழுதப்பெற்றிருந்தது இந்த வடமொழி வாசகம்தான் என்று உரைக்கிறார். இன்னும் பல இடங்களில் வடமொழி வழி விளக்கம் தருகின்றார் அடியார்க்கு நல்லார். “சினேந்திரன் என்பதற்கு எண்வகைக் கன்மங்களையும் சயித்தவன். அவையாவன ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம், எனவிவை”[128] என்று விளக்கம் தருகையில் இவரின் வடமொழி அறிவு வெளிப்பட்டு நிற்கிறது.

“எண்குணன் என்பதற்கு விளக்கம் தருகையில் எட்டு குணங்களை உடையோன். எண்குணமாவன – அநந்த ஞானம், அநந்த வீரியம், அநந்த தரிசனம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம். நிராயுஷ்யம், அழியாவியல்பென விவை”[129] என்ற நிலையில் வடமொழி வழி விளக்கம் தருகிறார். இவ்வாறு வடமொழி அறிவால் சிலப்பதிகார மூலத்திற்கு வலு சேர்த்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

இசைக் குறிப்புகளைத் தருதல்

தமிழர் இசை அறிவுபெற்றோர் என்பதற்குக் காட்டாக அமைவது சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையாகும். இக்காதையில் பல இசைக் குறிப்புகளை இளங்கோவடிகள் காட்டிச் செல்கிறார். அவற்றை தன் உரைநயத்தால் விளக்கி உரைக்கிறார் அடியார்க்கு நல்லார்.

இதனை, “அடியார்க்கு நல்லார் தம் உரையின் கண் இயற்றமிழுக்குத் தொல்காப்பியத்தையும், நாடகத் தமிழுக்கு அறிவனார் செய்த பஞ்சமரபு

முதலான நூல்களையும், இசைத்தமிழுக்குச் சிகண்டியார் செய்த இசை நுணுக்கத்தையும், யாமெளேந்திரர் செய்த இந்திரகாளியத்தையும் மூலமாகக் கொள்ளுகின்றார். நல்லார் தம் காலத்திற்கு முன்னரே இறந்துபோன சில தொன்மைச் சிறப்பு மிக்க இசைத்தமிழ் நூற்களின் பெயரைக் குறிப்பிடுகிறார். அவை பெருநாரை, பெருங்குருகு, தேவவிருடி, சாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலான"[130] என்னும் ச.வே.சுப்பிரமணியனின் கூற்று நன்கு விளக்கும்.

அடியார்க்கு நல்லார் உரையில் இசை பற்றிய குறிப்புகளும் இசைக் கருவி பற்றிய குறிப்புகளும் பல காணப்பெறுகின்றன. அவரின் முழு இசையறிவு புலப்படுவதற்கு அவர் கானல் வரிக்கு எழுதி உரைப்பகுதிகள் கிடைப்பின் சிறப்புடையதாக இருந்திருக்கும்.

ஏழிசை என்பது பற்றி அடியார்க்கு நல்லார், "சட்சம், ரிடபம், காச்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும். என்னை? சரிகமபதிநி யென்றேழெழுத்தாற் றானம், வரிபரந்த கண்ணினால் வைத்துத் தெரிவரிய, ஏழிசையும் தோன்று மிவற்றுள்ளே பண் பிறக்கும்"[131] என்று விளக்கம் தருகிறார்.

பண் என்பதற்கு "பெருந்தானமெட்டினும், கிரியைகளெட்டானும் பண்ணிப் படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று. பெருந்தானமெட்டாவன - நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணாக்கும், உதடும், பல்லும், தலையுமென இவை.கிரியைகளெட்டாவன - எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என இவை. இங்ஙனம் பிறந்து பண்ணப்படும் பண்ணும் இசையுமாகிய இவற்றைப் பயக்கும் மிடறு ஆகுபெயரான் மிடற்றுப் பாடற்காயிற்று"[132] என்று பண்ணிற்கும் மிடற்றுப் பாடலுக்கும் விளக்கம் தருகிறார்.

கவிதையாசிரியன் இசைக் கூறுபாடு அறிந்திருக்க வேண்டுவது அவசியமாகும். சிலப்பதிகாரம் கவிஞனுக்குரிய இலக்கணத்தினை,

"திசையோன் வக்கிரித் திட்டத்தை யுணர்ந்தாங்

கசையா மரபினதுபட வைத்து"(சிலப்:3:41-42)

என்ற நிலையில் அமைக்கிறார் இளங்கோவடிகள். இதற்கு உரை எழுதப் புகுந்த அடியார்க்கு நல்லார், "இசைப்புலவன் ஆளத்திவைத்த, பண்ணீர்மையை முதலும் முறையும் முடிவும் நிறையும் குறையும் கிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மைமென்னும் பதினொரு பாகுபாட்டினானும் அறிந்து அறிந்தவண்ணம் அவன் தாள நிலையில் எய்த வைத்த நிறம் தன் கவியினிடத்தே தோன்ற வைக்கவல்லானாய்"[133] என்று என்று இசைநுணுக்கம் காட்டுகின்றார்.

ஆளத்தி என்பதற்கு, ''மகரத்தி னொற்றாற் கருதி விரவும், பகருங் குறினெடில் பாரித்து நிகரிலாத், தென்னா தெனாவென்று பாடுவா ரேலாளகத்தி''[134] என்று விளக்கம் தருகிறார்.

யாழ் என்ற இசைக்கருவி பற்றி, ''யாழ் நால்வகைப்படும். அவை பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் என்பன. இவை நாலும்பெரும்பான்மைய, சிறுபான்மையான் வருவன பிறவுமுள; இந்நால்வகை யாழிற்கும் நரம்பு கொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பத்தொன்பதும், செங்கோட்டியாழிற்கு ஏழும் கொள்ளப்படும்; யாழின் உறுப்புகள் பற்றி கோட்டினமைதியும், கொளுவிய ஆணியும், ஆட்டிய பத்தரின் வகையு மாடகமும், தந்திரி யமைதியும் சாற்றிய பிறவு, முந்திய நூலின் முடிந்த வகையே''[135] என்ற நிலையில் யாழ் பற்றிய குறிப்பினைத் தருகிறார் அடியார்க்கு நல்லார்.

இவ்வாறு யாழின் அமைதி, வகை போன்றவற்றைக் குறித்த அடியார்க்கு நல்லார், ''வகுக்கப்பட்டனவெல்லாம் கானல்வரியில் 'குற்றம் நீங்கியயாழ்' என்பதன்கண் விரியக் கூறும்''[136] என்று காட்டுவதன் வழி அடியார்க்கு நல்லார் கானல் வரிக்கு உரை வரைந்துள்ளார் என்பதும் அது கிடைக்கவில்லை என்பதையும் இங்கு எண்ணிப் பார்க்கவேண்டி உள்ளது.

குழல், தண்ணுமை போன்ற இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளையும் சிலப்பதிகார வழி அடியார்க்கு நல்லார் காட்டுகின்றார். ''குழல் - வங்கியம்.

அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்துமாம்."[137] இவற்றுள் மூங்கிலில் செய்வது உத்தமம். "வெண்கலம் மத்திமம். ஏனைய அதமமாம். மூங்கில் பொழுது செய்யும். வெண்கலம் வலிது. மரம் எப்பொழுதும் ஒத்து நிற்கும்''[138] என்பன குழல் பற்றிய செய்திகள் ஆகும்.

''தாழ் குரல் தண்ணுமை என்றது - தாழ்ந்த குரலினுடையுடைய தண்ணுமைக் கருவி முதலாயின வாசித்தலுமென்க. அவையானவன. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முருசு, கண்விடுப்பு, தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி. பெரும்பறையெனத் தோலாற் செய்யப்பட்ட கருவிகள்''[139] என்பன தமிழர்கள் அடியார்க்கு நல்லார் காலத்தில் பயன்படுத்திய தோல்கருவிகளாகக் கொள்ளத்தக்கன. இவ்வுரையின் வழி இசை பற்றியும் இசைக் கருவிகள் பற்றியும் பல குறிப்புகளை உள்ளடக்கி அடியார்க்கு நல்லார் உரை கண்டுள்ளார் என்பதை அறியஇயலும்.

கூத்துக்கலைக் குறிப்புகளைத் தருதல்

அரங்கேற்றுக் காதையில் கூத்துக்கலை பற்றிய பல்வேறு குறிப்புகளைக் காட்டுகின்றார் அடியார்க்குநல்லார். கூத்து என்பது ஆடல், பாடல், பாணி கலந்த நிலைப்பாடாகும். இது இருவகைப்படும். இவ்விருவகையும் பலநிலைகளில் அமைந்துள்ளது என்பதை,

''இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து

பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்

பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்

விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்''(சிலப்:3: 12-15)

என்னும் அடிகளுக்கு, ‘‘வசைக் கூத்து – புகழ்க்கூத்து; வேத்தியல் – பொதுவியல்; வரிக் கூத்து- வரிச் சாந்திக் கூத்து; சாந்திக் கூத்து - விநோதக் கூத்து; ஆரியம் – தமிழ்; இயல்புக் கூத்து – தேசிக் கூத்து’’[140] எனச் சுட்டுகிறார். இவ்விரண்டு சார்ந்த பல வகையில் சிலப்பதிகாரத்தில் காட்டப்படுவது சாந்திக் கூத்து, விநோதக் கூத்து என்பன மட்டுமே என்றும் உறுதிபட உரைக்கிறார்.

‘‘சாந்திக் கூத்தே தலைவனின்பம், ஏந்தி நின்றாடிய வீரிரு நடமவை, சொக்க மெய்யே யவிநய நாடகம், என்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர். என்பதனால் நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து சாந்திக் கூத்தெனப்படும்’’[141] சொக்கமென்றது – சுத்த நிருத்தம் அது நூற்றெட்டுக் கரணமுடைத்து, “மெய்க் கூத்தாவது - தேசி வடுகு சிங்களமென மூவகைப்படும். இவை மெய்த்தொழிற் கூத்தாகலின், மெய்க் கூத்தாயின. இவை அகச்சுவை பற்றி யெடுத்தலின் அகமார்க்கமென நிகழ்த்தப்படும்; ... அவிநயக் கூத்தாவது – கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லவபஞ் செய்யும் பலவகைக் கூத்து; நாடகம் – கதை தழுவி வரும் கூத்து’’[142] என்று சாந்திக் கூத்தின் வகைகளைக் காட்டுகின்றார் அடியார்க்கு நல்லார். இதன்பின் விநோதக் கூத்தின் வகைகளைக் காட்டுகின்றார்.

‘‘விநோதக் கூத்தாவது - குரவை, கலிநடம், குடக் கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பர்; குரவை - வரிக் கூத்தின் ஓர் உறுப்பு. அவை வந்தவழி கண்டுகொள்க; கலிநடமென்றது – கழாய்க் கூத்து; குடக்கூத்தென்றது – மேற்பதினொராடலுட் காட்டப்படும்; கரணமாவது – படிந்த ஆடல்; நோக்கென்றது – பாரமும் நுண்மையும் மாயமு முதலாயினவற்றை உடையது; தோற்பாவை என்றது – தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பது’’[143] என்ற வகையில் இருவகைக் கூத்தின் இயல்புகளையும் வகைகளையும் விளக்குகிறார் அடியார்க்கு நல்லார்.

இவ்வாறு ஆடல் வகை சொன்ன அடியார்க்கு நல்லார், அபிநயம் எனப்படும் கைகளால் பொருள் உணர்த்தும் முறைமைக்கு வகைகள் காட்டுகிறார்.

“பிண்டியும், பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையும்” (சிலப்:3:18)

என்பதற்கு அடியார்க்கு நல்லார் தரும் விளக்கம் நாட்டிய நுட்பம் வாய்ந்ததாகும். “பிண்டியுமென்றது – ஒற்றைக் கையு மென்றவாறு. .... அவற்றுள் கைதான் இரண்டு வகைப்படும். இணையாவினைக்கையும், இணைக்கையுமென. இவை ஒற்றைக் கை, இரட்டைக் கை யென்றும் வழங்கப்படும். இவ்வகையோடும் ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கையென்னும் நான்கினையுங் கூட்டி ஆறென்பாருமுளர்”[144] என்ற நிலையில் கைகளின் அசைவுகளை வகை செய்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

மேலும் இணையாவினைக்கை முப்பத்துமூன்று வகைப்படும் என்று காட்டி அம்முப்பத்து மூன்றையும் விரித்துரைக்கிறார் அடியார்க்கு நல்லார். இதனுடன் இணைக்கை பதினான்கு பகுப்பும் விளக்கப்படுகின்றன. இவை நாட்டிய நுணுக்கம் வாய்ந்தவை.

மேலும் இவரின் உரையில் ஆடல் வகைகளும், ஆடல் அரங்கம் பற்றிய செய்திகளும், தலைக்கோல் பற்றிய செய்திகளும் விரிவுடன் தரப்பெற்றுள்ளன. இவ்வகையில் கூத்துக் கலை சார்ந்த இவரின் அறிவு சிலப்பதிகாரப் பகுதிகளுக்குக் கூடுதல் விளக்கம் தருவனவாக அமைகின்றன.

உடற் கூற்றியல் செய்திகளை இணைத்தல்

மனித உடற் கூறு பற்றிய அறிவினையும் அறிந்துள்ளார் அடியார்க்கு நல்லார். பாடல் எழும் நிலையில் காற்று எழும் அளவினை மாத்திரை எனக் குறித்து அம்மாத்திரை அளவு மாறுபடும் நிலையை உடற் கூற்றியல் முறைப்படி தந்துள்ளார்.

“மாத்திரையாவது –இரண்டரை நாழிகையை எட்டுக் கூறிட்டு ஒரு கூறென்றறிக.அபானவாயு மல மூத்திரங்களைப் பெய்விக்கும். உதானன் கண்டத் தானத்தில் நிற்கும். வியானவாயு போக்குவரவு செய்து இயங்கப் பண்ணும். சமானவாயு அறுவகைச் சுவையையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத் தாதுவின்கண்ணும் கலப்பிக்கும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கல் இடுவிக்கும். கிருகரன் கோபத்தைப் பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம்பெரிப்பைப் பண்ணுவிக்கும். (உயிர் நீங்கய சவத்தையும் விடாது சிறிது நேரம் பற்றி நின்று பின் வெளியேறு வாயு) தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பை விடாதே நின்று மூன்றா நாள் உதிப்பித்து உச்சந்தலையிற் பிற் கூற்றிலே மூன்று நெற்கிடை வெடித்துப்போமென்றறிக”[145] என்ற நிலையில் அடியார்க்கு நல்லார் உரை வரைகிறார்.

பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரைத்திறன்

பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் என்பவரும் சிலப்பதிகாரத்திற்கு விரிந்த நிலையில் உரையெழுதிய பெருமக்களுள் ஒருவர். இவரின் உரையிலும் பொது நெறிகள், சிறப்பு நெறிகள் அமைந்துள்ளன. அவற்றை ஆராய்ந்து உரைப்பதாக பின்வரும் பகுதி அமைகின்றது.

“சிலப்பதிகாரத்தில் பல்வேறு இடங்களில் பழைய உரையாசிரியர் வழுவிய விடங்கட்கெல்லாம் யாம் புதியவுரை வகுத்திருக்கின்றோம். பழையவுரையாசிரியர் காட்டாது போன இலக்கியச் சுவைகள் பற்பல ஆங்காங்கே எம்மாற் காட்டப்பெற்றுள்ளன.”[146] என்றுதாம் உரையெழுத வேண்டியதற்கான தேவையை எடுத்துரைக்கிறார் பெருமழைப் புலவர்.

இவரின் உரைப் பொது நெறிகளாக இதன் பொருள் என்ற நிலையில் மூலபாடத்தின் பொருளை அறிவித்தல், பின் விளக்கம் தரல், சொற்பொருள் தரல், மேற்கோள் காட்டல் போன்றன அமைகின்றன.

உரையின் அமைப்பு

பெருமழைப் புலவரின் சிலப்பதிகார உரைப் பகுதி பின்வருமாறு அமைகின்றது. பெருமழைப்புலவர் மூலப்பகுதியின் அடியெண்களைத் தமிழ் எண் முறைப்படி பொருள்முடிவு பெறும் அடிகளுக்கான எண்களைத் தொடக்க எண் தொடங்கி முடிவு எண் வரும்வரை சிறுகோடிட்டுக் காண்பிக்கிறார். பின்பு அதற்குரிய இலக்கிய அடிகளைத் தொடக்கச் சொல், முடிவுச் சொல் காட்டி இரண்டிற்கும் இடையில் சிறு சிறு புள்ளிகளை அமைத்து உரை வரைந்துள்ளார்.

இதன்பின் இதன் பொருள் என்பதன் சுருக்கமாக (இ-ள்) என்று காட்டி பொருள்விளக்கம் தருகிறார். பின்பு விளக்கம் என்பதன் சுருக்கமாக (வி-ம்) என்று காட்டி விளக்குகிறார். சான்றாக,

‘‘நலங்கேழ் ...... கொண்மென.(இ-ள்) நலம் கேழ் நகைமுகம் முறுவல் காட்டி-கணவனுடைய கழிவிரக்க மொழிகளைக் கேட்ட அத்திருமாபத்தினி தானும் கணவன் கருத்தை யாவதும் மாற்றாத கொள்கையையுடையவளாகலின் கோவலன் மாதவிக்குக் கொடுக்கும் பொருள் முட்டுப்பாட்டினாலே இங்ஙனம் கூறினானாகக் கருதி; அவனுடைய அத்துயர் துடைக்க வழி யாது எனத் தென்னெஞ்சத்துளாராய்ந்து ஒருவழி காணப்பெற்றமையாலே் மெய்யன்பென்னும் நலம் பொருந்துததாலே புத்தொளி படைத்த தனது திருமுகத்திலே தோன்றிய புன்முறுவலைக் காட்டி; சிலம்பு உள கொணம் என- அன்புடையீர் இன்னும் என்பால் சிலம்பு ஓர் இணை உள; அவையிற் இன்றைக் கொண்மின் என்று கூறாநிற்ப என்க.

(வி-ம்) நலம் –அன்பாகிய நன்மை. அந்நலத்தின் மெய்ப்பாட்டினை நகை என்றார். நகை- ஒளி. இலம்பாடு நாணுத்தரும் என்பது அவன் குறையாகலின் அது தீர்த்தற்குத் தன்னுட் சிறிது சூழ்ந்து தான் அணியாதிருக்கும் பெருவிலைச் சிலம்புகள் இக்குறையை இப்பொழுதைக்குத் தீர்க்கப் போதியன வாகும் என்று அப்பெருந்தகையாள் அவற்றைக் கொண்மின் எனக் கூறும் இச்சிறப்பு அவளது ஒப்பற்ற கற்பினது மாண்பினை நன்கு விளக்கி நிற்றல் உணர்ந்துணர்ந்து மகிழற்பாலதாகும். இது கூறுங்கால் அவள் துயர்க்குத் தான் வாய்மையாகவே

வருந்தி அன்பு மேலீட்டால் கூறுதலின் முகம் மலர்ந்து கூறுகின்றாள் என்றுணர்க. அவன் குறை தீர்க்கவியலாது அப்பொழுது தன் பாலொன்றுளதாவனை நினைவு கூர்ந்தவுடன் மகிழ்ச்சியால் அவள் முகமலர்ந்து புன்முறுவலும் தவழ்வதாயிற்று. இஃதியற்கையாம். சிலம்புள கொண்மின் எனவே இவை யொழிந்த அணிகலன்கனெல்லாம் முன்னமே தொலைந்தமை பெற்றாம்"[147] என்ற அமைப்பில் பெருமழைப்புலவர் உரை அமைகின்றது. இவ்வமைப்பின் படி பொருள் முடிவு பெற்ற மூலப்பகுதி இதன்பின் பொருள்பகுதி, அதனைத் தொடர்ந்து, விளக்கம் பகுதி ஆகியன அமைக்கப்பெற்றுள்ளன. இதுவே சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதும் நிலையில் பெருமழைப் புலவர் வகுத்துக்கொண்ட உரை நெறிமுறையாகும்.

அரும்பொருள் காட்டல்

அரும்பத உரைகாரர் பின்பற்றி நடைமுறையைப் பின்பற்றி அடியார்க்கு நல்லாரும் அரிய சொற்களுக்குப் பொருள் உரைத்தார். இதுபோன்று பெருமழைப்புலவரும் இத்தன்மையைப் பின்பற்றியுள்ளார். இதற்கான சான்றுகள் பின்வருமாறு.

பெருமழைப்புலவர் பொருள் முடிவுபெறும் மூலப்பகுதி, இதன்பொருள், விளக்கம் என்ற அமைப்பினைத் தாண்டி பல இடங்களில் சொற்பொருள் விளக்கும் முறைமையைக் கையாண்டுள்ளார். இச்சொற்பொருள் விளக்கும் முறைமை விளக்கம் என்ற பகுதியில் அல்லது அதற்கு அடுத்த நிலையில் அடியின் எண் தரப்பெற்று அவ்வடியில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள்தரும்படி எழுதப்பெற்றுள்ளது.

"(வி-ம்) எக. தாழ்தல்-ஆழ்தல், எஎ. கண்ணவிழ் –கண் போன்ற மலர்ந்த, உவம உருபு தொக்கது. கதுப்பு – கொண்டை, விரியல் –மலர்ந்த பூ"[148]

"கொற்கை,- பாண்டியனாட்டில் ஒரு பட்டினம்,ஈண்டு கிடைக்கும் முத்துச் சிறப்புடையது. முத்து-வடம்,ஆகுபெயர், அக. தெக்கணம்- வடமொழித் திரிபு. மலயத்திற் பிறந்த கொழுவிய சந்தச் சேறு என்றாவாறு. ஆங்கு–அசை"[149]

“கோல்- திரட்சி, கோலம் –ஒப்பனை”[150], “மறையவர் –பஞ்சக்கிராமிகள், தங்கால்- திருத்தங்கால் என்னும் ஊர். மன்றம்- அவ்வூரில் உள்ள போதி மன்றம்”[151], “தீத்திறத்தார் – தீவினையாளர்”[152], “வேறொருவன்- அயலான் ஒருவன். நீள் நோக்கம் – விடாமல் பார்க்கும் பார்வை”[153], “அறுவை – துகில்”[154], “முலை – ஈண்டுச் சுரை(காம்புகள்) நடுங்குபு - நடுங்கி, மால் – பெரிய”[155], “வம்பலர் - வழிபோக்கராகிய புதியவர்”[156], “தேசிகத்திரு - நாட்டு மொழியாகிய செல்வம்... கவி – இயற் புலவன், கொளுத்துதல் – தனதிசை கொள்ளும்படி செய்தல்”[157], “திருமணி – முத்து”[158], “பாயிருக்கை - பரந்த இருப்பிடம்”[159], “கழி – ஊன், பிணி- பிணித்தல். குறை - கறுப்பு, தோல் – பரிசை. மெய்யுறத் தீண்டி – உடற்கறித்து. அழுவம் – பரப்பு, சூர்த்து - அச்சமுறுத்து”[160] என்றது. இவ்வாறு சொற்களுக்குப் பொருள் தரும் முறை பெருமழைப்புலவர் உரைநலமாக விளங்குகிறது. சில இடங்களில் சொல்லுக்கு விரிந்த பொருள் உரைக்கும் பண்பும் காணப்படுகிறது. அதற்கான காட்டுகள் பின்வருமாறு.

“தவம். – தவவேடம். இவ்வேடம் சமயந்தோறும் வேறுபடும். தவமாவது – மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றாற் றம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களை யோம்புதல். இதனை,

“உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை

அற்றே தவத்திற்குரு” **(குறள்:241)**

என்றற் றொடக்கத்துத் திருக்குறளான் அறிக. வேடம் –தலைமயிரைப் பறித்தலும், நீட்டலும், மழித்தலும், துவராடை உடுத்தலும் பிறவுமாம்”[161]

“கூலம் – எண்வகைப்படும். அவை ‘நெல்லுப் புல்லு வரகு தினை சாமை இறுங்கு, தோரையொடு கழை வளை நெல்லே யெனுமிவை’ கூத்த நூலார்

கூலம் பதினெண் வகைத்து என்பர். கூலம் –பலசரக்கு என்பாரும் கருஞ்சரக்கு என்பாருமுளர்''[162] என்று கூலத்திற்கு விரிந்த பொருள் தருகிறார் பெருமழைப்புலவர்.

''காவல் தெய்வம்- அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் பால்வேறு தெரிந்த வகுப்பினர்க்கும் உரிய நால்வேறு வகைப் பூதங்கள். இனி இந்திரன்,இயமன், வருணன், சோமன் என்பாருமுளர்''[163] என்ற நிலையில் காவல் தெய்வம் என்பதற்கான விரிந்த பொருள் விளக்கப்பெருகிறது.

''பருவத் தும்பை –செவ்வியுடைய தும்பைப் பூ. தும்பைப் பூ போர்க்கு அறிகுறியாகச் சூடப்படும். இதனை

''தும்பை தானே நெய்தலது புறனே

மைந்து பொருளாக வந்த வேந்தனைச்

சென்று தலையழிக்கும் சிறப்பிற்றென்ப''

என வருந் தொல்காப்பியத்தான் உணர்க. ஈண்டு தம் மைந்து பொருளாக அருந்தமிழ் ஆற்றல் அறியா திகழ்ந்து போர் செய்தற்கு வந்து எதிர்ந்த வேந்தரைச் செங்குட்டுவன் சென்று அவர்தம் தலைமை அழித்தலுணர்க.

''புலம்பெயர் மாக்கள் என்றது, வேற்று நாட்டினின்றும் ஈண்டு வந்து பொருளீட்டற்கு இருக்கின்ற வணிகரை, அவர் சாதி, மதம், மொழி முதலியவற்றால் வேற்றுமையுடையவராக இருந்தும் ஒரு நாட்டுப் பிறந்தோர் போன்று ஒற்றுமையுடன் இருத்தலின்''[164]

இவ்வாறு சொற்பொருள் உணர்த்தும் நிலையில் விரித்தும், இயல்பாயும்பொருள் சொல்லும் மரபினைப் பின்பற்றியுள்ளார் பெருமழைப் புலவர்.

இலக்கணம் காட்டல்

பெருமழைப்புலவரின் உரைப்பகுதி முழுமையிலும் விரவிக் கிடக்கும் உரைப் பண்பு இலக்கணம் காட்டல் என்பதாகும். இவர் தொல்காப்பியம்,

புறப்பொருள் வெண்பாமாலை வழி இலக்கணக் குறிப்புகளை ஆங்காங்கே காட்டியுள்ளார்.இதற்கான சான்றுகள் பின்வருமாறு.

''நிலைஇயர்- வியங்கோள்; வாழ்த்துப் பொருளின்கண் வந்தது''[165], ''கொம்பர் –ஆகுபெயர்''[166], ''குடிகளோடு என்புழி மூன்றன் உருபு ஏழாவதன் கண் மயங்கிற்று''[167], ''அரைசியல் என்புழி அகரத்திற்கு ஐகாரம் போலி''[168], ''மணவாய்த் தென்றல் என்புழி இரண்டாவதன் உருபும் பயனும் உடன் தொக்கன''[169], ''வஞ்சம் – ஆகுபெயர். .. அழல் –நஞ்சு – ஆகுபெயர்''[170], ''குமிழ் –ஆகுபெயர்''[171], ''காய்சினம் – வினைத்தொகை''[172], ''வாழி – என்றது குறிப்பு மொழி''[173], ''எய்யாத என்னும் பெயரெச்சத்து ஈறு கெட்டது''[174], ''செம்பொன் – குறிப்புவமை''[175], ''காணிகா. இகவென்னும் முன்னிலை அசை, இகாவென ஈறு திரிந்து காண்பாயாக என்பதாயிற்று''[176], ''கேட்டைக்க என்றது ஒரு தலையாகக் கேட்கக் கடவீர் என வேண்டுகோள் பொருண்மைத்தாய் வந்த வினைத் திரிசொல்''[177], ''எள்ளல் – எள்ளுக. ஆல்லீற்று வியங்கோள். உடன் பாட்டின்கண் வந்தது''[178], ''பைத்தர வல்குல் - அன்மொழித் தொகை''[179], ''இறை – முன்னிலைப் புறமொழி, இறையாகிய நினக்கு என்க''[180], ''ஒழிவின்று குற்றியலிகரம், உகரமாயிற்றுச் செய்யுளாதலின்''[181], ''வாய்வாள் – வினைத்தொகை''[182], ''வாயில்- ஆகுபெயர்''[183], ''தென் தமிழ் – ஆகுபெயர்''[184], என்ற நிலையில் இலக்கணம் காட்டல் என்ற பண்பு பெருமழைப் புலவர் உரையில் அமைந்திருக்கின்றது.

மேற்கோள் காட்டல்

பெருமழைப்புலவர் தம் உரையில் தொல்காப்பியம் தொடங்கி கலிங்கத்துப் பரணி வரை பல இலக்கண இலக்கிய நூல்களை மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். இவ்வாறு காட்டுகையில் மேற்கோளாகக் காட்டப்படும் இலக்கியப் பகுதியை முழுமைபட காட்டுவது என்பது இவரின் இயல்பாக உள்ளது.

பருவத் தும்பை – செவ்வியையுடைய தும்பைப்பூ. தும்பைப்பூ போர்க்குறியாகச் சூடப்படும். இதனை,

“தும்பை தானே நெய்தலது புறனே

மைந்து பொருளாக வந்த வேந்தனைச்

சென்று தலையழிக்கும் சிறப்பிற் றென்ப” [185]

எனவரும் தொல்காப்பியம் மேற்கோளாகியுள்ளது.

‘‘படர் – காம நோய். காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி மாலை மலருமிந் நோய்’’[186] எனவரும். திருக்குறளும் நினைக என்ற நிலையில் திருக்குறள் மேற்கோளாகியுள்ளது.

இனி, அரைசு விழை திருவின் மாநகர் என நகர்க்கே அடையாக்கில் பிற நாட்டு மன்னரெல்லாம் விரும்புதற்குக் காரணமான மேழி செல்வத்தையுடைய நகர் எனினுமாம். என்னை?

‘‘பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்

அலகுடை நீழ லவர்’’

என வள்ளுவனாரும் ஓதுதலுணர்க[187]. ‘‘காமச் செவ்வி தலைப்பட்ட தலைவன் கூற்றாக வருகின்ற,

‘‘அசையியற் குண்டாண்டோர் ஏஎர் யானோக்கப்

பசையினள் பைய நகும்’’

என்னும் திருக்குறளானும் இதனை உணர்க[188].

‘‘உரை– புகழ். உலக முழுவதும் வரினும் வழங்கத்தவாத வளமுடையமையால் இந்நகர்க்கே சிறந்துரிமையுடைய சிறப்பு இ.்.தென்பது தோன்ற ஏதுவைப் பின்னர் விதந்தோதினர். புகார் நகரம் அத்தகைய புகழமைந்த நகரமாதலே,

"சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்

கம்ப மில்லாக் கழி பெருஞ் செல்வர்

ஆற்ற மாக்கட் காற்றுந் துணையாகி

நோற்றோர் உறைவதோர் நோனகர் உண்டால்"

என விஞ்சையர் நகரத்துள்ளான் ஒருவன் புகழ்ந்தோதுதலானும் உணர்க (மணிமேகலை 17-62-5)"[189] என்ற நிலையில் மணிமேகலைப் பகுதி மேற்கோளாக ஆக்கப்பெற்றுள்ளது.

அருந்தவம் என்றார் அத்தானந்தானும் தலைப்படுதானம் என்பது தோன்ற இனி அத்தானத்தின் அருமையை,

"அறத்தினாற்றிய வரும்பெரும் பொருளைப்

புறத்துறைக் குற்ற மூன்றறுத்து நற்றவர்க்குங்

கொள்கெனப் பணிந்து குறையிரந்தவர் வயின்

உள்ளமுவந்தீவ துத்தம தானம்"

எனவரும் திவாகரத்தானறிக.

இனி உத்தரகுரு வென்பது ஈண்டுச் செய் நல்வினையின் பயனை நுகர்தற்குரிய மேனிலையுலகம், போக போகபூமி என்பதுமது, இ∴து அறுவகைப்படும் என்ப. அவையிற்றை,

"ஆதியரி வஞ்சம் நல்லரி வஞ்சம்

ஏம வஞ்சம் இரண வஞ்சம்

தேவ குருவம் உத்தர குருவமெனப்

போகபூமி அறுவகைப் படுமே" **(திவாகரம் 12)**

என்பதனானறிக. இனி இவற்றின் கட் பிறந்து போக நுகர்தலை,

“பதினா றாட்டைக் குமரனும் சிறந்த

பன்னீ ராட்டைக் குமரியுமாகி

ஒத்த மரபினு மொத்த வன்பினும்

கற்ப கநன்மரம் நற்பய னுதவ

ஆகிய செய்தவத் தளவு மவ்வழிப்

போக நுகர்வது போக பூமி”   (பிங்கலம் - 12)

என்பதனானறிக.’’[190] மேற்கண்டவற்றில் நிகண்டுகள் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன. பல்வகைத் தமிழாற்றலையும் ஒருங்கே கைவரப் பெற்றவர்களே நிகண்டு நூல்களைப் படிக்கவும் தான் இயற்றும் நூல்களுக்கு மேற்கோள்களாகவும் காட்ட இயலும். அவ்வகையில் இதன்வழி நிகண்டுகளில் பயிற்சி உடையவர் பெருமழைப் புலவர் என்பது தெரியவருகிறது.

இனி, புணர்ச்சி நிமித்தமாக இம்மெய்ப்பாடுகள் தோன்றுமென்பதனை,

“ஓதிய நுதலு நீவி யான்றன்

மாதர் மென்முலை வருடலிற் கலங்கி

யுள்ளத் துகுநள் போல வல்குலின்

ஞெகிழ் நூற் கலிங்கமொடு புகுமிட னறியாது

மெலிந்தில ளாகி வலிந்து பொய்த் தொடுங்கவும்

யாமெடுத் தணைத்தொறுந் தாமியைந் தெழுதலின்

இம்மை யுலகத் தன்றியு நம்மை

நீளரி நெடுங்கட் பேதையொடு

கேளறிந் தன கொலிவள் வேய்மென் றேளே”(தொல்.மெய்ப்.15)

எனவரும் பழம்பாடலின் மூலம் வெளிப்படுத்துகின்றார் பெருமழைப்புலவர்.

“மன்னர் தம்மை மேம்படுக்கு மறவர்க்குப் படைவழங்கும் மரபுண்மையை, படைவழக்கு என்னும் துறைபற்றி ‘முத்தவிர் பூண்மற வேந்தன், ஒத்தவர்க்குப் படைவழங்கின்று’, எனவும் ‘கொடுத்த பின்னர்க் கழன்மறவர், எடுத்துரைப்பினும் அத்துறையாகும்’ எனவும் வரும் கொளுக்களானும் இவற்றிற்கு,

“ஐயங் களைந்திட் டடல்வெங்கூற் றாலிப்ப

ஐயிலை எ ்.க மவைபலவும்-மொய்யிடை

ஆட்கடி வெல்களிற் றண்ணல் கொடுத்தளித்தான்”

எனவும்,

“துன்னருந் துப்பின் தொடுகழலார் சூழ்ந்திருப்பத்

தன்னமர் ஒள்வாளென் கைத்தந்தான்- மன்னற்கு

மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்

விண்ணகமும் வேண்டுகொல் வேந்து”

எனவும் வரும் வரலாற்று வெண்பாக்களானும் உணர்க”[191] என்று (புறப்பொருள் வெண்பாமாலை 64-5) மேற்கோளாகச் சுட்டுகின்றார். (வி-ம்) இளமையிற் கல் என்பதுபற்றி ஐயாண்டிற்றண்டியம் பிடித்தல் வேண்டிற்று. இதனை,

“பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்துநாட்

புண்ணிய வோரை புகன்றனகொண்- டெண்ணியே

வண்டிருக்குங் கூந்தன் மடவரலை யையாண்டில்

தண்டியஞ்சேர் விப்பதே சால்பு” (அடியார்க் - மேற்கோள்)

என வரும் வெண்பாவானுணர்க.

இனி, ஏழாண்டியற்றி என்றதனால் அக்கூத்துக்கலையின் அருமை பெருமைகளும் விளங்கும். இயற்றுதல்- பயிற்றுவித்தல், 'தண்டியம் பிடித்தல்' ஆடற்கலைக்குக் கால்கோள் செய்யும் ஒரு சடங்கு. கல்விக்குக் கால்கோடலை 'மையோலை' பிடித்தல் என்பது போல வென்க. தண்டியம் - தண்டு – கோல்.

இனி பரத சேனாபதியார்,

"வட்டணையும் தூசியும் மண்டலமும் பண்ணமைய

எட்டுட னீரிரண்டாண் டெய்தியபின்- கட்டளைய

கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச்

சோதித் தரங்கேறச் சூழ்"

எனவும்,

"நன்னர் விருப்புடையோள் நற்குணமு மிக்குயர்ந்தோள்

சொன்னகுலத் தாலமைந்த தொன்மையளாய்ப் -பன்னிரண்டாண்

டேய்ந்ததற்பின் ஆடலுடன் பாடலழ கிம்மூன்றும்

வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு"

எனவும் ஓதிய வெண்பாக்கள் ஆடற்கலை பயிற்றுமாறும் அக்கலைக்குரிய தலையாய மாணவி மாண்பும் அரங்கேறும் பருவமும் அறிவித்தல் உணர்க"[192] என்ற நிலையில் பரத சேனாதிபதியார் தம் நூலையும், அடியார்க்கு நல்லார் மேற்கோள் வழி பெறப்பட்ட வெண்பாக்களினாலும் தம் உரையினை பல் இலக்கிய வளம் சார்ந்ததாக பெருமழைப் புலவர் ஆக்கியுள்ளார்.

சங்க இலக்கியப் பகுதிகளையும் தன் உரையில் பெருமழைப்புலவர் எடுத்தாண்டுள்ளார். ஆதலானும், கலியுள் முல்லைத்திணையின்கண் ஆறாம் பாட்டினுள்,"கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண், இமிழிசை மண்டை யுறியொடு தூக்கி, ஒழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர், வழூஉச்

சொற்கோவலர் தந்த மினநிரை, பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தார்' (கலி.106-1-5) எனக் கருவி கூறினமையானும்,'அன்றைய பகற்கழிந் தாளின் றிராப்பகற் கன்றின் குரலுங் கறவை மணி கறங்கக், கொன்றைப் பழக்குழற்கோவல ராம்பலும், ஒன்றல் சுரும்பு நரம்பென வார்ப்பவும் 'என வளையாபதியுள்ளும் கருவி கூறிப் பண் கூறுதலானும் இவை ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்த ஒத்தாழிசை யாதலானும் இரண்டு பண்ணும் ஒன்று கருவியுமாகக் கூறின், செய்யுட்கும் பொருட்கும் வழூஉச் சேறலாம் அங்ஙனம் கூறுதல் அமையாதென்க''[193] என்ற நிலையில் சங்க இலக்கியப் பாடற் பகுதிகள் மேற்கோளாக்கப்பெற்றுள்ளன.

பட்டினத்தார் புராணப் பாடல்களும் மேற்கோளாகப் பெருமழைப்புலவரால், எடுத்தாளப்பெற்றுள்ளது. அதற்கான சான்று பின்வருமாறு.

''ஈண்டு கண்ணகியால் எடுத்துக்காட்டிய கற்புடை மகளிரின் வரலாற்றினைக் கீழ்வரும் செய்யுள்களிலும் காணலாம். அவைகள்,

''கரிகாலன் பெருவளவன் மகள்கேள்வன் கடல் புக்கான்

திருவேயோ எனவழைத்தத் திரைக்கரத்தால் தரக்கொண்டான்

வரைகேள்வன் கலநோக்கி வருமளவுங் கல்லானாள்

புரைதீரப் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே.

வன்னிமடைப் பளியோடு சான்றாக வரவழைத்தாள்

பன்னியகா விரிமணல்வாய்ப் பாவையை நுன் கேள்வனெனும்

கன்னியர்க ளொடும்போகாள் திரைகரையா வகைகாத்தாள்

பொன்னையாள் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே.

கூவிலிற்போய் மாற்றாள் குழவிவிழத் தன்குழவி

ஆவலின்வீழ்த் தேற்றெடுத்தாள் அயனோக்கம் வேறென்று

மேவினாள் குரக்குமுகம் வீடுடையோன் வரவிடுத்தான்

பூவின்மேற் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே

முற்றாத முலையிருவர் முத்துவண்ட லயர்விடத்துப்

பெற்றாற்கு மாண்பெண் பிறர்மணஞ்செய் யாவண்ணம்

சொற்றார்கள் பிறந்தபெண் ணயகனைத் தலைசுமந்தாள்

பொற்றானி பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே''

(இவை-பட்டினத்துப் பிள்ளையார் புராணப் -பூம்புகார்ச் சருக்கத்திற் கண்டவை) என்ற நிலையில் பெருமழைப் புலவரின் விரிந்த பல் நூல் புலமை அறிவு மேற்பாடல் வழி அறியத்தக்கதாக உள்ளது.

''குடை நிலை வஞ்சி - குடைநாட்கோடல், 'பெய்தா மஞ்சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக் (பு.வெ.38), கொய்தார் மன்னவன் குடைநாட்கொண்டன்று வையகம் வணங்கவாளாச் சினனெனச் செய்கழல் வேந்தன் சீர்மிகுத்தன்று'(பு.வெ.42), மாராயவஞ்சி –அரசனாற் சிறப்பெய்துநிலை, 'மாராயம் பெற்ற நெடு மொழியானும்'(தொல்.புறத்.8, இளம்.3), 'மறவேந்தனிற் சிறப்பெய்திய விறல்வேலோர் நிலையுரைத்தன்று' (பு.வெ.46), பெருவஞ்சி-பகைவர் நாட்டைக் கொளுத்துதல், 'முன்னடையார் வள நாட்டைப் பின்னருமுடன் றெரிகொளீஇ யன்று'(பு.வெ.57), பெருஞ்சோற்று வஞ்சியும் - வீரர்களுக்குப் பெருஞ்சோறளித்தல்; பிண்டமேய பெருஞ்சோற்றுநிலையும் 'திருந்தார் தெம்முனை தெறுகுவ ரிவரெனப், பெருஞ்சோ றாடவர் பெறுமுறை வகுத்தன்று' (தொல்.புறத்.8. இள.3) கொற்றவள்ளை-அரசன் புகழைக் கூறுவதுடன் பகைவர் நாடு அழிந்ததற்கு இரங்கல் 'குன்றாச் சிறப்பிற்கொற்றவள்ளையும்'(தொல்.புறத்.8. இள.3) மன்னவன் புகழ்கிளந், தொன்னார் நாடழி பிரங்கின்று (பு.வெ.43)வடகர் போகிய இடையில் முரிதல் இல்லாத (பகைவர்-முதுகிட்டுப் போதற்குக் காரணமான எனினுமாம்,'வட்கர் போகிய வளர் இளம் போந்தை' (புற.நா.100) என வருதலும் காண்க. அரசர்கள் தமக்குரிய அடையாளப் பூக்களோடு வெட்சி முதலிய

உரிப்பொருட் கியன்ற மலரைச் சூடிக்கோடல் வழக்கம். இதனை- ‘பொலந் தோட்டுப் பைந்தும்மை மிசை அலங்குளைய பனைபோழ் செறீஇ’ எனவும், ‘வேம்பின் துண்டளிர் நெடுங்கொடி உழிஞைப்பவரொடு மிலைந்து’’ எனவும் வருவனவற்றாலுணர்க’’[194] என்ற பகுதியில் அதிக அளவில் புறப்பொருள் வெண்பாமாலைப் பகுதிகளும் புறநானூற்றுப் பகுதிகளும் எடுத்தாளப்பெற்றுள்ளன.

“தண்டமிழ் ஆசான் சாத்தன் வாயிலாக நெடுஞ்செழியன் உணிர்நீத்த செய்தியைச் செங்குட்டுவன் அறிந்தபொழுது,

‘‘எம்மோ ரன்ன வேந்தற் குற்ற

செம்மையி னிகந்தசொல் செவிப்புலம் படாமுன்

உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென

வல்வினை வளைத்த கோலை மன்னவன்

செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது’’

என்று நெஞ்சாரப் பாராட்டியதைக் கருதிச் ‘‘செங்கோல். . . . இயம்ப என்றவாறு (காட்சி.95-96) என்ற நிலையில் சிலப்பதிகாரமாக மூல நூலிலேயே மேற்கோளாகக் காட்டப்படும் செம்மாந்த தன்மையும் பெருமழைப் புலவரிடத்தில் காணப்பெறுகிறது. மேலும் இவர் தன்னுரையில் அரும்பத உரைகாரர் உரை, அடியார்க்கு நல்லார் உரை, நாட்டார் உரை போன்ற சிலப்பதிகாரத்திற்கு வரையப்பட்ட உரைகளையும் மேற்கோள்களாகக் காட்டியுள்ளார்.

‘‘வாய் வாளாண்மை - வாய்வறிது இராமை’’ என்பது அரும்பதவுரை. ‘வாயாகிய வாளின் ஆண்மை’ எனப் பொருள் கூறிப் பின்னும். வாய் வாளாமை என்பது ஒன்றும் பேசாதிருத்தலாதலில் இச்சொல் அதனின் வேறாகும் திரு. நாட்டார் அவர்கள்’’[195] என்ற பகுதியில் அரும்பத உரை, நாட்டார் உரை ஆகியன காட்டப்பெற்றுள்ளன. திரு நாட்டார் என்ற குறிப்பு பெருமழைப் புலவரின் மரியாதைப் பாங்கினைக் காட்டுவதாக உள்ளது. இவ்வளவில் பற்பல நூல்களை

மேற்கோளாக் காட்டும் பொதுஉரை மரபு பெருமழைப் புலவரிடத்திலும் காணக் கிடைக்கின்றது. இவ்வாறு பெருமழைப் புலவரிடத்தில் பொது உரை மரபுகள் காணப்படுகின்றது. இவை விரிப்பின் பெருகும் என்ற நிலையில் சான்றுகள் சிலவே இங்குக் காட்டப்பெறுகின்றன.

சிறப்பு நெறிகள்

பெருமழைப் புலவரின் உரையில் பல சிறப்பு நெறிகள் காணப்படுகின்றன. அவை அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகிய உரையாசிரியர்களிடத்தில் காணப்பெறாத புதுமை உடையவைகளாகும். இவ்வகையில் காண்டத்தை அறிமுகம் செய்தல், காதைக்கான உரைத் தொடக்கத்தில், அக்காதையை அறிமுகப் படுத்தல், பொருள் முடிபு கருதி செய்யுள் பகுதிகளுக்குத் தலைப்பு தருதல், பாத்திரப் பண்பு உரைத்தல், இசைநுணுக்கம் அறிவித்தல், நாடக நுணுக்கம் அறிவித்தல் போன்ற பல சிறப்பு உரைப் பண்புகள் இவரின் உரையில் காணப்பெறுகின்றன.

காண்டங்களை அறிமுகம் செய்தல்

புகார்க்காண்டம் பெருமழைப்புலவரால் தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு உதவி செய்யும் நிலையில் உரை செய்யப்பெற்றது. இதற்கு அடுத்து அவர் மதுரைக்காண்டத்திற்கும், வஞ்சிக் காண்டத்திற்கும் உரை காண்கிறார். முதலாவது காண்ட புகார்க்காண்ட உரைக்கும் பின் காணப்பெற்ற இருகாண்ட உரைகளுக்கும் மிகப் பெரிய வளர்ச்சி காணப்பெறுகிறது.

புகார்க் காண்டத்திற்கான அறிமுகம் ஏதும் பெருமழைப் புலவரால் வழங்கப்பெறவில்லை. இருப்பினும் மதுரைக் காண்டத்தை அறிமுகம் செய்யும் நிலையில் புகார்க்காண்டமும் அறிமுகம் செய்யப்பெற்றுள்ளது. இவை தவிர மதுரைக் காண்டத்திற்கும், வஞ்சிக்காண்டத்திற்கும் அறிமுகங்கள் தரப்பெற்றுள்ளன.

மதுரைக்காண்டத்திற்கான அறிமுக விளக்கம் பின்வருமாறு. ‘‘அ∴தாவது பூம்புகார் நகரத்திருந்து முந்தை ஊழ்வினை கடைக்கூட்டுதலாலே கோவலன்

கதிரவன் தோன்றுமுன்னமே கண்ணகியோடு இழந்த பொருளீட்ட வெண்ணிப் புறப்பட்டவன் வழியிலே காவுந்தி ஐயையைக் கண்டடிதொழுது, அவர் தம்மை வழித்துணையாகவும் பெற்று வருபவன், அந்நெறியில் ஏதந்தருவன இவை இவை என அறிவுறுத்திய கவுந்தியடிகளாரின் மொழி போற்றி, அவரோடும், தன் காதலியோடும் கழனிச் செந்நெற்கரும்பு சூழ் பழனத்தாமரைப் பைம்பூங் கானத்தே பறவைகள் பாடும் பாட்டும், கருங்கைவினைஞரும் களமரும் கூடி ஆரவாரிக்கும், ஆரவாரமும், சின்மொழிக் கடைசியர் கள்ளுண்டு களித்துப்பாடும் விருந்துறு பாடலும், ஏர்மங்கலப்பாட்டும், முகவைப்பாட்டும், கிணைஞர் செய்யும் இன்னிசை முழவொலியும் , பிறவும் ஆங்காங்குக் கேட்டும் வழியில் அந்நாட்டின் கவினுறு வளம் பலவும் கண்டுமகிழ்ந்தும் மங்கலமறையோர் இருக்கையும், பிறவுமுடைய ஊரிமையிட்ட நாடுடன் கண்டு, நாட்கொரு காவதமன்றி நடவாமல் பன்னாட்டுகிச் செல்பவன், உறையூர் புக்கு மறுநாள் அங்கிருந்து மதுரை நோக்கிச் செல்லும் காலத்தே அவ்வழியிற் கண்டனவும்,''[196] என்ற இப்பகுதியில் புகார்க்காண்டத்தின் அறிமுகக் குறிப்பைத் தருகின்றார்.

''அம்மதுரை மா நகரத்துப் புறஞ்சேரி புக்கதும், ஆங்கு இடைக்குல மடந்தை மாதரியின்பால் கவுந்தியடிகளார் கண்ணகியை அடைக்கல மீந்ததும், கோவலன் பின்பு மதுரைமூதூர் கண்டு மீண்டமையும், மறுநாள் கோவலன் சிலம்பு விற்கச்சென்று ஊழ்வினை உருத்து வந்தூட்டலாலே ஆங்குக் கள்வனெனப்பட்டுக் கொலையுண்டதும், அச்செய்தி கேட்டுக் கண்ணகி கொதித்தெழுந்து ஊர் சூழ்வந்து, அரசவை யேறி வழக்குரைத்ததும், அவ்வழக்கில் பாண்டியன் உயிர்நீத்ததும், அவன்றேவி உயிர்நீத்ததும், பின்னரும் கண்ணகி சினந்தணியாளாய், வஞ்சினம் கூறி மதுரை நகரந்தீயுண்ணச் செய்ததுவும், மதுரைமா தெய்வம் வந்து தோன்றி, கண்ணகிக்குக் கட்டுரை கூறித் தீவீடு செங்ததுவும், கண்ணகி மேற்றிசைவாயிலிற்புகுந்து வையையின் ஒருகரை வழியாக அத்திசை நோக்கிச் செல்வாள் நெடுவேள் குன்றத்தடினைத்தேறி நின்ற பதினலாம் நாளெல்லையில் அமரர் கோமான் தமர் அவளெதிர் வந்து, புகழ்ந்தேத்தி அவள் கணவனையும் காட்டி வரவேற்க வானவூர்தியில் ஏறிக் கோவலனோடு கண்ணகி விண்ணகம்புக்கதும் பிறவுமாகிய செய்தியைக் கூறும்

பகுதியென்றவாறு. இவையெல்லாம் மதுரையில் நிகழ்ந்தமையால் இது மதுரைக்காண்டம் என்னும் பெயர் பெற்றதென்றுணர்க''[197] என்ற பகுதி அவரின் மதுரைக்காண்ட அறிமுகமாக அமைகின்றது.

வஞ்சிக்காண்டத்திற்கான அறிமுகம் பின்வருமாறு. ''அடிகளார் இவ்வரலாற்றினைக் காப்பியமாக்கும்பொழுது வட வேங்கடம் தென்குமரி ஆயிடைக் கிடந்த தமிழ் கூறும் நல்லுலகத்தே வாழ்கின்ற மாந்தர்தம் வாழ்க்கைப் பண்பாடுகளும் அவ்வாழ்க்கைனூடே அவர்கண்ட அகம்புறம்'' என்னும் அருமந்த பொருணெறி மரபுகளும் அவற்றை உள்ளீடாகக் கொண்ட அவர்தம் இயல் இசை நாடகம் என்னும் மூவகைத் தமிழின் இயல்புகளும் அவர் ஆட்சி செய்த சேரனாடு, சோழனாடு, பாண்டியனாடு என்னும் மூன்று நாட்டின் இயல்புகளும் அவற்றை ஆட்சி செய்த அம் முடிமன்னர் மூவருடைய மாண்புகளும் அக்காப்பியத்திலே அமைதல் வேண்டும் என்னும் குறிக்கோளுடனேயே இக்காப்பியத்தைச் செய்தருளினர் என்பதனை இக்காப்பியத்தைப் பயில்வோர் எளிதில் உணரலாம்.

அடிகளார் இக்காப்பியஞ்செய்தற்கு முதலாக அமைந்த அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாதல் முதலிய மூன்று கருப்பொருள்களும் புகார்க் காண்டமும் மதுரைக்காண்டமும் ஆகிய இரண்டு காண்டகளிலேயே சிறிதும் எஞ்சாமல் முற்றுப்பெற்றுவிட்டன. இந்த இரண்டு காண்டங்களோடு இக்காப்பியத்தை முடித்திருந்தாலும் சிலப்பதிகாரம் என்னும் இக்காப்பியத்திற்கு யாதும் குறைவில்லை. அங்ஙனமாயினும் அடிகளார் குறிக்கொண்ட குறிக்கோள் அனைத்தும் முன்னிரண்டு காண்டங்களிலே கானல் வரியிலே கோவலனையும் மாதவியையும் கொண்ட வரிப்பாடலாக அ∴தாவது இசைத்தமிழிலே பாடுவித்தனர். அடிகளார் கானல் வரியிலே கோவலனையும் மாதவி யையும் கொண்டு வரிப்பாடலாக அதாவது இசைத்தமிழிலே பாடுவித்தனர். அடிகளார் கானல் வரியிலே பாடியிருக்கின்ற அகப்பொருள் பனுவல் போன்ற சுவை கெழுமிய பாடல்கள் அவருக்கு முந்திய சங்க நூல்களினும் இல்லை என்றே யாம் துணிந்து கூறுவோம். அத்துணைப் பேரின்பம் பயக்கும் இயல்புடையன கானல்வரிப்பாடலாக வருகின்ற அகப்பொருள் பாடல்கள். தமிழ்நாட்டு மக்களின்

வாழ்க்கைப் பண்பாடுகள் பெரும்பாலும் முன்னைய இரண்டு காண்டங்களினும் அமைந்துவிட்டன என்னலாம். பொருணெறி மரபிற பின்னின்ற புறப்பொருள் மாண்பு முன்னைய காண்டங்களிலே நன்கு அமையவில்லை. செந்தமிழ்நாட்டு மூவேந்தருடைய மறச்சிறப்பிற்கு மட்டுமே ஒரு காண்டம் வேண்டும் என்று அடிகளார் கருதினர் என்பதில் ஐயமில்லை. பண்டைத் தமிழருடைய மறச்சிறப்பெல்லாம் இறுதியினின்ற வஞ்சிக்காண்டத்திலேதான் நன்கு விளக்கப்படுகின்றன. என்று வஞ்சிக்காண்டத்திற்கான தேவையைக் காட்டுகின்றார் பெருமழைப் புலவர். இவ்வறிமுகப் பகுதி இவரின் சிறப்பு உரைநெறியாகின்றது.

காதைகளை அறிமுகம் செய்தல்

பெருமழைப் புலவர் ஒவ்வொரு காதைக்கும் உரை சொல்லும் நிலையில் அக்காதை பற்றிய சிறு அறிமுகத்தைச் செய்தே தொடங்குகிறார். அவ்வகையில்,

அழற்படுகாதையில், ‘‘அ∴தாவது மதுரை நகரத்தைக் கண்ணகி பணித்தவாறே பார்ப்பார் முதலிய நல்லோரைக் கைவிட்டுத் தீயோர் மருங்கிலே தீப்பற்றி எரிதலும் அப்பொழுது அந்நகரத்தின்கண் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் கூறுகின்ற பகுதி என்றவாறு’’[198] என்ற நிலையில் அழற்படு காதை அறிமுகம் செய்யப்படுகிறது.

குன்றக் குரவை என்ற பகுதிக்குத் தரப்படும் உரை அறிமுகம் பின்வருமாறு. ‘‘அ∴தாவது கண்ணகி மதுரையினின்றும் வையையின் கரை வழியாகச் சேரநாடு புகுந்து ஆங்கெதிர்ப்பட்ட நெடுவேள் குன்றத்தின்கண் ஏறி ஆங்குப் பூத்துப் பொலிந்து நின்ற ஒரு வேங்கை மரத்தின் நிழலின்கண் நின்ற பொழுது, அங்கு வந்த குறமக்கள் கண்ணகியைக் கண்டு நீவிர் யாவிரோ? என வினவி அவளொடு சொல்லாடி நின்றனராக. அப்பொழுது வானவர் அங்கு வந்து கண்ணகியின் மேல் மலர்மாரி பொழிந்து அவள் கணவனையும் காட்டி சாவன ஊர்தியில் ஏற்றி அக்குறமக்கள் கண்டு நிற்பவே விண்மிசைப்போயினர். அது கண்டு வியப்பெய்திய அக்குறவாணர் கண்ணகியைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்தலும், அம்மகிழ்ச்சி காரணமாகக் குறமகளிர் குரவைக்

கூத்தாடுதலும் பிறவும் கூறும் பகுதி என்றவாறு''[199] என்ற நிலையில் அறிமுகம் செய்யப்படுகிறது.

சுருங்கிய நிலையில் காதை அறிமுகம் அமைதலும் உண்டு. சான்றாக, ''அ∴தாவது புகார் நகரத்தே இந்திரனுக்கு விழா நிகழ்த்திய செய்தியும் பிறவும் கூறும் பகுதி என்றவாறு''[200] என்று சுருக்கமான அறிமுகவுரையை இந்திரவிழவூரெடுத்த காதை பெற்றுள்ளது. இவ்வாறு காதைகளுக்கான அறிமுகப் பகுதிகள் அ∴தாவது என்று தொடங்கி.... என்றவாறு என முடியும் தன்மை இங்குக் குறிக்கத்தக்கது.

தலைப்புகளைத் தருதல்

ஒவ்வொரு காதையின் உள்ளும் ஆங்காங்கே தலைப்புகளை இடும் முறை பெருமழைப் புலவரின் சிறப்பான நெறியாக விளங்குகிறது. வழக்குரைக் காதையில் இடம்பெற்றுள்ள தலைப்புகள் பின்வருமாறு.

1. கோப்பெருந்தேவி தான் கண்ட தீக்கனாவினைத் தன் உசாத் துணைத்தோழிக்குரைத்தல்

2. கோப்பெருந்தேவி தீக்கனாத் திறமுரைப்பத் தன் பரிசனத்துடன் அரசன் பாற் செல்லுதல்

3.கண்ணகி தன்வரவினை வாயில் காவலர்க்குக் கூறுதல்

4.வாயிலோன் மன்னனுக்கு அறிவித்தல்

5.கண்ணகி அரசன் திருமுன் செல்லுதல்

6.அரசன் வினாவும் கண்ணகியின் விடையும்

7.மன்னன் கூற்று

8.கண்ணகி கோவலன் கள்வன் அல்லன் எனக் காட்டுதற்குக் கூறும் சான்று.

9.பாண்டியன் கண்ணகி கூறிய சான்றினைப் பாராட்டுதல்

10.கண்ணகி சிலம்பை உடைத்தல்.

11. கோப்பெருந்தேவியின் செயல்

என்பன வழக்குரைக் காதையின் உரையில் இடம்பெறும் தலைப்புகள் ஆகும். இதுபோன்று பொருள் முடிபுகளுக்கு ஏற்ப உட்தலைப்புகள் தரும் சிறப்பான உரைத்திறன் பெருமழைப் புலவரின் உரைத்திறனாகும்.

வேனிற் காதையில் இடம்பெற்றுள்ள தலைப்புகள் பின்வருமாறு.

1. **வேனில் வரவு**
2. **இதுவுமது**
3. **மாதவியின் செயல்**
4. **மாதவி யாழிசைத்தல்**
5. **மாதவி கோவலனுக்குத் திருமுகம் வரைதல்**
6. **மாதவி கோவலனுக்குத் திருமுகமுய்த்தல்**
7. **கண்கூடுவரி**
8. **காண்வரி**
9. **உள்வரி**
10. **புறவரி**
11. **கிளர்வரி**
12. **தேர்ச்சி வரி**
13. **காட்சி வரி**
14. **எடுத்துக் கோள் வரி**
15. **கோவலன் திருமுகம் ஏற்க மறுத்துக் கூறுதல்**
16. **வயந்தமாலை மாதவிக்குக் கூறுதலும் மாதவி ஏக்கமுறவும்**

என்ற நிலையில் உட்தலைப்புகள் அமைக்கப்பெற்றுள்ளன. இத்தலைப்புகள் படிப்பவருக்கு அடுத்து நிகழும் நிகழ்ச்சியின் போக்கினை அறிவித்துப் படிக்கவைக்கின்றவாக உள்ளன.

பாத்திரப் பண்பு காட்டல்

சிலப்பதிகாரத்தில் படைக்கப்பெற்றுள்ள பாத்திரங்களின் பண்புநலன்களைத் தொகுத்துச் சுட்டும் பாத்திரப்படைப்பு குறித்தான செய்திகளை வழங்குவதாகவும் பெருமழைப் புலவரின் உரை அமைந்துள்ளது. ‘‘கோவலன் புகழ் பெரிதாயினும் அவனது கண்ணோட்டமில்லாத பரத்தமையொழுக்கமாகிய பழி தேய்த்தொழித்தமை குறிப்பாகப் புலப்படுமாறு தேய்த்த புகழ் என்று சொற்றிறம் தேரந்து அடை புணர்த்தார்’’[201]

‘‘முன்னர்ப் புகார் நகரத்தே மாதவியோடு பிணங்கிக் கண்ணகியின்பால் வந்த கோவலன் கண்ணகி வாடிய மேனி வருந்தங்கண்டு யாவும், சலம்புணர் கொள்கை சலதியோடாடி’’[202] என மாதவியை வைதவன் இங்கே மாதவி தூயள் என்றுணர்ந்துவிட்டபடியால் அவளோடாடிக் கெட்டொழிந்தேன் என்னாமையும் வறுமொழியாளரொடும், வம்பப் பரத்தரொடும் தரித்தமையும் கண்ணகிக்குச் சிறுமை செய்தமையுமே போற்றா ஒழுக்கமாகக் குறிப்பிடுதல் குறிக்கொண்டுணர்தற்பாலதாம். கண்ணகி தானும் மாதவியின் கேண்மையைக் கருதிப் போற்றா ஒழுக்கம் என்று கூறிற்றிலள் எனக் கருதலாம் என்ற நிலையில் கோவலனின் பாத்திரப்படைப்பு நுணுக்கங்கள் பெருமழைப் புலவரால் எடுத்துரைக்கப்பெறுகின்றன.

கண்ணகியைப் பெருமைப்படுத்தும் வண்ணமே அவளின் பாத்திரப் படைப்பு படைக்கப்பெற்றுள்ளது என்ற உட்கருத்துடன் தன் உரையை வரைந்துள்ளார் பெருமழைப்புலவர். ‘‘இலப்பாடு நாணுத்தரும் என்பது அவன் குறையாகலின் அது தீர்த்தற்குத் தன்னுட் சிறிது சூழ்ந்து தான் அணியாதிருக்கும் பெருவிலைச் சிலம்புகள் இக்குறையை இப்பொழுதைக்குத் தீர்க்கப் போதியனவாகும் என்று அப்பெருந்தகையாள் அவற்றைக் கொண்மின் எனக் கூறும் இச்சிறப்பு அவளது ஒப்பற்ற கற்பினது மாண்பினை நன்கு விளக்கி நிற்றல் உணர்ந்துணர்ந்து

மகிழற்பாலதாகும். இது கூறுங்கால் அவன் துயர்க்குத் தான் வாய்மையாகவே வருந்தி அன்பு மேலீட்டால் கூறுதலின் முகம் மலர்ந்து கூறுகின்றாள் என்றுணர்க. அவன் குறை தீரக்கலாவது அப்பொழுது தன்பாலொன்றுளதாவதனை நினைவு கூர்ந்தவுடன் மகிழ்ச்சியால் அவள் முகமலர்ந்து புன்முறுவலும் தவழ்வதாயிற்று. இ∴தியற்கையாம். சிலம்புள கொண்மின் எனவு இவை யொழிந்த அணிகளனெல்லாம் முன்னமே தொலைந்தமை பெற்றாம்''[203] என்ற நிலையில் கண்ணகியின் பாத்திரப்படைப்பு விளக்கம் பெற்றுள்ளது. இங்குக் கண்ணகி பெருந்தகையாள் என்று குறிக்கப்பெற்றிருப்பது அப்பாத்திரத்தின்மீது பெருமழைப்புலவர் கொண்டிருக்கும் பெருமை கருதியதாகும்.

நெடுஞ்செழியன் பாத்திரப்படைப்பும் பெருமழைப் புலவரால் ஆராயப்பெற்றுள்ளது. இனி, வேம்பன் காமத்தால் கதுவப்பட்ட நெஞ்சத்தானாய்த் தனக்குரிய செங்கோன்மை முறைமையினின்று வழுவி இங்ஙனம் காவலர்க்குப் பணித்தான் என்பதே அடிகளார் இக்காப்பியத்திற்குக் கொண்ட அரசியல் பிழைத்தாருக்கு அறம் கூற்றாம் என்னும் கொள்கை பொருளின்றி நின்று வற்றும், என்பதையும் ஊழ்வினை உருத்து வந்தூட்டுதற்கும் இது கூறியது கூறலாய் மிகையாதலும் நுண்ணிதின் உணர்க. வேம்பன் அப்பொழுதே தன் அரசியல் பிழைத்தான். அதுவே அவனுக்குக் கூற்றாய் முடிந்தது என்பதே அடிகளார் கருத்தென்று துணிக.''[204] என்ற நிலையில் நெடுஞ்செழியனை வேம்பன் என்று பெருமழைப் புலவர் குறிக்கிறார். வேம்பம்பூ மாலை அணிந்த பாண்டியன் என்ற அளவில் இது பாண்டியனைச் சுட்டினாலும், அவன் வேம்பைப் போன்று நீதிக்குக் கசப்பானவன் என்பதை உணரத்தவும் இவர் இப்பெயரைஅவனுக்கு வழங்கியுள்ளார்.

துணைப் பாத்திரங்களாக விளங்கும் கவுந்தியடிகளையும், மாடல மறையோனையும் பாத்திர படைப்பு நிலைப்படி ஆராய்ந்து உரைக்கிறார் பெருமழைப்புவலர். ''பெருங்காப்பியமியற்றும் புவலர்கள் தாம் உலகிற்கு உணரத்தற் தகுந்த சிறப்பான அறிவிரைகளைத் தமது கூற்றாக கூறாமல், அவ்வறிவுரைகளை வழங்குதற்கேற்ற சூழ்நிலைகளை ஆங்காங்கே உருவாக்கிக் கொண்டு அவற்றை கூறுந் தகுதி வாய்ந்த உறுப்பினர்களையும் படைத்துவிட்டு

அவர் வாயிலாகவே அவ்வறிவுரைகளைக் கூறுவிப்பார். மேலும், அவ்வறிவுரைகள் தாமும் காப்பியக் கதைக்குத் தொடர்புடைனவாகவும் மைத்துவிடுவர். இவ்வாறு சிலப்பதிகாரத்திலலே இளங்கோவடிள் இரண்டு சிறந்த உறுப்பினரைப் படைத்துள்ளார். அவருள் ஒருவர் கவுந்தியடிகள். மற்றொருவன் மாமறை முதல்வனாகிய மாடலன்''[205] என்ற நிலையில் இரு பாத்திரங்களின் பண்புகளை அவற்றைப் படைத்துக் கொண்ட இளங்கோவடிகளின் தேவை முதலானவற்றைக் காட்டுகின்றார் பெருமழைப்புலவர்.

இவ்வகையில் பாத்திரப்படைப்புகளின் நோக்கம், அவை படைக்கப்பெற்று முறைமை, அவற்றின் தன்மைகள் முதலானவற்றைத் தம் உரையில் காட்டி அவரின் உரை திறனாய்வு நிலை வாய்ந்தது என்பதைப் படிப்பவர் உணரும் வண்ணம்செய்துள்ளார்பெருமழைப் புலவர்.

இசையறிவு நுணுக்கம் உரைத்தல்

இசையறிவு நுணுக்கம் பெற்றவராகவும் பெருமழைப் புலவர் விளங்குகின்றார். இவரின் இசையறிவு இவரின் சிலப்பதிகார உரைக்குள் பெரிதும் வெளிப்பட்டு நிற்கிறது. அதற்கான சான்றுகள் பின்வருமாறு.

''முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கும் இசையியக்கங்களாகும். இவற்றுள் முதனடை என்பது மிகவும் தாழ்ந்த செலவினை உடையதாம். அ∴தாவது மிகுந்த காலச் செலவினையுடையதாம். இதனை விளம்ப காலம் என்றும் முதற்காலம் என்றும் இக்காலத்தார் கூறுவர்.

வாரம் என்பது அம்முதனடையிலும் சிறிது முடுகி நடப்பது. இதனை மத்திம காலம் என்றும் இரண்டாம்காலம் என்றும் கூறுவர். கூடை அதனினும் முடுகி நடப்பது. இதனைத் துரிதகாலம் அல்லது மூன்றாங்காலம் என்று வழங்குவர். திரள் மிகவும் முடுகிய நடையுடையது. இதனை அதிதுரித காலம் அல்லது நான்காம் காலம் என்று இக்காலத்தார் கூறுவுர்''[206] என்று இசைப் பாகுபாடுகளைத் தெளிவாகக் காட்டுகின்றார் பெருமழைப் புலவர்.

வரிப்பாடல் என்பதற்கு இலக்கணம் தருகிறார் பெருமழைப்புலவர். "வரிப்பாடலாவது பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒருநெறியின்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியம் சர்த்தும் பெற்றும் பெறாது வரும். அதுதான் தெய்வம் சுட்டிய மக்களைப் பழிச்சியும் வரும் இனி மக்களைச் சுட்டிய வரிப்பாட்டு வருமாறு. 'திங்கள் மாலை … காவேரி என்பது போல வருவது என வரும். இனி. ஈண்டு கோவலன் மாதவி மனமகிழ யாழ் மேலிட்டுத் திங்கள் மாலை வெண்குடையான் என்று தொடங்கிய ஒரு பொருள்மேல் அடுக்கி வரும் மூன்று ஆற்றுவரிப் பாடலும் இங்ஙனமே மாதவி பின்னர் (உரு) மருங்கு வண்டு என்பது தொடங்கிப் பாடுகின்ற ஆற்றுவரிப்பாடலும் தெய்வஞ் சுட்டிய வரிப்பாடல்களேயாகும்"[207] என்ற நிலையில் வரிப்பாடலின் தன்மையையும் வகையையும் காட்டுகின்றார் பெருமழைப்புலவர்.

தொகுப்புரை

- சிலப்பதிகாரத்திற்கு உரை வரையும் நிலையில் ஒவ்வொரு உரையாசிரியரும் தமக்கென பொது உரை நெறிகளையும் சிறப்பு உரை நெறிகளையும் கைக்கொண்டுள்ளனர். அருஞ்சொற்களுக்குப் பொருள் தருதல், சொற்களின் இலக்கண இயல்பு காட்டல், சான்றுகளாக பிற இலக்கிய இலக்கணச் செய்திகளை மேற்கோளாகக் காட்டி நிற்றல் போன்றன உரையின் பொதுநெறிகளாகச் சிலப்பதிகார உரைகளில் காணப்படுகின்றன. இவற்றை அரும்பத உரைகாரர் தொடங்கி வைக்க மற்ற உரையாசிரியர்கள் இதனைப் பொது நெறிகளாகக் கொண்டு பின்பற்றியுள்ளனர். இப்பொது உரை நெறிகள் வழி உரையாசிரியர்களின் பல்நூற் புலமை, இலக்கண அறிவு, பொருள் உணர்த்தல் சார்ந்த அகராதியியல் அறிவு போன்றன வெளிப்படுகின்றன.

- சிறப்பு நெறிகள் என்பது ஒவ்வொரு உரையாசிரியரின் தன்மைக்கு ஏற்பச் சிறப்புப் பெறுவதாக உள்ளது. அரும்பத உரைகாரர் உரையும் பல சிறப்பு உரை நெறிகளைக் கொண்டுள்ளது. அரும்பதங்களுக்கு உரை கண்டவர் என்ற நிலையில் இவருக்கான இயற்பெயர் மறைந்து அரும்பத உரைகாரர் என்ற பெயர் நிலைத்து நின்ற நிலையில் இவர் அரும்பதங்களுக்கு உரைகாணுதல் மட்டும் செய்யாது தன் உரையில் இன்னும் பல சிறப்பு இயல்புகளைக் கொண்டுள்ளார். இவரின் சிறப்பு உரை நெறிகளாக, நுட்பமான உரைஅளித்தல், சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், இலக்கியத் தரமான உரை வரைதல் ஆகியன அமைகின்றன. மேலும் இவரின் அரும்பத உரையினின்று பெரிதும் மாறுபட்டு விரிந்த உரைப் பகுதிகளாக அமைவது அரங்கேற்றுக் காதை உரையும் கானல்வரி உரையும் ஆகும். இவை பல வரலாற்றுச் செய்திகளையும், நுட்பச் செய்திகளையும் கொண்டுள்ளன.

❖ அடியார்க்கு நல்லார் பெரும்பாலும் அரும்பத உரைகாரரைப் பின்பற்றிச் சென்றாலும் இவர் தன் உரையை முழுக் கட்டமைப்புள்ள உரையாகத் தந்துள்ளார். இவரின் பொது உரைநெறிகளாக சொற்பொருள் உரைத்தல், தொகுத்து உரைத்தல், இலக்கணக் குறிப்பு தருதல், மேற்கோள் காட்டல், தலைப்புத் தருதல் போன்றன அமைகின்றன. மேற்கோள் காட்டல் நிலையில் அடியார்க்கு நல்லாரிடம் சிறந்த உரை நெறி காணப்படுகிறது. இவர் எடுத்தாளும் நூல், அதன் நூற்பா, அல்லது பாடல் பகுதி ஆகியன இடம்பெறும் இடம் முதலியவற்றைத் தெளிவு படக் காட்டி நிற்கிறார். அதாவது இக்கால நிலையில் மேற்கோள் இடுதல் என்ற பாங்கினுக்கு இவர் முன்னோடியாக அமைகிறார். இவரின் உரைகளில் இசைக்குறிப்புகளைத் தருதல், வடமொழி இலக்கியங்களை மேற்கோளாக வடமொழியில் காட்டிப் பின் தமிழில் தருதல், கூத்துக் கலைச் செய்திகளைத் தருதல், உடற் கூற்றியல் செய்திகளைத் தருதல், தமிழின் மேன்மையை உரைத்தல் போன்றன சிறப்பு நெறிகளாக அமைகின்றன.

❖ பெருமழைப்புலவரின் உரை மிகக் கட்டமைப்புள்ள உரையாக விளங்குகிறது. இவர் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் உரையைப் பெரிதும் தழுவியே உரைப் பொது நெறிகளைக் கையாண்டுள்ளார். சொற்பொருள் விளக்கம் அளித்தல், இலக்கணம் உரைத்தல், மேற்கோள் காட்டுதல் போன்றன இவரின் உரைப் பொதுநெறிகளாக விளங்குகின்றன. இவரின் உரையில் இதன் பொருள் (இ-ள்) என்ற பகுதியில் பொருள் உரைக்கப்பெறுகிறது. விளக்கம் (வி-ம்) என்ற பகுதியில் சொற்பொருள், இலக்கணக்குறிப்பு, மேற்கோள் ஆகியன இணைக்கப்பெறுகின்றன. இவரின் சிறப்பு உரை நெறிகளாக காண்ட அறிமுகம் (அணிந்துரை), காதை அறிமுகம், தக்க தலைப்புகளைத் தருதல், பாத்திரப் பண்புகளைத் தருதல் போன்றன அமைகின்றன.

❖ சிலப்பதிகார உரையாசிரியர்கள் தம் காலத்திற்கு ஏற்ற நிலையில் தேவையான விளக்கங்களுடன் பொது, சிறப்பு உரை நெறிகளைப் பின்பற்றி உரை வரைந்துள்ளனர்.

சான்றாதாரங்கள்

1. தி.சு. நடராசன், திறனாய்வாளர்கள், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடம்,http://www.tamilvu.org/ta/courses-degree-d061-d0613-html-d0613331-23403
2. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 11-ஆம் நூற்றாண்டு: ப.42
3. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.450
4. சிலப்.மூ, அரும்.அடியா.உரையும், ப.64
5. மேலது, ப.480
6. மேலது, ப.488
7. மேலது, ப.578
8. மேலது, ப.57
9. மேலது, ப.123
10. மேலது, ப.123
11. மேலது, ப.420
12. மேலது, ப.423
13. மேலது, ப.427
14. மேலது, ப.177
15. மேலது, ப.438
16. மேலது, ப.33
17. மேலது, ப.122
18. மேலது, ப.212
19. மேலது, ப.318
20. மேலது, ப.123
21. மேலது, ப.36
22. மேலது, ப.36
23. மேலது, ப.44

24. மேலது, ப.56
25. மேலது, ப.77
26. மேலது, ப.77
27. மேலது, ப.127
28. மேலது, ப.149
29. மேலது, ப.3
30. மேலது, ப.3
31. மேலது, ப.203
32. மேலது, ப.204
33. மேலது, ப.207
34. மேலது, ப.208
35. மேலது, ப.207
36. மேலது, ப.208
37. மேலது, ப.211
38. மேலது, ப.212
39. மேலது, ப.214
40. மேலது, ப.217
41. மேலது, ப.226
42. மேலது, ப.252
43. மேலது, ப.257
44. மேலது, ப.439
45. மேலது, ப.317
46. மேலது, ப.319
47. மேலது, ப.142
48. மேலது, ப.318

49. மேலது, ப.397

50. மேலது, ப.417

51. மேலது, ப.213

52. மேலது, ப.216

53. மேலது, ப.219

54. மேலது, ப.146

55. மேலது, ப.211

56. மேலது, ப.222

57. மேலது, ப.445

58. மேலது, ப.61

59. மேலது, ப.64

60. மேலது, பக்.70-71

61. மேலது, ப.203

62. மேலது, ப.543

63. மேலது, ப.62

64. மேலது, பக்.363-364

65. மேலது, ப.146

66. மேலது, ப.481

67. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.249

68. உ.வே.சாமிநாதையர், சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப.161

69. ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ப.169

70. இரா.மோகன், நெல்லை, ந.சொக்கலிங்கம், உரைத்தென்றல் அடியார்க்கு நல்லார் கட்டுரை பக்.1-2

71. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை சிறப்புப் பாயிரம், ப.11

72. சிலப், மூ.அரும்.அடியா.உரையும், ப.51

73. மேலது, ப.275

74. மேலது, ப.78

75. மேலது, ப.79

76. மேலது, ப.107

77. மேலது, ப.108

78. மேலது, ப.275

79. மேலது, ப.121

80. சிலப்:5:68-75

81. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.159

82. மேலது, ப.158

83. மேலது, ப.267

84. ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகார உரை, ப.32

85. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், பதி.14

86. மேலது, ப.18

87. மேலது, ப.13

88. தொல்.நூ.29

89. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.303

90. மேலது, ப.305

91. மேலது, ப.235

92. மேலது, ப.343

93. மேலது, ப.343

94. மேலது, ப.455

95. மேலது, ப.426

96. மேலது, ப.426

97. மேலது, ப.229

98. மேலது, ப.407

99. மேலது, ப.447

100. மேலது, ப.343

101. மேலது, ப.411

102. மேலது, ப.431

103.மேலது, ப.434

104.மேலது, ப.461

105.மேலது, ப.37

106. மேலது, ப.433

107. மேலது, ப.433

108.மேலது, ப.435

109.மேலது, ப.456

110. மேலது, ப.464

111. மேலது, ப.456

112. மேலது, ப.37

113.மேலது, ப.37

114.மேலது, ப.6

115.மேலது, ப.47

116.மேலது, ப.47

117.மேலது, ப.50

118.மேலது, ப.51

119.மேலது, ப.156

120.மேலது, ப.434

121.மேலது, ப.156

122.மேலது, ப.131

123.மேலது, ப.228

124.மேலது, ப.228

125.மேலது, பக்.7-8

126.மேலது, ப.188

127.மேலது, ப.403

128.மேலது, ப.280

129.மேலது, ப.281

130. ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ப.97

131. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும்,ப.101

132.மேலது, ப.105

133.மேலது, ப.108

134.மேலது, ப.104

135.மேலது, ப.100

136.மேலது, ப.100

137.மேலது, ப.100

138.மேலது, ப.100

139.மேலது, ப.105

140. மேலது, ப.79

141.மேலது, ப.80

142.மேலது, ப.80

143.மேலது, ப.80

144.மேலது, ப.92

145.மேலது, ப.103

146.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.புகார், ப.14

147.மேலது, ப.343

148.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.மதுரை, ப.122

149.மேலது, ப.122

150.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.வஞ்சி, ப.70

151.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.மதுரை, ப.319

152. மேலது, ப.284

153.மேலது, ப.280

154.மேலது, ப.223

155.மேலது, ப.212

156.மேலது, ப.67

157.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.புகார், ப.121

158.மேலது, ப.181

159.மேலது, ப.181

160.மேலது, ப.185

161.மேலது, ப.193

162.மேலது, ப.177

163.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.மதுரை, ப.291

164. மேலது, ப.175

165.மேலது, ப.40

166.மேலது, ப.41

167.மேலது, ப.43

168. மேலது, ப.17

169.மேலது, ப.60

170.மேலது, ப.192

171.மேலது, ப.203

172.மேலது, ப.227

173.மேலது, ப.285

174.மேலது, ப.47

175.மேலது, ப.55

176.மேலது, ப.242

177.மேலது, ப.242

178.மேலது, ப.247

179.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.வஞ்சி, ப.22

180.மேலது, ப.38

181.மேலது, ப.38

182.மேலது, ப.60

183.மேலது, ப.72

184.மேலது, ப.77

185.மேலது, ப.81

186.மேலது, ப.109

187.மேலது, ப.55

188.மேலது, ப.65

189.மேலது, ப.55

190.மேலது, ப.59

191.மேலது, பக.65-68

192.மேலது, ப.87

193.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.மதுரை, ப.222

194.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.வஞ்சி, பக்.44-45

195.மேலது, ப.81

196.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.மதுரை, ப.1

197.மேலது, பக்.1-2

198. மேலது, ப.291

199.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.வஞ்சி, ப.8

200. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.புகார், ப.174

201.மேலது, ப.44

202.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.மதுரை, ப.184

203.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.புகார், ப.343

204.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.மதுரை, ப.194

205.பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.வஞ்சி, அணிந் ப.18

206. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப்.புகார், ப.128

207.மேலது, ப.261

இயல் 3

சிலப்பதிகார உரைவேறுபாடு

மூலநூசியரின் உண்மைக் கருத்தினை அறிவது உரையாசிரியரின் கடமையாகும். ஒரு மூலநூலுக்கு ஒரே உரையாசிரியர் என்ற நிலை அமைந்துவிட்டால், அவ்வொரு உரையாசிரியரின் கருத்தே வலிமை பெற்று நிற்கும். ஒரு மூலநூலுக்குப் பல உரையாசிரியர்கள் உரையெழுதும் நிலையில் ஒவ்வொரு உரையாசிரியரும் ஒவ்வொரு வகையில் மூலநூலுக்கு உரையெழுதும் நிலை ஏற்படும். ஒவ்வொரு உரையாசிரியரும் மூலநூலாசிரியரின் உண்மைக்கருத்தினை அறிய முற்படுவர். இதன் காணரமாக உரையாசிரியர் கருத்துகளுக்குள் வேற்றுமை தோன்றுவது என்பது இயல்பாகிவிடுகின்றது. அவ்வகையில் இவ்வியல் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் மூவர்தம் உரைகளுக்கு இடையே காணலாகும் உரைவேறுபாடுகளை ஆராய்வதாக அமைகின்றது.

திருக்குறளுக்குப் பல உரைகள் தோன்றிய நிலையில் பற்பல உரைக்கருத்துகள் திருவள்ளுவரின் உண்மைக் கருத்தினை அறிய முற்பட்டாலும் பரிமேலழகரின் உரையே அவ்வகையில் வெற்றி பெற்று முதன்மையான உரையாகத் திகழ்கின்றது. இவ்வகையில் திருக்குறளின் மேன்மை உரைவேற்றுமைகளால் மேலும் சிறந்து விளங்குகின்றது.

உரையாசிரியர்களுக்குள் வேற்றுமை இருப்பதைப்போல ஒத்த கருத்தும் நிலவுவது உண்டு. பெரும்பாலும் இவ்வொத்த கருத்து என்பது அதிக அளவாகவும், வேறுபட்ட கருத்து என்பது குறைந்த நிலையிலும் இருப்பதாகக் கொள்ளமுடிகின்றது. எனவே முதலில் உரையாசிரியர்களுக்கு இடையேயான ஒத்த கருத்துகள் சில விளக்கப்பட்டுள.

உரைகளில் ஒத்த கருத்துகள்

இளங்கோவடிகள் கருத்திற்கியைய ஆய்வு உரையை எழுதிய உரையாசிரியர்களாகிய அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார்,

பெருமழைப்புலவர் ஆகியமூவா் தம் உரைகள் ஒத்து அமையும் இடங்கள் பலவாக உள்ளன. வேறுபடும் இடங்கள் சிலவாகும்.இவற்றை மூன்று வகைகளாக வகுத்துரைக்கலாம்.

1. அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் உரை, பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரை ஒன்றுபடும் இடங்கள்
2. அரும்பத உரைகாரர் உரை, பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரை ஒன்றுபடும் இடங்கள்
3. அடியார்க்கு நல்லார் உரை பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரை ஒன்றுபடும் இடங்கள்

என்பனவாகும்.

அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும் ஒன்றுபடும் இடங்கள்

அடியார்க்கு நல்லார் பெரும்பாலும் அரும்பத உரையை அப்படியே ஏற்று உரை காண்பவராக அமைகிறார். பின்வரும் பகுதி அதற்குச் சான்று பயக்கும்.

‘‘எழிற்கை- அழகு பெறக் காட்டும் கை. தொழிற்கை – தொழில் பெறக் காட்டும் கை. அவை தா மெழிற்கை….. பொருளாகும்மே; கொண்டவகையறிதல் - பிண்டியும் பிணையலும் புறக் கூத்திற்குரியகையென்றும், எழிற்கையும் தொழிற்கையும் அகக் கூத்திற்கு உரிய கையென்றும் அறிதல்; கூத்து வருகாலை யென்றது - கூத்துகளின் வரவு நிகழுமிடத்தென்றவாறு; ‘‘கூடை செய்தகை… களைதலுமென்றது - அகக்கூத்தினிடத்து ஒற்றையிற் செய்த கைத்தொழில் இரட்டியிற் புகாமலும், இரட்டியிற் செய்த கைத்தொழில் இரட்டிக்கிரட்டியிலும் ஒற்றையிலும் புகாமலும் களைதல். இன்னும் தேசியிற் கைத்தொழில் மார்க்கத்திற் புகுதாமலும், களைதலென்றுமாம். ஒற்றையும், இரட்டியும் தேசிக் கூறாதலானும், இரட்டியும் இரட்டிக் கிரட்டியும், வடுகிற்கூறாதலானுமென்றுமாம்.”[1] என்றவாறு அரும்பத உரைகாரர்தம் உரைப்பகுதி அமைகின்றது.

அப்படியே இவ்வுரைப் பகுதியின் பிரதியாக அடியார்க்கு நல்லாரின் உரை அமைந்துள்ளது. அவ்வுரைப்பகுதி பின்வருமாறு.

“எழிற்கையுங் தொழிற்கையுமென்றது, எழிற்கை - அழகு பெறக் காட்டுங் கை. தொழிற்கை – தொழில் பெறக் காட்டுங் கை; உம்மையாற் பொருட்கையும் கூறப்பட்டது; பொருட்கை- பொருளுறக் காட்டுங்கை. என்னை. ‘அவைதாம் எழிற்கை, யழகே, தொழிற்கை தொழிலே, பொருட்கை கவியிற் பொருளாகும்மே என்றாராகலின்; கொண்டவகையறிந்து - கொண்டவகை யறிதலாவது - பிண்டியும் பிணையலும் புறக் கூத்திற்குரியகையென்றும் எழிற்கையும் தொழிற்கையும் அகக் கூத்திற்கு உரிய கையென்றும் அறிதல்; கூத்து வருகாலை யென்றது - கூத்துக்களின் வரவு நிகழுமிடத்தென்க; ‘கூடை செய்தகை… களைதலுமென்றது- அகக்கூத்து நிகழுமிடத்து ஒற்றையிற் செய்த கைத்தொழில் இரட்டையிற் புகாமலும், இரட்டையிற் செய்த கைத்தொழில் ஒற்றையிற் புகாமலும் களைதல். இன்னும் தேசியிற் கைத்தொழில் மார்க்கத்துப் புகாமலும், மார்க்கத்துக் கைத்தொழில் தேசியிற் புகாமலும் களைதலென்றுமாம். ஒற்றையும், இரட்டையும் தேசிக் கூறாகலானும் இரட்டையும் இரட்டைக் கிரட்டையும் வடுகிற் கூறாகலானுமென்க”[2] என்றவாறு அடியார்க்கு நல்லார் உரை அமைகின்றது.

இதனுள் இரட்டி என்பது இரட்டை என மாற்றம் பெற்றுள்ளது. மற்றபடி அப்படியே அரும்பத உரையைத் தழுவி அடியார்க்கு நல்லார் உரை நல்கியுள்ளார்.

“ஆடலும்…. குறைபடாமலென்றது கூத்தும் பாட்டும் அழகுமென்று சொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும் ஒன்றும் குறை படாமல்”[3] என்பது அரும்பத உரைகாரர் தரும் உரையாகும்.

“ஆடலும்…. குறைபடாமலென்றது கூத்தும் பாட்டும் அழகுமென்று சொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும் ஒன்றுங் குறைவு படாமல், இவை குறைவுபடாமைக்குக் காரணமுடையளாகலினென்க.”[4] என்பது அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியாகும். இவ்விரு உரைப்பகுதிகளும் சற்றும் மாற்றம் இன்றி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தண்ணுமை ஆசிரியன் பற்றிய கருத்துகளும் அப்படியே மாற்றம் பெறாமல் வந்துள்ளன.

“எல்லா கூத்துக்களும் எல்லா பாட்டுகளும் எல்லா திசைகளும் வட எழுத்து ஒரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட ஓசைக் கட்டளை கூறுபாடுகளும், எல்லா பண்களும் இருவகைத் தாளங்களும், எழு வகை தூக்குகளும் இவையிற்றின் முடங்களும், இயற் சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் என்னும் சொற்களும் என்று சொல்லப்பட்டனவற்றை உணர்ந்து ஓர் உருவை இரட்டிக்கிரட்டி, சேர்ந்தவிடத்து நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும், அவ்விடத்துப் பெறும் விரட்டியை ஒப்பாக உருவான வழி நிற்குமானம் நிறுத்திக் கழியுமானம் கழிக்கவும் வல்லனாய் இப்படி நிகழ்ந்த உருக்களின் யாழ் பாடலும் குழலின் பாடலும் கண்டப் பாடலும் இயைந்து நடக்கிறபடி கேட்போர் செவி கொள அமைந்த காரணத்தால் குறியறிந்து சேர வாசித்தலும் மற்ற கருவிகளில் குறைநிரப்புதலும் அக்கருவிகளின் மிகுதி அடக்குதலும், ஆக்குமிடத்தும், அடக்குமிடத்தும் இசையின் இரந்திரம் தோன்றாதபடி செய்தலும் செய்யுமிடத்து கைத்தொழில் அழகு பெறச் செய்து காட்டலும் வல்லனாய் அழகுதக்க தண்ணுமை கருவியினையும் அரிய தொழிலினையுமுடைய ஆசிரியன் என்றவாறு”[5] என்னும் பகுதி தண்ணுமை ஆசிரியனுக்கு உரிய இலக்கணத்தைக் காட்டும் அரும்பத உரைகாரரின் உரைப்பகுதியாகும்.

“எல்லாக் கூத்துக்களும் எல்லாப் பாட்டுக்களும் எல்லா இசைகளும் வட எழுத்து ஒரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட **வாக்கியக் கட்டளைக்** கூறுபாடுகளும், எல்லாப் பண்களும் இருவகைத் தாளங்களும், எழு வகைத் தூக்குக்களும் **இவற்றின் குற்றங்களும்**, இயற்சொல், **முதலிய நால்வகைச் சொற்களுமென்று** சொல்லப்பட்டனவற்றை நுண்ணிதாக உணர்ந்து ஓரோர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும் அவ்விடத்துப் பெறும் இரட்டியை ஒப்பாக உருவான வழி நிற்குமானம் நிறுத்திக் கழியுமானம் கழிக்கவும் வல்லனாய் இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ் பாடலும் குழலின் பாடலும் கண்டப் பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக் கொள்ள அமைந்த காரணத்தாற் குறியறிந்து சேர வாசித்து மற்றைக்

கருவிகளிற் குறைநிரப்புதலும் அக்கருவிகளின் மிகுதி அடக்குதலும் ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையில் இரந்திரம் தோன்றாதபடியே செய்தலும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகு பெறச் செய்து காட்டலும் வல்லனாய் அழகுதக்க தண்ணுமைக் கருவியினையும் அரிய தொழிலினையுமுடைய ஆசிரியன் என்றவாறு"[6] என்பது அடியார்க்கு நல்லார் தரும் தண்ணுமை ஆசிரியனுக்கான உரைப்பகுதியாகும். இவ்வுரைப் பகுதியில் சிற்சில சொற்கள் மட்டும் மாற்றம் பெற்றுள்ளன. மற்றபடி அப்படியே இந்த உரையை எடுத்துக் கையாண்டுள்ளார் அடியார்க்கு நல்லார்.

இவ்வாறு அரும்பத உரைகாரரின் உரையை அப்படியே பின்பற்றி உரை செய்யும் பாங்கு அடியார்க்கு நல்லாரிடம் உள்ளது.தேவைப்படும் இடங்களில் தம் உரையை அரும்பத உரைகாரர் உரைக்கு விரிவாக அமைத்துக்கொள்ளும் பாங்கு அடியார்க்கு நல்லாரிடம் உள்ளது.

அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகிய இருவர் உரையையும் ஏற்றுப் பெருமழைப்புலவர் செய்த உரைப்பகுதிகளுக்கான சான்றுகள்

அரும்பத உரைகாரர் காட்டிய உரையை அடியார்க்கு நல்லார் எடுத்து மொழிந்தது போலவே, பெருமழைப்புலவரும் அரும்பத உரைகாரரின் உரையையும், அடியார்க்கு நல்லார் உரையையும் அப்படியே பொன்னே போல் போற்றி உரை செய்துள்ளார். அதற்குப் பின்வரும் பகுதி சான்றாகும்.

"நடுதல் என்பது நடுகல் எனவும் நடுதற்காதை என்பது நடுகற்காதை எனவும், ஏடெழுதுவோராற் பிறழ எழுதப்பட்டன என நினைத்தற்கிடனுளது. ஆசிரியர் இளங்கோவடிகளார் கருத்தும் நடுதற் காதை என்பதற்கே பொருந்தும். பழைய உரையாசிரியரிருவரும் நடுதற்காதை என்றே பாடம் கொண்டுள்ளனர் என்றுஇடனுளது"[7] என்ற பகுதியில் பழைய உரையாசிரியர்கள் இருவர் எனக்குறிக்கப்படுகிறது. இது அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகிய இருவரையும் குறிப்பதாகும்.

அரும்பத உரைகாரர் உரையும் பெருமழைப்புலவர் உரையும் ஒன்றுபடும் இடங்களுக்கான சான்றுகள்

பெருமழைப் புலவர் சிற்சில இடங்களில் பழைய உரைகாரர் எனப்படும் அரும்பத உரைகாரர்தம் உரையை ஏற்று உரை கண்டுள்ளார். இதற்கான சான்றுகள் பின்வருமாறு.

“கறை கெழுகுடிகள் இறை செலுத்துதற்குப் பொருந்திய நற்குடி மக்கள், கைதலைவைப்ப-வருந்த – காரணத்தைக் காரியமாக உபசரித்தார். என்னை? வருத்தமுறுவோர் தலையிலடித்துக் கோடல் இயல்பாகலின் என்க. இதற்குத் துயர் உறுதல் என்னும் பொருள் நிகழ்ச்சியைத் தலைமேல் கைவைக்க வென்னும் தொழில் நிகழ்ச்சியாற் கூறினார் என்பார்(பழையவுரை)யாசிரியர்”[8] என்ற பகுதியில் பழைய உரைகாரர் என்ற அளவில் அரும்பத உரைகாரரை ஏற்று உரைசெய்யும் பாங்கு பெருமழைப்புலவரிடத்தில் இருந்துள்ளது என்பதனை இதன்வழி உணரலாம்.

யவனர் என்பதற்கு அரும்பத உரைகாரர் தரும் பொருளினை அப்படியே ஏற்கிறார் பெருமழைப் புலவர். யவனர் என்பதற்கு, “யவனர் - யவன நாட்டினர். மேலை நாட்டினர். இவரைச் சோனகர் என்பர் அரும்பத உரைகாரர்”[9] என்று உடன்பாட்டு நிலையில் அரும்பத உரைகாரர் காட்டும் பொருளை ஏற்கிறார் பெருமழைப்புலவர்.

அழற்படு காதையில் தண்கதிர் மதியத்தன்ன மேனியன் என்ற அடி தொடங்கி நாவினும் மார்பினும் நவின்ற நூலினன் என்ற அடி இறுதியாக உள்ள பதினேழு அடிகள் இடைச்செருகலாக இருக்கலாம் என்ற கருத்து உள்ளது. இது குறித்து இவ்வடிகள் இடம்பெறும் உரைப்பகுதியில் குறிப்பு என்று தந்து பின்வரும் பகுதியை அமைக்கிறார் பெருமழைப்புலவர்.

“குறிப்பு -இக்காதையுள் (...) இங்ஙனம் பகர வளைவுக்குள் அமைக்கபட்ட செய்யுட் பகுதிகள் பல ஏட்டுப்படிகளில் காணப்படவில்லை என்பதனாலும், அரும்பதவுரையாசிரியர் இவற்றிலுள்ள அரும்பதங்களில் ஒன்றற்கேனும் உரை

வரையாமையானும், இவையெல்லாம் பொருட்சிறப்பு உடையனவாகக் காணப்படாமையானும் இவை பிற்காலத்தே பிறரால் எழுதி இடையிலே சேர்க்கப்பட்டவை என்று அறிஞர் கருதுவதனால் இவற்றிற்கு யாமும் உரை வரையாது விட்டோம். எஞ்சிய பகுதிக்கே உரை ஈண்டு வரையப்பட்டன”[10] என்ற நிலையில் அரும்பத உரைகாரரைப் பின்பற்றுகிறார் பெருமழைப்புலவர்.

“கோளிப்பாகல் - பலா. வெளிப்படை. கனிக்காய் - கனிக்கு ஆன காய், முதிர்ந்த காய், இதனை இக்காலத்து செங்காய் என்ப. வால்வரிக் கொடுங்காய் எனப் பாடங் கொண்டு வெள்ளரிக்காய் என்பர் அரும்பத உரையாசிரியர்”[11] என்றவாறு அரும்பத உரைகாரர் உரையைப் பின்பற்றுகிறார் பெருமழைப்புலவர்.

“வேயா மாடம் -தட்டோடிட்டுச் சாந்துவாரப் பட்டன என்பர் அரும்பத உரையாசிரியர். அவையாவன; தென்னையின் கீற்று பனைமடல் முதலியவற்றால் கூரை வேயப்படாத, சாந்து வாரப்பட்ட மேல் மாடங்களையுடையன என்றவாறு; யவனர்- யவன நாட்டினர்; மேலை நாட்டினர். இவரைச் சோனகர் என்பர் அரும்பத உரையாசிரியர்”[12] என்ற நிலையில் அரும்பத உரையாசிரியரின் உரையை ஏற்றே உரை செய்கிறார் பெருமழைப்புலவர்.

இவ்வாறு அரும்பத உரைகாரர் உரையை வேண்டிய இடங்களில் பொருத்தப்பாடு கருதி ஏற்கிறார் பெருமழைப்புலவர்.

அடியார்க்கு நல்லார் உரையும் பெருமழைப்புலவர் உரையும் ஒன்றுபடும் இடங்களுக்கான சான்றுகள்

அடியார்க்கு நல்லார் உரையைப் பெரும்பாலும் ஒத்தமைவது பெருமழைப்புலவரின் உரையாகும். சிற்சில இடங்களில் வேறுபாடு காணப்பெறுகிறது. ஒன்றுபட்டு நிற்கும் இடங்களுக்குப் பின்வரும் பகுதிகள் சான்றுகளாகும்.

“வேட்டுவ வரி – வேட்டுவ மகளாகிய சாலினி, கொற்றவை கோலங்கொண்டு ஆடிய வரிக் கூத்தும் என்க. இதனைக் கோலச் சாரி என்பார்

அடியார்க்கு நல்லார். இது கூத்தாற் பெற்ற பெயர்”[13] என்ற நிலையில் அடியார்க்கு நல்லார் உரையை ஏற்று உரை அமைக்கிறார் பெருமழைப்புலவர்.

“தொன்னகர் மருங்கின் வணிகர்க்கு என் தன்மையுணர்த்திவருந்துணையும் இவட்கு ஏதுமின்றாகக் காத்தருளவேண்டும் எனக் கருதியவன் தெளிந்து போதுவல்யானும் போதுமின் என்ற இவள் நும்பாதமாகிய காவலையுடையள் ஆதலின் இவட்கு இனி ஓரேத முண்டோ! இல்லை,என்று கையெடுத்துக் கூறினானாக வென்க’ என வகுத்த அடியார்க்கு நல்லார் உரை சாலவும் இனியவுரையாதல் நுண்ணிதின் உணர்க.”[14] என்ற நிலையில் அடியார்க்கு நல்லார் உரையைச் சால இனிய உரையாகக் கொள்கின்றார் பெருமழைப்புலவர்.

அடியார்க்கு நல்லார் “மலை பொதியிலும் இமயமும் இவற்றைச் சாதி யொருமையாற் கூறினார். பொதியிலும், இமயமும் புணர் முலையாக என்றார் கதையினும் என்பர்”[15] என்ற நிலையில் அடியார்க்கு நல்லார் உரையை அப்படியே ஏற்கிறார் பெருமழைப்புலவர்.

வேனிற்காதையில் வட்டப்பாலை பற்றிய அடியார்க்கு நல்லார் உரையை பொருத்தமுடையது என்கிறார் பெருமழைப் புலவர். “ஈண்டு அடியார்க்கு நல்லார் இனி, வட்டப்பாலை இடமுறைத் திரிபு கூறுகின்றார் என்று தொடங்கிக் கூறும் விளக்கம் இடமுறைப்பாலைக்குப் பெரிதும் பொருந்திய வுரையேயாம். மற்று ஈண்டுக் கூறப்படும் பாலைகள் அரங்கேற்று காதைக்கண் கூறப்படும் அவர் உரைக்கே மாறுபடுகின்றது என்பாரும் பாடந்திருந்துவோரும் இவ்வுரையைக் கூர்ந்து நோக்கியதாகத் தோன்றவில்லை. மற்று ஈண்டுக் கூறப்படுகின்ற பாலைகள் மாறுபடுதற்குக் காரணம் ஈண்டு உழைமுதலாகக் கோடிப்பாலை முதலிற் பிறக்கக் கட்டப்பட்டமையேயாம். அரங்கேற்றக்காதையில் இளிமுதலாகக் கோடிப்பாலை பிறக்கக் கட்டிய யாழிற்குக் கூறியபடியால் மாறுபட்டுத் தோன்றுகின்றன. இ∴து அறியாமல் மயங்கினவர் கூற்றே அ∴தென்க.”[16] என்ற நிலையில் அடியார்க்கு நல்லார் உரையை மாறுபட்டது எனப் பிறர் கூறினும் அது சரியே எனக் கொள்கிறார் பெருமழைப்புலவர்.

மணிகளின் சிறப்பும் அவற்றின் குறைபாடுகளும் பற்றிய செய்திகள் அனைத்தையும் ஊர்காண் காதையில் அடியார்க்கு நல்லார் உரையை அப்படியே எடுத்துக் கொண்டு உரை செய்துள்ளார் பெருமழைப்புலவர்.

இவற்றுள் நீலமணிக்குக் குற்றமும், குணமும் அடியார்க்கு நல்லார் கூறுமாறு; "இதற்குச் சாதி நான்கும், குணம் பதினொன்றும், குற்றம் எட்டுமெனக் கொள்க; நீலத் தியல்பு நிறுக்குங்காலை நால்வகை வருணமு நண்ணுமா கரமும் குணம் பதினொன்றும் குறையிரு நான்கும் அணிவோர் செயலு மறிந்திசினோரே என்றாராகலின், 'வெள்ளை, சிவப்பு, பச்சை, கருமையென் றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே' கோகுலக் கழுத்துக் குவளை சுரும்பர், ஆகுலக் கண்கள் விரிச்சாறு… காயா நெய்தல் கனத்தல் பத்தி, பாய்தலெனக்குணம் பதினொன்றாமே. என்பன. இனிக் குற்றம் வந்தவழிக் கண்டு கொள்க என்பர்"[17] என்று அடியார்க்கு நல்லார் தரும் விளக்கத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளார் பெருமழைப்புலவர். மற்ற மணிகளுக்கும் இதே போன்று அடியார்க்குநல்லார் உரையைக் காட்டியுள்ளார் பெருமழைப்புலவர்.

இவ்வகைகளில் உரையில் ஒற்றுமைத்தன்மை காணப்படுகின்றது. இருப்பினும் வேறுபாடு காணப்படும் பகுதிகளும் உள்ளன. அவற்றின் திறத்தைப் பின்வரும் பகுதிகள் ஆராய்கின்றன.

பெருமழைப்புலவரின் உரை வேறுபடும் முறைமை

பெருமழைப்புலவர் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், நாட்டார் போன்ற பலரது உரைகளை ஒப்பு நோக்கித் தன் உரையைச் சிலப்பதிகாரத்திற்குச் செய்துள்ளார். சிற்சில இடங்களில் அவர் அனைத்து உரையாசிரியர்களையும் மறுக்கும் போக்கும், சிற்சில இடங்களில் குறிப்பிட்ட ஓர் உரையாசிரியரை மறுக்கும் போக்கும் காணப்படுகிறது.

"அடிகளார் சிலப்பதிகாரத்தை இயற்றிய காலத்தே பூம்புகார் நகரம் கடல் வயிறு புக்கது என்பதனை அவ்வுரையாசிரியர்கள் அறிந்திலர். இதற்கு

மணிமேகலையில் சான்றுளது. மேலும் அடிகளார் மங்கல வாழ்த்துப்பாடலிலே பூம்புகார் நகரத்தை வாழ்த்துபவர்.

‘ஆங்கு

பொதியி லாயினும் இமய மாயினும்

பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய

பொதுவறு சிறப்பின் புகாரே யாயினும்

நடுக்கின்றி நிலைஇயர் என்ப தல்லதை

ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்

முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே’

என்புழி அந்நகரம் கடலில் வீழ்ந்து ஒடுங்கியது. ஆயினும் அந்நகர்க்கட்டோன்றிய இக்கண்ணகியை உள்ளிட்ட உயர்ந்தோர் இவ்வுலகின்கண் எக்காலத்தும் புகழுடம்பிலே நிலை பெற்றிருப்பர் ஆதலான் அவ்வொடுக்கம் பொருட்டன்று. அச்சான்றோர் புகழ் உள்ள துணையும் அப்பூம்புகாரின் புகழும் இந்நிலவுலகத்திலே நிலைபெற்றே இருக்கும் என்பது தேற்றம் என்றே அடிகளார் ஈண்டுக் கூறுகின்றார். அடிகளார் அற்றைநாள் கருதிக் கூறியபடியே அப்பூம்புகாரின் புகழும் அதன்கட்டோன்றிய கண்ணகி முதலியோர் புகழும் இரண்டாயிரம் ஆண்டுகட்கிப்பாலும் நடுக்கின்றி நிலைபெற்றிருத்தலை யாமும் உணர்கின்றோமல்லமோ? அடிகளார் திருவுள்ளத்தில் ஆழந்திருக்கும் இந்தக் கருத்தைப் பழைய புதிய உரையாசிரியருள் ஒருவரேனும் இதுகாறும் உணர்ந்து கூறினாரில்லை”[18] என்று அனைத்து உரையாசிரியர்களையும் மறுக்கும் பாங்குடையவராக பெருமழைப்புலவர் விளங்குகின்றார்.

“அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்” (சிலப்.பதி. 10)

என்ற அடியில் உள்ள ‘அவன்’ என்பது யாரைக் குறிக்கும் என்பது பற்றி பெரியதொரு விவாதம் பெருமழைப்புலவரால் நடத்தப்பெற்றுள்ளது.

“அவன் என்பது இளங்கோவடிகளைச் சுட்டியதாகக் கருதுவர் உயர்திரு நாட்டாரவர்கள். அது பொருந்தாது. என்னை? இப்பதிகஞ் செய்த சான்றோர் தொடக்கத்தே இளங்கோவடிகள் என அடிகளாரைக் கூறிவைத்து, ‘வழக்கினாகிய உயர் சொற்கிளவியாகிய ஒருவரைக் கூறும்’ அப்பன்மைக் கிளவிக்குப் பொருந்தாத அவன் என்னும் ஒருமைச் சுட்டாற் சுட்டார் ஆதலின் என்க; பின்னும் இவர் அடிகளாரைப் பன்மையாலேயே ‘அடிகள் நீரே அருளுகென்றற்கு அவர்’ என்றே சுட்டுதலும் உணர்க ஈண்டும் குன்றக் குறவர் அறிந்தருள் நீ எனச் செப்பியது சேரன் செங்குட்டுவனுக்குப் பொருந்துவதன்றி அடிகளார்க்குப் பொருந்தாமையும் அறிக. ஆகவே குன்றக்குறவர் சேரனும் அடிகளாரும் ஒருங்கிருந்துழிச் சென்று வணங்கி அவருள் சேரனுக்கே கூறினர் என்னும் எமது கருத்தே பொருத்தமாம்.”[19] என்று அவன் என்பதற்கு செங்குட்டுவன் என்று பொருள்கொள்கிறார் பெருமழைப்புலவர். பழைய இரு உரையாசிரியர்கள் அவன் என்பதற்குக் கொண்ட பொருள் பின்வருமாறு,

“இனி பழையவுரையாசிரியருள் வைத்து அரும்பதவுரையாசிரியர், ‘குணவாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோவடிகளுக்குக் கண்ணகி வானவர் போற்றத் தன் கணவனோடு கூடியது கண்டு செங்குட்டுவனுக்கு உரைத்த குறவர் வந்து, எல்லாமறிந்தோய் இதனை அறிந்தருள் என்று கூறிப்போக, பின்பு செங்குட்டுவனைக் கண்டு போந்து அடிகளுழை வந்த சாத்தன் அது பட்டவாறெல்லாம் கூற’ என்றோதுவார். இதுவும் பொருந்தாமைக்கு முன் கூறிய காரணம் ஒக்கும். மேலும் செங்குட்டுவனுக்குக் குன்றக்குறவர் கூடிவந்து பேரியாற்றிடுமணல் எக்கரிடைக் கண்டு கூறியவர் மீண்டும் அரசு துறந்திருந்த அடிகளார்க்குக் கூறக் குணவாயிற் கோட்டத்திற்கு ஒருங்குடன் கூடிவந்து போதலும், பேரியாற்றிடுமணல் எக்கரிடத்தே குறவர் சேரனைக் கண்டு கூறிய பொழுது ஆங்கு அவனுழையிருந்த தண்டமிழ்ச் சாத்தனே ஈண்டும் அக்குறவர் கூறும் பொழுது வந்திருத்தலும் இன்னோரன்ன பிறவும் நிகழ்தற்கியையா நிகழ்ச்சிகள் (அசம்பாவிதம்) என்க. இனி ஆசிரியர் அடியார்க்கு நல்லார் தாமும் அரும்பத உரையாசிரியர் கருத்து பொருந்தாதெனக் கண்டு, தாம் வேறு கூறினர் ஆயினும் அவர்தாமும் ‘குறவர் இளங்கோடிவடிகளை

நோக்கி அறிந்தருள்' என்பதும் பொருந்தாதென வறிக"[20] என்ற நிலையில் விரிவான விளக்கத்திற்குப் பின்பு அவன் என்பது செங்குட்டுவனையே குறிக்கும் என்கிறார் பெருமழைப்புவலர். பெருமழைப்புவலரின் இக்கருத்து ஏற்புடையதாகும். இவ்வாறு நாட்டார், பழைய உரையாசிரியர்கள் இருவர் ஆகியோர் கருத்தை மறுத்துத் தன் கருத்தை நிலை நாட்டுபவராக விளங்குகிறார் பெருமழைப்புலவர்.

அரும்பத உரைகாரரும் பெருமழைப்புலவரும் வேறுபடும் இடங்கள்

சிலப்பதிகாரத்தின் கடலாடு காதையில் "ஊடற்கோலமோடிருந்தோனுவப்ப என்ற தொடருக்கு அரும்பத உரைகாரர்,ஊடற்கோலமோடிருந்தான்- கோவலன் அவனூடுதற்குக் காரணம் திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு, இவள் ஆடலிற் காலநீட்டித்தலானும், பலரும் இவளைப் பற்றிப் பார்த்தலிற் பொறாமையாலும் வந்த வெறுப்புமாம்"[21] என்ற இவ்வுரையில் கோவலன், மாதவி ஆகிய இருவரின் குணநலன்கள் சற்று கீழ்மைக்குச் செல்வதாக உணர்கிறார் பெருமழைப்புலவர். இதன் காரணமாக அவர் இந்த உரையை மறுக்கிறார்.

"ஊடற் கோல மோடிருந்தான் என்றதற்குப் பழையவுரையிற் கூறும் விளக்கங்கள், மாதவி கோவலன் இருவருடைய காதலுக்கும் இழுக்குத் தருவனவாகும். என்னை? திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு மாதவியோடு ஊடியிருத்தற்கு ஏதுவாகாமை யுணர்க. மேலும் ஆடலிற் காலநீட்டித்தலால் ஊடியிருந்தான் எனின் கலையின் அழகுணராப் பேதையாவன் ஆதலானும், இவளைப் பிறர் பார்த்தலின் வந்த வெறுப்பெனின் அவள் அன்புடைமையில் குறைகண்டவனாவான் இதுவும் ஊடற்கு நிமித்தம் அன்று. பிறர்க்கு இவ்வாறாமென்றூடினனாயின் ஆண்மையிற் குறையுடையன் ஆவன் எனவே அவையெல்லாம் போலி"[22] என்பவர் மேலும் "அவன் ஊடற்குக் காரணம் தான் இனிது சுவைத்திருந்த ஆடல் முதலியவற்றை அவள் முடித்தமையேயாம். வாய்மையில் இ:து ஊடலன்று. அவளது கலைச் சிறப்பைப் பாராட்டுமோர் உபயமே ஆகும் இவ்வூடல். என்னை? இத்துனைப் பேரின்பத்தை இடையறுத்தலால் ஊடவே இவன் தன்னுடலைப் பெரிதும் சுவைக்கின்றனன் என மாதவி மகிழ்வள் ஆதலின் என்க. இ:துஉண்மையான

ஊடலன்றென்றறிவுறுத்துதற்கே அடிகளார் ஊடலோடிருந்தானென் றொழியாது ஊடற் கோலத்தோடிருந்தனன் என்று நுண்ணிதின் ஓதினார் என்றுணர்க. இனி இவ்வூடல் தீர்தற்கு மாதவி தன்னை கூடி முயங்குதலே செய்யற் பாலது. ஆகவே கூட்டத்தை விரும்பும் தனது கருத்து குறிப்பாகப் புலப்பட இவ்வூடற் கோலத்தைக் கோவலன் மேற்கொண்டான் எனவும் அறிக”[23] அரும்பத உரைகாரரின் உரையுடன் மாறுபட்டு நிற்கிறார்.

கனாத்திறம் உரைத்த காதையில் மாதவி வீட்டில் இருந்துக் கோவலன் கண்ணகி வீட்டிற்கு வருகிறான். அவனின் வரவை ஒரு குற்றேவல் செய்யும் சிலதிப் பெண் விரைந்து ஓடிவந்து கண்ணகியைப் பார்த்து நம்பெருமானாகிய கோவலன் உதோ வந்து நெடிய நம் வாயிலிடத்தே வாயில் காப்பான் போலே நிற்கின்றனன் என்று அறிவிக்கிறாள்.இதனைச் சிலப்பதிகாரம்,

“.... நீடிய

காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநம்

கோவலனென்றளோர் குற்றிளையாள்”(சிலப். 9:64-65)

என்று காட்டுகின்றது. இக்காட்சிக்கு அரும்பத உரைகாரர்,“காவலன் போலுங் கோவலன் கடையிடத்தான் என்று மாறியுரைக்க. அன்றித் தூரத்தே பார்த்து ஐயுற்று நங்காவலன் போலுமென்று அவள் அணுகினவிடத்து, ஐயந்தீர்ந்து, கோவலனென்றானெனிமாம். கோவலன் வந்து நங்கடைத்தலையான். அவன்றான் நெடுங்காலம் நம்மை நீங்காக் குறிப்பினை உடையனென்றாளெனினும் அமையும்”[24] என்று விளக்குகிறார். இவ்வுரையை அப்படியே எடுத்துக்காட்டுகிறார் அடியார்க்கு நல்லார். எனவே இரு உரையாசிரியர்கள் கருத்தையும் பெருமழைப்புலவர் மறுத்து, “இனி, பழையவுரையாசிரியர்கள். ‘தூரத்தே பார்த்து ஐயுற்று நம் காவலன் போலும் என்று அணுகினவிடத்து ஐயந்தீர்ந்து கோவலன் என்றாள் எனினும் அமையும்’என்பர். தமியனாய்ப் புலம்பு கொண்டு வருகின்றவனை அவள் கோவலன் என்று ஐயுற்று நோக்குதல் பொருந்தாமை யுணர்க. நம் கோவலன் நெடுங்காலம் காப்பான் போலே இரா நின்றான் என

அவர் கூறும் உரையும் அவள் குற்றேவற் சிலதியாதலின் பொருந்தாவுரை யேயாம்."[25] என்றுரைப்பது முந்தைய உரைகளை இவ்விரு இடங்களிலும் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரையே பொருத்தமாக உள்ளமை சுட்டுதற்குரியது.

சுடுமண் ஏறா வாழ்க்கை

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஊர்காண் காதையில் சுடுமண் ஏறா வாழ்க்கை என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. இதற்கு அரும்பத உரைகாரர் 'ஓடு வேயாது பொற்றகடு வேய்ந்த மனை என்றும், அன்றியும் சாதிக் குற்றப்பாட்டால் தலையிலே செங்கல் ஏற்றி ஊர் சூழ்வித்துக் கழித்துவிடுதல் மரபு' என்று இருநிலைகளில் பொருள் அமைக்கிறார். இதனுன் முதலில் காட்டப்பெற்ற ஓடு வேயாத மனை என்பதை மறுத்துரைக்கிறார் பெருமழைப்புலவர். பின்னால் தரப்பெற்ற சாதிக் குற்றப்பட்டால் தலையிலே செங்கல் ஏற்றி ஊர் சூழ்வித்துக் கழித்துவிடுதல்மரபு என்ற கருத்தை ஏற்று அதற்கு "இனி சுடுமண் ஏறா என்பதனை மனைக்கு அடையாக்கி ஓடு வேயாத மனை என்பாரும் உளர். அவ்வுரை சிறப்பின்று. இனி கூத்தியர் சாதியில் குற்றப்பட்டால் தலையிலே செங்கல் ஏற்றி ஊர் சூழ்வித்துக் கழித்து விடுதல் மரபு. இதனை 'மற்றவன்தன்னால் மணிமேகலைதனை பொற்றோர்க்கொண்டு போதேனாகிற் சுடும்மண்ணேற்றி யாங்குஞ் சூழ்போகி வடுவொடு வாழு மடந்தையர் தம் மோரனையேனாகி யரங்கக் கூத்தியர், மனையகம் புகாஅ மரபினன் என மணிமேகலையிற் (18-31-34) சித்திராபதி வஞ்சினங் கூறுதலானுமறிக"[26] என்னும் சான்றினை தந்து விளக்குகிறார். இந்நிலையில் அரும்பத உரைகாரர் காட்டும் இருநிலை உரைகளில் ஒன்றை மறுத்து, ஒன்றைச் சான்று காட்டி ஏற்கும் பாங்கு பெருமழைப்புலவரிடம் உள்ளது.

ஞாலமாள்வோன்

ஞாலமாள்வோன் என்ற குறிப்பு சிலப்பதிகார அழற்படுகாதையில் இடம்பெற்றுள்ளது. இதற்கு "அரும்பத உரைகாரர் அர்ச்சுணன் என்று கொள்கிறார்"[27] ஆனால் இதனை மறுக்கிறார் பெருமழைப்புலவர்.

“இப்பகுதிக்கு (52) ஞாலமாள்வோன் என உவமையாகக் கூறப்பட்டவன் அருச்சுணன் என்பர் அரும்பத உரையாசிரியர். அங்ஙனங் கூறுதற்கு,ஈண்டுக் காரணம் காணப்படவில்லை. வாளாது அரசன் எனவே அமையும். முரசம் முதலிய அரசர்க்குரிய பொருளெல்லாம் அரச பூதத்திற்கும் உரிய என்று கொள்க. நெடியோன் என்பதற்கு நெடியோனென்னும் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்று கூறிப் பொலந்தார் மார்பின் நெடியோன் முன்னீர் விழவின் நெடியோன் எனவரும் அவன் பெயர்களை எடுத்துக்காட்டுவர் நாட்டார் அவர்கள். இவ்வுரையே ஈண்டைக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. அரும்பத உரையாசிரியர் நெடியோன் என்பதனை உலகளந்தோன் எனக் கருதுவர்”[28] என்ற நிலையில் பழைய உரைகாரரை தன் காலத்து உரையாசிரியரான நாட்டார் உரை கொண்டு மறுக்கிறார்.

இவ்வாறு அரும்பத உரைகாரரை ஆங்காங்கே மறுத்துப் பெருமழைப்புலவர் உரை செய்துள்ளார்.

அரும்பத உரைகாரருடன் - அடியார்க்கு நல்லார் உரை வேறுபாடு கொள்ளும் இடங்களும் அவற்றில் பெருமழைப்புலவரின் உரை நிலைப்பாடும்

‘‘அரும்பத உரைகாரருடன் அடியார்க்கு நல்லார் தொன்னூற்றொன்பது இடங்களில் உரை வேறுபாடு கொள்வதாக ச.வே. சுப்பிரமணியன் குறிக்கின்றார்’’[29] இவ்வாறு வேறுபடும் இடங்களில் பெருமழைப்புலவரின் நிலைப்பாடு எத்தகையது என்பது அறியத்தக்கதாகும்.

அரும்பத உரைகாரருடன் அடியார்க்கு நல்லார் வேறுபடும் இடங்கள் அரும்பதங்களின் வேறுபாடு காட்டும் பகுதிகளாக உள்ளது. சான்றிற்குப் பின்வரும் பகுதிகள் சுட்டப்பெறுகின்றன.

பாட்டுடைச் செய்யுள்

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பதற்கு உரையாசிரியர்கள் பொருள் காணும் நிலை பின்வருமாறு.

"அரும்பத உரைகாரர் "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் - பாட்டும் உரையும் கலந்து வந்த காவியம்"[30] என்று உரைகாண,

"உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுளை, அனைத்துடன் காதையொடு இவ்வாறைந்தும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளென்க"[31] என்று பொருள் உரைக்கிறார் அடியார்க்கு நல்லார்.

"உரையிடையிட்ட செய்யுளும், பாட்டிடையிட்ட செய்யுளுமாக"[32] என்ற நிலையில் பொருள் கொள்ளுகிறார் பெருமழைப்புலவர்.

இவ்வாறு பெருமழைப்புலவரின் உரை தற்கால நிலைக்கு ஏற்ற வகையில் மற்ற இருவரிடத்து இருந்தும் வேறுபட்டு அமைகின்றமையை உணர முடிகின்றது.

ஐம்பெருங்குழு, எண்பேராயம்

அரசனோடு இருந்த குழுக்கள் ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகியனவாகும். இதற்கு உரையாசிரியர்கள் பல நிலைகளில் வேறுபட்டுப் பொருள் கண்டுள்ளனர்.

அரும்பத உரைகாரர், சாத்துபூக் கச்சாடை, பாக்கிலை, கஞ்சுக நெய் ஆய்ந்த விவரெண்மராயத்தார், வேந்தர்க்கு மாசனம் பார்ப்பார், மருதர், வாழ் நிமிழத்தரோடமைச்சர் ஆசிலவைக்களத்தாரைந்து"[33] என்று உரைகாண்கிறார்.

அடியார்க்கு நல்லார், "ஐம்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தாவத் தொழிற் தூதுவர், சாரணர் என்றிவர் பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப்படுமே,

எண்பேராயம் - கரணத்தியல்வர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைக்காப்பாளர், நகர மாந்தர், நளிபடைத் தலைவர்,யானை வீரரிவுளி மறவர் இனைய ரெண்பேராய மென்ப"[34] என்று அடியார்க்கு நல்லார் உரை அமைகின்றது.

இவ்விரு குழுக்கள் பற்றிப் பெருமழைப்புலவர் "அரசியல் சுற்றத்தாராகிய ஐம்பெருங்குழுவினரும் எண்வகைப்பட்ட ஆயத்தாரும்"[35] என்று இயல்பாகப்

பொருள் உரைத்துள்ளார். இருப்பினும் விளக்கப்பகுதியில் இரு உரையாசிரியர் கருத்துகளையும் காட்டுகிறார். அப்பகுதி பின்வருமாறு.

“ஐம்பெருங்குழு -அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தாவத் தொழிற் தூதுவர், சாரணர் என்றிவர் பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப்படுமே,

எண்பேராயம் - கரணத்தியல்வர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைக்காப்பாளர், நகர மாந்தர், நளிபடைத் தலைவர், யானை வீரர் இவுளி மறவர் இனையர்எண்பேராயம் மென்ப. இனி அரும்பத உரையாசிரியர் “சாத்துபூக் கச்சாடை, பாக்கிலை, கஞ்சுக நெய் ஆய்ந்த விவர்எண்மராஆயத்தோர், வேந்தர்க்கு மாசனம் பார்ப்பார், மருத்தர், வாழ் நிமித்தரோடமைச்சர் ஆசிலஅவைக்களத்தாரைந்து எனக் காட்டுவர்”[36] என்று எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வாறு இரு உரையாசிரியர்களின் கருத்துகளையும் காட்டி, இவற்றில் எது சரி என்ற நிலைப்பாட்டினுக்குச் செல்லாமல் பொது நிலைப்பாட்டை பெருமழைப் புலவர் எடுத்துள்ளார்.

வம்பப் பரத்தை

கவுந்தியடிகளிடம் கேலிச் சொல்லாடி நின்றவள் வம்பப் பரத்தையும் வருமொழியாளனும் ஆவர். இந்த வம்பப் பரத்தை, வருமொழியாளன் என்போற்கு உரையாசிரியர்கள் வேறுபட்ட நிலையில் பொருள் கொண்டுள்ளனர்.

வம்பப் பரத்தை என்பதை வம்பு – பரத்தை என்றுங் பகுத்துப் பொருள் காணுகின்றார் அரும்பத உரைகாரர். “வம்பு- புதுமை. பரத்தைத் தன்மைக்குப் புதியவள். வறுமொழியாளன் - பயனில சொல்லுவான்.”[37] என்ற உரை வகுக்கிறார் அரும்பத உரைகாரர்.

அடியார்க்கு நல்லார், “இடங்கழி காமத்தளாகிய குண்டக்கணிகையொருத்தியும், ஒருவனுங் கூடி இவர்கள் இருக்கின்ற மணம் பரந்ததோர் பொழினிடத்தே அணுகினாராய்ச் சென்றவரென்க.

வம்பப் பரத்தை - புதிய பரத்தைத் தன்மையுடையவள். குண்ட மென்றபடி இனி, மனவெழுச்சியால் தோன்றினபடி சொல்லித்திரியும் பரத்தை யென்றுமாம். வறுமொழியாளன் - பயனில் சொல்லாளன், விடனென்றபடி"[38] என்றுரைப்பர்.

"புதுவதாகப் பரத்தமைத்தொழிலில் ஈடுபடுமொரு பரத்தை மகளும், அவளைக் காமுற்றழைத்தேகும் வருமொழியாளனாகிய கல்லாக் கயமகன் ஒருவனும் கண்ணகி முதலியோர் இளைப்பாறவிருந்த நறுமணம் பரப்பும் பூம்பொழிற் புகுந்து அவர்க்கு அணுக்கராய்ச் சென்றவர், வம்பப் பரத்தை- புதுவதாகப் பரத்தமைத் தொழிலிற் புகுந்த பரத்தை என்க. எனவே இளம்பரத்தை என்பதுமாயிற்று. வறுமொழி - பயனில்லாத மொழி, வறுமொழியாளன் எனவே கல்லாக் கயமகன் என்றாயராயிற்று"[39] என்று உரை காணுகின்றார் பெருமழைப்புலவர்.

கண்ணுள் வினைஞர், மண்ணீட்டாளர், பொன் செய் புலவர், நன்கலம் தருநர், துன்னாகாரர், தோலின்றுன்னர். சில தொழில்களைச் செய்வோரைக் குறிக்கும் சொற்களிலும் உரை வேறுபாடு காணப்படுகின்றது. இவற்றைப் பின்வருமாறு பகுத்து உணரமுடிகின்றது.

தொழில் செய்பவர்	**அரும்பத உரைகாரர**[40]	**அடியார்க்கு நல்லார்**[41]	**பெருமழைப்புலவர்**[42]
கண்ணுள் வினைஞர்	சித்திரகாரிகள்	சித்திரக்காரிகளும்	ஓவியக் கலைஞரும் சித்திரக்காரி என்றும் கூறுப
மண்ணீட்டாளார்	சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார், குயவருமாம்	சிற்பாசாரிகளும், அன்றிச் சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணவாரென்றுமாம், குயவருமென்ப	சிற்பம் செய்வோர்

பொன் செய் புலவர் (கொல்லர்)	உருக்கு தட்டார், அரிப்பாருமாம்	உருக்குத் தட்டாரும்	உருக்குத் தட்டார்
நன்கலம் தருநர்	இரத்தினப்பணித் தட்டார்	இரத்தினப்பணித் தட்டாரும்	மணியணிகலமியற்றும் தட்டாரும்
துன்னகாரர்	பாணர்	சிப்பியரும்	சிப்பியரும்
தோலின்றுன்னர்	செம்மார்	உறைகாரரும்	தோலினால் உறை முதலியன துன்னுவோரும்

என்ற நிலையில் பொருள் வேறுபாடு அமைகின்றது. இவ்வாறு பல தொழில் செய்வோர் பற்றிய குறிப்புகள் வரும் இடத்தில் இவை போன்ற சிற்சில வேறுபாடுகள் தோற்றம்பெற்றுள்ளன. அவை விரிவு கருதி இங்குத் தரப்படவில்லை.

சொல்லாடாள், சொல்லாடாள் நின்றாளந் நங்கைக்குச் சொல்லாடுஞ் சொல்லாடுந்தான்

கண்ணகியிடம் கோவலன் இறப்பு பற்றிக் குறிக்க வேண்டிய இடத்தில் இடம்பெறும் செய்யுள் தொடர்கள் இவை. சொல்லாடி நிற்கும் இவ்விடங்களுக்குப் பொருள் கொள்ளும் நிலையிலும் உரையாசிரியர்கள் மாறுபட பொருள் கொண்டுள்ளனர்.

அரும்பத உரைகாரர் “சொல்லாடாமல் நின்றாள், அந்தக் கண்ணகிக்குச் சொல்லுதலைச் செய்யும் அந்நிலைதான் அன்றிச் சொல்லாடாளாய் நின்ற அந்த நங்கைக்குக் கண்ணகி தான் சொல்லாடு மென்றுமாம்”[43] என்பது அரும்பத உரைகாரர் உரையாகும்.

“அங்ஙனங் கேட்டு வந்து கண்ணகிக்குத் தன் வாக்காற் சொல்லாளாய்க் குரவை முடித்து நீராடி வந்து நின்ற ஆயர் மகளிர்க்கு மறையிற் கூறி அவரோடு தானும் விம்முற்று நின்றவள் அவளழகும் இளமையும் தனிமையுங் கண்டு ஆற்றாளாய் நெஞ்சழிந்து சொல்ல நாவெழாது தான் நிற்குமென்க.

இனி வாக்காற் சொல்லாதவள் தன் மெய்ப்பாட்டாற் சொல்லுமென்றுமாம். இனி அங்ஙனம் நின்றாளாகிய அந்நங்கைக்குக் கண்ணகி தான் சொல்லாடு மெனினும் அமையும். அது மேற்கூறுகின்றார்”[44] என்பது அடியார்க்கு நல்லார் தரும் உரையாகும்.

இதற்குப் பெருமழைப் புலவர் தரும் உரைப்பகுதி பின்வருமாறு. “அவள்தான்- அவ்வாறு ஊரரவங் கேட்டுக் கண்ணகிக்குச் சொல்லக் கருதி விரைவோடு வந்த அந்த ஆயர்மகள் தானும், சொல்லாடாள் - அவளுக்குச் சொல்லுந் துணிவின்றி யாதொன்றும் சொல்லாதவளாய் வாய்வாளாது நின்றாள். அந்நங்கைக்கு —அக்கண்ணகிக்கு, சொல்லாடா நின்றாள்- யாதொன்றும் சொல்லாடாமல் நின்ற அவள்தான், சொல்லாடும்- பின்னர் கண்ணகி கேளா வண்ணம் தன்தோழிமார்க்கு மெல்லச் சொல்வாளாயினள். தான் சொல்லாடும் - அது கண்ட அக்கண்ணகியே அவளை நோக்கிச் சொல்வாளாயினாள்.

(வி.ம்) அவள்தான் என்று சொல்லவந்த அவள்தானும் என்பது பட நின்றது. சொல்லாடா நின்றாள் -சொல் ஆடாமல் நின்றாள் என்க. ஈறு தொக்கது. அந்நங்கைக்குச் சொல்லாடாள் சொல்லாடும் எனவேதன் தோழிமார்க்குச் சொல்லாடும் என்பது பெற்றாம். சொல்லாடாள், சொல்லாடாள் என்பன சொல்லாள் என்னும் ஒரு சொல் நீர்மையன. தான் சொல்லாடும் சொல்லாடும் என்பன சொல்லும் என்னும் ஒரு சொல் நீர்மையன தான் என மாறுக. தான் என்றது கண்ணகியை. பின்வருவன கண்ணகி கூற்று”[45] என்பது பெருமழைப்புலவர் உரையாகும். இதனுள் பெரும்பாலும் அடியார்க்கு நல்லார் கருத்தை ஒட்டியே தம் கருத்தை எழுதியுள்ளார் பெருமழைப்புலவர் என்பது உறுதியாகின்றது.

இவ்வாறு குறிக்கத்தக்க உரை வேறுபாடு கொண்ட இடங்கள் இங்குச் சுட்டப்பெற்றுள்ளன. இவற்றின் வழியாக உரையாசிரியர்கள் மூல ஆசிரியரின்

உண்மைக் கருத்து வெளிப்படும் அளவிற்குத் தம் அறிவுநலம் கொண்டு வேறுபட்ட நிலையில் உரை வரைந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

இருவகைக் கூத்து

இருவகைக் கூத்து என்ற வகைப்பட்டை இரு பழைய உரையாசிரியர் கருத்துகளைக் காட்டி மறுக்கிறார் பெருமழைப்புலவர்.

“இருவகைக் கூத்தவான- வேத்தியற்கூத்தும் பொதுவியற் கூத்துமாம்... இதற்குப் பழைய உரையாசிரியரிருவரும் கூறும் உரைகள் தம்முள் மாறுபடுவனவாயினும் அவையும் நம்மனோரால் அறியற்பாலனவேயாம். ஆதலால் அவற்றைக் கீழே தருவாம். அரும்பத உரையாசிரியர் ‘தேசி- மார்க்கம் என இவை என்பர். அடியார்க்கு நல்லார் ‘இருவகைக் கூத்தாவன - வசைக் கூத்து, புகழ்க் கூத்து, வேத்தியல், பொதுவியல்; வரிக் கூத்து, வரிச்சாந்திக் கூத்து; விநோதக் கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக் கூத்து, தேசிக் கூத்து; என பலவகைய, இவை விரிந்த நூல்களில் காண்க”[46] என்று இருவகைக் கூத்துகளை அடியார்க்கு நல்லார் காட்டுகின்றார்.

இவ்வாறு குறிக்கத்தக்க உரை வேறுபாடு கொண்ட இடங்கள் இங்குச் சுட்டப்பெற்றுள்ளன. இவற்றின் வழியாக உரையாசிரியர்கள் மூல ஆசிரியரின் உண்மைக் கருத்து வெளிப்படும் அளவிற்குத் தம் அறிவுநலம் கொண்டு வேறுபட்ட நிலையில் உரை வரைந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் உரை வேறுபடும் இடங்கள்

இவ்வாய்விற்காக எடுத்துக்கொள்ளப்பெற்ற களத்தில், அடியார்க்கு நல்லாரின் உரையும், பெருமழைப் புலவரின் உரையும் வேறுபடும் இடங்கள் பல உள்ளன. அவற்றில் குறிக்கத்தக்கன பின்வருமாறு.

கதை நிகழ்ச்சியின்மை

சிலப்பதிகாரப் பதிகத்தில் இடம்பெறும்,

“அவர் மங்கல வாழ்த்துப் பாடலும்”[47]

என்ற அடிக்கு அடியாரக்கு நல்லார்,“அவர் மணத்தில் மகளிர் மங்கல வாழ்த்துதலையுடைய பாடலும், மங்கலம் -கலியாணம். இதனை மங்கல வாழ்த்துக் காதையுமென்னாது பாடலுமென்றது என்னையோவெனின் இ∴து ஆசிரியப்பாவால் வாராது, கொச்சகக்கலியால் வருதலானும், கதையையுடையது காதையாமாதலானும், அவ்வாறு இதிற் கதை நிகழ்ச்சியின்மையானும் வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர் கொடுத்தாரென உணர்க”[48] என்று உரை செய்கிறார்.

இதனை மறுத்து பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார். “ மங்கலம் - திருமணம். மங்கல வாழ்த்துக்காதை என்னாது பாடல் என்றது, இ∴து இசையொடு புணர்த்துப் பாடுதற்கியன்ற (உரு) என்றவித்தற்கு. இக்காப்பித்தை ஓதத் தொடங்குவோர் இசையினால் வாழ்த்துப் பாடித்தொடங்கவேண்டும் என்பது அடிகளார் கருத்தாகும். எனவே இ∴து இசைத்தமிழ் என்பது பெற்றாம். இவ்வாழ்த்துப் பாடலிலேயே இக்காப்பியக் கதை தோற்றுவாய் செய்யப்படுகின்றது. ‘இதில் கதை நிகழ்ச்சியல்லை’ என்று அடியார்க்கு நல்லார் கூறுவது பொருந்தாது. இதன்கண் கதை தோற்றுவாய் செய்யப்படினும் இறைவனையும் கற்புடைத் தெய்வமாகிய கண்ணகியையும் வாழ்த்துவதே குறிக்கோளாதல் பற்றி அச்சிறப்பு நோக்கிக் காதை என்னாது பாடல் என்றே குறியீடு செய்தனர். இசைத் தமிழுக்கேற்ற வார நடையும் கூடைநடையும் திரள் நடையுமாக இதனை அடிகளார் மிக அருமையாக அதற்கியன்ற மயங்கிசைக் கொச்சகக்கலியால் யாத்துள்ளனர். இதற்கியைந்த பண் வகுத்து இசைக் கருவிகளோடு இசைவாணர்கள் இசையரங்குகளிலே பாடினார் இப்பாடல் பேரின்பம் பயக்கும் என்பது எமது துணிபாம்”[49] என்ற நிலையில் மங்கல வாழ்த்துப்பாடலில் கதைக் கூறு இல்லை என்ற அடியார்க்கு நல்லார் கருத்தை மறுக்கிறார் பெருமழைப்புலவர்.

உரை பெறுகட்டுரை

உரைபெறு கட்டுரை எனவரும் பகுதி இளங்கோவடிகள் இயற்றியதா என்ற கேள்விக்கு அடியார்க்கு நல்லார் ஆம் என்றும் பெருமழைப்புலவர் இல்லை என்றும் கருத்துரைப்பவராக உள்ளனர்.

“இனி உரை பெறு கட்டுரை -இவை முற்கூறிய கட்டுரைச் செய்யுள் எனவும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் உரைசால்அடிகள் அருள என்றமையால் சிறுபான்மை இவ்வுறுப்புகளும் சில வரும் எனக் கொள்க என்பர் அடியார்க்கு நல்லார். இதனால் இவ்வுரைபெறுகட்டுரை என்னும் உறுப்பும் இளங்கோவடிகளாரே இயற்றியது என்பது அடியார்க்கு நல்லார் கருத்தென்பது அறியப்படும்’, ‘இதன்கண் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் சாந்தி செய்ய எனவரும் சொற்றொடரே அடிகளார் இதனைச் செய்திலர் என்பதற்குப் போதிய சான்றாகும்”[50] என்று அடியார்க்கு நல்லார் கருத்தை மறுக்கிறார் பெருமழைப்புலவர்.

வாளியொடு வேனில் வீற்றிருக்கும் நிரை நிலை மாடம்

சிலப்பதிகாரத்தில் மனையறம் படுத்த காதைப் பகுதியில் கோவலனும் கண்ணகியும் இன்பம் நுகர்ந்த மாடத்தின் அழகினைப் பின்வரும் பகுதி காட்டுகின்றது.

“கண்டு மகிழ்வெய்திக் காதலிற் சிறந்து

விரைமலர் வாளியொடு வேனில்வீற்றிருக்கும்

நிரைநிலை மாடத் தரமிய மேறி’’ (சிலப்.2: 25-28)

என்று மாடத்தின் எழிலைக் காட்டுகின்றார். இதற்கு,‘‘அங்ஙனம் அவர் காதன் மிகுதலாலே இடை நிலத்து நின்றும், மேல் நிரைத்து வகுத்த நிலங்களில் மணத்தினையுடைய மலர்வாவியோடே, காமன் வீற்றிருக்கும் மேனிலமாகிய நிலா முற்றத்தின் மேல் ஏறியென்க. ‘‘வேனில் - ஆகுபெயராற் காமன். பகையின்றிக் கல்வியொடு செல்வத்திடை நஞ்சுற்ற காமம் நுகர்ந்திருத்தலின் வாளியும்

காமனும் வருந்தாதிருந்தமை தோன்ற வீற்றிருக்கு மென்றார்'[51] என்று உரை வரைகிறார் அடியார்க்கு நல்லார்.

இவ்வுரையை நேரிடையாக மறுத்துப் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார், அடியார்க்கு நல்லார், "பகையின்றிக் கலவியொடு செல்வத்திடை நஞ்சுற்ற காமம் நுகர்ந்திருத்தலின் வாளியும் காமனும் வருந்தாதிருந்தமை தோன்ற வீற்றிருக்கு மென்றார்' இது நூலாசிரியர் கருத்திற்கு முரணாம் என்க. மேலும் வாளியும் காமனும் வருந்தாதிருப்பின் அவ்விருக்கை இக்காதலர் புணர்ச்சிக்கே இழிவாம் என்க"[52] என்று மறுத்து உரை வரைகிறார். இவ்வாறு அடியார்க்கு நல்லார் உரையை அவரின் உரை எனக் காட்டி மறுக்கும் பாங்கு பெருமழைப்புலவரிடத்தில் காணப்பெறுகிறது.

பூதத்திற்கான பலி

சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையில், வீரர்கள் பூதத்திற்குக் களப்பலி தரும் காட்சி அமைக்கப்பெற்றுள்ளது. இதற்கு அடியார்க்கு நல்லார் வரைந்த உரை உயர்வு நவிற்சியாக உள்ளது என்று பெருமழைப்புலவர் குறிப்பிடுகிறார்.

'மருவூர் மருங்கின் மறங் கொள் வீரரும்,

பட்டின மருங்கிற் படை கெழு மாக்களும்,

முந்தச் சென்று முழுப் பலி-பீடிகை,

வெந்திறன் மன்னற்கு குற்றதை யொழிக்கவெனப்

பலிக் கொடை புரிந்தோர் வலிக்கு வரம்பாகெனக் -

கல் லுமிழ் கவணினர், கழிப்பிணிக் கறைத் தோற்,

பல் வேற் பரப்பினர் மெய் யுறத் தீண்டி,

ஆர்த்துக் களங் கொண்டோ ராரம ரழுவத்துச்

சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை

வெற்றி வேந்தன் கொற்றங் கொள்க கென

நற் பலி-பீடிகை நலங் கொள வைத்தாங்

குயிர்ப்பலி யுண்ணும் முருமுக் குரன் முழக்கத்து

மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி" (சிலப் 5:76:88)

என்ற பகுதிக்கு அடியார்க்கு நல்லாரின் உரை பின்வருமாறு.

"அந்த முசுகுந்தன் இருவகைப் பாக்கத்தோரும் அக்காலத்துப் பூதத்திற்குப் பலி கொடுப்பதற்கு முன்பினென்று தத்தமில் முந்துகூற, வலியவுரவோர் நெருங்கிச் சென்று தம்மைத் தாமேயிடும் பலியை உண்ணும் பீடிகையிலே மன்னற்கு உற்றதை ஒழிப்பாயாகெனப் பூதத்திற்குச் சொல்லிப் பலி கொடுத்தலைப் புரிந்தோர் அப்பலிக்கும் வலிக்கும் வரம்பாகக் கடவரென அவ்வரசன் குழுவும் ஆயமும் அக்காலத்தே நிருமித்தலாலே இக்காலத்து வீரரும் மாக்களும் கவணினராய்த் தோலோடு வேற்பரப்பினராய் அமர்க்களப்பரப்பிலே, உடற்கரித்து ஆர்த்துக் களங்கொண்ட வீரர் பார்த்தோரை அச்சமுறுத்துக் கடைசி வந்த கடுங்கொள்ளி போலும் பார்வையையுடைய தமது பசுந்தலை வேந்தன் கொற்றங் கொள்கெனப் பேசும்படி அரிந்துஒப்பித்துப் பீடிகையிலே வைத்த அப்பொழுதே அக்குறையுடல்கள் தமக்கு வாயின்மையின் தத்தந் தோளிற் பூண்ட மயிர்க்கண் முரசின் வாயால் உயிர்க்கடன் தந்தோம், கொண்மினென்று நின்று பலியூட்டியென்க."[53]

அடியார்க்கு நல்லாரின் இவ்உரையை ஆராந்து இது உயர்வு நவிற்சி உடையது என்கிறார் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார்.

"இப்பகுதிக்கு அடியார்க்கு நல்லார் வகுத்த உரை உயர்வு நவிற்சியாய் மிகைபடத் தோன்றுகிறது. என்னை? ஆர்த்துக் களங் கொண்ட வீரர் தம் கருந்தலைகளை அரிந்து பலிபீடத்தே வைப்ப அப்பொழுதே ஏனையோர் முரசுமுழக்கி அவ்வான் பலியைப் பூதத்திற்கு ஊட்ட என்பதே அமைவதாகவும், தலை பேசும்படி அரிந்து ஒப்பித்துப் பலி பீடிகையிலே வைத்த அப்பொழுதே அக்குறையுடல்கள் தமக்கு வாயின்மையின்.. முரசின் உயிர்க்கடன் தந்தோம்

கொண்மினென்று நின்று பலியூட்ட என்பார் அடியார்க்கு நல்லார். இ∴து அவர் கருத்து அன்று என்பது தேற்றம். ஆயினும் தலையாய பெருமிதச் சுவைக்கு எடுத்துக் காட்டாக அமைந்த இக்கருத்துக் கவிச்சக்கரவர்த்தியாகிய செயங்கொண்டார் கருத்தாகும் என்பதனைக் கற்றோர் யாவரும் நன்குணர்வர். மற்று அவ்வுரையாசிரியரே கலிங்கத்துப்பரணியிலமைந்த இக்கருத்தமைந்த செய்யுட்பகுதிகளை ஈண்டு எடுத்துக்காட்டியுள்ளார். ஆசிரியர் அடியார்க்கு நல்லார் உரையும் விளக்கங்களும் மிகையேயாயினும் கற்போர்க்குக் கழிபேரின்பம் நல்குதலின் அவர் உரையைத் தழுவியே யாமும் வரைந்தாம்"[54] என்ற நிலையில் பெருமழைப்புலவர் உரை அமைகின்றது. இவ்வுரைப்பகுதியில் அடியார்க்கு நல்லார் வரைந்த உரை கலிங்கத்துப் பரணி பாடிய ஒட்டக் கூத்தரின் கற்பனையை எடுத்தாண்டுள்ளது என்று காட்டி இக்கருத்து அடியார்க்கு நல்லார் உரை அன்று என்று மறுக்கிறார் பெருமழைப்புலவர். இதனோடு நிறுத்தாமல் இவ்வுரைப்பகுதி கற்பவருக்கு இன்பம் தருவதால் இதனைத் தான் ஏற்றுக் கொண்டதாக பெருமழைப்புலவர் குறிப்பது, ஜெயங்கொண்டாரையும், அடியார்க்கு நல்லாரையும் ஒருங்கே பொன்னேபோல் போற்றும் தகையதாக உள்ளது.

விச்சாதரன் கூற்று.

கடலாடு காதையில் விச்சாதரன் ஒருவன் தன் காதலிக்கு இந்திரவிழாவைப் பற்றிய செய்திகளை அறிவிக்கிறான். இதனைச் சிலப்பதிகார ஆசான் இளங்கோவடிகள்

"தென்றிசை மருங்கினோர் செழும்பதி தன்னுள்

இந்திரவிழவு கொண்டெடுக்கு நாளிதுவெனக்" (சிலப்:6:5-6)

என்று மட்டும் குறிக்கிறார். இதற்கு உரை வரையும் அடியார்க்கு நல்லார்,

வீரன் பங்குனித்திங்கள் இருபத்தொன்பதில் சித்திரை நாளிலே அவ்விழா முடிதலின் தென்றிசைப் பக்கத்து ஒரு வளவிய நகரிடத்து இந்திரவிழவிற்குக் கால் கொண்டுகொடியெடுக்கும் நாள் மேலைமாதத்து இந்தச் சித்திரை காண் எனச் சொல்லி என்க

இதுவெனச் சுட்டினான், அன்றும் சித்திரையாகலின் ஈண்டுத் திங்களும் திதியுங் கூறியது என்னையெனின், கோவலனும் மனைவியும் ஊரின்றும் போந்த திங்களும் திதியும் வாரமும் நாளும் வழிச் செலவும் ஒழிவும், மதுரையிற் சென்று புக்கு இவன் இறந்துபட்ட திங்கள் முதலாயுள்ளவற்றோடு மாறு கொள்ளாது முடிதற்கெனக் கொள்க. அது யாண்டுமோ வெனின் வேனிற் காதையினும் நாடுகாண் காதையினும் காடுகாண் காதை கட்டுரை காதை யென்னும் இவற்றுள்ளுமெனக்கொள்க"[55]

மேற்காட்டிய அடியார்க்கு நல்லார் உரையில் மூல நூலசிரியரால் குறிக்கப்படாத நாள், திதி போன்றன குறிக்கப்பெற்றுள்ளன. இவ்வுரையைப் பெருமழைப் புலவர் பின்வருமாறு மறுக்கிறார்.

"இவ்விரண்டடிக்கும் அடியார்க்கு நல்லார் கூறும் உரை நூலாசிரியர் கருத்தென்று நினைத்தற்கிடனில்லை. ஆயினும் அவர் கூறும் உரையும் அறிந்து கோடற்பாலதேயாம். அது வருமாறு."[56] என்று எழுதிப் பின் மேற்கண்ட அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியைத் தந்து, "அவ்வுரையாசிரியர் இவ்வாறு தாமே ஒரு கொள்கையுடையராய் அதனை நிலைநிறுத்தற் பொருட்டு ஈண்டு முன்மொழிந்து கோடல் என்னும் உத்திபற்றி இங்ஙனம் கூறி வைத்துப் பிறண்டும் இதனை வலியுறுத்துவர். அவற்றை ஆங்காங்குக் காண்க. நூலாசிரியர் இத்தகைய கொள்கையுடையவர் என்று நினைதல் மிகையேயாம் என்க.

இனி இளங்கோவடிகளார் இந்திரவிழாவின் சிறப்பினைப் பின்னும் கூறுதற்கு இவ்விஞ்சை வீரனை ஒரு கருவியாக்கிக் கொள்கின்றனர் என்பது தேற்றம். என்னை? 'தென்றிசை மருங்கினுள்ள புகார் நகரத்து இந்திரவிழாவினை வெள்ளிமலை யுச்சியில் வாழும் விச்சாதரர் முதலியவரும் வந்து கண்டுகளித்தனர்' என்பது இவன் வரவினால் அறிவுறுத்தலும் மேலும் இவன் கூற்றாக அவ்விழாவையும் நகரச் சிறப்பையும் ஆடல் முதலிய கலைச் சிறப்பையும் வெளிப்படுத்துரைப்பதுவுமே அடிகளார் கருத்தென்க"[57] என்ற நிலையில் அடியார்க்கு நல்லார் முன்மொழிந்து கோடலாக சிலச் செய்திகளைச் சொல்வது குற்றமுடையதாக உள்ளது எனக் காட்டுகின்றனார்.

விண்பொரு பெரும்புகழ்

இளங்கோவடிகள் காட்டும் விண்பொரு பெரும்புகழ் என்ற தொடருக்குப் பொருள் சொல்லும் நிலையில் அடியார்க்கு நல்லாரும் பெருமழைப்புலவரும் வேறுபடுகின்றனர். இது இதற்குமுன் காட்டிய பகுதி போன்று உயர்வுநவிற்சியாக அமைகின்றது.

“விண்பொரு பெரும்புகழ் - விசும்பை ஒத்தபெரும் புகழ், விரிந்த விசும்பு போல விரிந்த பெரும்புகழ் இதற்கு இங்ஙனம் பொருள் காணமாட்டாது பிறரெல்லாம் பொருந்தாவுரை கூறினர்”[58] என்ற உரைப்பகுதியில் பொருந்தா உரை வரைந்தது யார் என்று ஆராயும்போது அது அடியார்க்கு நல்லார் உரையாக உள்ளது.

இத்தொடருக்கு அடியார்க்கு நல்லார் “ சூழ் தருதலையுடைய எழினியும் முற் கூறிய தொகுதியும் வேறுவேறு கோலமும் வேறுவேறு கம்பலையும் விண்ணிலே சென்று பொரும் பெரிய புகழையுடைய இக்கரிகால்வளவன் புதுப்புனல் விழவு கொண்டாடும் தலைநாட்போல இவ்விழவினிறுதிக்கண் புனலாடிடங்களும் வீறுபெறத் தோன்றா நிற்கவென்க”[59] என்று இளங்கோவடிகள் காட்டாத கரிகால் பெருவளத்தான் பற்றிய குறிப்புகள் இவ்வுரைக்குள் இடம்பெற்றுள்ளன. இதனை மறுத்து மொழிகிறார் பெருமழைப்புலவர். அடியார்க்கு நல்லார் உரை பொருந்தா உரை என்கிறார்.

வான்கண் விழியா வைகறை

நாடுகாண் காதைப் பகுதியில் அதிகாலை வரவினை இளங்கோவடிகள்,

“வான்கண் விழியா வைகறை யாமத்து

மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்

காரிரு ணின்ற கடைநாட் கங்குல்” **(சிலப்:10:1-3)**

என்றுரைப்பர். இதற்கு அடியார்க்கு நல்லார் நாள், திதி, வாரம் போன்றனவற்றைக் காட்டி உரை காண்கிறார். அவை, உலகிற்குக் கண்ணாகிய

ஆதித்தன் தோன்றி விளங்காத வைகறையென்னும் யாமத்திடத்து மீனோடு அழகு பெற்றொழுகும் வெண்மதியானது விசுப்பினின்றும் நீங்கிற்றாகக் கரிய இருள் கடைக்கணின்ற கங்குற் பொழுதிலென்க. - என்பது அந்தச் சித்திரைத் திங்கட் புகுதி நாள்- சோதி. திதி மூன்றாம் பக்கம். வாரம் -ஞாயிறு. இத்திங்களிருபத் தெட்டிற் சித்திரையும் பூரணையுங் கூடிய சனிவாரத்திற்கொடியேற்றி **'நாலேழ் நாளினும்' (மணி.1:8)** என்பதானான் இருபத்தெட்டு நாளும் விழா நடந்து கொடியிறக்கி வைகாசி இருபத்தெட்டினிற் பூருவபக்கத்தின் பதின் மூன்றாம் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப்பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருளிலே யென்றவாறு"[60] என்பனவாகும் என்று அடியார்க்கு நல்லார் உரைசெய்கின்றார். இவ்வுரைக்குள் தேவையற்ற வான் கணக்கு முறை வருவதாக பெருமழைப் புலவர் கருதுகிறார். எனவே, அவர் இவ்வுரை பொருத்தமற்றது எனக்காட்டி இருப்பினும் அவர் செய்த உரையைத் தான் அப்படியே தருவதாகவும் கூறித் தன் உரைக்குள் தருகிறார். இதன் காரணம் இக்கணித மரபு பிற்காலத்தில் சரியாகவும் அமையலாம் என்பதனால் இருக்க வாய்ப்புள்ளது.

"வான் கண். . . கங்குல் என்பதற்கு அடியார்க்கு நல்லார் கூறும் விளக்கம் கணித நூலுக்குப் பொருந்தாது என்ப. ஆயினும், பின்னும் அவற்றை ஆராய்வார் பொருட்டு அவர் கூறியாங்கே ஈண்டுத் தருவாம் அது வருமாறு."[61] என்று அடியார்க்கு நல்லார் உரையைக் காட்டி மறுக்கிறார் பெருமழைப் புலவர்.

தொண்டி

'வங்க வீட்டத்துத் தொண்டியோரிட்ட

அகிலும் துகிலும் மாரமும் வாசமும்

தொகுகருப்பூரமுஞ் சுமந்துடன் வந்த

கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்" (சிலப்,14: 107-109)

என்ற பகுதியில் வரும் தொண்டி என்ற ஊர்ப்பெயர் பற்றி அடியார்க்கு நல்லாருக்கும், பெருமழைப்புலவருக்கும் கருத்து வேறுபாடு உள்ளது.

“குணதிசைக்கண் தொண்டி என்னும் பதியிலுள்ள அரசரால் வங்கத்திரளோடு திறையிடப்பட்ட அகிலும் பட்டும் சந்தனமும் வாசமும் கருப்பூரமும் என்னுமிவற்றை அவ்வங்கத்திரளோடு சுமந்து வந்த கொண்டற் காற்றென்னும் நண்பனோடு”[62] என்று உரை காண்கிறார் அடியார்க்கு நல்லார்.

பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் அடியார்க்கு நல்லாரின் இவ்வுரையைப் பின்வருமாறு மறுக்கிறார்.

“இதற்குக் குணதிசைக்கண் தொண்டி என்னும் பதியிலுள்ள அரசரால் வங்கத்திரளோடு திறையிடப்பட்ட அகில் முதலிய பொருள்கள் என அடியார்க்கு நல்லார் கூறும் உரை பொருந்தாமையுணர்க. தொண்டியில் உள்ள வணிகர் கீழ்த்திசையிலுள்ள கடலிடையிட்ட நாடுகளிற் கலத்தொடு சென்று ஈட்டிக்கொணரும் அகில் முதலியன என்பதே சிறந்த உரையாம்”[63] என்பது பெருமழைப்புலவர் உரையாகும்.

தொண்டி என்ற நகரம் கிழக்குக் கடற்கரைப்பகுதியிலும் உள்ளது. மேற்குப் பகுதியான சேரர் பகுதியிலும் உள்ளது. மேற்குப் பகுதியான மலையாள நாட்டில் உள்ள தொண்டியை அடியார்க்குநல்லார் காட்டுகிறார். ஆனால் சிலப்பதிகாரத்தில் உள்ள குறிப்பின்படி வங்க ஈட்டம் என்பது கிழக்குக் கடற்கரை சார்ந்த பகுதி என்பதால் தென்திசையில் உள்ள தொண்டி என்ற பெருமழைப்புலவரின் கருத்தே சரியாகின்றது.

அளியள்

சிலப்பதிகாரத்தில் அடைக்கலக்காதையில் அளியள் என்ற சொல் இடம்பெறுகிறது. இதற்கு அடியார்க்கு நல்லார் யாவரானும் அளிக்கத்தக்காள் என்று உரை காண்கிறார். இதனை மறுத்துமொழிகிறார் பெருமழைப்புலவர்.

“அளியள் -அளியுடையாள். யாவரானும் அளிக்கத்தக்காள் என்னும் பழையவுரை ஈண்டு பொருந்தாது”[64] என்ற குறிப்பின்படி அளியள் என்பதன் பொருள் விளக்கத்தில் பெருமழைப்புலவர் வேறுபடும்தன்மை வெளிப்படுகின்றது.

வீணை மங்கலமிழப்ப

மாதவி மண்ணுலகிற்கு வந்ததற்காக ஒரு தொன்மக்கதை சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படுகிறது. இந்திர உலகத்தில் நடனமாடும் பெண் உருப்பசி ஆவாள். இவள் ஒருமுறை இந்திரன் மைந்தன் சயந்தனின் கண் பார்வை பட்டுக் காதலுற்றுத் தன் ஆடல்தொழிலில் சற்று மாறுபட்டு ஆடினாள். அவள் நாரதமுனிவர் காட்டிய யாழிசைக்கு ஏற்ப ஆடமுடியாது தயங்கினாள். இதன் காரணமாக அவள் மண்ணுலகில் பிறக்க வேண்டியவளானாள். அவளே மாதவி ஆவாள்.

இங்கு உருப்பசி ஆடாது தடுமாறிய நிலையில் வீணை மங்கலமிழக்கிறது. இந்த மங்கலமிழப்ப வீணை என்ற பகுதிக்கு அடியார்க்கு நல்லார் விரித்து உரை செய்கிறார். அதன் ஒரு பகுதி பின்வருமாறு.

“இதனாற் சொல்லியது. நாரதன் கலகப்பிரியனாதலால் தனது யாழைப் பகை நரம்புபட இசைத்தலின் தான் இங்ஙனமிசைத்தற்குக் காரணமின்றாகவும், இவள் கலங்கினமை தான் நமக்கறிவித்து: நம்மால் இவளை முனிவிப்பான் வேண்டி நம்மை மதியானாயினானென அவளொடும் சாபமிடுகின்றவன் வீணை மங்கலமிழக்க, மண்மிசை தங்குக. இவள் மண்ணிற்போய்ப் பிறக்கவெனச் சாபம் இட்டானென்பது. வீணை மண்மிசை தங்குகவெனவே இவளை நீங்காவரத்தின் வந்ததாகலான் இவனும் மண்மிசைத்தங்குக வென்பதாயிற்று. எனவே இவன் மண்ணிற் பிறவானாதல் உணர்க.”[65] என்பது அடியார்க்கு நல்லார் உரையாகும். இதனைப் பெருமழைப்புலவர் மறுக்கிறார். அப்பகுதி பின்வருமாறு.

“இனி, அவ்வுரையாசிரியர் பின்னும் “வீணையைச் சாரீர வீணையாக்கி மங்கல மிழப்ப என்பதற்கு இவள் இக்கடவுள் யாக்கை யொழிந்து மக்கள் யாக்கையில் தங்குகவெனச் சபித்தான் என்பதும் கொள்க’, என்பர். இவ்விளக்கம்

நூலாசிரியர் கருத்தொடு மாறுபடுதலின் பொருந்தாதாம். என்னை ‘‘நூலாசிரியரே நாரதன் வீணையெனத்தெரித்தோதுதலின் என்க.’’[66] என்ற நிலையில் யாழ் மண்ணுலகு வந்தமைக்கான வேறுபட்ட கருத்துகள் காட்டப்பெற்றுள்ளன.

‘‘வார் ஒலி கூந்தல் பேரியல் கிழத்தி’’ (சிலப்.2:80)

என்ற தொடர் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகிறது. இத்தொடருக்குப் பெருமழைப்புலவர் நீண்ட அடர்ந்த கூந்தலையுடைய பெருமைமிக்க மனைமாண்புடைய மாசாத்துவான் மனைவியாகிய மூதாட்டி என்று பொருள் தருகிறார். இவ்வாறு அவர் பொருள் கொள்ளுவதற்கு முன்னைய இரு பழைய உரையாசிரியர்களும் வழி வகுத்துத் தந்துள்ளனர்.

‘‘இனி வாரொலி கூந்தல் பேரியற் கிழத்தி என்பதுவே அடியார்க்கு நல்லார் கொண்ட பாடமாம். ஆயினும் வாரொலிக் கூந்தல் என்பதனை அன்மொழித் தொகையாகக் கொண்டு (கண்ணகியை) வீரபத்தினியை என்பர் அடியார்க்கு நல்லார். பேரியற் கிழத்தி எனினுமமையும் என்றலின் அவர் கொண்ட பாடம் வாரொலி கூந்தல் பேரியற் கிழத்தி என்பது பெறப்படும். வாரொலி கூந்தல் பேரியற் கிழத்தி என்று காணப்படும் பாடம் பிழைபடக் கொண்டதாம். பேரிற் கிழத்தி என்பது என்பது அரும்பதவுரையாசிரியர் கொண்ட பாடமாம். இன்னும் அவர் அறப்பரிகாரம் என்று பாடங்கொண்டமை அவர் உரையால் விளங்கும்’’[67] என்று பழைய உரையாசிரியர் கூறும் கருத்தை குறிப்பிடுகின்றார் பெருமழைப்புலவர்.

கறை கெழுகுடிகள் இறை செலுத்துதற்குப் பொருந்திய நற்குடி மக்கள், கைதலைவைப்ப - வருந்த – காரணத்தைக் காரியமாக உபசரித்தார். என்னை? வருத்தமுறுவோர் தலையிலடித்துக் கோடல் இயல்பாகலின் என்க. இதற்குத் துயர் உறுதல் என்னும் பொருள் நிகழ்ச்சியைத் தலைமேல் கைவைக்க வென்னும் தொழில் நிகழ்ச்சியாற் கூறினார் என்பார்(பழையவுரை)யாசிரியர்.

பள்ளி

பள்ளி என்பதற்கு, துறவோர் உறைகின்ற தவப்பள்ளி என்று பொருள் கொள்ளுகின்றார் பெருமழைப்புலவர். இதற்குஅடியார்க்கு நல்லார் உரையைப் போலி உரை என்று கூறி மறுக்கிறார் பெருமழைப்புலவர்.

"அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்" (சிலப்:14:11)

என்னும் அடிக்கு அடியார்க்கு நல்லார் அறமும் அதன் துறையும் விளங்குதற்குக் காரணமான அறவோர்களுடைய இருப்பிடங்களும் என உரைப் பொருள் கூறக் கருதி அதற்கேற்ப விளக்கங் கூறினார். இவ்வுரையும் விளக்கங்களும் பொருந்தாமை பள்ளி என்ற ஒரு சொல்லே காட்டும். இச்சொல் தமது கருத்திற்குப் பொருந்தாதது கண்டு 'ஈண்டுப் பள்ளி என்றது அவ்விடங்களை' எனவும் கூறினர். அவர் கருத்தின்படி இல்லறத்தார் முன்றிலிலும் காலை முரசம் இயம்புதல் வேண்டும். அது மரபின்பையின் அவ்வுரை போலி உரை என்றொழிக"[68] என்ற நிலையில் பள்ளி என்பதற்குத் தவப்பள்ளி என்ற பொருளே பொருந்தும் என்று உரைக்கிறார் பெருமழைப்புலவர்.

தொகுப்புரை

- ஆய்வுக் களமாக விளங்கும் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரைப் பகுதிகளில் பல நிலைகளில் ஒன்றுபட்ட தன்மையும் சில இடங்களில் வேறுபட்ட தன்மையும் அமைந்துள்ளன. பெரும்பாலும் அடியார்க்கு நல்லார் அரும்பத உரைகாரரை ஏற்றே உரை கண்டுள்ளார். ஆனால் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகிய உரையாசிரியர்களின் உரைகளை நன்கு ஊன்றிப் படித்துப் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் வேண்டிய இடங்களில் ஒன்றுபட்டும், வேண்டாத இடங்களில் வேறுபட்டும் நிற்கிறார்.
- இம்மூவரின் உரைகளில் ஒன்றுபடும் இடங்களை அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும் ஒன்றுபடும் இடங்கள், அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரையும் ஒன்றுபடும் இடங்கள், அரும்பத உரைகாரர் உரையும், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரையும் ஒன்றுபடும் இடங்கள், அடியார்க்கு நல்லார் உரையும், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரையும் ஒன்றுபடும் இடங்கள் என்ற நிலையில் பிரித்துணர முடிகின்றது.
- வேறுபடும் இடங்கள் என்று காணுகையில் அடியார்க்கு நல்லார், அரும்பத உரைகாரரிடம் பெரும்பாலும் வேறுபட்டு நிற்பதில்லை. பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் மட்டும் வேறுபட்டு உரை செய்துள்ளார். பழைய உரையாசிரியர்கள் இருவரையும் மறுக்கும் போக்கு, ஏதேனும் ஓர் உரையாசிரியரை மறுக்கும் போக்கு ஆகிய இருநிலைகளில் வேறுபட்டு மறுக்கும் போக்கு பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் உரையில் காணப்பெறுகின்றன. இதன்வழி கருத்து அனைத்தும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை. என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.60
2. மேலது, ப.99
3. மேலது, ப.57
4. மேலது, ப.79
5. மேலது, ப.65
6. மேலது, ப.108
7. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், பதி.24
8. மேலது, ப.156
9. மேலது, ப.175
10. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.293
11. மேலது, ப.180
12. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.175
13. மேலது, ப.21
14. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.113
15. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.175
16. மேலது, ப.308
17. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.136
18. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், அணிந். ப.15
19. மேலது, ப.7
20. மேலது, ப.7
21. மேலது, ப.230
22. மேலது, ப.230
23. மேலது, பக்.230-231
24. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.243

25. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.342

26. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.130

27. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.491

28. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.294

29. ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், பக்.376-394

30. சிலப்.மூ.அரும்.அடியா, உரையும், ப.5

31. மேலது, ப.29

32. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.19

33. சிலப்.மூ.அரும்.அடியா, உரையும், ப.146

34. மேலது, ப.197

35. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.196

36. மேலது, ப.197

37. சிலப்.மூ.அரும்.அடியா, உரையும், ப.263

38. மேலது, ப.283

39. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.390

40. சிலப்.மூ.அரும்.அடியா, உரையும் ப.138

41. மேலது, ப.155

42. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.178

43. சிலப்.மூ.அரும்.அடியா, உரையும், ப.458

44. மேலது, ப.461

45. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.236

46. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், பக்.88-89

47. சிலப்.மூ.அரும்.அடியா, உரையும், பதி.அடி-63

48. மேலது, பதி.25

49. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.20

50. மேலது, ப.31

51. சிலப்.மூ.அரும்.அடியா. உரையும், ப.48

52. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார்.ப.61

53. சிலப்.மூ.அரும்.அடியா. உரையும், ப.159

54. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.184

55. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.184

56. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.215

57. மேலது, ப.215

58. மேலது, ப.242

59. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.199

60. மேலது, ப.267

61. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.355

62. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.374

63. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.126

64. மேலது, ப.160

65. சிலப்.மூ.அரும்.அடியா.உரையும், ப.186

66. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், புகார், ப.220

67. மேலது, ப.77

68. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப், மதுரை, ப.110

இயல் 4

நடையியல் நோக்கில் உரைகள்

உரையாசிரியர்களின் பணி என்பது மூலப் பகுதிக்குச் சொல் பொருள் விளக்கம் சொல்வது மட்டுமன்று. மூல நூலாசிரியரின் நுண்ணறிவுத் திறத்தை, அவர் கொண்ட கொள்கை, கவிதைக் கலை, பாத்திரப் பண்பு போன்றவற்றை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் உரையாசிரியர்கள் உரையினை அமைக்கவேண்டியுள்ளது. மேலும் தன் உரையைச் செம்மைபட, தமிழ்த்திறம் மாறாமல் எடுத்துரைக்கவும் வேண்டியுள்ளது. இவ்வகையில் ஒரு மூல நூலுக்குச் செய்யப்படும் உரை என்பது, கற்போருக்கு சுவை கூட்டுவதாக அமையவேண்டியுள்ளது. உரையாசிரியரின் திறத்தை முழுவதும் வெளிப்படுத்துவது அவரின் நடைத்திறமே ஆகும்.

சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பெருமழைப்புலவர் ஆகியோர் உரை வரைந்துள்ளனர். இம்மூவரும் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்திற்கு உரை செய்தனர் என்றாலும் அவரவர் நோக்கில், அவரவர் நடைப்பாங்கில் மூல நூலாசிரியரின் திறத்தை ஆராய்ந்து உரை வரைந்துள்ளனர். இதன்வழி இளங்கோவடிகளின் உரை மூன்று உரையாசிரியர்களால் ஏறக்குறைய திறனாய்வு செய்யப்பெற்றுள்ளது என்று கொள்ளமுடியும். அவ்வகையில் இம்மூன்று உரையாசிரியர்களின் நடை நலத்தினைக் காட்டுவதாக இவ்வியல் அமைகின்றது.

நடையியல் என்பது தற்போது வளர்ந்துவரும் துறையாகும். இத்துறை வழி ஒரு படைப்பாளரின் நடை ஆளுமையை அவரின் கருத்து சொல்லும் உத்திமுறைகளை அறிந்துகொள்ள முடிகின்றது. “நடையியில் ஆய்வு இலக்கிய

வரலாற்றையும் மொழியியலையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைகிறது”[1] என்று பகவதி குறிக்கிறார். என்கவிஸ்ட் என்ற மேல்நாட்டு அறிஞர் ‘எண்ணம் அல்லது கருத்து எனும் கருவினைச் சுற்றி அமைந்துள்ள ஒரு கூடு. வேறுபட்ட வடிவங்களுக்கு இடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உத்தி. ஒரு படைப்பாளியின் அல்லது படைப்பிலக்கியத்தில் காணப்படும் தனிமைக் கூறுகளின் ஒட்டு மொத்த வடிவம்”[2] என்று நடை என்பதை வரையறை செய்கிறார். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி நடை என்பதைத் “தனக்கென ஏற்படுத்திக் கொண்ட முறை, பாணி”[3] என்று குறிப்பிடுகிறது. “பேச்சுமொழி, எழுத்து மொழி ஆகியவற்றின் நடையைப் பற்றி ஆராயும் ஒரு மொழியியல் பிரிவு”[4] என்றும் நடையியல் பற்றி அவ்வகராதி விளக்கமளிக்கிறது.

சிறந்த நடை என்பதை மா.இராமலிங்கம் “அழகிய செஞ்சொற்களால் இனிமையாகவும் எளிமையாகவும் நுட்பமாகவும் கருத்தினை உணர்த்த வல்லதே சிறந்த நடை”[5] என்கிறார்.

மேற்கண்ட கருத்துகளின் வழி நடை என்பது இனிமையும் எளிமையும் பட படிப்பவர்க்குப் பாடுபொருளை உணர்த்தும் சொல் முறைமை என்ற கருத்தினைப் பெற முடிகின்றது. இச்சொல் முறைமை படைப்பாளர்களுக்கு ஏற்ப, படைப்புகளுக்கு ஏற்ப தனித்துவம் உடையதாகவும் வேறுபட்டு அமைவதாகவும் விளங்கும் என்பது தெரியவருகிறது.

உரை என்பது பொதுவாக இருவகையாகக் கொள்ளப்படுகின்றது. ஒன்று காண்டிகை உரை, மற்றது விருத்தியுரை. இவ்வுரை வகைகளுக்கு ஏற்ப உரையாசிரியர்களின் நடைநலமும் மாறும் திறமுடையதாக உள்ளது. எனவே

இவ்வியல் முதலில் உரைவகைகளுக்கு ஏற்ப நடை நலத்தை ஆராய்ந்து அதன்பின் சிறப்பான நடை நலக் கூறுகளை ஆராய்வதாக அமைகின்றது.

உரையின் நடை இயல்புகளும் அதன் வகைகளும்

இலக்கணம், அல்லது இலக்கியச் செய்யுள்களுக்கு விளக்கம் தரும் வகையில் எழுதப்படுவது உரை எனப்படுகின்றது. இந்த உரையின் வழி செய்திகள் மக்களைச் சென்றடைவது எளிதாக அமைந்தது. மூத்த இலக்கிய இலக்கணங்களுக்கு உரை செய்வதன் வழியாக அவை எளிமையாக அனைவராலும் புரிந்து கொள்ளத்தக்க நிலையை எய்தியது.

‘‘ஓர் உரை என்பது

பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்

தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்

விரிவதி காரந் துணிவு பயனோ

டாசிரிய வசனமென் றீரே ழுரையே’’

என்ற நிலைப்பாடுகளை உடையதாக இருக்கவேண்டும் என்கிறார் பவணந்தி முனிவர்.

பொதுவாக உரை என்பது பின்வரும் பண்புகளைக் கொண்டதாக அமையவேண்டும் என்பது நன்னூல் கருத்தாகும்.

1. “செய்யுள்களில் பாடபேதம் இருந்தால் அதனைக் காட்டுதல்

2. செய்யுள் தரும் கருத்துகளைத் தருதல்

3. சொல் வகை காட்டுதல்

4. சொற்பொருள் உரைத்தல்

5. பொழிப்புரை தருதல்

6. உதாரணம் காட்டல்

7. வினா எழுப்புதல்

8. விடை தருதல்

9. விசேட உரை தருதல்

10. விரிவு காட்டல்

11. அதிகார வரவு காட்டல்

12. துணிவு கூறல்

13. பயனொடு படுத்தல்

14. ஆசிரிய வசனம் காட்டல்"[6]

என்ற பதினான்கு கூறுகளை உடையதாக அமையவேண்டும் என்கிறார் நன்னூலார்.

இவை பொதுவான உரைப் பண்புகள் ஆகும். இவை தவிர காண்டிகை உரை, விருத்தி உரை என்ற இருவகை உரைகள் நன்னூலில் காட்டப்பெறுகின்றன.

காண்டிகை உரை

"கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்

அவற்றொடு வினாவிடை யாக்க லானும்

சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை"[7]

என்ற நிலையில் நன்னூல் காண்டிகை உரை பற்றிக் குறிப்பிடுகின்றது. மேற்காட்டிய பொதுவான உரைப்பண்புகளில் கருத்துரைத்தல், பதப்பொருள் தருதல், எடுத்துக்காட்டு தருதல், வினா, விடை ஆக்கல் ஆகியன காண்டிகை உரைக்கான தகுதிகள் என்பது இதன்வழி பெறப்படுகிறது.

விருத்தி உரை

"சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்

கின்றி யமையா யாவையும் விளங்கத்

தன்னுரை யானும் பிறநூ லானும்

ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு

மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி"[8]

என்பதில் காண்டிகை உரைக்குச் சொல்லப்பெற்ற ஐந்து உரைப் பண்புகளுடன் நூற்பாவின் உட்பொருளை விளக்குதல், மேலும் இன்றியமையாதன எனக் கருதப்படும் கருத்துகளை வழங்குதல், பிற உரை ஆசிரியர்களின் கருத்துகளை எடுத்து மொழிந்து ஐயம் அகற்றும்வகையில் உண்மையைச் சொல்லல் என்ற நிலைகளில் அமைவது விருத்தி உரையாகும்.

இவ்வாறு இருவகை உரைகள் நன்னூல் ஆசிரியரால் காட்டப்பெறுகின்றன. அரும்பத உரைகாரர் உரை ஏறக்குறைய காண்டிகை உரை வகைப்பட்டு நிற்கிறது. ஆய்வுக்களத்தில் எடுத்துக்கொள்ளப்பெற்ற மற்ற இரு உரைகளான அடியார்க்கு நல்லார் உரை, பெருமழைப்புலவர் உரை ஆகியன விருத்தியுரையின் வயப்பட்டு நிற்கின்றன.

அரும்பத உரைகாரரின் நடை

அரும்பத உரைகாரரின் உரை காண்டிகை உரைப்பண்புகள் கொண்டதாக அமைகின்றது. இது கருத்து, பதப்பொருள், காட்டு, வினா, விடை ஆக்கல் ஆகிய காண்டிகைப் பண்புகளைப் பெற்றுள்ளது. இதனைப் பின்வரும் பகுதிகள் பொருத்திக்காட்டுகின்றன.

கருத்துரைத்தல்

கருத்துரைத்தல் என்ற உரைப்பண்பானது வெறும் சொல் பொருள் மட்டும் சொல்லிச் செல்லாது, ஆங்காங்கே கருத்துகளை விளக்கி உரைத்தல் என்ற நிலையை உரை பெற்றிருத்தலாகும். சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரைகாரர் செய்த உரை சொல் பொருள் உரை செய்ததுடன் ஆங்காங்கே கருத்துரைக்கும் போக்கும் உடையதாக உள்ளது.

“நூறுபத்தடுக்கி… பான்மையினிறுத்த வென்றது…. இப்பொன் தந்து இம்மாலை வாங்குவான் மாதவிக்கு மணவாளப் பிள்ளை யாவனென்று சொல்லி மானவிழி போன்ற நோக்கினையுடையாளோர் கூனிகைகொடுத்து நகரியிற் பெருந்தெருவிலே விலைக்கு விற்பாரைப் போல்வதோர் பண்பினால்

நிறுத்தவென்றவாறு"[9] என்றவாறு கூனி பொன்மாலை விற்ற நிலையைக் கருத்துரையாகத் தருகிறார் அரும்பத உரைகாரர்.

மாமலர் நெடுங்கண்---மனைபுக்கென்றது - பெரிய தாமரை மலர் போன்ற கண்ணையுடைய மாதவி மாலையைப் பரியம் ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னையுங் கொடுத்து வாங்கிக் கோவலன் கூனியுடனே மாதவியுடைய மணமனையிலே புகுந்தென்றவாறு.

"மாதவி தன்னோடு… விரும்பினனாயினனென்றது-இக்கோவலன் மாதவி தன்னுடனே அணைந்த பொழுதே அயர்ந்து மயங்கியிருந்து மனையையும் அவளையும் விட்டு நீங்கமுடியாத விருப்பத்தை உடையனாயினானென்றவாறு"[10] என்ற கருத்துரைகள், படிப்பவர்க்கு கோவலன் மாதவி வீட்டிற்குச் சென்று அங்கிருந்து வர இயலா நிலையைப் பெற்றமைக்கான காரணத்தைக் காட்டும் கருத்துரையாக உள்ளது.

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லென்றது – தந்தை தாய் முதலாயினவரை இழந்தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம். இ∴து அவ்வாறு வாக்கானும் சொல்லலாகாமையின் காட்டுவதில்லென்றாள்"[11] என்ற உரைப் பகுதி கருத்துரைத்தலுக்குச் சான்றாகின்றது.

தாய், தந்தை இல்லாதவர்க்கு அம்முறை சொல்லி வேறு யாரும் பாதுகாக்க இயலும். ஆனால் கணவனை இழந்த பெண்ணுக்குத் தான் கணவனாக இருந்து காப்பேன் என்று எவரும் சொல்வது பிழை என்பதால் அம்முறை சொல்லி எவரும் துணையாக இருக்க இயலாது என்பதால் காட்டுவது

இல் என்று குறிக்கப்பெற்றுள்ளது என்று கருத்துரை செய்துள்ளார் அரும்பத உரைகாரர்.

“நுந்தையாகிய சேரலனிடத்தே நீயிருக்க, ஒரு நிமித்திகன் வந்து, நின்னைப் பார்த்து அரசு வீற்றிருக்கும் இலக்கணமுண்டென்று சொல்ல, என்தமையனாகிய செங்குட்டுவன் இருக்க இவ்வாறு முறைமை கெடச் சொன்னாயென்று அந்நிமித்திகனை வெகுண்டு நோக்கிச் செங்குட்டுவனுக்குத் துன்பம் வாராதபடி குணவாயிலிடத்துத் துறந்திருக்கின்ற கடவுளர் முன்வந்து இராச்சிய பாரத்தை விட்டு நீங்கி மோட்சமாகிய இராச்சியத்தை ஆளக்கடவ வேந்தனல்லையோவென்று முன்பின் நிகழ்ந்ததும் மேல் நிகழ்வதுமாகிய என் திறமுரைத்த இமையோரிளங்கொடி தன் திறமுரைத்த கதையைத் தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீரெனக் கூட்டுக”[12] என்ற நிலையில் சிலப்பதிகாரக் கதையைக் கேட்டவர்க்குத் தன் கதையை இளங்கோவடிகள் காட்டும் பாங்கினைக் கருத்துரையாகத் தருகிறார் அரும்பத உரைகாரர்.

பதப்பொருள்

அரும்பத உரைகாரர் உரை என்பது பதப்பொருள் தருதலையே முதன்மையாகக் கொண்டதாகும். அரிய சொற்களுக்குப் பொருள் தருவது என்ற முறையில்அமைவது இவ்வுரையாகும். அரும்பத உரைகாரரின் அனைத்து உரைப்பகுதிகளும் இதற்கான சான்றுகள் என்றாலும் இங்குச் சில எடுத்துக்காட்டப்பெறுகின்றன. “திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதுமென்னும் அடுக்குச் சிறப்பின்கண் வந்தது, அங்கணுலகு - அழகிய உலகிடம், நாமநீர் - அச்சத்தைத் தருகின்ற கடல், மேனின்று – எல்லாப் பொருள்களுக்கும் மேலாக நின்று, வீங்கு நீர் - நிறைந்த நீர், இவை நான்கு

சிந்தியல் வெண்பாவும் செம்பியனையும், புகாரினையும் சிறப்பித்தன, ஆங்கு-ஆதலான்”[13] என்பது அரும்பத உரைகாரரின் தொடக்க உரைப்பகுதியாகும். இவ்வுரைப்பகுதி ஆங்காங்கே கருத்துரைகளைக் கொண்டுள்ளது. இதனுடன் பதப்பொருளையும் தருகின்றது. இவ்வகையில் பதப்பொருள் தருவதாக அரும்பத உரைகாரரின் உரைப்பகுதி அமைகின்றது. எடுத்துக்காட்டு தருதல் என்பது இலக்கணப் பகுதிகளுக்குப் பொருந்துவதனால் இவ்வுரைக்குள் காண இயலவில்லை.

வினா விடை நடை

சொற்பொருள், கருத்துரை நல்கும் நிலையில், வினா எழுப்பி, விடை நல்கும் பாங்கும் அரும்பத உரைகாரர் உரையில் காணப்படுகின்றது. அதற்கான சான்றுகள் பின்வருமாறு.

“இலைப் பூங்கோதையியல்பினின் வழாஅதென்றது இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்கும் தக்கபடியென்றவாறு; அன்றியும் அரசனுடைய மாலையுடனே முறைமையாகிய ஆயிரத்தெண்கழஞ்சு பொன்னும் சிறப்பாகப் பெற்றாள்; என்னை? முட்டில் பாணரு….பெறுப’ என்றாராதலின்”[14] என்று மாதவி பெற்ற மாலைகளின் வகைகளைக் காட்டுகின்றார் அரும்பத உரைகாரர்.

“துணங்கை – சிங்கி என்னை? பழுப்புடை யிருகை முடக்கடியக்கத் தொடங்கிய நடையது துணங்கையாகும்.”[15] என்று துணங்கைக்குப் பொருள் விளக்கம் தரும் நிலையிலும் வினா எழுப்பி விடை நல்கப்பெற்றுள்ளது.

“பெருந்தோண் மடந்தை – மகளிர்க்கு தோள் பெருக்கை இலக்கணம். என்னை? அகலல்குறோள் கண்ணென மூவழிப் பெருகி (கலித்.108-2) என்றாராகலின்”[16] என்று பெண்ணின் உடல் இலக்கணம் குறித்து வினா எழுப்பி விடை தரும் பாங்கும் இங்குக் கொள்ளத்தக்கது.

இவ்வாறு காண்டிகை உரைப்பண்புகள் அரும்பத உரைகாரர் உரைப்பகுதியில் காணப்படுகின்றன. இவைதவிர குறிக்கத்தக்க சில உரை நயப்பகுதிகளும் அரும்பத உரைகாரரின் உரையில் காணப்படுகின்றது.

இவரின் நடை நலத்தை “வாக்கியங்களின் முதலிறுதிகளையேனும், முதலை மட்டுமேனும், சொற்களையேனும் எழுதி பொருள் எழுதுவதும், ஒன்றையுமெழுதாது பொருளை மட்டுமெழுதிக்கொண்டு போவதும் இவ்வுரையாசிரியருடைய கொள்கையாக இருக்கின்றன. இவ்வுரையிலுள்ள முடிவுகளும் பொருளும் இல்லையாயின் அடியார்க்கு நல்லார் உரை கிடையாத பாகங்களுக்குப் பொருள் காண்பது அரிது”[17] என்று உ.வே.சா தன் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் இவரின் உரை அடியார்க்கு நல்லார் உரை காணாப் பகுதிகளுக்கு உரிய பொருளைக் காணப்பெரிதும் துணை நிற்கிறது.

இலக்கிய நடை

அரும் சொற்களுக்கு உரை வழங்கும் அரும்பத உரைகாரர் உரை பல இடங்களில் இலக்கியநடை உடையதாக உள்ளது. இதற்குப் பின்வரும் பகுதிகள் சான்றுகளாகும்.

“கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும்

உண்ணிறை கரந்தகத் தொளித்து நீ ருகுத்தன"(சிலப். 5:237-238)

என்ற தொடருக்கு, இலக்கியத்தன்மை பொருந்த உரை வரைகிறார் அரும்பத உரைகாரர்.

"கருங்கணென்றது, கண்ணகிக்குப் புணர்ச்சியில்லாமையால், நிறைகரந்து துன்பத்தாற் கண்கள் நீர் உகுத்தன. செங்கணென்று உரைத்தது மாதவிக்குப் புணர்ச்சி விதும்பலால். அகத்து நிறைகரந்தொளித்து இன்பத்தாற் கண்கள் நீர் உகுத்தன. கண்ணகிக்கு நிறை கரத்தல் - கற்பாற் பரிகாரப் பட்டதாதல். ஆற்றாமை மிகுதி கூறிற்று. மாதவிக்கு நிறைகரத்தலாவது- நிறுத்தலைக்கரந்து காமத்தாலே நீர் உகுத்தன. கண்ணகிக்கு அழுகைக் கண்ணீர் மாதவிக்கு உவகைக் கண்ணீர்."[18] என்ற உரையில் இலக்கியத்தன்மை பொதிந்து கிடக்கின்றது. கண்களில் நீர் சுரத்தல் என்பது இன்பத்திற்கும் துன்பத்திற்கும் கண்ணகிக்கும் மாதவிக்கும் பொருந்தி உரைக்கப் பெற்றுள்ளது.

இந்திரவிழவூரெடுத்த காதையில் பகலவனின் தோற்றம் குறித்துப் பின்வருமாறு கவிதை படைக்கிறார் இளங்கோவடிகள்.

"அலைநீ ராடை மலை முலை யாகத்

தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற்

கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை

புதையிருட் படாஅம் போக நீக்கி

உதைய மால்வரை யுச்சித் தோன்றி

உலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி"(சிலப்.5: 1-6)

என்று இளங்கோவடிகள் சூரியன் தோன்றிய நிலையைக் காட்டுகின்றார். இதற்கு உரை வரைந்த அரும்பத உரைகாரர்

"மலையாகிய முலையையுடைய ஆகத்துப் பேரியாறாகிய ஆரம்; நீரை ஆடையாகவும் மலையை முலையாகவும் (2) யாற்றை ஆரமாகவும், மாரியைக் கூந்தலாகவுமுடைய (3) மண்ணக மடந்தையுடைய (4) இருளாகிய படாத்தை நீக்கியென்க. உலகு விளங்குதற்குக் காரணமான ஒலி –ஆதித்தன் கதிரைப் பரப்ப"[19] என்று உரைசெய்கிறார். இதனுள் மண்ணை மடந்தையாக ஒப்புமைப் படுத்தி இளங்கோவடிகள் குறிப்பிட அதனை விரித்து இலக்கிய நடையில் உரை கண்டுள்ளார் அரும்பத உரைகாரர்.

"மறையின் மணந்தாரைவன் பரதர் பாக்கத்து மடவார்செங்கை

இறைவளை கடூற்றவதை யேழையமெங்ஙனம் யான் கிறகோமைய

நிறைமதியுளமீனுமெனவன்ன நீள் புன்னையரும்பிப் பூத்த"[20]

என்ற பகுதிக்கான அரும்பத உரைகாரரின் உரை பின்வருமாறு.

"மறையின் மணந்தாரை –அப்படி மணந்த மடவாரை, அன்னம் அரும்பிப் பூத்த புன்னையிலே ஏறியிருக்க நிறைமதியும் மீனுமெனக்கருதி ஆம்பல் மலருமென்க. வண்டு ஊதுமெனவே மலர்தல் பெற்றாம். இங்ஙனம் கூறிற்று. மதிகண்டு ஆம்பல் மலருமாதலால். 'உடைதிரை முத்தஞ் சிந்தவோசனிக்கின்ற வன்னனம் .. ஆம்பல் (சீவக.2652) என்றார் பிறரும். மதியும் மீனுமென்று கண்டார் கருதப் புன்னையிலே அன்னமேறிற்றாக வண்டு ஆம்பலை யூதுமென்க."[21] என்ற நிலையில் இயற்கை நிகழ்ச்சியை இனிமை பட தன் உரையில் காட்டுகின்றார்

அரும்பத உரைகாரர். இவற்றின்வழி இலக்கியத்தன்மை மிக்க உரையாக அரும்பத உரைகாரரின் உரை அமைகின்ற சிறப்பினைப் பெறுகின்றது.

தொகுத்துரைத்தல் நடை

அரும்பத உரைகாரர் ஆங்காங்கே சிலப்பதிகார செய்யுள் அடிகளைப் பொருள் கொள்ளும் முறைக்கு ஏற்ப இயைத்துத் தொகுத்து உரைக்கும் நடை முறையைக் கொண்டுள்ளார். இதற்கான சான்றுகள் சில பின்வருமாறு.

“கண்ணகியும் கோவலுனும் இடைநிலத்திருந்துழித்தென்றல் கண்டு மகிழ்வெய்திச் சிறந்து ஏறியிருந்து எழுதிக கையற்றெனக் கூட்டுக.” என்று பொருள்கொள்ளும் முறையைக் கூட்டி உரைக்கும் தொகுப்புமுறை இவரின் நடையில் காணப்படும் தனிநடையாகும். இதன் மூலப்பகுதி பின்வருமாறு,

“உத்தர குருவி னொப்பத் தோன்றிய

கயமலர்க் கண்ணியுங் காதற் கொழுநனும்

மயன்விதித் தன்ன மணிக்கா லமளிமிசை

நெடுநிலை மாடத் திடை நிலத் திருந்துழிக்

கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை

அரும்பொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை

வயற்பூ வாச மளைஇ யயற்பூ

மேதகு தாழை விரியல்வெண் டோட்டுக்

கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்

தாது தேர்ந் துண்டு மாதர் வாண் முகத்துப்

புரிகுழ லளகத்துப் புகலேக் கற்றுத்

திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து

மாலைத் தாமத்து மணி நிரைத்து வகுத்த

கோலச் சாளரக் குறுங்க ணுழைந்து

வண்டொடு புக்க மனவாய்த் தென்றல்" (சிலப். 2: 10-24)

என்ற பகுதியில் இடம்பெறும் பொருள் தொகுப்பினை மேற்காட்டிய நிலையில் அமைத்துக் காட்டுகிறார் அரும்பத உரைகாரர். "தவத்தோர்களாயினும் வண்டுபோல (163) இவர்கள் நகையின் செவ்வி பார்க்கும் காமுகராயினும் (164) காமத்துக்குப் புதிய மடவோராயினும் (165) தங்கியே போகவேண்டும் (167) வீதி"[22] என்ற முறையில் பொருள் கொள்ளும் முறையில் தொகுத்துரைக்கும் நடைப்பண்பு இவ்வுரையாசிரியரிடம் உள்ளது. இவ்வாறு அரும்பத உரைகாரரின் உரை நடையியல் என்பது கண்டிகை உரையின் வகைப்பட்டதாய், இலக்கியதன்மை மிக்கதாய், தொகுத்துரைக்கும் பண்புடையதாய் உள்ளது என்ற முடிவினை இவற்றின்வழி பெறமுடிகின்றது.

அடியார்க்கு நல்லாரின் நடை

அடியார்க்கு நல்லார் நடை என்பது "சிற்சில விடங்களில் எதுகை மோனை பெற்று இனிய சுவை பொதுளிய கவிதை நடையாக அமைகின்றது. காப்பிய பொருண்மை, கதையின் கட்டுக்கோப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தரின் பண்பு நூலாசிரியரின் ஆழ்ந்த கவியுளம், கதைநிகழ்ச்சியின்

காலஅளவு, காதைகளும் பாடல் அமைப்பும் ஆகிய பல்வேறு கூறுகளை நுணுகி ஆராய்ந்து திறம்பட கூறுகின்றார் அடியார்க்கு நல்லார்."[23] என்று அடியார்க்கு நல்லாரின் நடைத்திறத்தை மதிப்பிடுகிறார் ச.வே.சுப்பிரமணியனார்.

விருத்தி உரை நடைப்பண்புகள்

அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையானது உரைக்கு உரிய பொதுப் பண்புகளையும் காண்டிகை உரைப் பண்புகளையும் பெற்று வேண்டிய இடங்களில் இன்றியமையாத விரிவுகளையும் பெற்று விளங்குவதாக அமைகிறது.

கருத்துரை நடை

அடியார்க்கு நல்லார் ஆங்காங்கே கருத்துரைகளை வழங்கிச் செல்லும் இயல்பினராக விளங்குகிறார். சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியை முதலில் அறிமுகம் செய்து, பின்பு கோவலனை அறிமுகம் செய்கிறார் இளங்கோவடிகள். இதற்கான காரணத்தை "கண்ணகியை முற்கூறினார், பத்தினியினை ஏத்துதல் உட்கோளாதலான்"[24] என்று கருத்துரைக்கிறார் அடியார்க்கு நல்லார்.

அரங்கேற்றுக்காதையின் முடிவுப் பகுதியில், "ஆடல் முதலிய காட்டல் வேண்டி, ஆடலோனும், இசையோனும், இயற்புலவனும், தண்ணுமையோனும் குழலோனும் யாழோனுங் கூடி வகுத்தனர் கொண்டு தொழுதனரேத்த எழுதி வைத்து எடுத்து வகுத்து நாற்றிக் கிடந்த அரங்கத்துக் கொண்டு ஒழுக்கிப் போக்கி ஆகெனச் செய்து ஏந்தி அணிந்துகொண்டு இயம்ப ஆர்ப்பச் செய்து கொடுப்ப வைத்தபின் நிற்ப ஏறிப் பொருந்திச் சேர்ந்த மகளிரும் பொலிய நீங்கப் பாட இசைக்கும் கருவிகளெல்லாம் நின்றது; நின்றது; நின்றது; நின்றிசைத்தது.

பதினொன்னு போக்கி அம்முறை போக்கி வகுத்தெனக் கடைப்பிடித்துக் காட்டினளாதலின், எய்தி ஏறிப்பெற்றனள். பெற்று நிறுத்தக் கோவலன் வாங்கி மனைபுக்கு அயர்ந்து மயங்கி மறந்து விருப்பினனாயினானென்க"[25] என்ற நிலையில் கருத்துரையைத் தருகிறார் அடியார்க்கு நல்லார்.

இவரின் உரைப்பாயிரப் பகுதி பல கருத்துகளை முன்வைக்கின்றது. குறிப்பாக சிலப்பதிகாரம் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாடுபொருள்களைப் பாடியுள்ளது. ஆனால் வீடு பற்றி இது பாடாதுவிடுத்தது என்ற விடுதல் மணிமேகலைக் காப்பியம் செய்து முடித்த காரணத்தால் நிறைவு பெற்றது. எனவே சிலப்பதிகாரம் மணிமேகலையுடன் இணைந்து நிற்கும் இரட்டைக் காப்பியமாக உள்ளது என்பதை இவர் பின்வருமாறு காட்டுகிறார்.

'உலகத்துக் காப்பியம் செய்வோன் அறனும், பொருளும், இன்பமும் , வீடும் கூறல் வேண்டுமென்றே. இந்நாடகக் காப்பியத்தினுள் அறனும்,பொருளும், இன்பமும் கூறிச் சிறிதாயினும் வீடு கூறிற்றிலர். என்னையெனின் 'யானறிகுவனது பட்டதென்று" (பதி.11) உரைத்த சாத்தனார் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதியிருக்கின்றார்க்கு அடிகள் 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" (பதி.60) என உளப்பாட்டுத் தன்மையாற் கூறச் சாத்தனார், இவர் ஏனையிரு வேந்தரையும் புகழ்ந்துரையார் என்பது கருதி மூவேந்தருக்கும் உரியது ஆகலின் 'நீரே யருளக'' (பதி.62) என்று ஏகார வினாப்பொருண்மையான் அவர் கருத்து நிகழ்ச்சி விளக்குவான் கூற அவர் அதனையே துணிந்து தமது முத்தமிழ்க் கல்வியும், வித்தகக் கவியும் காட்டுதற்குத் தாம் வகுத்துக் கொண்ட மூவகை உள்ளுறையின் விளைவு தோன்ற, மங்கல வாழ்த்துப் பாடல் முதல் வரந்தரு காதை யிறுதி முப்பது

வகைத்தாக வரையறுத்து, அதனை அதிகாரமாகப் பொதிந்து முன்வைத்து”[26] என்ற நிலையில் சிலப்பதிகாரத்தில் வீடு பற்றிய செய்திகள் இல்லை என்று இந்நெடுத்தொடரில் குறித்துள்ளார் அடியார்க்கு நல்லார். மேலும் மூவேந்தரையும் காப்பியத்திற்குள் கொண்டுவந்து பெருமை செய்யவேண்டும் என்ற நிலையில் இதனைச் செய்யத்தக்கவர் இளங்கோவே எனச் சாத்தனார் கருதியதும் மேற்காட்டியதன்வழி தெரிகின்றது.

சிலப்பதிகாரம் முத்தமிழ்க்கல்வியும், வித்தகக் கவியும் கொண்டு எழுதப்பெற்றுள்ளது என்று அடியார்க்கு நல்லார் அதன் கல்விப் பெருமையையும் கவிப்பெருமையையும் காட்டுகின்றார்.

இந்நெடுந்தொடர் மீளவும் தொடர்கிறது. போதியறவோன் … யளிப்பவும் (103-4) எனக் கோவலன் முன்கண்ட கனவின்கண் நிகழ்ந்ததை எதிர்கால நிமித்தமாக மாடலற்குக் கூறுதலானும் நீர்ப்படையுள், மாதவி…. போதித்தானம் புரிந்தறங் கொள்ளவும் (103-8) என்றலானும் வாழ்த்தின்கண் ‘மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ மணிமேகலை துறவுங் கேட்டாயோ தோழீ எனத் தேவந்தி கூறுதலானும், வரந்தரு காதையில் ‘மணிமேகலையார், யாதவடுறத்தற்கேதுவீங் குரை’’ (4-5) என ‘மையீரோதி’’ (10) முதல் ‘போதித்தானம் புரிந்தறம் படுத்தனள்’ (28) என்பதீறாகப் பக்குவஞ் சொல்லி “பருவமன்றியும் பைந்தொடி நங்கை, திருவிழை கோல நீங்கினள்’’ (35-6) என்றமையானும் மணிமேகலை துறந்தாளென்பது உணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தானார்க்கு இவ்வுரையை உரைத்துழி, அவர் மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியம் செய்தமைத்தனமெனக்

கேட்டு, அவ்வடிகள் விரும்பி இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்கண் நடத்துவான் வேண்டவும் இருவர் செய்தலின், இரண்டாகி நடந்தனவென்க”[27] என்ற நிலையில் சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் இரட்டைக் காப்பியமாகக் காண்கிறார் அடியார்க்கு நல்லார்.

சிலப்பதிகாரத்தில் மாதவி, மணிமேகலை போன்றவர்கள்தம் துறவு பற்றிய குறிப்புகள் மட்டும் இடம்பெற அதனை முழுவதும் தருவதாக மணிமேகலை அமைகின்றது. மேலும் மணிமேகலை அறம், வீடு ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. இக்காப்பியத்தில் பொருள், இன்பம் ஆகியன பாடப்படவில்லை என்ற குறையும் நீங்க இதன் முன்னிலையில் சிலப்பதிகாரம் அமைந்து அக்குறைபாடும் போக்கும் நிலையில் இவ்விரு காப்பியங்களும் தொடர்ச்சி உடையன என்பதை உணர்த்துகிறார் அடியார்க்கு நல்லார்.

இவரின் மேற்காட்டிய நடைப்பகுதியின் வழி இவரின் நடையானது பல வரிகளை உடைய நெடுந்தொடர்களாக அமையும் பாங்கினது என்பது தெரியவருகிறது. இதனை மேலும் உறுதி படுத்துவதற்கு, பதிகத்தில் உரை விளக்கம் செய்த பகுதி மேலும் ஒரு களமாகின்றது.

“இது நாற்பொருளுள்ளும் அகத்திணைக் கண்ணது இன்பமாகலாலும், புறத்திணைக் கண்ணது பொருளும் அறனுமாகலானும் வீடொழிந்த முடிபு கூறிநின்றது. அதனானன்றே “மணிமேகலைமேலுரைப் பொருண் முற்றிய சிலப்பதிகாரம் (நூற்கட்டுரை, 17-8) என்பாரானதுவுமென்க”[28] என்ற அடியாரக்கு நல்லாரின் உரைப் பகுதி சிலப்பதிகாரத்தில் அறம், பொருள், இன்பம் முதலியன முறையே புறம், அகம் சார்ந்து அமைந்துள்ளன. வீடு அமையவில்லை. இதன்

காரணமாக மணிமேகலையுடன் சிலப்பதிகாரம் பொருண்மை முற்றும் என்பதைக் காட்டுகின்றது.

இவ்வாறு சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்களாக விளங்குகின்றன என்ற கருத்தினை முன்வைக்கிறார் அடியார்க்கு நல்லார். இவரின் கருத்துரை நடைப் பாங்கிற்கு இப்பகுதி சரியான சான்றாகின்றது.

பதப்பொருள்

அடியார்க்கு நல்லார் உரைப்பகுதி இதன்பொருள் என்ற பகுதியையும், அதன்பின் அரிய சொற்களுக்குப் பொருள் தரும் அரும்பொருள் விளக்கும் பகுதியும் அமைகின்றது. இந்த அரும்பொருள் விளக்கும் பகுதியில் பதப்பொருள் தரப்பெறுகின்றது. அடியார்க்கு நல்லாரின் பதப்பொருள் தரும் நடைநலத்திற்குப் பின்வரும் பகுதிகள் சான்றாகின்றன.

“வானுகம்-வெண்மணல். வேலை விரிதிரைப் பரப்பின் வானுலகத்தை யுடைய மறுகென்க. எடுத்து நுவலும் - எடுத்தலாற் சொல்லுமென்றுமாம்”[29] என்றவாறு பதப்பொருள் தரப்பெறுகின்றது.

அகில்- ‘அருமணவன் தக்கோலி கிடாரவன் காரகிலென்று சொல்லப்பட்ட பல்வகைத் தாய தொகுதியும்; துகில்- கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர் கோபம், சித்திரக்கம்பி, குருதிதாகரியல் பேடகம், பரியட்டக்காசு வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடைகவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி,செம்பொத்தி, பணிப்பொத்தியென்று சொல்லப்பட்ட

பலவகைத்தாகிய தொகுதியும்; ஆரம்- மலையாரம், தீமுரன்பச்சை, கிழான் பச்சை, பச்சை வெட்டை, அரிசந்தனம், வேரச்சுக் கொடியென்று சொல்லப்பட்ட பல்வகைத் தொகுதியும்; வாசம்: அம்பர், எச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாசம், தைலமென்று சொல்லப்பட்ட பலவகைத்தாகிய தொகுதியும்; கருப்பூரம்: மலைச்சரக்கு, கலை அடைவுச் சரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மாரப்பற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாறோசு, சூடன், சீனச்சூடனென்று பெயர் கூறப்பட்ட பலவகைத்தாகிய தொகுதியுமெனத் தொகுத்தும் விரித்தும் பொருளுரைக்க"[30] என்ற நிலையில் சொல்லுக்கு விரிவான பொருள் தரும் உரைப் போக்கும் அடியார்க்கு நல்லாரிடம் காணக்கிடைக்கிறது.

நயமான பொருள்களையும் தன்னுரையில் அடியார்க்கு நல்லார் தந்துள்ளார்.

''கட்டுரை- புலவிக் குறையெல்லாம் பொதிந்தவுரை"[31]

''ஓசனித்தல் - போதற்கு ஒருப்பட்டு முயறல்"[32]

''கவலை –முடுக்குவழிகள்'[33]

''கொடுவாய்க்குயம் - கோடிய வாயையுடைய அரிவாள்"[34]

''ஆக்களைக் காத்து- வெருவும் பிணியுமுற்றுழிக் காத்து. ஓம்பி – புலத்தலைப் புல்லார்த்தி அலைத்தலை நீருட்டி, ஆப்பயன் - பால் முதலியன. அளிக்குங் கோவலர்- கன்றத்தி மிக்கதனை யாவருக்குமளிக்கும் கோவலரென்க.

அழுக்காறாவது மனத்தழுக்கு. செவ்வியள்- ஔவியமில்லாள், ஆவது- மனக்கோட்டமிலளென்றபடி, அளியள்-யாவரானும் அளித்தக்காள்”[35]

“கோளிப்பாகல் -வெளிப்படை. கோளி – பூவாது காய்க்கும் மரம்: என்னை? ‘கோளியாலத்து’ என்றார்”[36]

“அறவோர்- சாவக நோன்பிகள். பெருமகள் - கோவலன் மாதா, பெயர்- புகழ். தலைத்தாள்-தலைமையுடைய முயற்சி. மன்- மன்னரால் நீரென ஒரு சொல் வருவிக்க இகந்தனனா தன்மை.... அற்பு-அன்பு, சிறத்தல் - மிகுதல், நொடித்தல் -சொல்லுதல். வாயன் முறுவல் - பொய்ந்நகை.”[37] என்பன பதப்பொருள் தரும் நடைத்தன்மைக்குச் சான்றுகளாக அமைகின்றன

வினாவிடை நடை

அடியார்க்கு நல்லார் உரையில் வினாவிடை நடையும் கலந்து வருகின்றது. ஆங்காங்கே வினாக்களை எழுப்பி, விடைகளை அளிக்கும் முறையில் அவரின் உரையின் நடைப்பகுதி அமைந்துள்ளது. அதற்குக் கீழ்க்காணும் பகுதிகள் சான்றாக அமையும்.

“மாயோன்-திருமால். பாணி – தேவ பாணி, ‘பாணியென்றது –பாட்டு’ அது தேவர் பரவுதலாயிற்று. என்னை? ‘ஏனையொன்றே தேவர்ப் பராவுதன் முன்னிலைக்கண்ணே’ என்றாராகலின். அது முத்தமிழ்க்கும் பொது. அ∴து இயற்றமிழில் வருங்காற் கொச்சகவொருபோகாய் வரும். வரும்வழியும் பெருந்தேவபாணியு, சிறுதேவபாணியென இருவகைத்தாய் வரும். என்னை? ‘கூறிய வுறுப்பிற் குறைபாடின்றித், தேறிய விரண்டு தேவபாணியும்”[38]

என்றாராகலின் என்ற பகுதியில் பாணி என்பதற்குப் பாட்டு என்று பொருள் தந்து அதற்கான சான்றினையும் காட்டியுள்ளார் அடியார்க்கு நல்லார்.

"பரியகமாவது: பொன்னிதழ் பொதிந்த பன்னிற மணிவடம், பின்னிய தொடரிற் பெருவிரன் மோதிரம், தன்னொடு தொடக்கித் தமனியச் சிலம்பின், புறவாய்ச் சூழ்ந்து புணரவைப்பதுவே. என்னை? அவ்வாய் மகரத்தணிகிளர் மோதிரம், பைவாய், பசும்பொற் பரியக நூபுரம், மொய்ம்மணி நாவின் முல்லையங் கிண்கிணி, கௌவிய வேனவுங் காலுக் கணிந்தாள்"[39] என்றார் என்ற பகுதியில் ஒரு அணிகலனைப் பற்றி அறிவதற்குத் தக்க சான்று தந்து, பதில் அளித்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

"காமம்: காமரென விகாரம். தூமணி – முத்து. என்னை? ஆய்மணிகட்டி அமைந்த விலைச் செய்கைக் காமர் கண்டிகைக் கண்டிரண் முத்திடைக் காமர் பொற் பாசங் கொளுத்திக் கவின்பெற, வேண்மருண்மென்றோள் விளங்கவணந்தாள்"[40] என்றார் என்ற பகுதியின் வழி தூமணி என்பது முத்தினைக் குறிப்பது என்பதை உணரமுடிகின்றது.

"வரியாவது-அவரவர் பிறந்த நிலத்தன்மையும், பிறப்பிற்கேற்ற தொழிற்றன்யையும் தோன்ற நடித்தல்: என்னை? வரியெனப்படுவது வழங்கல் என்றாராகலின்"[41] என்று வினா எழுப்பி விளக்கம் தருகிறார் அடியார்க்கு நல்லார்.

இவ்வாறு வினாக்களை ஆங்காங்கே எழுப்பி, அவ்வினாக்களுக்கு உரிய மேற்கோள்களைக் காட்டிப் பதில் அளிக்கும் உரைமுறைமை அடியார்க்கு நல்லாரிடம் உள்ளது.

இவ்வாறு காண்டிகை காட்டும் உரையின் தன்மைகளைப் பெற்று விளங்குகிறது அடியார்க்கு நல்லார் உரை. மேலும் தேவைப்படும் இடத்தில் உரையை விரித்துக் காட்டி விருத்தி உரையாகவும் இவ்வுரை அமைகின்றது.

அரங்கேற்றுக் காதையில் பல இடங்களில் விரிவான உரை தருகிறார் அடியார்க்கு நல்லார். இப்பகுதியில் சுவை ஒன்பது என்கிறார் அடியார்க்கு நல்லார். அதனை விரித்துப் பொருள் செய்யும் பகுதி பின்வருமாறு.

“சுவை ஒன்பது வகைப்படும். அவை வீரச்சுவை அவியநயம், பயச்சுவை அவிநயம், இழிப்புச் சுவை அவிநயம், அற்புதச் சுவை அவிநயம், இன்பச் சுவை அவிநயம், அவலச் சுவை அவிநயம், நகைச்சுவை அவிநயம், நடுவுநிலைச்சுவை அவிநயம், உருத்திரச் சுவை அவிநயமென. அவற்றுள்,

வீரச்சுவை அவிநயம் விளம்புங்காலை, முரிந்த புருவமுஞ், சிவந்த கண்ணும், பிடித்த வாளுங், கடித்த வெயிறும், மடித்த வுதடுஞ், சுருட்டிய நுதலும், திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை எண்ணல் செல்லாவிகழ்ச்சியும் பிறவும் நண்ணுமென்ப நன்குணர்ந்தோரே

அச்சவவிநய மாயுங்காலை, ஒடுங்கியவுடம்பு நடுங்கிய நிலையும், அலங்கிய கண்ணும், கலங்கிய வுளனும், கரந்துவரலுடைமையுங் கையெதிர் மறுத்தலும் பரந்த நோக்கமு மிசை பண்பினவே

இழிப்பினவிநய மியம்புங் காலை, இடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலும், ஒடுங்கிய முகமு முஞற்றாக் காலும், சோர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம்பாமையும், நேர்ந்தன வென்ப நெறியறிந்தோரே

அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற், சொற்சோர்வுடையது சோர்ந்த கையது, மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தகவுடைய, தெய்திய திமைத்தலும், விழித்தலும் மகிவாதென் றையமில் புலவரறைந்தரென்ப

காம வவிநயங் கருதுங் காலைத், தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலும், காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு, மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு, மலர்ந்த முகனு மிரந்தமென கிளவியும், கலந்தன பிறவுங் கடைப்பிடித்தனரே

அவலத்தவிநய மறிவரக் கிளப்பிற், கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும், வாடிய நீரமையும், வருந்திய செலவும், பீடழியிடும்மையும் பிதற்றிய சொல்லும், நிறைகையழிதலும் நீர்மையில் கிளவியும், பொறையின்றா்கலும், புணர்த்தினர் புலவர்.

நகையினவியநய நாட்டுங்காலை, மிகைபடு நகையது பிறர் நகையுடையது. கோட்டிய முகத்து….. விட்டுமுரி புருவமொடு விலாவிறுப் புடையது. செய்வது பிறிதாய் வேறு சேதிப்பதென், றையமில் புலவராய்ந்தன ரென்ப

நாட்டுங்காலை நடுவுநிலை யவிநயம், கோட்பாடறியாக் கொள்கையு, மாட்சியு, மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும். பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும் குறிப்பின்றாகலுந் துணுக்க மில்லாத் தகைமிகவுடைமையுந் தண்ணென வுடைமையும்,அறத்தற் அருமையு மன்பொடு புணர்தலும், கலக்கமொடு புணர்ந்த நோக்கும் கதிர்ப்பும், விலக்காஅரன்ப வேண்டுமொழிப் புலவர்

உருத்திரச் சுவை அவிநயம்… அ:்.தாவது விறலென்பது…சத்துவ மென்பாருமுளர். அச்சத்துவந்தான் பத்து வகைப்படும். என்னை. மெய்ம்மயிர்

சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கமடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற் சிதைவு எனவிவை"[42] என்ற பகுதி அவிநயம் எனப்படும் சுவை பற்றிய விரிவான செய்திகளைத் தருவதாக உள்ளது. இதனடிப்படையில் விருத்திய உரையாக அமைவது அடியார்க்கு நல்லார் உரை என்பது தெளிவாகின்றது.

இதனைத்தொடர்ந்து அடியார்க்கு நல்லார் உரையில் அவிநயம் இருபத்து நான்கு வகைப்படும் என்று மேலும் விரித்துரைக்கப்பெறுகின்றது. அவ்வகை மட்டும் அவரின் விரிவுகாட்டலுக்கு இங்குச் சான்றாகத் தரப்பெறுகின்றது.

வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், மடியினவிநயம், களித்தோனவிநயம், உவந்தோனவிநயம், அழுக்காறுடையோனவிநயம், இன்பமுற்றோனவிநயம், தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், உடன்பட்டோனவிநயம், உறங்கினோனவிநயம், துயிலணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், வெயிற்றலைப் பட்டோனவிநயம், தலைநோவுற்றொனவிநயம், அழற்றிறம் பட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்த முற்றோனவிநயம், கண்ணோவுற்றோன் அவிநயம் என்ற நிலையில் அவிநயம் விரித்துரைக்கப்பெற்று, அவற்றிற்கான விளக்கங்களும் அடியார்க்கு நல்லாரால் தரப்பெற்றுள்ளன. இது அவரின் விரித்துரைக்கும் உரைப்பண்பினுக்குச் சான்றாகின்றது.

புல்லாங்குழல் பற்றிய செய்தி வரும் இடத்தில் குழல் பற்றிய செய்திகளை விரித்துரைக்கிறார் அடியார்க்கு நல்லார்.

“இதனுள் குழலென்றது வங்கியத்துப் பொதுப்பெயர். இஃது ஐந்து கூறப்படும்; அளவு ‘ஓங்கிய மூங்கில் …பார்த்து’ என்பன; நீளம் இருபது விரல், சுற்றளவு நாலரை விரல்: இது துளையிடுமிடத்து நெல்லரசியில் ஒரு பாதிமர நிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைக பண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்; என்னை? “சொல்லு மிதற்களவு…. வங்கியமென்? என்றாராகலின்; இனி வங்கியத்தின் துளையளவு: நீளம் இருபது விரல், இதிலே தூம்பு முகத்தின் இரண்டு விரல் நீக்கி முதல்வாய் விட்டு அம்முதல் வாய்க்கு ஏழு அங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு விரல் நீக்கி நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிடுக. இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து: நீக்கி நின்ற ஏழுனும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும். துளைகளின் பரப்பு ஒரு விரல் அகலம் கொள்ளுக; என்னை? இருவிரல்கணீக்கி…. வங்கியத்தின் கூற்று என்றாராகலின்; இனி வங்கியம் ஊதுமிடத்து வளைவாய் சேர்ந்த துளையை முத்திரையென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல் பற்றி வாசிக்க,

எழுவிரலாவன: இடக்கையிற் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும் வலக்கையிற் பெருவிரல் ஒழித்த நான்கு விரலும் ஆக ஏழும்; என்னை? வளைவாயருகொன்று…வைத்து என்றாராகலின்; இவ்வேழு துளைகளிலும் இசை பிறக்குமாறு: சரிகமபதநி என்னும் ஏழெழுத்தினும் பிறக்கும்; என்னை? சரிகமபதநி… சுத்தத் துளை என்றாராகலின்”[43] என்று முல்லையங் குழலோசை என்பதற்கு விரிவான உரை வழங்கியுள்ளார் அடியார்க்கு நல்லார். இவ்வுரைப்பகுதியின் வழி குழலின் நீளம், அகலம், துளை அமைக்கும் முறை முதலானவை தெரியவருகின்றன.

“புற்கலம் -உடம்பு. அப்புற்கலத்துக்கு முதலாயுள்ள பூதமாவன: மண், நீர், தீ, வளி, வான் என வினவ, என்னை? ‘மண்ணுட னீர் நெருப்புக் கால் வான மென்றிவைதாம், எண்ணி பூதங்களென்றறிந்து-நண்ணிய மன்னர்க்கு மண் கொடுத்து மாற்றார்க்கு விண் கொடுத்த தென்னவர் கோமானே தெளி”[44] என்ற பகுதியிலும் வினா விடை நடை அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு ஆங்காங்கே விரிவான உரை வழங்கி விருத்தியுரையாக தன் உரையை அமைத்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

இவரின் உரை இலக்கிய நலம் மிக்கதாகவும் உவமைகள் இணைந்ததாகவும் எதுகை மோனை நடை உடையதாகவும் காணப்பெறுகின்றது. அவற்றைப் பற்றிய செய்திகள் இனி தொடர்கின்றன.

இலக்கிய நடை

அடியார்க்கு நல்லார் உரையில் இலக்கிய நடை அமைந்து காணப்படுகிறது. அவர் காட்டியுள்ள உரைப்பாயிர உரைப்பகுதி குறிக்கத்தக்க இலக்கிய நடை உடைய பகுதியாகும். இதில் தமிழின் பெருமை, தமிழ் இலக்கணத்தின் பெருமை, காப்பிய வகைமையின் தன்மைகள் போன்ற பல கூறுகள் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

பொருள் இலக்கண வரையறை காட்டுதல்

தமிழின் பொருள் இலக்கண வரையறைகளை அடியார்க்கு நல்லார் பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார். “இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய: அவை திணை, பால், செய்யுள், நிலம் காலம், வழு, வழக்கு இடமென்பன. அவற்றுள் திணை இரண்டு: ஆவன: அகத்திணை, புறத்திணை என்பன. பால்

பதினான்கு: ஆவன: கைக்கிளை முதல் பெருந்திணை ஈறுவாய் ‘ஏழும் வெட்சி முதல் பாடாண்திணை இறுவாய் ஏழும்.

செய்யுள் அறுவகை ஆவன: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடற்பா, மருட்பா வென்பன. நிலன் நால்வகை ஆவன: முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென்பன. காலம் பன்னிரண்டு ஆவன. ‘சிறுபொழுது ஆறும், பெரும்பொழுதாறும், வழு பதினான்கு: ஆவன:அகத்திணை வழுவேழும், புறத்திணை வழுவேழும், வழக்கு இருவகை ஆவன. நாடக வழக்கு, உலகியல் வழக்கு மென்பன. இடம் இருவகை ஆவன: வழக்கிடமும் செய்யுளிடமும்”[45] என்ற அளவில் பொருள் இலக்கணப் பாகுபாடுகளைக் காட்டி நிற்கிறார் அடியார்க்கு நல்லார். இவற்றில் அடியார்க்கு நல்லார் இடம் என்பதை வழக்கிடம், செய்யுளிடம் என்று இரண்டாகக் காண்கிறார். நடையியலில் வழக்கு நடை, செய்யுள் நடை என்பது நடையின் வகைகளாகக் கொள்ளப்படுகிறது. அக்கண்ணோட்டத்திலேயே அடியார்க்கு நல்லார் உரை செய்துள்ளார் என்பது இங்குத் தெளிவாகின்றது.

ஐந்து நிலங்களின் இயல்புகளைக் காட்டல்

தொல்காப்பியர் காட்டிய முறைமையின்படி முல்லை தொடங்கி நிலத்தின் இயல்புகளை அடியார்க்கு நல்லார் காட்டி நிற்கிறார். ஒவ்வொரு நிலத்தின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றைக் காட்டி, அவை சிலப்பதிகாரத்தில் இடம் பெறச் செய்யப்பெற்றுள்ள முறைமையைக் காட்டி, தமிழ் மரபின்படி சிலப்பதிகாரம் உள்ளது என்பதைத் தன் உரை வழியாக உறுதிப் படுத்துகிறார் அடியார்க்கு நல்லார்.

“முல்லைத் திணை முதற்பொருள் காருமாலையும் முல்லை (தொல்.அகத்.6) என்பதனால் அகத்திணைக்குரிய பெரும்பொழுதும், சிறுபொழுதும் கொள்ளப்படும். பெரும்பொழுது ‘காரே வந்தது’ (26.118) என்பதனாற் காரும், சிறுபொழுது ‘மாலை நீயாயின்’ (7: பையுணோய்) என்பதனால் மாலையும் கூறினார். கருப்பொருள், தெய்வ முணாவே மாமரம், புள், பறை, செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ, அவ்வகை பிறவுங் கருவென மொழிப (தொல்.அகத்.18) என்பதனாலுணர்க. இந்நிலத்திற்குக் கருப்பொருள் ‘கன்ற குணிலாக் கனியுகுத்த மாயவன்’ (17, கன்று) என்பதனால் தெய்வமும், அளைவிலை யுணவின் (16.3) என்பதனால் உணாவும், ‘நீர் நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்’ (17:78) என்பதனால் மாவும், ‘கொல்லைப் புனத்துக் குருத்தொசித்தான்’ (17, செந்நிலை) என்பதனால் மரமும், கானவாரணங் கதிர் வர வியம்ப’ (13:37) என்பதனாற் புள்ளும், ஏறங் கோட்பறை என்பதனாற் பறையும் கோகுல மேய்த்து (17:கோவா) என்பதனாற் செய்தியும், குட முதல்…. வேண்டிய பெயரே (17:குடமுத) என்பதானல் முல்லையாழும், பண் முல்லைத்தீம் பாணியென்றாள் (17:செந்நிலை) என்பதனாற் சதாரியும் கூறினார். உரிப்பொருள் ‘புணர்தல், பிரிதலிருத்த லிரங்கல், ஊடலிவற்றினிமித்தமென்றிவை தேருங்காலை திணைக்குரி பொருளே (தொல்.அகத்.14) என்பதனாலுணர்க. ‘இருந்தேங்கி வாழ்வாருயிர்ப் புறத்தாய்’, ‘பேரருளி வீழல்’ (7.பிரிந்தார்) என்பவற்றால் இருத்தலும், இருத்தல் நிமித்தமும் கூறினார். பிறவுமென்றதனால் நிலமக்களும், நீர்நிலையும் வார்கொடியும் பூவும் கொள்ளப்படும். இவற்றுள் இளைஞர் சூழ் கோவலர் (164) என்பதனால் நிலமக்களும் புடைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று என்றதனால் வார்கொடியும், காயாமலர் மேனி (12:ஆய்பொன்னரி)

முல்லை நிகர் மலர் (9:12) என்பவற்றார் பூவும் கூறினார்."[46] என்று முல்லைத் திணை முதற், கரு, உரிப்பொருள்கள் சிலப்பதிகாரத்துள் பயன்படுத்தப் பெற்றுள்ளமையைக் காட்டுகிறார் அடியார்க்கு நல்லார். இவ்வாறு ஒவ்வொரு நிலத்திற்கும் முதல், உரி, கருப்பொருள்களின் இயல்புகளைக் காட்டுவதாக அவரின் உரை அமைந்துள்ளது.

பாலைக்கான முதற் கரு உரிப் பொருள்கள்

தொல்காப்பியர் பாலை என்ற நிலத்திற்கான இயல்புகளைக் காட்டவில்லை. அதனை நடுவணது திணை என்றே கொண்டுள்ளார். ஆனால் பாலைக்கான நிலத்து இயல்புகளை அடியார்க்கு நல்லார் விரித்துரைத்துள்ளார். இது அவர் உரை வழியாகக் கிடைக்கப்பெற்ற முக்கியமானக் குறிப்பாகும்.

"சொல்லிய முறையாற் சொல்லவும் படும் என்பதனாற் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென அருத்தாபத்தி கோடலானும், நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே (தொல்.அகத்.9) என்பதனானும், முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலையென்பதோர் படிவங் கொள்ளும், காலையெய்தினிர் (11:64-7) என்பதனானும் போந்த இப்பெற்றித்தாகிய பாலைத்திணை நில முதற்கொருள், பெரும்பொழுது வேனிற் கிழவனோடு வெங்கதிர்வேந்தன், தானலந்திருகித்தன்மையிற் குன்றி (11.62-3) என்பதனால் இருவகை வேனிலும், சிறுபொழுது 'படுங்கதிரமயம் பார்த்திருந்தோர்க்கு' (13:16) என்பதனால் நண்பகலும் கூறினார். கருப்பொருள். தெய்வம், ஆசிரியர் புலப்பட எடுத்தோதிற்றிலரேனும், 'கடுங்கதிர்திருகலின்' (12:4) எனவும், 'வெங்கதிர் வேந்தன் தானலந் திருகி' எனவும், ஐயைகோட்டத் தெய்யா வொருசிறை' (12:4)

எனவும், கொற்றவையுங் கொடுமரமுன் செல்லும்' (12:கள்விளையாட்டி) எனவும் கூறுதலானும், பிறவாற்றானும் பருதியஞ்செல்வனும், திகிரியஞ் செல்வியுமெனக்கொள்க, உணா. 'ஆரிடையத்தத் தியங்குந ரல்லது, மாரி வளம்பெறா வில்லேருழவர்' (11:209-10) என்பதனால், ஆறெறிந்ததும் சூறை கொண்டும் உண்ணும் உணவாம். மா. 'மானின்று விளிக்கும்' (11:78) என்பதனால் உழைமான் முதலியனவும், அலறுதலை மராமு முலறுதலையோமையும்' (11:75) என்தனால் மரமும், 'கான வாரணங் கதிர்வர வியம்ப' (13:37) என்பதனாற் புள்ளும், 'துண்ணென் றுடியொடு' (12:துண்ணேன்) என்பதனாற் பறையும், 'பொருள் கொண்டு புண்செயின்' (12.பொருள்) என்பதனாற் செய்தியும், 'செந்திறம் புரிந்த செங்கோட்டியாழ்' (13:106) என்தனால் யாழும், பண் 'ஆசான்றிறத்தின்' (13:192) என்பதனாற் காந்தாரபஞ்சமும் கூறினார்."[47] என்ற நிலையில் தொல்காப்பியர் சுட்டாத, ஆனால் இளங்கோவடிகள் காட்டிய முறையில் பாலை நிலத்திற்கான அமைப்பினை வைத்துக்கொண்டு அந்நிலத்திற்கான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை வடிவமைத்துத் தருகிறார் அடியார்க்கு நல்லார். அடியார்க்கு நல்லார் இவ்வகையில் பாலை நிலத்தின் முதல், கரு, உரிப் பொருள் ஆகியவற்றை எடுத்துரைத்த முதல்வர் என்பதை இங்கு முக்கியமாக குறிக்க வேண்டும். இவ்வகையில் உரையாசிரியர் என்ற நிலையில் இருந்து இலக்கணமில்லாததற்கு இலக்கணம் வகுக்கும் உயர்நிலை பெற்றவராக அடியார்க்கு நல்லார் விளங்குகிறார்.

உடம்பும், ஐம்பூதச் சேர்க்கையும்

அரங்கேற்றுக் காதையில், புற்கலம் என்பதை விளக்க வந்த அடியார்க்கு நல்லார் அவ்வுரைப்பகுதியில் உடம்பு, ஐம்பூதச் சேர்க்கை குறித்து விளக்கம் தருகிறார்.

“பூதங்களனைத்தும் தத்தம் தன்மை நீங்கி மண் உடம்பாயும் நீர் வாயாகவும் தீக் கண்ணாயும் காற்று மூக்காயும் ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம். பொறிகள்தோறும் வினியோகப்பட்ட புலன் சுவை முதல் ஐந்து வகைப்படும். இவ்வைந்தும் பொற்றியைந்தினுமேறி, மண்ணால் உடம்பு ஊறாயும் நீரால் வாய் சுவையாயும் ஸ்ரீ தீயாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்கு நாற்றாமாயும் வானாற் செவி ஓசையாயும் வந்து உடம்பாம். அன்றியும் மண்ணின் பகுதி நரம்பு இறைச்சி என்பு மயிர் தோலென ஐந்து, நீரின்பகுதி, நீர், மூளை, சுக்கிலம், நிணம் உதிரமென வைந்து”[48] என்ற நிலையில் உடலின் கூறுகளை விரித்துரைக்கிறார் அடியார்க்கு நல்லார். இதன்வழி உடலியக்கம் பற்றிய செய்திகளும் அடியார்க்கு நல்லாரால் அறிந்து கொள்ளப்பெற்றுள்ளது என்பதை உணர முடிகின்றது. இவ்வாறு செய்யுள் வழக்கிற்கு உரிய நிலையில் இலக்கியத் தரமாக தன் உரையை வழங்குகின்றார் அடியார்க்கு நல்லார்.

உவமைகளுடனான நடை

அடியார்க்கு நல்லார் தன் உரையுள் உவமைகளையும் அமைத்து உரை செய்துள்ளார். இதற்குப் பின்வரும் பகுதிகள் சான்றாகின்றன. துறவறத்தைப் பற்றி அடியார்க்கு நல்லார் தம் உரையில் விரிக்கும் நேரத்தில் உவமையொன்றைக் கையாள்கிறார்.

இனித் துறவறமாவது "நாகம் தோலுரித்தாற்போல அகப்பற்றும், புறப்பற்றுமற்று இந்திரிய வசமறுத்து முற்றத்துறத்தல்"[49] என்ற பகுதியில் உவமை அடியார்க்கு நல்லாரால் கையாளப்பெற்றுள்ளது. அதிலும் பாம்பு தன் தோலை உரித்துக்கொள்வது போல, அகப்பற்றையும், புறப்பற்றையும், இந்திரிய இன்பங்களையும் உரித்துக்கொள்ளும் நிலைப்பாடு துறவறத்திற்கானது என்று இவ்வுவமை வாயிலாகக் காட்டுகிறார்.

இதுபோன்று சத்துவம் என்பதை விளக்குவதற்கும் அடியார்க்கு நல்லார் உவமை ஒன்றினைக் கையாள்கிறார். "சத்துவமாவது – குறிப்பு வரையறை. ஆவது சுத்தச் சுவையாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய் வருவதெனக் கொள்க. என்னை வேம்பென்று காட்டப் புக்கால், அவ்வேம்பின் இரதங் காட்டாதே அதுதான் தின்றவனுக்கு மெய்யின்கண் வருவது"[50] என்ற நிலையில் வேம்பினை உவமையாகக் கையாள்கிறார் அடியார்க்கு நல்லார்.

மாணவன், ஆசிரியன் ஆகிய இருவரையும் உவமையாக்கும் அடியார்க்கு நல்லாரின் உரைத் திறன் பின்வருமாறு. "இப்பூதங்களைத் தானும் புற்கலமாம் என்ற ஆசானை மாணக்கன் பணிந்து பூதங்கள் தாம் ஒன்றோடொன்று கூடுவனவல்ல"[51] என்று ஆசானை புற்கலமாகவும், மாணவனை பூதங்களாகவும் கொண்டு உவமை செய்துள்ளார் அடியார்க்கு நல்லார். இவ்வாறு உரையினை இலக்கிய இன்பம் கொள்ளும் வண்ணம் அடியார்க்கு நல்லார் உரை வரைந்துள்ளார் என முடிய முடிகின்றது.

உரைக்கு உரை

நடையியலில் இலக்கிய நடை, வழக்கு நடை என்ற இரு பெரும் பிரிவுகள் உண்டு. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகைப்பாடு உடையதாக இருக்கும்.

சிலப்பதிகாரத்தில் செய்யுள் நடை, உரை நடை என்று இருபகுதிகள் உண்டு. காதைகள் அனைத்தும் செய்யுள் நடையில் அமைய, உரை பெறு கட்டுரை, உரைப்பாட்டுமடை, கருப்பம், கட்டுரை, நூற் கட்டுரை போன்ற பகுதிகள் உரைநடையில் அமைகின்றன. இவ்வுரைப் பகுதிகளுக்கும் உரை கணடுள்ளார் அடியார்க்கு நல்லார். குறிப்பாக அவர் உரை பெறு கட்டுரை பகுதிக்கு கண்ட உரை இங்கு உரைக்கு உரையாக இனம் காணப்படுகிறது.

“அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி வெப்புநோயும், றுகுருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய சாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது”[52] என்ற பகுதி உரைபெறு கட்டுரைப் பகுதியாகும்.

இதற்கு, “அன்றென்றது கதையை உட்கொண்டு நின்றது. வெள்வாளெறிந்தவன் விலங்கூடறுத்தது. புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப, மண்ணக மடந்தை வான்றுயர் கூரக் காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன் கோவலன்”[53] என்று உரை வரைகிறார் அடியார்க்கு நல்லார்.

“பாண்டியனாடு அன்று தொடங்கி மழைவறத்தன் மிக்கு அதனானே வறுமையுற்றுத் தொழு நோயும் குருவும் இடைவிடாது நலிதலிற் கொற்கைகண்

இருந்த இளஞ்செழியன் நங்கைக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற் சாந்தி செய்து விழவெடுத்தலானே அவன் நாடு மிகவும் மழை பெய்து முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கிற்று"[54] என்ற நிலையில் உரைக்கு உரை வரைகிறார் அடியார்க்கு நல்லார். இது இவரின் வழக்கு நடைக்கு உரிய எடுத்துக்காட்டாகும்.

"அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழில் என்றும் மாறாதாயிற்று என்ற பகுதிக்கு, "அங்ஙனம் செழியன் நன்மை செய்து அவை நீங்குதலின் அதனைக் கேட்டுக் கொங்கு மண்டிலத்து இளங்கோவாகிய கோசரும் நங்கைக்கு அங்ஙனம் சாந்தியும் விழவும் செய்தலான் அவை நீங்குதலோடே மழை பெய்தற்றொழில் பெய்யு நாள் என்று வழுவாதாயிற்று."[55] என்ற பகுதி உரைக்கு உரையாக அமையும் பகுதியாகும். இவ்வாறு செய்யுள் நடை, வழக்கு நடை இரண்டிற்கும் உரை காணும் இயல்பு அடியார்க்கு நல்லாரிடம் காணப்பெறுகின்றது.

ஆய்ச்சியர் குரவையில் கருப்பம் என்ற பகுதி உள்ளது. இதுவும் உரைப்பகுதியாக உள்ளது. 'குடத்துப்பா லுறையாமையும் குவியிமி லேற்றின் மடக்கண்ணீர் சோர்தலும் உறியில் வெண்ணெ யுருகாமையும் மறி முடங்கியாடாமையும் மான்மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளை நோக்கி மனமயங்காதே மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியுந்தான்காண ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல் நெடுங்கண் பிஞ்ஞையோ டாடிய குரவை யாடுதும் யாமென்றாள் கறவை கன்று துயர் நீங்குகவெனவே' (சிலப்.17:கருப்பம்) என்ற பகுதி கருப்பம் என்ற பகுதியாகச் சிலப்பதிகாரத்தில் தரப்பெற்றுள்ளது.

இதற்கு அடியார்க்கு நல்லார் பின்வருமாறு உரை செய்கின்றார். “நாம் பிரையிட்ட நாழிகளிற் பாலும் தோயா தொழிந்தன. அதுவுமன்றி நமுத நிரையுள் திரண்ட முரிப்பையுடைய விடையின் கண்களும் நீர் உகா நின்றன. இவை இங்ஙனமாதலின் நமக்கு வருவதோர் உற்பாதமுண்டென்றாளென்க.

அங்ஙனம் பால் உறையாமையின் முதல் நாளை வெண்ணெய் உருக வைத்தனவும் உருகுகின்றவில்லை: அதுவுமன்றி ஆட்டு மறிகளும் துள்ளி விளையாடா. குழைந்து கிடக்கும். ஆதலான் நமக்கு வருவதோர் உற்பாதம் முண்டென்றாளென்க.

நாலு முலையையுடைய பசுத்திரள் மெய் நடுங்கி நின்று அரற்றும் அதுவுமன்றிப் பசுக்களின் கழுத்திற் பெரியமணிகளும் வீழா நின்றன. ஆதலான் நமக்கு வருவதோர் உற்பாதமுண்டென்றாளென்க.

உறையாமையானும், சோர்தலானும், உருகாமையானும், ஆடாமையானும் வீழ்தலானும் வருவதொரு துன்பமுண்டென்று சொல்லி மகள் முகத்தை நோக்கி அஞ்சாதொழி. முன்னர் ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவன் தமையனனோடாடிய பால சரித நாடகங்கள் பலவுள. அவற்றுள் வேல் போல் நெடிய கண்ணையுடைய பிஞ்ஞையோடாடிய குரவை நாடகத்தை மண்ணின் மாதர்க்கெல்லாம் அணிகலாமாகிய இக்கண்ணகியும் கண்டு நிற்க யாம் ஆடக்கடவேம். இக்கறவையும் கன்றும் பிணிநீங்குக என்றாளென்க”[56] என்ற பகுதியில் வழக்கு நடையில் உரை செய்யப்பெற்றுள்ளது. அதாவது என்றாளென்க என்ற முடிபு சொன்ன வழக்கு நடையை சொல்வதாக உள்ளது. இவ்வாறாக வழக்கு நடைக்கும் உரை கண்டு தன் நடையியல் திறத்தை வெளிப்படுத்தியுள்ளார் அடியார்க்கு நல்லார்.

முடிவுகளைக் காட்டும் நடை

தேர்ந்த முடிவுகளைக் காட்டும் உரையாக அடியார்க்கு நல்லார் உரை அமைகின்றது. சிலப்பதிகாரம் காதையா, காப்பியமா என்ற விவாதத்தை ஏற்படுத்தி, அவ்விவாதத்திற்கான முடிவினைப் பின்வருமாறு அறிவிக்கிறார் அடியார்க்கு நல்லார்.

காதை அன்று காப்பியம்

இனி இதன் செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையையுடையது காதையாமாகலின், "ஆசிரியம், வெண்பா, வெண்கலிப்பா, என்றும் இவற்றோடு சிறுபான்மையான் ஒரு சார் கொச்சக கலி மயங்கி வருவதானும், காண்டமெனக் குறி பெறுதலானும் இதனைக் கதையென்றல் வலியுடைத்தென்பார்க்கு அற்றன்று. கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது. என்னை? 'கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானும் கொண்டான் (சீவக.2144) என்றமையானும் வழக்கினுள்ளும் இஃது கதையென்பவாகலானும் நாடகக் காப்பியம் (மணி.19,80) என்றலானும் கதையென்பது அல்லது இனி, அது நல்ல புலவராற் பொருளொடு புணராப் பொய்ம்மொழியால் நாட்டப்பட்டு வருவதாகலின் இஃது அவ்வாறன்றி யோனியென்னும் நாடகவுறுப்பும் நாடகமும் தழுவி, உள்ளோன் தலைவனாக உள்ளதொரு பொருள் மேற் சித்தரிகப்படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டான் வருதலின் ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்"[57] என்று சிலப்பதிகாரம் காதையா, காப்பியமா என்ற விவாதத்தினைத் தொடங்கி வைத்து அதனைப் பல சான்றுகள் கொண்டு காப்பியம் என்றே முடிக்கிறார் அடியார்க்கு நல்லார்.

தமிழ் உணர்வு சார்ந்த நடை

இவ்வாறு அடியார்க்கு நல்லாரின் உரையானது விருத்தி உரையாக அமைந்து, இலக்கிய உரையாக வளர்ந்து, வழக்கு நடைக்கும் உரை கண்டு நிற்கிறது. அடியார்க்கு நல்லார் ஆங்காங்கே தமிழின் சிறப்புகளையும், அதன் இலக்கிய வளங்களையும் உரைக்குள் தந்து தமிழின் பெருமையை எடுத்துரைக்கிறார். தமிழில் இருந்த நாடக நூல்களின் பெருக்கத்தை அவரின் உரையே வெளிப்படுத்தி நிற்கிறது.

“இனி தேவயிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி யென்னும் அருந்தவ முனி, இடைச்சங்கத்து அநாகுலனென்னும் தெய்வப் பாண்டியன் தேரோடு விசும்பு செல்வோன் திலோத்தமை யென்னும் தெய்வமகளைக் கண்டு, தேரிற் கூடினவிடத்து, சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியா நிற்கத் தோன்றினமையான் சார குமாரனென அப்பெயர் பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும், பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவானர் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பாரத சேனாபதீயமும், கடைச்சங்கமிரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் இயன்ற மதிவாணர் நாடகத் தமிழ் நூலுமென இவ்வைந்தும், இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒரு புடை யொப்புமை கொண்டு முடித்தலை கருதிற்று இவ்வுரையெனக் கொள்க”[58] என்ற உரைப் பகுதியில் தமிழில் எழுந்து மறைந்த நாடக நூல்களின் பட்டியலை, அதிலும் அவை எழுந்த இடைச்சங்க, கடைச்சங்க கால எல்லையில் வைத்துக் காட்டுகிறார் அடியார்க்கு நல்லார். இதன்வழி இவரின் தமிழ்ப் பெருமை காட்டும் உரை நலம் தெரியவருகிறது.

மேலும் இவரின் உரை வழியாக பல இசைத்தமிழ் நூல்களும் அறியப்பெறுகின்றன. “இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகும், பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலா உள்ள தொன்னூல்கள் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், என்பனவற்றுள் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு, இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும். இறக்கவே வரும் பெருங்கல முதலிய பிறவுமாம். இவற்றுட் பெருங்கலமாவது பேரியாழ், அது கோட்டினதளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவ பன்னிரு சானும், இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும் திவவும் உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்து இயல்வது என்னை? ஆயிர நரம்பிற் றாதியாழாகும். ஏனையுறுப்பு மொப்பன கொளலே, பத்தரதளவுங் கோட்டினதளவும் ஒத்தவென்ப விருமூன்றிரட்டி வணர் சாயொழித்தென வைத்தனர் புலவர் என நூலுள்ளும் தலமுதலூழியிற்றானவர் தருக்கறப் புலமகளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச் செலவு முறை யெல்லாஞ் செய்கையிறெரிந்து மற்றையாம் கற்றுமுறை பிழையான் (4:3:51-5) எனக் கதையினுள்ளும் கூறினாராகலின் பேரியாழ் முதலியனவும் இறந்தனவெனக் கொள்க”[59] என்று இசைத்தமிழ் நூல்கள் பற்றித் தனக்குக் கிடைத்த பெயர்களை வரிசையாகத் தந்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

இதன் காரணமாக தமிழ் இசைத் துறையிலும், நாடகத் துறையிலும் சிறந்து விளங்கியமை தெரியவருகிறது. இவ்வாறு தமிழ் உணர்வு மிக்க உரையாக அடியார்க்கு நல்லார் உரை அமைகின்றது.

பெருமழைப்புலவரின் நடைத்திறம்

பெருமழைப் புலவரின் உரையானது விருத்தியுரையாகும். இது கருத்து, பதப்பொருள், வினாவிடை, தொகுத்துரை இவற்றுடன் வேண்டிய இடங்களில் விரிவினைக் காட்டி நிற்கும் உரையாக விளங்குகின்றது. குறிப்பாக பெருமழைப் புலவரின் நடை என்பது தற்காலத் தமிழ் நடை சார்ந்ததாக அமைகிறது. அடியார்க்கு நல்லார், அரும்பத உரைகாரர் ஆகியோர் முறையே பெருமழைப்புலவரின் உரையில் காணப்படும் விருத்தியுரைப் பண்புகளையும், அவரின் நடைச் சிறப்புகளையும் இப்பகுதி எடுத்துரைக்கிறது.

விருத்தியுரை

காண்டிகை உரைக் கூறுகளான கருத்து, பதப்பொருள், வினாவிடை நடை போன்றன விருத்தியுரைக்கும் பொருந்துவனவாகும். எனவே கருத்து, பதப்பொருள், வினாவிடை போன்ற உரைப் பண்புகள் பெருமழைப் புலவரின் உரையில் அமைந்துள்ள நிலையை இப்பகுதி காட்டிநிற்கிறது.

கருத்துரை

பெருமழைப்புலவர் சிலப்பதிகாரக் காதைகளுக்கு உரை வழங்கும்முன் அணிந்துரை என்ற பகுதியில் கருத்துரைகள் பலவற்றை வழங்குகிறார். இவை காப்பியத்திற்குள் நுழைபவர்களுக்கு ஒரு தகுதியான முன்னுரையாக அமைகின்றன.

இரட்டைக் காப்பியங்கள்

பெருமழைப் புலவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதப் புகுவதற்கு முன்னால், புகார்க்காண்டத்தில் அணிந்துரை ஒன்றினைச் செய்கிறார்.

இவ்வணிந்துரையில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று கருத்துரைக்கிறார்.

“இவ்வைம் பெருங்காப்பியங்களுள்ளும் முன்னின்ற சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகிய இரண்டு காவியங்களுமே தமிழ் நாட்டு வரலாறு தழுவிய காப்பியங்களாம். மேலும் இவ்விரண்டு காவியங்களும் கூர்ந்து நோக்கின் ஒரு காவியத்தின் இரண்டு பகுதிகளே என்பதும் புலனாகும். இவை, இரு பெரும் புலவர்களாலே தனித்தனியே இயற்றப்பட்டிருத்தலால் இரண்டு காவியங்களாகக் கருதப்பட்டன. இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என்பதுமுண்டு. என்னை? ஒரு தாயினது ஒரே கருவின்கண் உருவாகிப் பிறக்குங்கால் ஒன்றன்பின் ஒன்றாகப் பிறந்த இரட்டைப் பிள்ளைகளையே இக்காவியங்கள் ஒக்கின்றன ஆதலின் இவற்றை அங்ஙனம் குறிப்பிடுவது பொருத்தமேயாம்”[60] என்று அடியார்க்குநல்லார் கருதிய இரட்டைக் காப்பியம் என்ற கருத்தையே இவரும் வழி மொழிகின்றார். இதனடிப்படையில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கதைத்தொடர்பும், களத்தொடர்பும், பாத்திரத்தொடர்பும் பெற்றுள்ளன என்பது இங்குக் கொள்ளத்தக்கது.

சிலப்பதிகாரம் தோன்றிய காலம்

சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலம் சங்க காலமா அல்லது அதற்குப் பிற்பட்ட காலமா என்ற விவாதத்தினை எழுப்பி அதற்கு உரிய சான்றுகள் கொண்டு தீர்வு காண்கிறார் பெருமழைப் புலவர். “சங்க காலத்துப் புலவராகிய பரணராற் பாடப்பட்ட சேரன் செங்குட்டுவன் தம்பியே இந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள். ஆகவே சிலப்பதிகாரம் சங்க காலத்து நூல் என்பது தேற்றம் என்பார் ஒரு சாரார். இனி மற்றொரு சாரார் இச்சிலப்பதிகாரம்

சொல்லமைதியாலும், பொருளமைதியாலும் சங்க நூல்களினின்றும் பெரிதும் மாறுபடுகின்றது. ஆதலால் இது சங்ககாலத்து நூலன்று. பிற்பட்டதொரு காலத்தே தோன்றிய நூலென்றே கொள்ளல் வேண்டும் என்பர்."[61]

சிலப்பதிகாரம் எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பெற்றிருக்க வேண்டும் என்று ச.வையாபுரிப்பிள்ளை, சர்.ஆர்,கே. சண்முகம் செட்டியா் ஆகியோர் கருதினர். இவர்தம் கருத்துகளை பெருமழைப்புலவர் தம் அணிந்துரையில் காட்டியுள்ளார். இவ்வாறு சங்க காலத்து நூல் என்று ஒரு சாராரும், எட்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்று ஒரு சாராரும் கருத பெருமழைப்புலவர் இக்காலங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் சிலப்பதிகாரம் தோன்றியிருக்க வேண்டும் என்று கருத்துரைக்கிறார்.

"இதுகாறும் கூறியவற்றால் இச்சிலப்பதிகாரம் சங்ககாலத்திற்கும் தேவார காலத்திற்கும் இடைப்பட்டதொரு காலத்தே தோன்றிய நூல் என்பது பெறப்படும். இக்காலத்திலே தான் சமண சமயத் தலைவர்களும் புத்த சமயத் தலைவர்களும் பெரிதும் முயன்று தத்தம் சமயத்தைப் பரப்பிய காலமாகும். இக்காலத்திலேதான் ஐம்பெருங்காப்பியங்களும், பிறந்தன. ஆதலால் இக்காலத்தைக் காப்பிய காலம் என்னலாம். இக்காப்பியங்களினும் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே முதலிற் பிறந்தன என்று கொள்க"[62] என்று காப்பிய காலத்தில் தோன்றிய நூலாக சிலப்பதிகாரத்தைக் காட்டுகிறார் பெருமழைப்புலவர்.

மதுரைக்காண்டத்தில் கருத்துரை

மதுரைக்காண்டத்தினை எழுதுவதற்கு முன் தரப்பெற்றுள்ள அணிந்துரையில் அக்காண்டத்தின் காதைப் பொருள்கள் சுருக்கமாகத்

தரப்பெற்றுள்ளன. இதன்வழி காதை குறித்தான கருத்துரைகளைப் பெறமுடிகின்றது. இதுவும் கருத்துரைத்தல் என்ற உரைப்பண்பினுக்கு சான்றாக விளங்குகின்றது. வேட்டுவவரி பற்றிய கருத்துரைச் சுருக்கம் பின்வருமாறு.

“இங்ஙனமே வேட்டுவவரி என்னும் பகுதிதானும் இலக்கிய நலம் கெழுமிய பகுதியாகவே திகழ்கின்றது. போர்க்களம் புகும் மறவர் வணங்கி வழிபடும் தெய்வம் கொற்றவை என்னும் தெய்வமாகும். கண்ணகி முதலியோர் அந்த மறவர் தெய்வத்தை வணங்குதற் பொருட்டு அத்தெய்வத் திருக்கோயிலில் புக்கவரல்லர். வாளாது வெயிற் கொதுங்கி இளைப்பாறும் பொருட்டே அவர் அத்திருக்கோயிலிற் புகுந்து ஒரு பக்கத்தே இருந்தனர். இருந்துழி தேவராட்டியாகிய முழங்குவாய்ச் சாலினி மேல் அம்மறத்தெய்வம் ஏறித் தனது திருக்கோயிலின்கண் அழையா விருந்தாக வந்து “கணவனோடிருந்த கண்ணகியைக் கண்டு பெரிதும் மகிழ்ந்து அவளை வேடர்களுக்குச் சுட்டிக் காட்டி மடவீரே! ஈண்டிருக்கின்ற இந்நங்கையை நீவிர் யாரென விருக்கிறீர்!

இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி

தென்றமிழ்ப்பாவை செய்த தவக்கொழுந்து

ஒருமா மணியா யுலகிற் கோங்கிய

திருமாமணி

என்று அறிமுகப் படுத்தி மகிழ்கிறது.”[63] என்றவாறு நிகழ்ச்சிக் கருத்துரை வழங்குகிறார் பெருமழைப்புலவர்.

காதை முன்பகுதியில் காணப்படும் கருத்துரை

ஒவ்வொரு காதையின் மூலப் பகுதி தொடங்குவதற்கு முன்பாக அக்காதை பற்றிய கருத்துரையை வழங்குவது பெருமழைப்புலவரின் உரை இயல்பாக உள்ளது. வழக்குரைகாதைக்கு முன்பகுதியாக அமையும் கருத்துரைபின்வருமாறு.

“அஃதாவது- கண்ணகியார் சீற்றத்துடன் சென்று தம் வருகையை வாயில் காவலர்க்கு அறிவிப்ப அவரது சீற்றங் கண்டு வாயில் காவலர் அஞ்சி விரைந்தோடி அரசனுக்கு அறிவித்து அவன் பணித்த படியே கண்ணகியை அரசன்முன் அழைத்துப் போதலும், கண்ணகியார் அம்மன்னன் அவைக்களத்தேறிச் சீறி நின்று வழக்குரைத்தலும் அதன் விளைவுகளும் கூறும் பகுதி என்றவாறு”[64] என்பது வழக்குரைகாதையின் முன்பகுதியில் அமைந்து கருத்துரையாகும். இதில் வழக்குரைகாதையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு காதைக்கும் முன்பகுதியில் கருத்துரை அமைப்பது பெருமழைப் புலவரின் உரைத்திறமாக உள்ளது.

காதையின் பின்பகுதியில் காணப்படும் கருத்துரை

சில காதைகளின் பின்பகுதியில் அக்காதைகளைச் சுருக்கிக் கருத்துரையாக வழங்கும் உரை முறைமையும் பெருமழைப்புலவரிடத்தில் காணப்படுகின்றது.

“இனி இதனை மாநகர் கண்டு பொழிலிடம் புகுந்து கோவலன் கூறுழி, மாடலன் என்போன் புகுந்தோன் றன்னைக் கோவலன் வணங்க, அந்தணன் உரைப்போன் கருணை மறவ, செல்லாச் செல்வ, இல்லோர் செம்மல், உம்மைப்

பயன் கொல்? போந்தது நீயென வினவ கோவலன் கனவு கண்டேன் கடிதீங்குறும் என, இங்கு ஒழிக நின் இருப்பு, மதுரை மாநகர் புகுக என, மாதவத்தாட்டியும் மாமறை முதல்வனும் கூறுங்காலை மாதரி என்போள் ஐயையைக் கண்டு அடி தொழலும், எண்ணினளாகி, அடைக்கலம் சிறிதாயினும் பேரின்பம் தரும், அது கேளாய், பட்டினந் தன்னுள் சாரணர் முன் குரங்கின் கையொரு பாகத்து வானவன் வந்து நின்றோன் யாது இவன் வரவு என, இறையோன் தேவகுமரன் தோன்றினன் என்றலும் அறந்தலைப்பட்டோர் முடிவுலகெய்தினர். கேட்டனையாயின் நீ போ கென்று கவுந்தி கூற நங்கையொடு கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்து, மனை புக்கனள் என முடிக்க"[65] என்பது அடைக்கலக் காதையின் பின்னால் உரைக்கப்பெறும் கருத்துரையாகும்.

அழற்படு காதையின் முடிவிலும் இதுபோன்ற கருத்துரை அமைந்துள்ளது. "இக்காதைக்கண் திருமா பத்தினியாலே தீயூட்டப்பெற்ற மதுரை நகரத்தே அத்தீயினாலே ஆங்குத் தீயோர்தம் இருப்பிடங்கள் மட்டுமே அழிக்கப்பட்டன. தீயினால் யாதோர் உயிரும் அழிக்கப்படவில்லை என்பது இக்காதையை ஓதுவோரனைவரும் உணர்தல் கூடும். கண்ணகியின் சீற்றம் அரசியில் பிழைத்த பாண்டியன் நெடுஞ்செழியன் இறப்பிற்கு ஒரு துணைக் காரணமாம் அத்துணையே அன்றி வேறில்லை. அவர்தம் சீற்றம் பிறிதோர் உயிர்க்கும் தீங்கிழையாமை குறிக்கொண்டு உணரற்பாலதாம். மதுரையை எரியூட்டியது அவர்தம் கற்புடைமையின் வெற்றிக்கோர் அறிகுறியாம் துணையாம் என்றுணர்ந்து கொள்க"[66] என்ற கருத்துரை அழற்படுகாதையினைப் படிப்பவர்க்கு ஒரு தெளிவினைத் தரும்.

வஞ்சிக்காண்டத்தின் தேவை பற்றிய கருத்துரை

வஞ்சிக்காண்டத்திற்குப் பெருமழைப் புலவர் வரைந்த அணிந்துரைப் பகுதியில் வஞ்சிக்காண்டத்தின் தேவை பற்றிக் கருத்துரைத்துள்ளார். “அடிகளார் இக்காப்பியஞ் செய்தற்கு முதலாக அமைந்த அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல் முதலிய மூன்று கருப்பொருள்களும் புகார்க்காண்டமும், மதுரைக்காண்டமும் ஆகிய இரண்டு காண்டங்களிலேயே சிறிதும் எஞ்சாமல் முற்றுப் பெற்று விட்டன. இந்த இரண்டு காண்டங்களோடு இக்காப்பியத்தை முடித்திருந்தாலும் சிலப்பதிகாரம் என்னும் இககாப்பியத்திற்கு யாதும் குறைவில்லை. அங்ஙனமாயினும் அடிகளார் குறிக்கொண்ட குறிக்கோள் அனைத்தையும் முன்னிரண்டு காண்டங்களிலே அமையாவாயின. பண்டைத் தமிழருடைய அகம், புறம் என்னும் பொருணெறிமரபிலே அகப்பொருள் சுட்டியொருவர் பெயர் கூறப்படாமல் பொதுவாகவே பாடப்படுதல் வேண்டும். அவ்வகப் பொருளை அடிகளார் புகார்க்காண்டத்திலே கானல் வரியிலே பாடியிருக்கின்ற அகப்பொருள் பனுவல் போன்ற சுவை கெழுமிய பாடல்கள் அவருக்கு முந்திய சங்க நூல்களினும் இல்லை என்றே யாம் துணிந்து கூறுவேம். பொருணெறி மரபிற் பின்னின்ற ‘புறப்பொருள்’ மாண்பு முன்னைய காண்டங்களிலே நன்கு அமையவில்லை. செந்தமிழ் நாட்டு மூவேந்தருடைய மறச் சிறப்பிற்கு மட்டுமே ஒரு காண்டம் வேண்டும் என்று அடிகளார் கருதினார் என்பதில் ஐயமில்லை. பண்டைத் தமிழருடைய மறச் சிறப்பெல்லாம் இறுதியினின்ற வஞ்சிக் காண்டத்திலேதான் நன்கு விளக்கப்படுகின்றன”[67] என்னும் அடிப்படையில் சிலப்பதிகாரத்திற்கு வஞ்சிக்காண்டம் இன்றியமையாதது என்பதைக் காட்டுகிறார் பெருமழைப்புலவர்.

இவைதவிர நுணுக்கமான செய்திகளையும் கருத்துரையாக வழங்குபவராக பெருமழைப்புலவர் விளங்குகின்றார். சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையில்

நடன அரங்கில் இருந்த திரைச் சீலைகள் பற்றிய கருத்துரை பின்வருமாறு. “ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்பன திரைச்சீலைகளின் வகை. இவற்றுள் ‘ஒருமுக எழினி’ என்பது இடத்தூணிடத்தே தூங்கவிடப்பட்டுக் கயிற்றை உருவியவழி வலத்தூண் காறுஞ் சென்று மறைப்பது என்றும், ‘பொருமுக எழினி’ என்பது வலத்தூண்கள் இரண்டின் மருங்கும் தூங்கவிடப்பட்ட இரண்டு திரைகள் என்றும், இவை உருவிய வழி இரண்டு பக்கலினுமிருந்து வந்து நடுவண் ஒன்றனோடுடொன்று இணையும் என்பதும் ‘கரந்துவரல் எழினி’ என்பது கூத்தர் அவையோர்க்குப் புலப்படாமல் மறைந்து நின்று அமரர்கள் பேசுமாறு பேசுதற்கமைந்த திரைச்சீலை என்றும் பழையவுரையாசிரியர்கள் உரைகளால் ஊகிக்கலாம்.”[68] என்ற பகுதியில் திரைச் சீலைகள் பற்றிய செய்திகளைக் கருத்துரையாகத் தந்துள்ளார் பெருமழைப்புலவர்.

மேலும் கடவுளர் பற்றிய செய்திகளையும் கருத்துரையாக வழங்கும் நிலை பெருமழைப்புலவரிடம் காணப்பெறுகின்றது. இந்திரனுக்கு விழா எடுக்கும்போது பிற தெய்வங்களுக்கும் விழா நிகழ்த்தப்பெற்றுள்ளது. இதனை இளங்கோவடிகளின் வழி நின்று கருத்துரையாக வழங்கியுள்ளார் பெருமழைப்புலவர்.

“ஆறுமுகச் செவ்வேள் கோயில் - தமிழ்நாட்டுக் குறிஞ்சித் திணைத் தெய்வமாகிய முருகன் கோயில். இத்தெய்வம் கடவுள் என்னும் பொருளுடையதாய் முருகு என வழங்கப்பட்டு, பின்னர் ஆண்பால் விகுதி பெற்று முருகன் என்றாகி வடவர் புராணத்திற் கூறப்படும் கந்தனும் இதுவும் ஒரு தெய்வம் என்று கொள்ளப்பட்டு வடவர் புராணங்கூறும் ஆறுமுகம் முதலிய

உருவத்தைப் பெற்றுளது என்று தோன்றுகின்றது. இத்தெய்வமே தமிழகத்தார் தனிப்பெருங்கடவுள் ஆகும்.

வாலியோன்-வெண்ணிறமுடையோன் என்னும் காரணத்தால் வந்த பெயர். நீலமேனி நெடியோன் - திருமால். இத்தெய்வம் முல்லைத்திணைத் தெய்வம். ஆசிரியர் தொல்காப்பியனாரும் இந்திரனை 'வேந்தன்' என்று குறியீடு செய்தலறிக.

மாமுது முதல்வன் என்றது, பிரமதேவனை சிவபெருமான் என்பாருமுளர். நான்மறை இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்ப. தீமுறை –வேள்வி நால்வகைத்தேவர்-முப்பத்துமூவர், அவராவார். (1) வசுக்கள் எண்மர், (2) திவாகரர் பன்னிருவர், (3) உருத்திரர் பதினொருவர், மருத்துவர் இருவருமெனவிவர்.

மூவறு கணங்களாவார்- கின்னர்கிம் புருடர் விச்சா தரர் கருடர் பொன்னமர் பூதர் புகழியக்கர்-மன்னும், உரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம், பரகதியோர் சித்தர் பலர், 'காந்தருவர் தாரகைகள் காணாப் பசாச கணம், ஏந்துபுகழ் மேய விராக்கதரோ-டாய்ந்ததிறற், போகா வியல்புடைய போகபூமி யோருடனே, ஆகாச வாசிகளாவார்' என விவர். 'ஆகாசர் நாகர் சித்தர் காந்தருவர் விஞ்சையர் பசாசர் தாரகை போகபூமியோர் கிம்புருடர் சுரர் அசுரர் பூதம் முனிதேவர் கருடர் இராக்கதர் இயக்கர் சாரணர் எனவும் கொள்க."[69] என்ற கருத்துரைப் பகுதி வழியாக, சிலப்பதிகாரக் கடவுளர்கள் பற்றி அறிந்து கொள்ளமுடிகின்றது. இவ்வாறு ஆங்காங்கே கருத்துரைகளை வழங்கி படிப்பவர்க்கு இனிமையும், பொருள் புரிதன்மையும் ஏற்படச் செய்துள்ளார் பெருமழைப்புலவர்.

பதப்பொருள்

உரையாசிரியர்களின் முக்கியப் பணி அரிய சொற்களுக்குப் பொருள் சொல்லும் முறைமையாகும். இது பதப்பொருள் எனப்படுகிறது. பதப்பொருள் காட்டுவதிலும் பெருமழைப்புலவர் சிறப்புடன் செயல்பட்டுள்ளார்.

“வாரம் பாடுதல் - பற்றுப்பாடுதல், ‘பின்பாட்டு பாடுதல்’, தோரிய மடந்தை- ஆடி முதிர்ந்த கூத்தி, தலைப்பாட்டு -இதனை உகம் எனவும், இடைப்பாட்டு - இதனை ஔகம் எனவும் கூறுவர்”[70] என்னும் பகுதியில் பதப்பொருள்கள் வழங்கப்பெற்றுள்ளன.

“அந்திவானம் -செக்கர் வானம், புன்கண் -துன்பம், குறும்பு – செவ்வி நேர்ந்துழி வேந்தலைக்கும் குறும்பர்.இவர் குறுநில மன்னர் ஆசிரியர் வள்ளுவனார் இவரை வேந்தலைக்கும் கொல் குறும்பு என வழங்குவர். பான்மை – செங்கோன்மை. கதிர் ஈண்டு அரசர்க்குரிய அளி என்க. மீனரசு திங்கள். விண்மீன்களுக்குத் தலைவன் என்பது பற்றி அங்ஙனம் ஒருபெயர் கூறினர். வெள்ளி விளக்கம் என்றது நிலவொளியினை”[71] என்றவாறு அரிய சொற்களுக்குப் பொருள் வழங்கப்பெற்றுள்ளது.

“தூவி – மயிர். இணையணை - இரட்டைப் படுக்கையுமாம். இணைதற்கியன்ற அணையுமாம். இணைதல் -கூடுதல். மேம்பாடு -ஈண்டு அன்பு பெருக்கமடைதல். திருந்துதுயில் - அழகிய துயிலுமாம். உடைப்பெருங் கொழுநர் - தம்மையுடைய கணவர். கொழுநரிற் சிறந்த கேளிர் இன்மையால் பெருங்கொழுநர் என்றார்”[72] என்ற நிலையில் பதப்பொருள் பெருமழைப் புலவரால் தரப்பெற்றுள்ளது.

‘தலைத்தாள் வாகை – தூசிப் படையில் நின்றே பகைவரைப் புறங்கண்டு வாகை சூடி வருதல். கொடுஞ்சி-தாமரைப்பூ வடிவிற்றாகச் செய்து தேர்த்தட்டின் நடுவண் நிறுத்திய இருக்கை. தேர் மறவர் இதன்கண் இருத்தல் மரபு. தேரோர் - தேர் மறவர். கண்ணோட – எனல் வேண்டிய சிறப்பும்மை தொக்கது. கலைமைய அரிந்து களத்தில் வெற்றி கொண்டோர் என்க. நிறம் இரண்டனுள் முன்னது வண்ணம். பின்னது மார்பு. பொலம்-பொன். அமயம்-பொழுது. புலவர் பாடும் போர்த்துறை என்க. ஆடு-வெற்றி”[73] என்பது வஞ்சிக் காண்டத்தில் இடம்பெறும் பதப்பொருள் பகுதியாகும். இவ்வாறு அரிய சொற்களுக்குப் பொருள் காணும் உரைத்தன்மையும் பெருமழைப்புலவரிடம் காணப்பெறுகின்றது.

வினா- விடை நடை

மற்ற உரையாசிரியர்கள் போல பெருமழைப்புலவரும் வினா, விடை இயல்பில் உரை வரைந்துள்ளார். இது அவரின் தருக்க நடைக்குச் சான்றாகின்றது.

“மலரின் செழுமைக்கும் மணமிகுதிக்கும் இல்வளர் முல்லையும் மல்லிகையும் கூறப்பட்டன. என்னை? அவை பொழுதறிந்து நீர்கால்யாத்து எருப்பெய்து வளர்க்கப்படுமாதலின் அவற்றின் மலரும் மணமும் சிறப்புடையனவாதலியல ' பாகலின், தாழியில் நட்டுக் குவளை மலர்களும் உண்டாக்குவர் ஆதனன் பழைய உரையாசிரியர் ஒழிந்த தாழிக் குவளை முதலிய பல பூவும் என்றார்”[74] என்ற நிலையில் வினா விடை நடையை அமைக்கிறார் பெருமழைப் புலவர்.

‘மன்னவன் தம்மீது அடாப்பழி சுமத்திக் கொன்றான் என்பது கருதி அவன்பால் எழுந்த சினம் மிகுந்து வருதலால் இதற்குத் தீர்வு கண்டன்றி யான் கணவனை நாடிச் சென்றடையேன் என்று தன்னுள் உறுதி கொண்டபடியாம். என்னை?

‘தற்காத்து தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்’’ (குறள் : 59)

என்பது கற்புடை மகளிர்க்கிலக்கணம் ஆகலின் என்க. தீவேந்தன்-கொடுங்கோல் அரசன். இத்திறம் -இங்ஙனம் செய்தற்குரிய காரணம். என்றாள் என்பது என்று சினந்தாள் என்பதுபட நின்றது”[75] என்ற பகுதி வினா விடை நடைப் பகுதியாக அமைகின்றது. அதாவது கணவன் கொலை செய்யப்பட்டான் என்பதறிந்த மனைவி முதலில் அவனைக் காணச் செல்லாது, அவன் பழியைத் துடைக்கச் செல்வது சரியா என்ற வினாவிற்கு தக்க விடை தருவதாக இப்பகுதி அமைகின்றது. இவ்வாறு ஆங்காங்கே வினாக்களை எழுப்பி விடை காணும் போக்கு இவரின் உரைப் பகுதியில் அமைந்துள்ளது.

“வேறுபடு திரு - பிரிக்கப்பட்ட செல்வம். கோவலனும் கண்ணகியும் இல்லறம் நடத்தற்பொருட்டுத் தமது பழம் பொருள்களினின்றும். கூறுபடுத்துக் கொடுத்த செல்வம் எனக் கோடலே ஈண்டுப் பெரிதும் பொருந்துவதாம். என்னை? கோவலன் பொருளிழந்த பின்னரும், அவனுடைய இருமுது குரவரும் தமக்கெனப் பொருளுடையராயிருந்தமை, நீர்ப்படை காதையில் கோவலன் இறந்தமை கேட்ட மாசத்துவான் தன்பாலிருந்த மிக்க பொருளையெல்லாம் தானமாக வீந்துபோய்த் துறவியாயினன் என்பதை மாடல மறையோன் கூற்றாக வருகின்ற ‘கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி மாபெருந்தானமாககவான்

பொருளீந்தாங்கு.... துறவியெய்தவும்' என்பதனால் அறியப்படும். ஆதலானும் கனாத்திறம் உரைத்த காதையில் குலந்தரு வான் பொருட் குன்றம் தொலைத்த இலம்பாடு நாணுத்தரும் எனக் கோவலன் குறிப்பது ஈண்டு தமக்கென வேறுபடுத்துக் கொடுத்த பொருளையே ஆதலானும் என்க"[76] என்ற நிலையில் வேறுபடுதிரு என்பதற்கான வேறுபட்ட பொருளை அறிய வினாவிடை உதவுகின்றது.

புகார் காண்டத்திற்கு உரை காட்டும் பகுதியிலும் வினா விடை பயன்படுத்தப்பெற்றுள்ளது. "இது புகாரின் இயற்கை வளம் கூறிற்று. அஃதாவது தள்ளா விளையுட்டாதல். என்னை? ஆசிரியர் திருவள்ளுவனார் தாம் நாட்டிலக்கணம் கூறுங்கால் இச்சிறப்பினையே முதன்மையாகக் கொண்டு, 'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு' என்றோதுதல் உணர்க. ஈண்டு அடிகளாரும் அவ்வாறே அச்சிறப்பையே 'முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும் வழங்கத் தவாஅ வளம்' என்றார்"[77] என்ற நிலையில் தள்ளா வினையுள் என்பதற்கான விளக்கம் வினா விடையாகப் பெறப்பட்டுள்ளது.

"இனி , அரைசு விழை திருவின் மாநகர் என நகர்க்கே அடையாக்கில் பிற நாட்டு மன்னரெலாம் விரும்புதற்குக் காரணமான மேழி செல்வத்தையுடைய நகர் எனினுமாம். என்னை?

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்

அலகுடை நீழ லவர்" (குறள் 1034)

என வள்ளுவனாரும் ஓதுதலுணர்க"[78] என்ற பகுதியிலும் வினா விடை நடைத்திறம் பின்பற்றப்பெற்றுள்ளது.

விடை- காண்பதற்கரிய வினா

வஞ்சிக்காண்டத்தில் விடை- காண்பதற்கரிய வினா என்ற தலைப்பின்கீழ் ஒரு வினா விடைப்பகுதி அமைந்துள்ளது. "செங்குட்டுவன் தன் தேவியை வினவிய வினாவிற்கு விடையிறுத்தல் எளிதன்று. வினவப்பட்டாரும் ஒரு கற்புடைய பெருந்தேவியே ஆகலின் அவர் பெரிதும் நுணுக்கமாகவே விடை கூறிவிடுகின்றார். அவர் கூறிய விடை வருமாறு.

"காதலன் துன்பம் காணாது கழிந்த

மாதரோ பெருந்திரு வுறுக வானகத்து

அத்திறம் நிற்க நம் மகனாடடைந்த இப்

பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"

என்பதே சேரன் பெருந்தேவி யிறுத்த விடையாகும். இவ்விரண்டு பத்தினிகளுள் சிறந்தவர் யார்? என்பதே செங்குட்டுவன் வினாவாகும். இருவருள் ஒருவரைச் சிறந்தவர் என்று சுட்டி விடை கூறின் மற்றவர் சிறப்பில்லாதவர் என்பதனை அவ்விடையே அறிவித்துவிடும் என்று அஞ்சிப்போலும் அப்பெருந்தேவியார் அத்தகைய சிறிய இழுக்கும் நேரா வண்ணம் விடை கூறுதலின்றி மற்றொரு வகையால் தமது கருத்தை அறிவித்தல் பெரிதும் நுணுக்கமுடைத்து.

என்னை? பாண்டியன் மனைவியை மாதர் எனவும் கண்ணகியைப் பத்தினிக் கடவுள் என்றும் இவர் கூறியதே அவ்விருவருள் வியக்கும் நலத்தோர் யார்

என்னும் வினாவிற்குத் தகுதியாக விடையைக் குறிப்பாக அறிவித்துவிடுதலுணர்க.

பாண்டிமாதேவி இவ்வுலகத்துப் பத்தினி மகளிர் செய்வதுவே செய்தார். கண்ணகியோ இதுகாறும் எந்தப் பத்தினி மகளும் காட்டியிராத கற்பின் தெய்வத் தன்மையையே உலகிற்குக் காட்டி விட்டாள். ஆதலின் அவளைப் பத்தினி மகளிரும் தொழுதல் வேண்டும் என்பதே சேரமாதேவியாரின் கருத்தாகும். இதனால் இவரிருவருள் வியத்தகு நலத்தோள் கண்ணகியே என்னும் விடையும் அமைந்தமையுணர்க"[79] என்ற பகுதி எழுப்பிய வினாவிற்குச் சொல்லப்பட்ட பதில் சரியானதாக என்பதை ஆராய்கின்றது.

இவ்வாறு ஆங்காங்கே வினாக்களை எழுப்பி அவற்றுக்கு விடை காணும் போக்கில் ஆராய்ந்து உரை எழுதும் பாங்கு பெருமழைப் புலவரின் சிலப்பதிகார உரையில் காணக்கிடைக்கிறது.

இலக்கிய நடை

பெருமழைப் புலவரின் உரை முழுக்க முழுக்க இலக்கிய நடையாக அமைந்துள்ளது. முழுமை பெற்ற எளிமையான சொற்றொடர்கள் கொண்டு அவர் தன் உரையை அமைத்துள்ளார். இவரின் இலக்கியத் தரமான உரை நடைப் பண்பிற்கான சான்றுகள் பின்வருமாறு.

தமிழ்ச்சிறப்பு

தமிழின் சிறப்புகளுள் ஒன்று அம்மொழியில் 'ழ' என்ற எழுத்தாகும். இவ்வெழுத்தினை மனையறம் படுத்த காதையில் இளங்கோவடிகள்

"குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின்

மழலைக் கிளவிக்கு வருந்தின ஆகியும் (சிலப்:2:59-60)

என்ற நிலையில் பயன்படுத்தியுள்ளார். இதற்கு உரை செய்யும்போது, பெருமழைப்புலவர், இளங்கோவடிகள் பயன்படுத்திய 'ழ' என்ற எழுத்து தமிழின் சிறப்பெழுத்து என்பதைக் காட்டி உரை வரைந்துள்ளார். 'இனி குழலும் யாழும் அமிழ்துங் குழைத்த மழலைக் கிளவி என நிகழும் தொடரின்கண் தமிழ் மொழிக்குச் சிறப்பெழுத்தாகிய ழகர வொலிமிகு மொழியின்பம் பெரிதும் மிகுதலுணர்க"[80] என்ற பகுதி தமிழ்மொழியின் சிறப்பினைக் காட்டுவதாக உள்ளது.

அரங்கேற்றுக் காதையில் தமிழின் சிறப்பு பெருமழைப்புலவரின் உரை வழியாக வெளிப்பட்டுள்ளது.

"இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறிய

தமிழ் முழுது அறிந்த தன்மையன் ஆகி" (சிலப், 3: 37-36)

என்று தமிழகத்தின் எல்லையும், தமிழ் முழுதறியும் தன்மையும் காட்டப்பெற்றுள்ளது. இதற்குப் பெருமழைப் புலவர் பின்வருமாறு உரை தருகின்றார். "இனி வடவேங்கடம் தென்குமரியாயிடைக் கிடந்த தமிழ் கூறு நல்லுலகம் என்பது தோன்ற கடல்வரைப்பில் தமிழகம் என்றார். கடல் வரைப்பையுடைய நிலவுலகத்துள் வேங்கட முதலிய வரைப்பினையுடைய தமிழகம் என்பது கருத்தென்க; இனித் தமிழ்தானும் இயல், இசை, நாடகம் என முத்திறத்ததாய் முழுதும் அறிதற்கருமைத்தாகலின் அவ்வருமை தோன்றத் தமிழ் முழுதும் அறிந்த தன்மையன் என்றார்"[81] என்பது பெருமழைப்புலவரின் உரையாகும். இவ்வுரையின் வழி தமிழ் முப்பகுப்புகளை உடையது என்பதையும்,

அம்மொழி பேசும் நிலவெல்லைப்பகுதி எது என்பதும் தெற்றெனக் காட்டப்பெற்றுள்ளது. இவ்வெல்லைப் பகுதியை மற்றொரு இடத்தில் விரிவான வரலாற்றுச் சான்றுகளுடன் காட்டி நிற்கிறார் பெருமழைப்புலவர்.

“நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்

தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு”(சிலப். 8:1-2)

என்ற பகுதிக்கு உரை வரையும்போது தமிழகத்தின் எல்லை பற்றிய விரிவான குறிப்புரையைத் தன் உரைக்குள் காட்டியுள்ளார் பெருமழைப்புலவர்.

“வடக்கின்கண் திருமால் எழுந்தருளிய வேங்கடமலையும் தெற்கின்கண் குமரிக்கடலும் (கிழக்கின்ண்ணும், மேற்கின்கண்ணும் ஒழிந்த கடல்களுமே) தமிழ்மொழி வழங்குகின்ற நாட்டிற்கு எல்லையாம் என்று சான்றோரால் அறுதியிடப்பட்ட மூவேந்தருடைய குளிர்ந்த புனலை உடைய நல்ல நாட்டினிடத்தே, நெடியோன் என்றது நெடுமையால் உலகளந்த பெருமானாகிய திருமாலை. அவன் எழுந்தருளியிருக்கும் குன்றமாவது திருவேங்கடம். கிழக்கினும் மேற்கினும் கடல்களே எல்லையாகலின் அவற்றைக் கூறிற்றிலர். பனம்பாரனாரும் ‘வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்’ எனவே ஓதுதலும் உணர்க. இவ்விரண்டினையும் கூறியதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் ஈண்டுணரற்பாற்று. அது வருமாறு. ‘நிலங்கடந்த நெடு முடியண்ணலை நோக்கி உலகந்தவஞ் செய்து: வீடுபெற்ற மலையாதலானும் எல்லாரானும் அறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினர். குமரியுந் தீர்த்தமாகலின் எல்லையாகக் கூறினர். இவ்விரண்டினையும் காலையே ஓதுவார்க்கு நல்வினை யுண்டாமென்று கருதி இவற்றையே கூறினார். இவையிரண்டும் அகப்பாட்டெல்லை யாயின. குமரியாற்றின் தெற்கு

நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின் கிழக்கும் மேற்கும் கடல் எல்லையாக முடிதலின் வேறெல்லை கூறாராயினர்"[82] எனவரும் என்ற கருத்துகளின்படி சிலப்பதிகாரத் தமிழகத்தின் எல்லையை அறிந்துகொள்ளமுடிகின்றது. இவ்வாறு தமிழகத்தின் எல்லையைக் காட்டி தமிழர்தம் தாய்நாட்டமைதியைக் காட்டித் தமிழ் உணர்வை வெளிப்படுத்தி நிற்கிறார் பெருமழைப்புலவர்.

இவ்வாறு தமிழ் பற்றிய குறிப்புகள் இடம்பெறும் சிலப்பதிகார அடிகளுக்கு எல்லாம் தன் தமிழ் உணர்வு வெளிப்படும் அளவிற்குத் தன்னுரையைச் செய்துள்ளார் பெருமழைப்புலவர்.

காப்பியம் காட்டும் மூன்று வாய்மைகள்

சிலப்பதிகாரம் தன்னுள் மூன்று வாய்மைகளை அடக்கியுள்ளது.

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்

ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்

சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்

சிலப்பதிகாரம் என்னும் பெயரால்

நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுளென" (சிலப். பதிகம். 55-59)

என்ற மூன்று உண்மைகள் சிலப்பதிகாரத்தின் அடிப்படைகளாக அமைகின்றன. இதனை ஆங்காங்கு சுட்டிச் செல்கிறார் இளங்கோவடிகள். அவ்வாறு இளங்கோவடிகள் சுட்டிக் காட்டிய இடங்களில் எல்லாம் நிறுத்தி இவற்றை

விளக்கிச் சொல்லும் இலக்கிய நடையாக பெருமழைப்புவலரின் உரைப் பகுதி அமைகின்றது.

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுதல்

கண்ணகி,கோவலன் ஆகியோர் இணைந்து வாழும் வாழ்க்கை என்பது முழுக்க முழுக்க ஊழ்வினைப் பயன் சார்ந்த வாழ்க்கை என்பதை இளங்கோவடிகள் காட்டியுள்ளார். இவர்கள் இருவரும் பெரும் செல்வக் குடியில் பிறக்கின்றனர். இதனைக் காட்டும் பகுதியில் இவ்விருவரும் செய்த நல்வினைப் பயன் நல்லகுடியில் பிறந்தமை என்பதைச் சுட்டுகிறார் பெருமழைப்புலவர்.

“இனி, ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்னும் வாய்மையை அறிவுறுத்துதல் இக்காப்பியத்தின் உள்ளுறையுள் ஒன்றாகலின் ஈண்டும் அடிகளார் கண்ணகியும் கோவலனும் முற்பிறப்பிற்செய்த நல்வினை இவ்வாறு அவரைக் கொழுங்குடிச் செல்வர் மனைக்கண் பிறப்பித்துத்தும் பயனாகிய பேரின்பத்தை இங்ஙனம் ஊட்டலாயிற்று எனக் குறிப்பாக வுணர்த்துவார் அக்குறிப்பை உவமைக்கண் வைத்து ‘அத்தகுதிருவின் அருந்தவம் முடித்தோர், உத்தரகுருவின் ஒப்பத்தோன்றிய, சுயமலர்க்கண்ணியும் காதற் கெழுநனும்’ என நுண்ணிதின் ஓதுதல் நினைந்து மகிழற்பாலது. என்னை? இக்காதைக்கண் அக்காதலர்களின் ஆகூழாகிய பழவினை அவர்க்கு உருத்துவந்தூட்டுமாறிது வென்று கூறிக் காட்டுதலே ஆசிரியர் கருத்தென்றறிக. ‘நன்றாங்கால் நல்லவாக்’ காணுமாந்தர் அப்பொழுது அதற்குக் காரணமான நல்வினையை நினைவதிலர். மற்று அவர்தாமே போகூழால் அன்றாங்காற் பெரிதும் அல்லற்பட்டு ‘அந்தோ வினையே’ என்றழுது வருந்துவர். நல்லூழ் வந்துருத் தூட்டும்பொழுது அதனை நினைவோர் பின்னரும் நல்வினைக்கண் நாட்டமெய்துவர். தீயூழால்

வருந்துவோரும் அதனை நினையின் தீவினை யச்சமுடையராய்ப் பின்னர் அது செய்யாதுய்வாருமாவர். ஆதலான், அடிகளார் இருவகை வினையையும் நினைந்தே ‘ஊழ்வினை உருத்துவந்தூட்டும்’ எனப்பொதுவாக ஓதினர். புகார்க்காண்டத்தே கயமலர்க்கண்ணிக்கும் காதற் கொழுநனுக்கும் நல்வினையாகிய ஊழ்வினை உருத்துவந்தூட்டுவதனை இக்காதையிற் குறிப்பாக ஓதுகின்றார். மதுரைக்காண்டத்தே தீவினையாகிய ஊழ்வினை உருத்துவந்தூட்டுதலை யாவரும் உணர ஓதுவர். ஆசிரியர் திருவள்ளுவனார் தாமும் மாந்தர்க்கமைந்த இப்பேதைமையை நினைந்தன்றோ?

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கால்

அல்லற் படுவ தெவன்

என்று வினவுவராயினர் என்க”[83] என்ற இந்தப் பகுதி மானிடர் இயல்பு பற்றியும் எடுத்துரைக்கிறது. அதே நேரத்தில் ஆகூழ், போகூழ் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

அரைசியல் பிழைத்தோர்க்குஅறம் கூற்றாதல்

சிலப்பதிகாரத்தின் மற்றோர் அறம் அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல் ஆகும். கோவலன் கள்வன் எனக் குற்றம் சுமத்திக் கொல்லப்பட்டது அவன் முன்பிறவியில் சங்கமன் என்பவனைப் பழி சுமத்திக் கொன்றமையே காரணம் என்று கொள்ளப்படுகிறது. பாண்டியன் நீதி தவறி உடன் தன் உயிர் நீத்தமைக்கு கோவலன் முன்வினை ஒருபக்கக் காரணம் என்றால் , பாண்டியன் அரைசியல் பிழைத்தது மற்றொரு காரணம் ஆகும் என்று காட்டுகிறார் பெருமழைப்புலவர்.

"அங்ஙனமாயின் கோவலன் முன் செய்த தீவினை அவனுக்கே கேடு பயத்தல் கூடும். அவன் தீவினை பாண்டியனுக்குப் பழி விளத்தலும் அவன் தன் ஆருயிரைப் போக்குதலும் எங்ஙனம் கூடும்? என ஈண்டு ஒரு வினாவெழுதல் கூடும். பாண்டியன் வளையாத செங்கோல் வளைந்தமைக்குக் கோவலன் பழவினை மட்டும் காரணமன்று. அப்பாண்டியன் அப்பொழுது அரசியல் பிழைத்தமையே அதற்குத் தலை சிறந்த காரணம் ஆகும். பாண்டியன் பொன்செய் கொல்லன் தன்சொற் கொண்டே கோவலனைக் கொல்வித்தது அரசியலிற் பிழை செய்தற்குரிய ஆவனது ஆள்வினைக் குறைபாடே அன்றிப் பிறிதென்னையோ? ஆள்வினைக் குறைபாட்டினாலேதான் அவன் செங்கோலும் வளைந்தது. மாபெரும் பழியும் அம்மன்னனுக்கு வந்தெய்தியது என்றுணர்தல் வேண்டும். ஊழ்வினைஉருத்து வந்து ஊட்டும் பொழுது இத்தகைய சூழ்நிலையைத் தானே தேர்ந்து கொள்கின்றது. ஈண்டு பழவினைபாற் கொலையுண்ட கோவலன் பழி யெய்தாமையும் ஆள்வினை குறைபாட்டினால் பாண்டியன் பழி யெய்தினமையும் கூர்ந்துணர்தல் வேண்டும். இதனாலன்றோ ஆசிரியர் திருவள்ளுவனார் தாமும்-

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து

ஆள்வினை இன்மை பழி"

என நுண்ணிதின் அறிவுறுத்துவாராயினர்"[84] என்ற நிலையில் அரசியல் பிழைத்தமையால் அறம் கூற்றாகிய நிலைப்பாட்டையும் தன்னுரைக்குள் காட்டியுள்ளார் பெருமழைப்புலவர்.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுதல்

இப்பத்தினிக் கடவுளைப் பரவல் வேண்டும் என்று கோப்பெருந்தேவியார் கூறிய சொற் கேட்ட செங்குட்டுவன் தேவியின் கருத்தைப் போற்றியவனாய் நூலறி புலவரை நோக்கானனாக அவன் கருத்தினைக் குறிப்பினாலுணர்ந்து கொண்ட அப்புலவர் தாமும்

"ஒற்கா மரபிற் பொதியிலன்றியும்

விற்றலைக் கொண்ட வியன்பேரியமயத்துக்

கற்கால் கொள்ளினும் கடவுளாகும்" (சிலப்:25:117-119)

இமயத்துக் கால்லாயின் கங்கை பேர் யாற்றினும் பொதியக் கல்லாயின் காவிரிப்புனலினும் நீர்ப்படை செய்தல் வேண்டும் எனத் தெரிவிப்பாராயினர். அது கேட்ட செங்குட்டுவன் செந்தமிழ் நாட்டின் ஏனைய மன்னர்கட்கு வரும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் தனக்கே வந்தன என்றெண்ணும் ஒருமையுணர்ச்சி உடையோனாதலின் பொதியில் பாண்டியனுக்குரியதாயினும், காவிரி சோழனுக்குரியதாயினும் பொதியிற் கற்கொண்டு காவிரியில் நீர்ப்படை செய்தல்

"மறத்தகை நெடுவா னெங்குடிப் பிறந்தார்க்குச்

சிறப்பொடு வரூஉம் செய்கையோ வன்று" (சிலப்:25:124-125)

இமயத்தே கற்கொண்டு கங்கை பேரியாற்றில் நீர்ப்படை செய்வதே சிறப்புடைத்து என்று செப்புவானாயினான்...

செங்குட்டுவன் அணிமையிலுள்ள பொதியில் கல்கொண்டு கடவுட் படிமம் அமைத்தல் சிறப்பன்று என்று கருதினான். அடிகளார் தாமும்

செங்குட்டுவனுடைய அவ்வீர வரலாற்றை அமைத்துப் பாடுதற்குத் தங்காலத்து வழக்கிலிருந்த சொல் கொண்டமைத்தல் தகாது. அங்ஙனமமைப்பின் நந்தமிழகத்துப் பழைய வீரப்பண்பு சிறவாது என்று கருதித் தமக்குப் பன்னூறு ஆண்டுகட்குமுன் சென்று தமிழ் மொழிக்கே முதலாக நின்று திகழும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தினின்றே சொல் கொண்டு இவ்வஞ்சிக் காண்டத்தின் காதைகட்குப் பெயரமைத்துக் கொள்வாராயினர்."[85] என்ற நிலையில் சேரன் இமயத்தில் கல்லெடுத்தும், இளங்கோ தொல்காப்பியத்தில் இருந்துச் சொல் எடுத்தும் உரைசால் பத்தினியை உயர்ந்து ஏற்றிய தன்மையைக் காட்டுகிறார் பெருமழைப்புலவர். இவ்வாறு முக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரம் படைக்கப்பெற்றுள்ளமையைத் தன் இலக்கிய நடைத்திறத்தால் காட்டி நிற்கிறார் பெருமழைப்புலவர்.

பாத்திரப் படைப்பு நடை

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் படைத்துள்ள பாத்திரங்களின் பண்பு நலன்களைக் காட்டும் நடை இயல்பினை உடையதாகவும் பெருமழைப்புலவரின் உரைஅமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தின் முக்கியப் பாத்திரங்களான கண்ணகி, கோவலன், மாதவி ஆகியன பற்றியும், மாடலன், கவுந்தியடிகள் போன்ற திருப்புமுனை தரும் பாத்திரங்கள் பற்றியும் தன் உரையில் பெருமழைப்புலவர் விரித்துரைத்துள்ளார்.

கோவலன் பாத்திரப் படைப்பு நலம்

கோவலனை இயல்பான மனிதனாக முதலில் காட்டி, பின்பு ஆறாத அன்பிற்குப் பாத்திரமானவனாக அவனை வளர்த்து, பெருங்காப்பியத் தலைவனாக உயர்த்திக் காட்டுகிறார் பெருமழைப்புலவர்.

இயல்பான மனிதன் கோவலன்

கோவலன் உலக இயல்பின்படி காதலன் ஒருவன் காதலியைப் பாராட்டுவது போல வெகு இயல்பாகப் பாராட்டும் நிலையில் தன் முதல் சந்திப்பில் பேசுகிறான் என்று பெருமழைப்புலவர் காட்டுகிறார். கோவலன் கண்ணகி குறித்துக் காட்டிய கட்டுரை குறியாக் கட்டுரை என்று அழைக்கப்படுவதால் அவன் கண்ணகியின் பெருமையைக் கருதாது பேசிய சொற்களாகவே அவை அமைகின்றன என்பது புரிந்து கொள்ளத்தக்கது.

“இனி, கோவலன் கூறுமோர் கட்டுரை என்னாது குறியாக்கட்டுரை என்றார். ஈண்டுக் கோவலன் இவ்வுலகத்துக் காதலர் தங்காதலிமாரை நலம் பாராட்டுமாறே பாராட்டினன் அல்லது அத்திருமாபத்தினியின் சிறப்பெல்லாம் குறிக்கொண்டு பாராட்டினன் அல்லன் என்றுணர்த்தற்கு, இ∴தென் சொல்லியவாறோவெனின், கோவலன் ஈண்டுக் கூறும் சிறப்பைவிடப் பன்னூறுமடங்கு உயர்ந்தனவாம் அப்பெருந்தகைப் பெண்ணின் சிறப்பு. அவனுரை அவற்றைக் குறியாது வறிதே நலம் பாராட்டுதல் என்னும் பொருள் பற்றி உலகத்துக் காதலர் கூறும்மரபு பற்றிய உரையேயாம்”[86]

என்ற உரைப்பகுதி கோவலன் கண்ணகியைச் சாதாரண பெண்மகளாகப் பார்க்கும் பார்வையுடையவனாகவே இருந்துள்ளான் என்பதை அறியமுடிகின்றது. மேலும் அவன் பாராட்டிய குறியாக் கட்டுரையில் இடம்பெற்ற பொருள்களைக் கொண்டு தன் உரையில் ஆராய்ச்சி செய்துள்ளார்.

“கண்ணுக்கு இனிமை பயத்தல் கருதி மாசறு பொன் என்றும், ஊற்றின்பம் கருதியும் மரபின் தூய்மை கருதியும் வலம்புரி முத்து என்றும், உயிர்ப்பின் இனிமை கருதி விரையென்றும், சுவையின்பங் கருதிக் கரும்பென்றும்,

மொழியின்பம் கருதித் தேன் என்றும் பாராட்டினன் எனவும், இவற்றாற் சொல்லியது ஒளியும் ஊறும் நாற்றமும் சுவையும் ஓசையுமாகலின் 'கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள' (குறள்:1101) என நலம் பாராட்டப்பட்டன என்பது அடியார்க்கு நல்லார் கருத்தாகும்”[87] என்ற நிலையில் கோவலன் பாராட்டிய சொற்கள் விளக்கம் பெறுகின்றன.

இனி, கண்ணகியின்பால் தானுகர்ந்த ஐம்புல வின்பங்களையும் கருதி அவற்றிற்குத் தனித்தனியே உவமை தேர்ந்து கூறியவன் அவற்றிற்கு அவ்வுவமைகள் உயர்ந்தன வாகாமல் தான் கூறும் பொருள்களே சிறந்தன என்னுங் கருத்தினால், பிறிதோராற்றல் அந்நலங்களைப் பாராட்டத் தொடங்கி 'அரும்பெறல் பாவாய்' என்றும், 'ஆருயிர் மருந்து' என்றும், 'பெருங்குடி வாணிகன் பெருமடமகளே' என்றும், பாராட்டினன். இவற்றுள், கட்கினிமையால் அங்ஙனம் மயக்குறுத்தும் கொல்லிப்பாவையே என்றான்.”[88] என்று கோவலன் கண்ணகியின் பெருமை அறியாது பேசிய சொற்களாக விளங்குகின்றன. இவற்றின்வழி கோவலனின் இயல்பான மனித நிலை தெரியவருகிறது.

பேரன்பினை மறக்காதவன் கோவலன்

புகாரிலிருந்து மாதவியை மறந்து கண்ணகியுடன்,கவுந்தியடிகளுடன் மதுரை நோக்கி நடந்து செல்கிறார். அவன் மனதில் மாதவி காட்டிய பேரன்பு இன்னும் நினைவில் இருந்துகொண்டே உள்ளது. இதனை பெருமழைப்புலவர் தம் உரை நுணுக்கத்தால் காட்டுகிறார்.

“மாதவி மாசு சிறிதும் இல்லாதிருந்தும் கோவலனுடைய ஊழ்வினை அவனது அறிவைப் பேதைப் படுத்து அந்நால்லாளைச் 'சலம் புணர் கொள்கை சலதி' என்று நினைக்கும்படி செய்துவிட்டது. அம்மாதவியை அவன் எவ்வளவு

வெறுத்து விலகி வந்தானாயினும் அவன் நெஞ்சம் மட்டும் தனக்குள்ளே அழுது கொண்டிருப்பதாயிற்று. …மாதவியின் பேரன்பு அத்துணைப் பெருமையுடையது. என்னே! என்னே! இ∴தென்னே! அவளிடத்தும் வஞ்சம் இருக்கக் கூடும் என்றையுற்று எத்துணை ஆராய்ச்சி செய்து பார்த்தும் அவள் 'சலம் புணர் கொள்கைச் சலதிதான்' என்று தன் மனச் சான்றிற்கு அவனால் காட்ட முடியவில்லை. ஆதலால் தம்மனச் சான்று செவ்வி கிடைத்த போதெல்லாம் ஏடா' அவள் அத்தகைய தீயவள் என்பதற்கு நீ அவள் பால் என்ன குற்றம் கண்டுவிட்டாய்? என்று வினவிஅவன் நெஞ்சைச் சுட்டெரித்ததாலே அவன் பெரிதும் தளர்ந்திருப்பானாயினன். ஒரு நாள் கோசிகன் என்னும் பார்ப்பனன் ஒரு நீர்நிலை மருங்கே நின்ற கோவலனை அணுகி ஐயா இதோ! பார். இது மாதவிதன் மலர்க் கையால் எழுதி நினக்குக் காட்ட என்பாலீந்த ஓலை எனக் கூறி ஒரு முடங்கலைக் கொடுத்தாள்"[89] என்ற பகுதி கோவலனிடத்தில் அன்பின் ஈரம் இருக்கிறதா என்பதை அறிய முற்படுவதாக அமைகின்றது. இவ்வுரைப்பகுதியில் மனச்சான்று பேசும்படி, தன் நடையை அமைத்துக் கொண்டுள்ளார் பெருமழைப்புலவர். உணர்ச்சி மேம்படும் நிலையில் மரியாதைப் பண்பு குறைந்து ஒருமை நிலையில் பேசும் சொற்கள் இங்கு நடையாக அமைக்கப்பெற்றுள்ளன.

இதன்பிறகு மாதவி தவறிலள் என்பதைக் கோவலன் நெஞ்சமே காட்டி நிற்கிறது. இதனைக் காட்டும் பகுதி பின்வருமாறு.

"மாதவி ஓலை மலர்க்கையின் பட்ட

உடனுறை காலத்து உரைத்த நெய்வாசம்

குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்

காட்டியதாகலின் கைவிட லீயான்'' (சிலப்:13:82-85)

(அங்ஙனம் கொடுத்த ஓலை மடிப்புறத்து மண் மேல் மாதவி கூந்தலால் ஒற்றிய பொறி தன்னுடனே கூடி யுறைகின்ற காலத்து வாச நெய்யுறைத்ததன்மையைத் தனக்கு உணர்த்திக் காட்டியதாதலான் அதனைக் கையாற் கடிதின் விடுவியானாய்ப் பின்னர் விடுவித்து ஏட்டை விரத்து அதனுட் கிடந்த பொருண்மை உணர்ந்தான்)"[90] என்ற இந்த பகுதி கோவலன் மாதவியின் நலத்தை நுகர்ந்து அதனுள் ஆட்பட்டுக் கிடந்ததன்மையைக் காட்டுவதாக உள்ளது.

எத்தனை பெருங்காதல் அவன் அவள்பாற் கொண்டிருந்தாள் என்பது இதனால் விளங்கும். இதற்குக் காரணம் அவளுடைய பேரன்புடைமையே அன்றி வேறென்? அப்படிக் காணப்பட்டவள் இப்படிப் பட்ட வஞ்சம் பொதிந்த நெங்சத்தோடும் எங்ஙனம் இருந்தனன். ஒரோ வழி நாம்தாம் அவளைப் பிழைப்படக் கருதி விட்டோமோ என்னும் இத்தகைய ஐய நினைவுகள் அவனை நாடொறும் ஆட்டி அலைத்தன. அவனது நெஞ்சம் நாளுக்கு நாள் ஆற்றவும் தளர்ச்சியுறுவதாயிற்று.

அளியன் இக்கோவலன் இவன் தனது சாவினைத் தழுவும்போழுது, இத்தகைய சஞ்சல நெஞ்சத்தோட சாதல் கூடாது. அங்ஙனம் சாதல் அவன் பின்னர் எய்தவிருக்கும் அமரத்தன்மைக்குப் பொருந்தாது என்னும் அருள் காரணமாக அடிகளார் இவ்வுபயாத்தால் அத்தளர்ச்சியை அகற்றி அவனுள்ளத்தே அமைதியை நிலைநாட்டுகின்றார். இதோ பாருங்கள். கோவலன் மாதவியை மல்க்கையான் எழுதிய அவ்வேட்டினைக் கூர்ந்து ஓதியவுடன்

‘தன்தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி எ

என்தீது என்று எய்தியது’

உணர்ந்து அமைதி கொண்டனன் என்று அடிகளாரே அறிவிக்கின்றார்”[91] என்னும் இவ்வுரைப்பகுதியின் வழியாக, கோவலன் மனத்தில் எழுந்த வஞ்ச நிலைப்பாட்டை நீக்கி அவன் உள்ளத்தில் எவ்வித வஞ்சனையும் நிலைபெறாது இருக்கச் செய்ய இளங்கோவடிகள் கொண்ட முயற்சியை உணரமுடிகின்றது. மேலும் இதோ பாருங்கள் என்று படிப்பவரையும் உள்ளழைத்து பெருமழைப்புலவர் நடைத்திறத்தைக் காட்டியுள்ளார். இவற்றால் கோவலனின் மனம் அழுக்கற்ற மனம் என்பது தெரியவருகிறது. கோவலன் உணர்வு வயப்பட்டவன் என்பதும் அவனின் செயல்பாடுகளால் தெரியவருகின்றது.

பெருங்காப்பியத் தலைவன் கோவலன்

காப்பியத்தின் நிறைவில் கோவலன் அமரர் குழாத்துள் ஒருவனாக ஆகின்றான். அவன் பரத்தனாக இருந்தும், இந்நிலை எய்தியது எவ்வாறு என்ற கேள்விக்குப் பெருமழைப் புலவர் பின்வருமாறு பதில் தருகிறார்.

‘இனி, ஊர் சூழ் வரியில், “கோவலன் கண்ணகியார் சூண்மொழிக்கு ஏற்ப மீண்டும் உயிர் பெற்று எழுந்து நின்றான். கண்ணகியின் திருமுகத்தை நோக்கினான். அந்தோ! நிறைமதி வாண்முகம் இங்ஙனம் தோன்றியதே! என்று அவள் கண்ணீரைக் கையால் மாற்றி நீ இருந்திடுக எனக் கூறி அப்பொழுது அமரர் குழாஅத்துட் புகுந்தான்” என்றனர் அடிகளார். கோவலன் அமரனானதற்குக் காரணம் கண்ணகியின் கற்புடைமையோ? அவனது நல்வினையோ? கண்ணகியின் கற்புடைமை என்று கோடல் அவனுக்கு இழுக்காக முடியும். புகார்க் காண்டத்தே

யாம் கோவலனை ஒரு பரத்தன் என்னும் அளவிற்கே அறிந்துள்ளோம். வாய்மையில் அம் பெருமகன் ஒரு பெருங்காப்பியத் தலைவனாதற்குரிய எல்லாச் சிறப்பும் உடையவனாகவே இருந்தான். அவன் இம்மை செய்தனவெல்லாம் நல்வினைகளே. அவையே அமையும் அவனந் அமரனாதரற்கு என்னும் உண்மையை யாம் இம் மதுரைக்காண்டத்திலே அடைக்கலக்காதையில் மாடல மறையோன் கூற்றினாலேதான் அறிந்து கொள்கின்றோம். இக்கோவலனிலும் சிறந்த காப்பியத்தலைவன் பிறனொருவனில்லை. என்றும் அவ்வந்தணன் கூற்றால் அறிகிறோம். மாடல மறையோன் எழுபத்தைந்து அடிகளாலே கோவலனைப் பாராட்டி இறுதியில் அவனை விருத்த கோபால என்று விளக்கின்றார். இதன் பொருள் இளமையிலேயே மெய்யுணர்வு பெற்றுயர்ந்த மேன்மையுடையோன் என்பதாம்”[92] என்ற நிலையில் கோவலன் பெருங்காப்பியத் தலைவனாக உயர் பண்புகள் பெற்றவனாக உள்ளான் என்று பெருமழைப்புலவர் கருதுகிறார்.

கோவலன் முன்பிறவியில் செய்த தீவினைகளுக்கு ஏற்ப இப்பிறவியில் சில ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும், இப்பிறவியில் அவன் செய்தது அனைத்தும் நல்வினைகளே. எனவே தன் மீது ஊழ் படிந்திருந்தவற்றை இப்பிறிவியில் நீக்கி இனி ஊழ்வலி இல்லாதவனாகக் கோலவன் நன்மையே ஆற்றுபவனாக இருந்த காரணத்தினால் அவன் அமரன் ஆனான் என்று கருதுகிறார் பெருமழைப்புலவர். கோவலனைப் பற்றிய செய்திகளை வழங்கும் நிலையில் பெருமழைப்புலவரின் நடை அவனுக்காக இரங்கும் தன்மையதாக, உணர்ச்சி நடைப் பாங்கினதாக, படிப்பவரை உடன் அழைக்கும் விளிகளை உடையதாக தன் நடையை அமைத்துள்ளார் என்பது இங்கு எண்ணத்தக்கது.

கண்ணகி பாத்திரப்படைப்பு

கண்ணகி பாத்திரம் காப்பியத்தின் தொடக்கம் முதலாகவே ஒப்புயர்வற்ற நிலை உடையதாக பெருமழைப் புலவர் அமைத்துக்கொண்டுள்ளார். கண்ணகியின் பெருநலத்தைப் பல பாத்திரங்கள் காட்டி நிற்கின்றன.

பலர் போற்றும் மாண்பினள் கண்ணகி

‘‘இனி இக்கண்ணகியாரின் சிறப்பெல்லாங் கருதிக் கூறுங் கட்டுரையை அடிகளார் கொற்றவையின் கூற்றாக,

‘‘இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி

தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து

ஒருமா மணியா யுலகிற் கோங்கிய

திருமாமணி’’ (சிலப்.12:47-50)

என இனிதின் ஓதுவர். ஈண்டு அத்தெய்வம் கூறுங் கட்டுரையே கண்ணகியாரின் சிறப்பை உள்ளவாறே குறிக்கும் கட்டுரையாதல் நுண்ணிதின் உணர்க இன்னும் அடைக்கலக் காதையின் தவமூதாட்டியாகிய கவுந்தியடிகளார் இக்கண்ணகியாரோடு ஒருசில நாள் பயின்ற துணையானே இப்பெருமகள் தான் மானுடமகளாயினும் தெய்வத்திற்கியன்ற சிற்பெலாம் உடையள் என மதித்து மாதரி என்பாட்டுகுக் கண்ணகியைக் காட்டி,

“ஈங்கு ,

என்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்

வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள் (அன்னளாயினும்)

கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு

நடுங்கு துயரெய்தி நாப்புலர வாடித்

தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி

இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்

கற்புக் கடம்பூண்ட வித்தெய்வ மல்லது

பொற்புடைத் தெய்வம் யாங் கண்டிலமால்" (137-44)

என வியந்து பாராட்டுதல் கண்ணகியை உள்ளவாறுணர்ந்து அவள் நலங்குறித்த கட்டுரையாகும். இங்ஙனம், தெய்வத்தானும் செய்தவத் தோரானும் வியந்து பாராட்டுதற்குரிய இத்தகை சால் பூங்கொடியின் நலமுழுதும் இவன் உணர்ந்து அவற்றைக் குறித்துப் பாராட்டினனல்லன் என்பார் கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை என்று அடிகளார் இரங்கிக் கூறினர் என்க."[93] என்ற பகுதிகளின் வழியாகக் கண்ணகியின் பெருநலம் தெரியவருகின்றது. கணவனான கோவலன் கண்ணகியைப் பற்றி முழுவதும் அறிந்திலன் ஆயினும் அவளின் சான்றாண்மையை மற்றவர்கள் அறிந்து போற்றும் நிலையில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார். அதனை வெளிப்பட தன்னுரையில் காட்டுகின்றார் பெருமழைப்புலவர்.

மக்கள் தன்மையில் மிக்கவள் கண்ணகி

பெருமழைப்புலவர், பற்பல இடங்களில் கண்ணகியின் பெருமையை எடுத்துரைத்துள்ளார். "கண்ணகி உருவத்தாலும், சீற்றத்தாலும் மக்கள்

தன்மையில் மிக்கவளாய்க் கொற்றவை முதலிய தெய்வமகளிரே போல்கின்றாள்”[94] என்ற பகுதியும்.

“தேரா மன்னா! யான் அவன் மனைவி என்றாள். அவன் பெயரும் நீ அறியாய் ஆதலின் அவன் பெயர் இது என்பாள் கோவலன் மனைவி என்றாள். ஈண்டு இக்கண்ணகி வழக்குரைக்கின்ற இச்சொற்றிறம் எண்ணியெண்ணி வியக்கற்பாலது ஆதல் உணர்க. அரசன் மீண்டும் தன்னை வினவுதற்கிடனின்றிக் கூற வேண்டியவனைத்தும் எஞ்சாது கூறிவிட்டமை எண்ணுக.”[95] என்ற பகுதியும் கண்ணகியின் பெருமையைக் காட்டும் பெருமழைப்புலவரின் சொற்கள் ஆகும்.

காப்பியத் தலைவி கண்ணகி

சிலப்பதிகாரம் என்ற பெருங்காப்பியத்தின் தன்னிகரற்ற தலைவியாக விளங்குபவள் கண்ணகி. இவள் சொற்றிறம் மிக்கவள். பேச வேண்டிய இடத்தில் அளந்து சொற்களைப் பேசும் நன்மொழியாள் ஆவாள். அவளின் பேசுதிறச் சிறப்பினைப் பின்வருமாறு காட்டுகிறார் பெருமழைப்புலவர்.

“இனி, காப்பியத் தலைவியாகிய கண்ணகியார் மொழிகள் ஒரு சிலவற்றையே நாம் புகார்க் காண்டத்தில் கேட்டிருக்கின்றோம். அவள் தம்மைத் துறந்தொழுகும் கணவனைப் பற்றியாதல் அவனைக் கைப்பற்றிக் கொண்ட மாதவியைப் பற்றியாதல் ஓரிடத்தேனும் குறை கூறிய சொல் ஒன்றேனும் யாம் கண்டோமில்லை. இம் மதுரைக் காண்டத்தே கொலைக்களக் காதையிலேதான் அவர் சிறிது நீளம் பேசுகின்ற பேச்சைக் கேட்கின்றோம். இம்மொழிகளே அவர் திருமாபத்தினி என்றதற்குத் தகுந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. பதிமூன்றடிகளே கொண்ட அவர் மொழிகள் இம் மாபெருங் காப்பியத்தின்

உயிராகத் திகழ்கின்றன”[96] என்ற சொற்கள் கண்ணகியின் பெருங்காப்பிய நாயகியாம் தன்மையைக் காட்டுவனவாக உள்ளன.

கண்ணகி தெய்வம்

இயல்பாக தன் வாழ்வினைத் தொடங்கிய கண்ணகி தன் துணிவு மிக்க செயல்களால் தெய்வ நிலை பெறுகிறாள். கோயிலில் தெய்வமாக எழுந்தருளச் செய்யப்பெற்று இன்றளவும் வணங்கப்பெறுகிறாள். இதுவே கண்ணகி என்ற பெண் பெற்ற பெருமைநிலை ஆகும்.

“குன்ற வாணர் மகளிரும் கண்ணகியாரும் சொல்லாட்டம் நிகழ்த்தி நிற்கும் பொழுதே வானவர் மலர்மாரி பெய்து வானவூர்தியில் வந்திறங்கி அவரையும் வாழ்த்தி அவர்தம் கணவனையும் அவர்க்குக் காட்டி வானவூர்தியிலேற்றுவித்து அக்குன்றவாணர் கட்புலம் காணவே விட்புலம் கொண்டு போயினர். கண்ணகியார் தெய்வமே என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ? வேண்டாமையின் அக்குன்றவாணர் தங்குலத்திற்கோர் இருந்தெய்வமாகவே அவரை ஏற்றுக் கொண்டு தெய்வத்திற்குரிய எல்லாம் சிறப்பச் செய்து அங்குக் குரவைக் கூத்தும் ஆடி

“பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்

பைத்தரவ வல்குல் நம் பைம்புனத்துள் ளாளே

பைத்தரவல்குல் கணவனை வானோர்கள்

உய்த்துக் கொடுத்தும் உரையோ ஒழியாரோ” (சிலப்:24:16-19)

என்றின்னோரன்ன நாடகத் தமிழால் அவ்வீரபத்தினியைப் பாடிப் பரவவும் பரவினர்”[97] என்ற நிலையில் தெய்வ நிலைப் படுத்தப்படுகிறாள் கண்ணகி.

இவ்வாறு கண்ணகியின் மாண்புகள் காப்பியப் பரப்பில் வெளிப்பட்டு நிற்பதை தன் உரை வழியாக எடுத்துரைக்கிறார் பெருமழைப்புலவர்.

மாரியம்மனாக கண்ணகி

கண்ணகியை மாரியம்மனாகத் தற்காலத்தில் மக்கள் வணங்கி வருவதாக பெருமழைப்புலவர் கருதுகிறார். “அத்தெய்வத்தின் பெயர் அறியாமையின் தாமே ஒரு முலையிழந்த நங்கை என ஒரு பெயர் வைத்துக்கொண்டார். இப்பெயர் தாமே ஒற்றை முலைச்சி எனப் பிற்காலத்தில் இத்தெய்வத்திற்குப் பல்வேறு இடங்களில் வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. இப்பெயருடைய தெய்வம் கண்ணகித்தெய்வம் என்றறியப்படாமல் வேறு தெய்வமாகக் கருதி மக்கள் வழிபட்டு வந்தனர். இத்தெய்வம் மழைவளம் வேண்டி வழிபாடு செய்யப்பட்டமையின் மாரியம்மன் என்னும் பெயரானும் வழங்கப்பட்டு வருவதாயிற்று என எண்ணுதற்கு இடமுள்ளது”[98]

மாதவி

மாதவிப் பாத்திரம் பற்றியும் ஆங்காங்கே எடுத்துரைத்துள்ளார் பெருமழைப்புலவர். அவள் நடன மங்கை என்பதால் அவளின் கண்களைக் கொண்டே, அவற்றின் அசைவினைக் கொண்டே, அவளின் தன்மைகளை அறிவிக்கிறார் பெருமழைப்புலவர்.

“மாதவி ஆடிய கூத்தின்கண் அவள் கண்கள் கோவலன் நெஞ்ச முழுவதும் கவர்ந்து கொண்டன எனக் காரணம் தோன்ற ‘மாமலர் நெடுங்கண்

மாதவி மாலை’ என அடிகளார் விதந்தோதுகின்ற நயமுணர்க. அவனையன்றி மற்றொருவனை விரும்பி நோக்காத சிறப்புடைய கண் என்பது நினைந்து அடிகளார் மாமலர் நெடுங்கண் மாதவி என்று விதந்தனர் எனினுமாம்”[99] என்று மாதவியின் கண்கள் தூய்மை உடையனவாக விளங்குகின்றன.

மற்றொரு இடத்தில் மாதவியின் கண்களுக்கு இளங்கோவடிகள் காட்டும் அடைமொழிகள் கொண்டு அவளின் பாத்திர நலனைக் காட்டுகிறார் பெருமழைப்புலவர்.

“அரங்கேற்றுக் காதையில் பூம்புகார் பொற்றொடி மாதவி தன் வாக்கினால் ஆடரங்கின்மிசை வந்து பாடி ஆடியபொழுது அவள் தன் கண்வலைப்பட்டு கோவலன் மாலை வாங்கி அவள் மனை புகுந்தான் என்பார் அடிகளார். அங்கும் அவளை மாமலர் நெடுங்கண் மாதவி என்றே அழைத்தனர். அக்கண் வலையறுத்துப் புறப்படும் இற்றை நாளினும் அவள் மாமலர்க் கண் மாதவியாகவே இருந்தாள் என்பார். மாமலர்க்கண் மாதவி என்றே குறித்தார்”[100]

இவ்வாறு மாதவியின் கண்கள் கொண்டே அவளின் பாத்திரத் தன்மைகளை அளந்து உரைக்கிறார் பெருமழைப்புலவர். மாதவி கோவலனை விட்டுப் பிரியும் நிலையில் அவளுக்காக இரங்கி நிற்கும் நிலையில் பெருமழைப் புலவரின் உரை அமைகின்றது.

“கோலவன் பாடிய காவிரியை நோக்கினவும், கானல்வரிப் பாணியும் களவொழுக்கத்தே நின்ற தலைவன் கூற்றாக அமைதலின் இவன் தன் மேலன்பினலன். மனமாறுபட்டு மற்றொருத்தியைத் காதலித்தமையால் அவ்வுணர்ச்சி காரணமாக இங்ஙனம் பாடினன் என்று மாதவி கருதினள். வாய்மையில் ஊழின் வலிமைக்கு இஃதொன்று சிறந்த எடுத்துக்காட்டு.

ஊழ்வினை உருத்து வந்தூட்டுங்காலத்தே ஊட்டப்படுபவர் மனத்தையே தன் வசமாக்கிக் கொள்ளும் என்பதனைப் பேதைப் படுக்கு இழவூழ்" எனவரும் திருவள்ளுவனார் மொழியாலும் உணரலாம்"[101] என்ற பகுதியில் மாதவியின் ஊழ்வினை அவளைக் கோவலன் மீது சந்தேகம் ஏற்பட வைத்தது என்று காட்டுகிறார் பெருமழைப்புலவர்.

மேலும் அவளின் பிரிவு நிலைக்கு "அளியளோ! அளியள்! மாமலர் நெடுங்கண் மாதவி. மாசு சிறிதேனும் இல்லாத பேரன்புடையள். கற்புடைத் தெய்வம். இம்மாதவி இத்தககைய தூய நெஞ்சுடையாள் தன்னைத் தானே தீய நெஞ்சுடையவளாகக் காட்டத் துணிந்துவிட்டாள்"[102] என்ற பகுதி மாதவிக்கு ஏற்பட்ட பிரிவு கருதி இரங்கும் நிலைப்பாடு உடையதாக உள்ளது.

மாதவி, கோவலன் பிரிவிற்கு இவர்களின் இருவரின் ஊழ்வினையே காரணம் என்று இளங்கோவடிகளின் படைப்பு நலத்தைக் காட்டி முடிவிற்கு வருகிறார் பெருமழைப்புலவர்.

"மாயத்தாளாகலின் தான் ஒன்றின்மேல் வைத்துப் பாடினாள் என்று அவள் மனம் மாறுபட்டாளாகக் கருதிய கோவலன் அவள் கணிகையாதலை நினைவு கூர்ந்து அவட்கி∴தியல்பு என வெறுத்துக் கூறினன். அடிகளார் இ∴து அவள் பிழையன்று ஊழின் பிழையே என்று இரங்குவார். 'ஊழ்வினை வந்துருத்தது ஆகலின் என்று ஏதுவை விதந்தோதினார். மற்று மாதவிதான் அளியல் தான் ஒன்றின் மேல் மனம் வைத்தவள் போலத் தனதிசையாலே காட்டினள் அன்றி அவள் நெஞ்சம் சிறிது மாறுபட்டாளில்லை என அறிவுறுத்துவார். அவளை உவவு உற்ற திங்கள் முகத்தாள் என்று விதந்தெடுத்தோதுமாற்றால் காதலின் நிறைவைக் காட்டினர்.மற்று அடிகளார் ஊழ் காட்டும் கருத்தினால் மாதவி

குற்றமற்ற கோலவன் வரிப்பாடலில் அவனுக்கேலாத மறுவொன்று கண்டமைக்குக் காரணம் அவளுக்கும் ஊழ்வினை வந்துருத்ததே ஆகும் என யாம் ஊகித்துக் கோடல் அடிகளார் திருவுளத்திற்கு ஒக்கும் என்க”[103]

இவ்வகையில் கோவலன் மாதவியை விட்டுப் பிரியும் நிலையில் மாதவியின் நிலைக்காக இரங்கி உரை செய்துள்ளார் பெருமழைப்புலவர்.

கவுந்தியடிகள், மாடல மறையோன் பாத்திர இயல்புகள்

சிலப்பதிகாரத்தில் குறிக்கத்தக்க துணைப் பாத்திரங்களாக விளங்குவன கவுந்தியடிகள் பாத்திரமும் மாடல மறையோன் பாத்திரமும் ஆகும். இப்பாத்திரத்தின் இயல்புகளை ஆங்காங்கே தன் உரையில் காட்டிச் செல்கிறார் பெருமழைப் புலவர்.

“சிலப்பதிகாரத்தே சான்றாண்மை மிக்கவராகக் காணப்படுவோர் கவுந்தியடிகளாரும், மாடல மறையோனுமே யாவர். இவ்விருவரும் தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர்கள் ஆவர். இளங்கோவடிகள் தாம் உலகுக்குணர்த்தக் கருதிய அறிவுரைகள் பலவற்றை இவர் கூற்றாகவே அறிவுறுத்துதல் காணலாம். இவர் வாணிகப் பரிசிலர் அல்லர். பட்டாங்கு கூறுமியல்புடையோர்”[104] என்ற நிலையில் இவ்விரு பாத்திரங்களின் பண்புகளைக் காட்டுகின்றார் பெருமழைப்புலவர்.

“கவுந்தியடிகளார் செய்தி மதுரைக் காண்டத்தில் புறஞ்சேரி இறுத்த காதையோடு முடிவுற்றது. கவுந்தியடிகளாரை யாம் முதன் முதலாகப் புகார் காண்டத்திலே நர்டுகாண் காதையில் கோவலனோடும் கண்ணகியோடும் சென்று காவிரிக்கரையில் ஒரு தவப்பள்ளியிலே அவர்களோடே கண்டு

அடிதொழுகின்றோம். அவ்விடத்தினின்றும் மதுரை மாநகரத்துப் புறஞ்சேரி காறும் அம்மாதவத்தாட்டியின் அமிழ்தம் போன்ற அறவுரை பலவற்றையும் யாமும் கேட்டு அகமகிழ்கின்றோம். உறுதிப் பொருள் பலவும் கண்டு பயனும் பெறுகின்றோம். கவுந்தியடிகளார் கண்ணகியை இடைக்குல முதுமகளாகிய மாதரியின்பால் அடைக்கலமீந்த பின்னர் அக்கவுந்தியடிகளாரை யாம் காண்கின்றோமிலம். அவர் நிலை என்னாயிற்று என்றும் அறிகின்றிலேம். கவுந்தியடிகளாரோடு மிருக்குங் செவ்வியிலேயே மாடல மறையோன் என்னும் இவ்வந்தணனை முதன்முதலாகக் காண்கின்றோம்”[105] என்று காப்பியத்தின் முற்பகுதியில் அறம் கூறும் அருமைப் பண்புகளைப் பெற்றவராகக் கவுந்தியடிகள் விளங்குகிறார். அவரின் பாத்திரப்பகுதி நிறைவு பெறும் நிலையில் அவரின் அறம் கூறும் பண்புகளை ஏற்று அதன் பிறகு காப்பியத்தை நடத்துவதாக அமைவது மாடல மறையோன் பாத்திரமாகும். இவ்வாறு காப்பியத்தின் முழுப்பகுதிக்கும் அறம் உரிய நிலையில் உரிய பாத்திரங்கள் கொண்டு எடுத்துரைக்கப்பெற்று கொண்டே வரப்பெற்றுள்ளது.

மாடல மறையோனின் பண்புகள் பற்றி வஞ்சிக்காண்டத்திலும் எடுத்துரைத்துள்ளார் பெருமழைப்புலவர். “செங்குட்டுவன் வட யாத்திரை போனவன் மீண்டு வரும்போது இம்மாடலன் அவ்வரசனைக் கண்டு வாழ்த்துகிறான். தமிழகத்தே நிகழ்ந்த அரசர் செய்திகள் பலவற்றையும் இம்மறையவன் வாயிலாகவே அம்மன்னவனும் அறிந்துகொள்கிறான். இக்காதையிலே (நீர்ப்படைகாதை) இம் மாடலன் வாயிலாக நாம் அறிந்து கொள்கிற செய்திகளும் சாலப் பலவாம். அடைக்கலமிழந்தமையால் ஆற்றாது மாதவி என்னும் இடைக்குல மடந்தை இடையிருள் யாமத்துத் தீப்பாய்ந் துயிர் நீத்த செய்தியும், கவுந்தியடிகளார் என்னோடு இவர் வினை உருத்ததோ என

உண்ணநோன்போடு உயிர் பதிப் பெயர்த்த செய்தியும் கோவலன் தந்தையும் கண்ணகி தந்தையும் புண்ணியதானம் புரிந்து துறவறம் புகுந்தமையும் இருவர் தாயரும் ஆற்றாமையால் இறந்துபட்ட செய்தியும், மாதவி மடந்தை மணிமேகலையோடு போதித்தானம் புகுந்து பிக்குணிகளான செய்தியும் இன்னோரன்ன பிற செய்திகளும் இம்மாடலன் கூறியிரானாயின் யாம் எங்ஙனம் அறியக் கூடும்?”[106] என்ற பகுதியில் சிலப்பதிகாரத்தில் கோவலனின் இறப்பினால் ஏற்பட்ட துன்ப விளைவுகளை எடுத்துரைக்கும் தூதுவனாக மாடலன் மறையோன் விளங்குகிறான்.

மாடல மறையோன் சேரனிடம் சொன்ன ‘மாதவி மடந்தை கானற் பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது என்ற சிலப்பதிகாரச் செய்தி அடங்கிய ஒப்பற்ற ஒரு தொடர் சிலப்பதிகாரத்தின் தன்மை, நன்மை, உண்மை ஆகியனவற்றை விளக்கி நிற்பதாக விளங்குகின்றது. இத்தொடரை ஆராய்ந்து சில முடிவுகளைப் பெறுகிறார் பெருமழைப்புலவர்.

“இம்மாடல மறையோன் கங்கைக் கரை மருங்கிருந்த செங்குட்டுவன் அரசவை புகுந்து அரசனை வாழ்த்தும் பொழுது,

“வாழ்க எங்கோ மாதவி மடந்தை

கானற் பாணி கனக விசயர்தம்

முடித்தலை நெரித்தது” (சிலப்:27:49-51)

என விடுகதை கூறுவார் போன்று ஒரு செய்தியைச் செங்குட்டுவனுக்கு கூறி வைத்தனன். அதன் பொருளறியாது மயங்கிய மன்னவன் ‘நகைத் திறம் கூறினை நான்மறையாளா! யாது நீ கூறிய வுரைப்பொருள் ஈங்கென்று அவனைத்

தனியிடத்தே வினவுகின்றான். அதற்கு விளக்கமாக மாடலன் புகார் நகரத்தே கோலவன் மாதவியோடு ஊடி மதுரை புகுந்த செய்தியையும் அறிவுறுத்துகிறான். இவன் அறியாவிடின் இச்செய்தியை அம்மன்னவனும் அறிய வழியில்லை. நீர்ப்படைக் காதையினின்று பின்வருகின்ற காதைகளிலும் அடிகளார் இம்மாடல மறையோன் கூற்றாகவே தாம் இவ்வுலகிற் அறிவுறுத்தும் அறவுரைகள் பலவற்றையும் அறிவுறுத்துகின்றனர். அவையெல்லாம் இக்காப்பியம் பயில்வார்க்கு உறுதியும் இன்பமும் பயக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை”[107]

மேற்குறித்த மாடல மறையோன் பாத்திரம் நிகழ்ச்சிகளை, தமிழகத்தின் நிலையை, கோவலன் உறவினர் தம் நிலையை எடுத்துரைத்து காப்பியத்தில் ஒரு செய்தித் தொடர்பாளனாக விளங்கி நிற்கிறான். இவ்வாறு பாத்திரப்படைப்பு நலன்களை உணர்ச்சி பொங்க எடுத்துரைத்து அப்பாத்திரங்களின் இயல்புகளை ஆராய்ந்து முடிவுகளைக் கண்டுள்ளார் பெருமழைப்புலவர்.

பிறர் கருத்தினை மறுக்கும் நடை

தமிழர்கள் பயன்படுத்திய இசைக்கருவி யாழ் என்பதாகும். இந்த யாழ் பற்றிய செய்திகள் திணை நிலை இலக்கியங்களான சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் அதிக அளவில் கிடைக்கின்றன. பெருமழைப்புலவர் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் வீணையே யாழ் என்ற கருத்துடையவராக உள்ளார். விபுலானந்த அடிகள் இயற்றிய யாழ் நூல் இதனின்று மாறுபடுவதாக உள்ளது. விபுலானந்த அடிகள் யாழ் என்பதை வீணையின் வேறுபட்ட இசைக்கருவியாகவும், அது தமிழகத்தில் வழக்கொழிந்துவிட்டது என்ற அடிப்படையில் அதனை, மீட்டெடுத்து வடிவமைக்கும் முயற்சியிலும்

ஈடுபட்டார்.இவரின் முயற்சி சரியானது அல்ல என்ற கருத்துடையவராக பெருமழைப்புலவர் விளங்குகிறார்.

“ஒப்பற்ற இசைக் கருவிகளாக வரலாறறியாத காலந்தொட்டுத் தமிழகத்திலே வழங்கி வருகின்ற குழலையும் யாழையும் முதன் முதலாகக் கண்டுபிடித்த பெருமை நிரலே முல்லை நில மக்களாகிய ஆயர்க்கும் குறிஞ்சி நிலமக்களாகிய வேட்டுவர்க்குமே உரியதாம் என்னும் ஒருண்மையை மேலே காட்டிய பெரும்பாணற்றுப்படையினின்றும் யாம் தெரிந்துகொள்கின்றோம்.

காட்டின்கண் உலர்ந்த மூங்கிலிலே வண்டுகள் துளைத்த துளையின் வழியே காற்றுப் புகும்போது இன்னிசை பிறப்பதனை அறிந்த ஆயர்கள் அம் மூங்கிலைத் துணித்துத் தாமே தீக்கடை கோலாலே பல துளைகளையிட்டு ஊதிப் பல்வேறு வகையான இசைகளை எழுப்பி மகிழ்வாராயினர். அங்ஙனமே விலங்குகளை வேட்டையாடுவோர் வில்லினது நாணின்று அதனை விரலாற்றெறிக்கும்போது இன்னிசை பிறத்தலை அறிந்து அவ்வொலி தானும் உட்டுளையுடைய குமிழங்கொம்பை வில்லாக வளைத்துக்காட்டிய வழி, பின்னும் இனிமையுடைய தாதலை யுணர்ந்த பின்னரே அதனையும் ஓரிசைக் கருவியாக ஆயர்கள் பயன்படுத்தலாயினர்.

இனி, குழலிலே பல துளையிடுவதன் வாயிலாய்ப் பல்வேறிசைகளை உண்டாக்குதல் கூடுமாகலான் இக் கூழாரிடையன் தானே இயற்றிக் கொண்ட கருந்துளைக் குழலின் குரல் துத்தம் முதலிய பல்வேறு இசைகளை எழுப்பிப் பாலைப்பண்ணை வாசித்தல் பொருந்துமன். குமிழங்கொம்பிற் காட்டிய ஒற்றை நாணில் (நரம்பில்) பல்வேறு இசை வேண்டுகின்ற குறிஞசிப்பண்ணை எழுவி இசைத்தான் என்றல் பொருந்தாதென்னின், அறியாது கூறினை, அவ்வொற்றை

நரம்பில் ஏழிசையும் எஞ்சாது பிறப்பித்தல் கூடும். எங்ஙனம் எனின், நாண்குரலைக் குரவிசையாகச் சுதிசெய்து கட்டிய பின்னர்-வில்யாழினது ஒரு நுனியை மார்பிலே ஊன்றவைத்து மற்றொரு நுனியை இடக்கையாற் றழுவிக்கொண்டு தெறிக்குங்கால் அவ்விடக்கை விரலாலே கீழ்நோக்கி நரம்பை வில்லில் அழுத்த ஒலி வேறு படுமன்றே? இங்ஙனமே கீழ்க்கீழ் இறங்கி ஆறிடங்களிலே நரம்பை அழுத்தி வலக்கை விரலாற் றெறிக்க எஞ்சிய ஆறிசைகளும் பிறக்குமாதலின் இவ்வாற்றானே அவ்விடையன் குறிஞ்சிப்பண் இசைத்தனன் என்க. இந் நுணுக்கமறியாது ஆசிரியர் விபுலானந்தவடிகளார் இவ்வில் யாழைப்பற்றிப் பயனிலாது தம் மனம் போனவாறு பொருந்தாத கற்பனை பலவும் செய்து போந்துளார். அதனை அவர் தம் யாழ் நூலிலே காண்க."[108]

யாழின் பெயரை வீணை என்ற வடமொழியாக மாற்றி அதனையே இக்காலத்துப் பயில வழங்குதல் போன்று பழைய உரையாசிரியர் காலத்தே குழல் என்னும் இனிய தமிழ்ப்பெயரை விடுத்து அதனை 'வங்கியம்' என்று இசைவாணர்கள் பயில வழங்கியமையால் அடியார்க்கு நல்லார் குழல் என்ற தமிழ்ச் சொல்லிற்கு வங்கியம் எனப்பொருள் எழுதுதல் வேண்டிற்று. இச்சொல் நூலின்கண் யாண்டும் காணப்பட்டிலது"[109] என்ற நிலையில் குழலையும், யாழையும் தமிழர்கள் மரபு சார்ந்த இசைக்கருவிகளாகக் காட்டி, அவற்றின் எச்சங்கள் இன்னும் தமிழகத்தில் இருப்பதையும் காட்டுகின்றார் பெருமழைப்புலவர்.

இதனையே மற்றொரு இடத்திலும் வலியுறுத்தி உரைக்கின்றார் பெருமழைப்புலவர். "ஈண்டு அடிகளார் யாழின் தோற்றத்திற்குப் புதுமணக்

கோலம் பூண்ட மகளிரை உவமையாக்குதலின் அவர் கூறும் யாழ் இலக்காலந்தே யாழ்ப்புலவர் கைக்கொண்டுள்ள யாழ் போலவே இருந்திருத்தல் வேண்டும் என்பது தேற்றம். தவத்திரு விபுலானந்த அடிகளார் வளைந்த காம்பையுடைய அகப்பை வடிவில் சித்திரித்துக் காட்டுகின்ற யாழ் உறையின் புகுத்திப் பார்க்குமிடத்து யாதானுமொரு மூடையின் வடிவமாகத் தோன்றுவதல்லது மணமகளிரின் கோலம்போல் வனப்புடைத்தாகக் காணப்படா தென்பதனை அவர் யாழ் நூலிற் காட்டியுள்ள யாழ் வடிவங்களை நோக்கியுணர்க. திரு. டாக்டர் ஆ.அ. வரகுண பாண்டியன் என்னும் பேரறிஞர் பெரிதும் முயன்று ஆராய்ந்து எழுதிய “பாணர் கைவழி” என்னும் யாழ் நூலில் சிலப்பதிகாரக் காலத்து யாழ் இற்றை நாளிற் காணப்படும் யாழ் போலவே இருந்தது என முடிவு செய்துள்ளார். அவர்க்குத் தமிழுலகம் பெரிதும் நன்றி செலுத்தற்பாலதாம். அறிய விரும்புவோர் ˙அந்நூலை யோதி அறிக. ஈண்டுரைப்பின் உரை விரியுமென்றஞ்சி விடுத்தோம்.”[110]

இதுபோன்று மத்தளம் என்பதை தற்கால மிருதங்கம் இசைக் கருவி என்று கொள்கிறார் பெருமழைப்புவலர். “இனி. ஈண்டு அடிகளார் தண்ணுமை என்றது மத்தளத்தை மத்து-ஓசை-தளம்-இடம். ஆகவே இசையிடனாகிய கருவிக்கட்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று என்பர் அடியார்க்கு நல்லார். இக்காலத்தார் ‘மிருதங்கம்’ என்பதும் இதுவேயாம். மத்தளம் முதலிய தோற்கருவிகள் மிடற்றுப்பாடல் கேட்போர்க்கு இனிது விளங்குதற் பொருட்டு அப்பாடலிசைக்கு அடங்கி ஒலித்தல் வேண்டுமாதலின் அவற்றைத் தாழ்ந்த இசையுடையனவாகச் சுதி கூட்டிக் குயிலுவர். ஆதலின் , தாழ்குரற்றண்ணுமை என்றார். தண்ணுமை முதலிய தோற்கருவிகளைச்

சுதிகூட்டுங்கால் அவற்றின் இடக்கண் இளியாய் (ப) வலக்கண் குரலாக (ச) க் கூட்டவேண்டும். என்பர். இதனை,

“இடக்க ணிளியாய் வலக்கண் குரலாய்

நடப்பது தோலியற் கருவி யாகும்”

எனவருஞ் செய்யுளானும் (சிந்தா-செய் 475-நச்சி உரை) அறியலாம்”[111]

இவ்வாறு பலரின் கருத்துகளை நாகரீகமாக மறுத்து உரைக்கும் உரைநடைப் பாங்கும் பெருமழைப்புலவரிடத்தில் காணப்படுகிறது.

உவமைகள் கொண்ட நடை

வஞ்சிக்காண்டம் தேவையா என்று ஆராயும்போது வஞ்சிக்காண்டம் சிலப்பதிகாரத்துடன் இணைந்த பகுதியே என்று பெருமழைப்புலவர் குறிப்பிட்டு அதனை ஒரு உவமை காட்டி விளக்குகிறார்.

“இச்சிலப்பதிகாரத்தின் இறுதிக் காண்டமாகிய இவ்வஞ்சிக்காண்டமோ தஞ்சையில் பெருவுடையார் திருக்கோயிலுக்கு இராசராசன் என்றும் வேந்தர் பெருமான் எடுத்த உலகப் புகழ் பெற்ற வானளாவிய கலைவளம் கெழுமிய கோபுரமே போல் அடிகளாருடைய வித்தப் புலமை வளனெலாம் விளங்க நிவந்து நின்று திகழ்கிறது”[112] என்று ஒப்பற்ற உவமை ஒன்றால் வஞ்சிக்காண்டம் இன்றியமையாதது என்பதை விளக்குகிறார் பெருமழைப்புலவர்.

இலக்கண நடை

பெருமழைப்புலவர் தொல்காப்பியம், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற பல இலக்கண நூல்களைக் கற்றுத் தெளிந்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் இலக்கண அமைப்புகள் வருமிடத்தில் அவற்றிற்கு உரை எழுதும்போது இலக்கணச்சுவையுடன் உரைசெய்கின்றார். இதற்கான சான்றுகள் பின்வருமாறு. வஞ்சித்திணை பற்றிய குறிப்புகளைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் காட்சிக்காதையில் எடுத்துரைத்துள்ளார்.

“ குடைநிலை வஞ்சியும் கொற்ற வஞ்சியும்

நெடுமா ராய நிலைஇய வஞ்சியும்

வென்றோர் விளங்கிய் வியன்பெரு வஞ்சியும்

பின்றாச் சிறப்பிற் பெருஞ்சோற்று வஞ்சியும்

குன்றச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்

வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன்

புட்கைச் சேனை பொலியச் சூட்டிப்

பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்

வாய்வாள் மலைந்த வஞ்சிசூ டுதுமெனப்

பல்யாண்டு வாழ்கநின் கொற்றம் ஈங்கென (சிலப்:25:141-145)

என்ற சிலப்பதிகார அடிகளுக்கு உரையினை இலக்கண நூல்களின் மேற்கோளுடன் தந்து நிற்கிறார் பெருமழைப்புலவர்.

“குடை நிலை வஞ்சி- குடைநாட்கோடல், “பெய்தா மஞ்சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக், கொய்தார் மன்னவன் குடைநாட்கொண்டன்று மாராயவஞ்சி – அரசனாற் சிறப்பெய்துநிலை, ‘மாராயம் பெற்ற நெடு

மொழியானும்' 'மறவேந்தனிற் சிறப்பெய்திய விறல்வேலோர் நிலையுரைத்தன்று' பெருவஞ்சி-பகைவர் நாட்டைக் கொளுத்துதல், 'முன்னடையார் வள நாட்டைப் பின்னருமுடன் றெரிகொளீஇ யன்று' பெருஞ்சோற்று வஞ்சியும் - வீரர்களுக்குப் பெருஞ்சோறளித்தல். பிண்டமேய பெருஞ்சோற்றுநிலையும்' 'திருந்தார் தெம்முனை தெறுகுவ ரிவரெனப, பெருஞ்சோ றடவர் பெறுமுறை வகுத்தன்று' கொற்றவள்ளை-அரசன் புகழைக் கூறுவதுடன் பகைவர் நாடு அழிந்ததற்கு இரங்கள் 'குன்றாச் சிறப்பிற்கொற்றவள்ளையும்' மன்னவன் புகழ்கிளந், தொன்னார் நாடழி பிரங்கின்று வடகர் போகிய இடையில் முரிதல் இல்லாத (பகைவர்-முதுகிட்டுப் போதற்குக் காரணமான எனினுமாம், 'வட்கர் போகிய வளர் இளம் போந்தை என வருதலும் காண்க. அரசர்கள் தமக்குரிய அடையாளப் பூக்களோடு வெட்சி முதலிய உரிப்பொருட் இயன்ற மலரைச் சூடிக்கோடல் வழக்கம். இதனை- 'பொலந் தோட்டுப் பைந்தும்மை மிசை அலங்குளைய பனைபோழ் செறீஇ' எனவும், 'வேம்பின் துண்டளிர் நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து' எனவும் வருவனவற்றலுணர்க"[113] இதன்வழி இலக்கணச் சார்புடன் உரை செய்யும்போது இலக்கண மேற்கோள்களை அங்கேயே காட்டி உரை செய்யும் நிலைப்பாடு பெருமழைப்புலவரின் நிலைப்பாடாக உள்ளது என்பதை அறியமுடிகின்றது.

இவ்வாறு பெருமழைப்புலவர் விருத்தி உரைப் பண்புகளுடனும், இலக்கிய, இலக்கணச் செறிவுடனும் பாத்திரத்தன்மை வெளிப்படும் நிலையிலும் சிலப்பதிகாரத்திற்கு உரை கண்டுள்ளார் என்பது பெறத்தக்க முடிவாக உள்ளது.

தொகுப்புரை

- தமிழில் உரையின் வகைகள் இரண்டெனக் கொள்ளப்படுகிறது. ஒன்று காண்டிகை உரை மற்றது விருத்தி உரை என்பனவாகும் அவையாகும். இவற்றில் காண்டிகை உரை என்பது கருத்துரைத்தல், பதப்பொருள் தருதல், எடுத்துக்காட்டு தருதல், வினா, விடை ஆக்கல் என்ற பண்புகளை உடையதாகும். விருத்தி என்பது பாடற்பகுதியின் உட்பொருளை விளக்குதல், மேலும் இன்றியமையாதன எனக் கருதப்படும் கருத்துகளை வழங்குதல், பிற உரை ஆசிரியர்களின் கருத்துகளை எடுத்து மொழிந்து ஐயம் அகற்றும் ˙வகையில் உண்மையைச் சொல்லல் என்ற தன்மைகள் உடையதாகும்.
- ஆய்வின் களத்தில் அமைந்துள்ள அரும்பத உரைகாரர் உரை காண்டிகை உரையாக அமைந்துள்ளது. அடியார்க்கு நல்லார் உரையும், பெருமழைப்புலவர் உரையும் விருத்தி உரைகளாக அமைகின்றன. அரும்பத உரைகாரரின் நடையியல் திறம் என்பது கருத்துரைத்தல், பதப்பொருள் தருதல், வினாவிடை ஆக்கல் ஆகிய பண்புகளை உடையதாக உள்ளது. மேலும் அரும்பத உரைகாரரின் நடை என்பது இலக்கிய நடையாகவும், தொகுத்துரைத்தல் நடையாகவும், விளங்குகின்றது.
- அடியார்க்கு நல்லார் தம் உரையின் நடைத்திறம் என்பது கருத்துரை, பதப்பொருள், வினாவிடை ஆகியவை கொண்டதாக விளங்குகின்றது. மேலும் இலக்கிய நடைப் பாங்கினதாகவும், உவமைகளை உள்ளடக்கியதாகவும், பொருள் இலக்கண

வரையறைகளைச் சிலப்பதிகாரத்தில் காட்டுவதாகவும், முடிவு காணும் போக்குடையதாகவும், உரைக்கு உரை வரையும் பாங்கினதாகவும் அமைகின்றது. மேலும் வேண்டிய இடங்களில் விரிவும் ஆழமும் உடையதாகவும் உள்ளது.

- பெருமழைப்புலவரின் உரை கருத்துரை, பதப்பொருள், வினாவினை ஆகிய காண்டிகைப் பண்புகளுடன் இலக்கியப் பாங்கு, பாத்திரப் படைப்பு ஆராய்ச்சி, பிறர் கருத்துகளை மறுத்துத் தன் கருத்தை நிலைநாட்டல், உவமைகளை இணைத்தல் போன்றவற்றால் விருத்தி உரைப் பண்புகள் உடையதாக அமைகின்றது.

சான்றெண் விளக்கம்

1. கு.பகவதி, திறனாய்வு அணுகுமுறைகள், ப.278
2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.602
3. மேலது, ப.603
4. மா.இராமலிங்கம், புதிய உரைநடை ப.9
5. பவணந்தி முனிவர், நன்னூல், நூற்பா.21
6. மேலது, நூ.21
7. மேலது, நூ.22
8. மேலது, நூ.23
9. சிலப். மூ. அரும்.அடியா.உரையும், ப.79
10. மேலது, ப.77
11. மேலது, ப.481
12. மேலது, ப.583
13. மேலது, ப.33
14. மேலது, ப.77
15. மேலது, ப.141
16. மேலது, ப.57

17. உ.வே.சாமிநாதையர், (ப), சிலப்பதிகாரம், முகவுரை, ப.19

18. சிலப்.மூ, அரும்.அடியா, உரையும், ப.151

19. மேலது, ப.137

20. சிலப். 7:9

21. சிலப்.மூ, அரும்.அடியா, உரையும், ப.211

22. மேலது, ப.360

23. ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ப.213

24. சிலப்.மூ, அரும்.அடியா, உரையும், ப.40

25. மேலது, ப.121

26. மேலது, ப.10

27. மேலது, ப.11

28. மேலது, ப.29

29. மேலது, ப.197

30. மேலது, ப.375

31. மேலது, ப.377

32. மேலது, ப.375

33. மேலது, ப.386

34. மேலது, ப.426

35. மேலது, ப.405

36. மேலது, ப.426

37. மேலது, ப.429

38. மேலது, ப.188

39. மேலது, ப.194

40. மேலது, ப.194

41. மேலது, பக்.83-84

42. மேலது, பக்.83-84

43. மேலது, ப.453

44. மேலது, ப.102

45. மேலது, ப.14

46. மேலது, பக்.14-15

47. மேலது, ப.17

48. மேலது, ப.102

49. மேலது, ப.367

50. மேலது, ப.84

51. மேலது, ப.102

52. மேலது, ப.30

53. மேலது, ப.31

54. மேலது, ப.31

55. மேலது, ப.31

56. மேலது, பக்.446-447

57. மேலது, ப.9

58. மேலது, ப.10

59. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். அணிந், ப.10

60. மேலது, ப.9

61. மேலது, ப.18

62. மேலது, ப.20

63. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். மதுரை. அணிந், ப.8

64. மேலது, ப.261

65. மேலது, ப.169

66. மேலது, ப.302

67. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். வஞ்சி. அணிந், பக்.9-10

68. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார். ப.140

69. மேலது, ப.199

70. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். மதுரை. ப.131

71. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார். ப.158

72. மேலது, பக்.163-164

73. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். வஞ்சி, ப.98

74. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார், ப.159

75. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். மதுரை. ப.255

76. மேலது, ப.77

77. மேலது, ப.54

78. மேலது, ப.55

79. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். வஞ்சி, அணிந். ப.13

80. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார், ப.71

81. மேலது, ப.122

82. மேலது, பக்.301-302

83. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார், ப.57

84. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். மதுரை. அணிந்.ப.5

85. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். வஞ்சி, அணிந். ப.13

86. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார், ப.65

87. மேலது, ப.75

88. மேலது, ப.75

89. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். மதுரை. அணிந்.பக்.12-13

90. மேலது, ப.13

91. மேலது, பக்.13-14

92. மேலது, ப.13

93. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார், ப.65

94. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். மதுரை. ப.265

95. மேலது, ப.268

96. மேலது, ப.15

97. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். வஞ்சி, அணிந். ப.11

98. மேலது, ப.11

99. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார், ப.149

100. மேலது, ப.243

101. மேலது, ப.276

102. மேலது, ப.276

103. மேலது, ப.294

104. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். மதுரை. அணிந், ப.14

105. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். வஞ்சி, அணிந். ப.18

106. மேலது, பக்.18-19

107. மேலது, ப.19

108. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். புகார், பக்.113-114

109. மேலது, ப.115

110. மேலது, ப.255

111. மேலது, ப.120

112. பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சிலப். வஞ்சி, அணிந். ப.15

113. மேலது, ப.45

முடிவுரை

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் என்னும் பெருமைக்குரியது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்திற்குக் காலம்தோறும் பல்வேறு உரைகள் தோன்றியுள்ளன. இதில் முதல் உரை எழுதிய பெருமைக்குரியவர் அரும்பத உரைகாரர் ஆவார். இவரைத் தொடர்ந்து உரை வரைந்தவர் அடியார்க்குநல்லார். இவர் தம் உரைகள் உ.வே. சாமிநாதையர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் இருபதாம் நூற்றாண்டில் சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை எழுதிய பெருமை பெருமழைப்புலவர் போ.வே.சோமசுந்தரனாரைச் சாரும்.

சிலப்பதிகார முதல் உரையாசிரியரான அரும்பத உரைகாரரின் பெயர் முதலான வரலாறு ஏதும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் இவர் தம் உரையின் வழி இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்றும் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் அறியமுடிகிறது.

அடியார்க்கு நல்லார் 'நிரம்பை' என்னும் ஊரில் பிறந்ததால் இவர் 'நிரம்பையர் காவலர்' என்று அழைக்கப்படுகிறார். இவர்தம் உரை இவரை சமண சமயத்தைச் சார்ந்தவராகக் கருத இடமளிக்கிறது.

பெருமழைப்புலவர் எனும் பொ.வே.சோமசுந்தரனார் 'ஆலங்காடு' என்னும் ஊரில் பிறந்தவர். திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தொடர்பால் ஏராளமான பழைய நூல்களுக்கு உரை கண்ட பெருமைக்குரியவர். இவர் சிலப்பதிகார உரை எழுத முற்படுகையில் இசைப்பேரறிஞர் இராமநாதரிடம் இசை குறித்து அறிந்து கொண்டு அதன் பின் உரை எழுதியுள்ளமை இவர்தம் உரையின் தனித்தன்மையைப் புலப்படுத்தும். வரலாற்று அடிப்படையில் உரைகளை ஆராயும் நிலையில் கால வாரியாக அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், பெருமழைப் புலவர் ஆகியோரின் உரைகள் அமைகின்றன.

உரையாசிரியர்களான அரும்பத உரைகாரர், அடியார்க்குநல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் ஆகிய மூவரும் உரை கூறும்

முறையில் தமக்கெனப் பொது உரை நெறிகளையும் சிறப்பு உரை நெறிகளையும் கையாண்டுள்ளனர்.

அரும்பத உரைகாரர் தமது உரையில் அரும்பொருள் காட்டும்போது பொது நிலையில் சுட்டாமல் சிலப்பதிகார காப்பிய அமைப்புமுறை அடிப்படையில் அரும்பதங்கள் சுட்டப்பட்டு அவை சிலப்பதிகாரச் சூழலுக்கு ஏற்ற நிலையில் விளக்கப்பெற்றுள்ளன. மேலும் நுட்பமான உரை அளித்தல், சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், இலக்கியத் தரமான உரை காணுதல் என்பன இவர்தம் உரை முறையின் தனித்தன்மையாகும்.

பொழிப்புரையில் ஒரு பொருள்பட அமைந்த அடிகளை ஒட்டுமொத்தமாகவும் ஒரே தொடரிலும் அரும்பத உரைகாரர் குறிப்பிட்டுள்ளார். வினை முடிவு காட்டும்போது நூறு அடிகளுக்கு உரிய பொருள் முடிவைக் கூட்டி முடிக்கும் உரை நிலையையும் அரும்பத உரையில் காணமுடிகின்றது.

அரங்கேற்று காதை உரையும் கானல்வரி உரையும் அரும்பதவுரையினின்று பெரிதும் மாறுபட்டு விரிந்த உரைப்பகுதிகளாக அமைகின்றன. இவ் உரையானது பல வரலாற்றுச் செய்திகளையும் நுட்பமான செய்திகளையும் உள்ளடக்கியுள்ளது.

இலக்கணப் பேரறிவு நிரம்பிய அரும்பத உரைகாரர் 33 இடங்களில் இலக்கணத்தை எடுத்துரைத்து மேற்கோள் உரை வரைந்துள்ளார். அதிலும் குறிப்பாக அகத்தியச் சொல்லதிகாரம் பற்றிய அரிய செய்தியை வெளிப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரும்பத உரைகாரர் இசையறிவு நிரம்பியவராக உள்ளதை அரங்கேற்றுக்காதைப் பகுதிக்கு எழுதிய இசைக்குறிப்பு, இசையின் வகைகள், இசைக்கருவியின் வகைகள், கலைஞர்களின் எண்ணிக்கை குறித்து அவர் எழுதிய உரைப்பகுதிகள் புலப்படுத்தும்.

அடியார்க்கு நல்லாரின் உரையானது முழுக்கட்டமைப்புள்ள உரையாகத் திகழ்கின்றது. இவர்தம் உரை நெறி சொற்பொருள் உரைத்தல், தொகுத்து உரைத்தல், இலக்கணக்குறிப்புத் தருதல், மேற்கோள் காட்டல் என்னும் அடிப்படையில் அமைந்துள்ளது. மேலும் இசைக்குறிப்புகளைத் தருதல், வடமொழி இலக்கியங்களை மேற்கோளாகச் சுட்டிப் பின்பு தமிழில் தருதல், கூத்துக்கலைச் செய்திகளைத் தருதல், உடல் கூற்றியல் செய்திகளைத் தருதல், தமிழ் மொழியின் மேன்மையினை உரைத்தல் போன்றவை சிறப்பு நெறிகளாக அமைந்துள்ளன.

அடியார்க்குநல்லார் அரங்கேற்று காதையில் மூல பாடத்தை முழுவதும் தந்துவிட்டு உரைப் பகுதிகளுக்கு பொருள் முடிவு கருதி சிற்சில அடிகளை இணைத்துப் பொருள் சொல்லும் முறையைக் கையாண்டுள்ளார். மேலும் சொற்பொருள் முடிவு கருதித் தலைப்பு இடுதல், காதைப் பொருளை அல்லது பகுதிப் பொருளைத் தொகுத்து உரைக்கும் முறையும் காணப்படுகின்றது.

அடியார்க்குநல்லார் இலக்கண அறிவு மிக்கவர். மேலும் பன்னூல் புலமை மிக்கவர் என்ப. இவர்தம் மேற்கோள் நூல்களான் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருமுருகாற்றுப்படை, மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, வளையாபதி, புறப்பொருள் வெண்பாமாலை போன்றவைப் புலப்படுத்தும்.

பெருமழைப் புலவரின் உரையானது மிகக் கட்டமைப்புள்ள உரையாகத் திகழ்கின்றது. இவர் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் உரையினைப் பெரிதும் தழுவியே உரைப் பொது நெறிகளைக் கையாண்டுள்ளார். சொற்பொருள் விளக்கம் அளித்தல், இலக்கணம் உரைத்தல், மேற்கோள் சுட்டல் போன்றன இவரின் உரைப் பொதுநெறிகளாக விளங்குகின்றன.

சிலப்பதிகார உரையாசிரியர்கள் தங்கள் காலத்திற்கு ஏற்றவாறு தேவையான விளக்கத்துடன் பொது மற்றும் சிறப்பு உரை நெறிகளைப் பின்பற்றி உரை வகுத்துள்ளனர்.

அரும்பத உரைகாரர், அடியார்க்குநல்லார், பெருமழைப்புலவர் பொ.வேசோமசுந்தரனார் உரைப் பகுதிகளில் பல நிலையில் ஒன்றுபட்ட தன்மையும் சில இடங்களில் வேறுபட்ட தன்மையும் காணப்பெறுகின்றன.

அடியார்க்குநல்லார், அரும்பத உரைகாரரை வழிமொழிந்து உரை கண்டுள்ளார். அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகிய உரையாசிரியர்களின் உரைகளை நன்கு கற்று பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் பொருத்தமான இடங்களில் ஒன்றுபட்டும் சில இடங்களில் வேறுபட்டும் உரை வரைந்துள்ளார்.

பழைய உரையாசிரியர்கள் இருவரையும் மறுக்கும் போக்கு, ஏதேனும் ஓர் உரையாசிரியரை மறுக்கும் போக்கு பொ.வே.சோமசுந்தரனார் உரையில் காணப்பெறுகின்றது. இதன் வழிப் பழைய உரைகாரர்களின் கருத்துகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பின்னை உரையாசிரியர்களுக்கு இல்லை என்பது புலனாகின்றது.

அரும்பத உரைகாரரின் உரையானது காண்டிகை உரையாக அமைந்துள்ளது. அடியார்க்கு நல்லார் உரையும் பெருமழைப்புலவர் உரையும் விருத்தி உரைகளாக அமைந்துள்ளன.

அரும்பத உரைகாரரின் நடையியல் திறமானது கருத்துரைத்தல், பதப்பொருள் தருதல், வினாவிடை ஆக்கல் முதலிய பண்புகளை உள்ளடக்கியதாக அமையப் பெற்றுள்ளது. அரும்பத உரைகாரரின் நடையானது இலக்கிய நடையாகவும் தொகுத்துரைக்கும் நடையாகவும் விளங்குகின்றது.

அடியார்க்கு நல்லாரின் நடைத் திறமானது கருத்துரை தருதல், வினாவிடையில் அமைதல், பதப்பொருள் கூறுதல் என்னும் அடிப்படையில் இலக்கிய நடைப் பாங்கினதாகவும் உவமைகளை உள்ளடக்கியதாகவும் பொருள் இலக்கண வரையறைகளைச் சிலப்பதிகாரத்தில் காட்டுவதாகவும் முடிவு காணும் போக்கு உடையதாகவும் உரைக்கு உரை காணும் பாங்கினதாகவும் அமைந்துள்ளது.

பெருமழைப் புலவரின் உரைநடையானது கருத்துரை தருதல், பதப்பொருள் கூறுதல், வினா விடை நடையில் அமைதல் என்னும் காண்டிகைப் பண்புகளுடனும் இலக்கியப் பாங்கு, பாத்திரப்படைப்பு ஆராய்ச்சி, பிறர் கருத்துகளை மறுத்துத் தன் கருத்தினை நிலைநாட்டல், உவமைகளோடு இணைத்தல் போன்றவற்றால் விருத்தி உரைப் பண்புகளுடன் அமைந்துளது. இதன்வழி ஒவ்வொரு உரையாசிரியருக்கும் தனித்த உரைநடைத்திறம் இருந்ததை அறியமுடிகிறது.

சிலப்பதிகார உரைகள் அவை தோன்றிய காலச் சமூகம், உரையாசிரியர்களின் சமயப்பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருத்தலைக் காணமுடிகின்றது.

மேலாய்வுக் களங்கள்

1. ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் சிலப்பதிகார உரைத்திறன்
2. சிலப்பதிகார உரையாசிரியர்களின் நடைக் கோட்பாடு

துணை நூற்பட்டியல்

முதன்மைச் சான்றாதாரம்

1. சிலப்பதிகாரம் அரும்பத உரைகாரர் அடியார்க்கு நல்லார் (உ.ஆ) சாமிநாதையர் உ.வே., (ப.ஆ) — சிலப்பதிகாரம், டாக்டர் உ.வே.சா.நூல் நிலையம், சென்னை-90. சூன் - 2008.

2. சோமசுந்தரனார்.பொ.வே., — சிலப்பதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை - 1, 1966

துணைமைச் சான்றாதாரங்கள்

1. அரவிந்தன், மு.வை, (ஆ)., — உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, மூன்றாம் பதிப்பு, 2014.

2. அருணாச்சலம்.மு — தமிழ் இலக்கிய வரலாறு, 14ஆம் நூற்றாண்டு, சாந்தி வித்தியாலயம், மாயூரம், 1969.

3. ஆதிநாராயணன்.கி — உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும், சித்திரா நிலையம், 7/40, கிழக்குச் செட்டித் தெரு, பரங்கி மலை, சென்னை - 16.

4. இளங்குமரன்.இரா., — அமிர்த சாகரனார் இயற்றிய யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்) திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1/40, பிரகாசம் சாலை, சென்னை மறுபதிப்பு – 1976

5. இளவரசு.சோம., நன்னூல் விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர், இ.ப - 1990.

6. இராகவையங்கார் ஆராய்ச்சித் தொகுதி, பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை – 1, 1994

7. இராமநாதன் (ப.ஆ)., இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதி, இன்ஸ்டிடியூட் ஆ∴ப் சவுத் இண்டியன் ஸ்டதஸ் சென்னை, மறுபதிப்பு. மார்ச் 1991

8. இராமலிங்கம்.மா இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை – 5, 1973.

9. மேலது புதிய உரைநடை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை – 5, 1982.

10. இராஜம். எஸ் (ப.ஆ) தொல்காப்பியம் (மூலம்) மர்ரே அண்டு கம்பெனி, 5, தம்புச் செட்டித் தெரு, சென்னை – 1, 1980.

11. ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1972.

12. சண்முகவேல்.கோ சிலம்பில் அரங்கேற்று காதையில் இசைப் பகுதிகள், மலர் பதிப்பகம், கோவி மாரி இல்லம், 11, இராசாளியார் நகர்,

சரபோசி மன்னர் கல்லூரி
தஞ்சாவூர் - 05.

13. சந்திரசேகர்.இரா., சரவணன்.ப — சிலப்பதிகாரத்தில் மெய்ப்பாடுகள், ராமையா பதிப்பகம், சென்னை, 2007.

14. சாமிநாதையர் உ.வே., — குறுந்தொகை மூலமும் உரையும் கபீர் அச்சுக் கூட்டம், சென்னை, 1995.

15. மேலது — சீவகசிந்தாமணி மூலமும், நச்சினார்க்கினியருரையும், ஸ்ரீ தியாகராசர் வெளியீடு, சென்னை, 1961.

16. சிவபெருமான் அ — தமிழும் அறிவியலும், கயிலாயநாதர் பதிப்பகம், குகையூர் - அஞ்சல், கல்லக்குறிச்சி (தாலு), விழுப்புரம், 2006.

17. சீத்தலைச் சாத்தனார் — மணிமேகலை, கழக வெளியீடு, சென்னை, 1955.

18. சீனிவாசன்.ரா — சங்க இலக்கியத்தில் உவமைகள், அணியகம், சென்னை, 1990.

19. சீனிச்சாமி.து — தமிழில் காப்பியக் கொள்கை முதற்பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர், 1994

20. சுந்தரமூர்த்தி.இ — நடையியல் சிந்தனைகள், என்.சி.பி.எச்.வெளியீடு, சென்னை, 1994.

21. சுப்பிரமணியன்.ச.வே — அடியார்க்கு நல்லார் உரைத்திறன், மெய்யப்பன் பதிப்பகம், 55, புதுத்தெரு, சிதம்பரம் - 1, 2000.

22. சுப்பிரமணியன்.பெ — பரிபாடல் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41,பி.சிட்கோ, இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 2004.

23. செகந்நாதன்.பொ — அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி, இரண்டாம் தொகுதி, மதுரை விவேகானந்த அச்சுக் கூடத்திலும், எக்ஸெல்லியர் பவர் அச்சுக் கூடத்திலும் பதியப்பட்டது, மார்ச்சு - 1944.

24. செந்தமிழ்ப்பாவை.சே (பதி) — பழந்தமிழ் உரையாசிரியர்களின் நடைக்கோட்பாடு, முத்தமிழ் பதிப்பகம், 1/200, D/12, குருகாலனி, தேவர்குளம் ரோடு, சிவகாசி - 626124.

25. செந்தமிழ்ப்பாவை.சே — சங்கப் பாடல்களில் மரபு மாற்றங்கள், தி பார்க்கர் பதிப்பகம், சென்னை - 14 2007.

26. செயபால்.இரா (உ.ஆ) — மதுரைக் காஞ்சி, கழக வெளியீடு, 522, டி.டி.கே.சாலை, சென்னை - 18 2008.

27. மேலது — திருமுருகாற்றுப் படை, கழக வெளியீடு, 522, டி.டி.கே.சாலை, சென்னை - 18 2007.

28. செயராமன்.நா., அரங்கேறிய ஆய்வுகள்,
குமரன் பதிப்பகம்,
மதுரை, 1985.

29. தட்சிணா மூர்த்தி.அ தமிழர் நாகரிகமும் பண்பாடும்,
யாழ் வெளியீடு,
சென்னை,
2005

30. மேலது ஐங்குறுநூறு மூலமும் உரையும்
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600098
ஏப்ரல் 2004

31. தாமோதரம் பிள்ளை.சி.வை., தொல்.பொரு.நச்சினார்க்கினியம்,
சென்னை.
1885.

32. துரைசாமி பிள்ளை ஔவை.சு., (உ.ஆ) புறநானூறு,
கழக வெளியீடு,
பகுதி 201-400,
சென்னை,
1972.

33. நச்சினார்க்கினியர் கலித்தொகை,
கழக வெளியீடு,
154, டி.டி.கே. சாலை,
சென்னை.
1999

34. நீதிவாணன்.ஜெ. நடையியல்,
மணிவாசகர் பதிப்பகம்,
1983

35. பஞ்சாங்கம்.க., சிலப்பதிகாரத் திறனாய்வுகள்,
மெய்யப்பன் தமிழாய்வகம்,
53 புதுத்தெரு,
சிதம்பரம், 2002.

36. பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள்,
சாரதா பதிப்பகம்,
எண்.3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு,
சென்னை - 600014
டிசம்பர் - 2002.

37. பாலசுப்பிரமணியன்.கு.வெ., நற்றிணை மூலமும் உரையும்
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 600098
ஏப்ரல் 2004.

38. பாலசுப்பிரமணியம் சிற்பி
சொ.சேதுபதி
புதிய தமிழ் இலக்கிய வரலாறு,
சாகித்திய அகாதெமி,
35, இரவீந்திரபவன்,
பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி-110 001,
2014.

39. பாலசுந்தரம்பிள்ளை.தி.சு (உ.ஆ) நாலடியார்,
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்,
சென்னை-18,
2007

40. பிள்ளை.கே.கே தமிழக வரலாறும் மக்கட்
பண்பாடும்,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை,
1971.

41. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
(உ.ஆ)
நற்றிணை,
கழக வெளியீடு,
சென்னை
ம.ப: 1967

42. புலியூர்க் கேசிகன் (உ.ஆ) சிலப்பதிகாரம் (தெளிவுரை)
தேனருவி பதிப்பகம்,
சென்னை
1958.

43. மோகன்.இரா.(ப.ஆ)
சொக்கலிங்கம்.ந (ப.ஆ)
உரை மரபுகள்,
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத் தெரு,
சிதம்பரம் - 608 001.

44. வேங்கடசாமி நாட்டார்.ந.மு — கட்டுரைத் திரட்டு,
நாட்டார் பதிப்பகம்,
சென்னை – 10, 1949.

45. மேலது — சிலப்பதிகாரம்,
தமிழ்மண் பதிப்பகம்,
2,சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர்,
சென்னை - 600017
2007.

46. மாணிக்கனார் வ.சுப — உரை நெறிகள்,
தமிழியல் ஓர் அகநோக்கு,
தா.ஏ.ஞான மூர்த்தி,
மணிவிழா மலர்,
2010.

அகராதிகள், நிகண்டுகள்

47. கலைக் களஞ்சியம் — தமிழ் வளர்ச்சிக் கழகம்,
தொகுதி - 1
சென்னை - 2
1960.

48. கழகப் புலவர் குழுவினர் — கழகத் தமிழ் அகராதி,
கழக வெளியீடு,
சென்னை
2010.

49. .... — மதுரைத் தமிழ்ப் பேரகராதி,
இரண்டாம் பாகம்,
சந்தியா பதிப்பகம்,
சென்னை - 83.

ஆங்கிலம் நூல்

50.Nilakanta Sastri.K.A — The Colas,
Madras Uhiversity,
Historical Series No.9
1975.

வரலாற்றியல் நோக்கில் சிலப்பதிகார உரைகள்

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பி.எச்.டி) பட்டத்திற்குப்
பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

பெ.குபேந்திரன்

பதிவு எண் : 0987

நெறியாளர்

பேரா. சே.செந்தமிழ்ப்பாவை

தமிழ்ப் பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத்தர மதிப்பீட்டில் ‘A+’ (CGPA.3.64) தகுதி பெற்றது மற்றும்
மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல்தரப் பல்கலைக்கழகத் தகுதி பெற்றது)

காரைக்குடி - 630 003

தமிழ்நாடு, இந்தியா

அக்டோபர் - 2019

முடிவுரை

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் என்னும் பெருமைக்குரியது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்திற்குக் காலம்தோறும் பல்வேறு உரைகள் தோன்றியுள்ளன. இதில் முதல் உரை எழுதிய பெருமைக்குரியவர் அரும்பத உரைகாரர் ஆவார். இவரைத் தொடர்ந்து உரை வரைந்தவர் அடியார்க்குநல்லார். இவர் தம் உரைகள் உ.வே. சாமிநாதையர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் இருபதாம் நூற்றாண்டில் சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை எழுதிய பெருமை பெருமழைப்புலவர் போ.வே.சோமசுந்தரனாரைச் சாரும்.

சிலப்பதிகார முதல் உரையாசிரியரான அரும்பத உரைகாரரின் பெயர் முதலான வரலாறு ஏதும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் இவர் தம் உரையின் வழி இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்றும் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் அறியமுடிகிறது.

அடியார்க்கு நல்லார் ‘நிரம்பை’ என்னும் ஊரில் பிறந்ததால் இவர் ‘நிரம்பையர் காவலர்’ என்று அழைக்கப்படுகிறார். இவர்தம் உரை இவரை சமண சமயத்தைச் சார்ந்தவராகக் கருத இடமளிக்கிறது.

பெருமழைப்புலவர் எனும் பொ.வே.சோமசுந்தரனார் ‘ஆலங்காடு’ என்னும் ஊரில் பிறந்தவர். திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தொடர்பால் ஏராளமான பழைய நூல்களுக்கு உரை கண்ட பெருமைக்குரியவர். இவர் சிலப்பதிகார உரை எழுத முற்படுகையில் இசைப்பேரறிஞர் இராமநாதரிடம் இசை குறித்து அறிந்து கொண்டு அதன் பின் உரை எழுதியுள்ளமை இவர்தம் உரையின் தனித்தன்மையைப் புலப்படுத்தும். வரலாற்று அடிப்படையில் உரைகளை ஆராயும் நிலையில் கால வாரியாக அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், பெருமழைப் புலவர் ஆகியோரின் உரைகள் அமைகின்றன.

உரையாசிரியர்களான அரும்பத உரைகாரர், அடியார்க்குநல்லார், பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் ஆகிய மூவரும் உரை கூறும்

முறையில் தமக்கெனப் பொது உரை நெறிகளையும் சிறப்பு உரை நெறிகளையும் கையாண்டுள்ளனர்.

அரும்பத உரைகாரர் தமது உரையில் அரும்பொருள் காட்டும்போது பொது நிலையில் சுட்டாமல் சிலப்பதிகார காப்பிய அமைப்புமுறை அடிப்படையில் அரும்பதங்கள் சுட்டப்பட்டு அவை சிலப்பதிகாரச் சூழலுக்கு ஏற்ற நிலையில் விளக்கப்பெற்றுள்ளன. மேலும் நுட்பமான உரை அளித்தல், சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், இலக்கியத் தரமான உரை காணுதல் என்பன இவர்தம் உரை முறையின் தனித்தன்மையாகும்.

பொழிப்புரையில் ஒரு பொருள்பட அமைந்த அடிகளை ஒட்டுமொத்தமாகவும் ஒரே தொடரிலும் அரும்பத உரைகாரர் குறிப்பிட்டுள்ளார். வினை முடிவு காட்டும்போது நூறு அடிகளுக்கு உரிய பொருள் முடிவைக் கூட்டி முடிக்கும் உரை நிலையையும் அரும்பத உரையில் காணமுடிகின்றது.

அரங்கேற்று காதை உரையும் கானல்வரி உரையும் அரும்பதவுரையினின்று பெரிதும் மாறுபட்டு விரிந்த உரைப்பகுதிகளாக அமைகின்றன. இவ் உரையானது பல வரலாற்றுச் செய்திகளையும் நுட்பமான செய்திகளையும் உள்ளடக்கியுள்ளது.

இலக்கணப் பேரறிவு நிரம்பிய அரும்பத உரைகாரர் 33 இடங்களில் இலக்கணத்தை எடுத்துரைத்து மேற்கோள் உரை வரைந்துள்ளார். அதிலும் குறிப்பாக அகத்தியச் சொல்லதிகாரம் பற்றிய அரிய செய்தியை வெளிப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரும்பத உரைகாரர் இசையறிவு நிரம்பியவராக உள்ளதை அரங்கேற்றுக்காதைப் பகுதிக்கு எழுதிய இசைக்குறிப்பு, இசையின் வகைகள், இசைக்கருவியின் வகைகள், கலைஞர்களின் எண்ணிக்கை குறித்து அவர் எழுதிய உரைப்பகுதிகள் புலப்படுத்தும்.

அடியார்க்கு நல்லாரின் உரையானது முழுக்கட்டமைப்புள்ள உரையாகத் திகழ்கின்றது. இவர்தம் உரை நெறி சொற்பொருள் உரைத்தல், தொகுத்து உரைத்தல், இலக்கணக்குறிப்புத் தருதல், மேற்கோள் காட்டல் என்னும் அடிப்படையில் அமைந்துள்ளது. மேலும் இசைக்குறிப்புகளைத் தருதல், வடமொழி இலக்கியங்களை மேற்கோளாகச் சுட்டிப் பின்பு தமிழில் தருதல், கூத்துக்கலைச் செய்திகளைத் தருதல், உடல் கூற்றியல் செய்திகளைத் தருதல், தமிழ் மொழியின் மேன்மையினை உரைத்தல் போன்றவை சிறப்பு நெறிகளாக அமைந்துள்ளன.

அடியார்க்குநல்லார் அரங்கேற்று காதையில் மூல பாடத்தை முழுவதும் தந்துவிட்டு உரைப் பகுதிகளுக்கு பொருள் முடிவு கருதி சிற்சில அடிகளை இணைத்துப் பொருள் சொல்லும் முறையைக் கையாண்டுள்ளார். மேலும் சொற்பொருள் முடிவு கருதித் தலைப்பு இடுதல், காதைப் பொருளை அல்லது பகுதிப் பொருளைத் தொகுத்து உரைக்கும் முறையும் காணப்படுகின்றது.

அடியார்க்குநல்லார் இலக்கண அறிவு மிக்கவர். மேலும் பன்னூல் புலமை மிக்கவர் என்ப. இவர்தம் மேற்கோள் நூல்களான் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருமுருகாற்றுப்படை, மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, வளையாபதி, புறப்பொருள் வெண்பாமாலை போன்றவைப் புலப்படுத்தும்.

பெருமழைப் புலவரின் உரையானது மிகக் கட்டமைப்புள்ள உரையாகத் திகழ்கின்றது. இவர் அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் உரையினைப் பெரிதும் தழுவியே உரைப் பொது நெறிகளைக் கையாண்டுள்ளார். சொற்பொருள் விளக்கம் அளித்தல், இலக்கணம் உரைத்தல், மேற்கோள் சுட்டல் போன்றன இவரின் உரைப் பொதுநெறிகளாக விளங்குகின்றன.

சிலப்பதிகார உரையாசிரியர்கள் தங்கள் காலத்திற்கு ஏற்றவாறு தேவையான விளக்கத்துடன் பொது மற்றும் சிறப்பு உரை நெறிகளைப் பின்பற்றி உரை வகுத்துள்ளனர்.

அரும்பத உரைகாரர், அடியார்க்குநல்லார், பெருமழைப்புலவர் பொ.வேசோமசுந்தரனார் உரைப் பகுதிகளில் பல நிலையில் ஒன்றுபட்ட தன்மையும் சில இடங்களில் வேறுபட்ட தன்மையும் காணப்பெறுகின்றன.

அடியார்க்குநல்லார், அரும்பத உரைகாரரை வழிமொழிந்து உரை கண்டுள்ளார். அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகிய உரையாசிரியர்களின் உரைகளை நன்கு கற்று பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் பொருத்தமான இடங்களில் ஒன்றுபட்டும் சில இடங்களில் வேறுபட்டும் உரை வரைந்துள்ளார்.

பழைய உரையாசிரியர்கள் இருவரையும் மறுக்கும் போக்கு, ஏதேனும் ஓர் உரையாசிரியரை மறுக்கும் போக்கு பொ.வே.சோமசுந்தரனார் உரையில் காணப்பெறுகின்றது. இதன் வழிப் பழைய உரைகாரர்களின் கருத்துகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பின்னை உரையாசிரியர்களுக்கு இல்லை என்பது புலனாகின்றது.

அரும்பத உரைகாரரின் உரையானது காண்டிகை உரையாக அமைந்துள்ளது. அடியார்க்கு நல்லார் உரையும் பெருமழைப்புலவர் உரையும் விருத்தி உரைகளாக அமைந்துள்ளன.

அரும்பத உரைகாரரின் நடையியல் திறமானது கருத்துரைத்தல், பதப்பொருள் தருதல், வினாவிடை ஆக்கல் முதலிய பண்புகளை உள்ளடக்கியதாக அமையப் பெற்றுள்ளது. அரும்பத உரைகாரரின் நடையானது இலக்கிய நடையாகவும் தொகுத்துரைக்கும் நடையாகவும் விளங்குகின்றது.

அடியார்க்கு நல்லாரின் நடைத் திறமானது கருத்துரை தருதல், வினாவிடையில் அமைதல், பதப்பொருள் கூறுதல் என்னும் அடிப்படையில் இலக்கிய நடைப் பாங்கினதாகவும் உவமைகளை உள்ளடக்கியதாகவும் பொருள் இலக்கண வரையறைகளைச் சிலப்பதிகாரத்தில் காட்டுவதாகவும் முடிவு காணும் போக்கு உடையதாகவும் உரைக்கு உரை காணும் பாங்கினதாகவும் அமைந்துள்ளது.

பெருமழைப் புலவரின் உரைநடையானது கருத்துரை தருதல், பதப்பொருள் கூறுதல், வினா விடை நடையில் அமைதல் என்னும் காண்டிகைப் பண்புகளுடனும் இலக்கியப் பாங்கு, பாத்திரப்படைப்பு ஆராய்ச்சி, பிறர் கருத்துகளை மறுத்துத் தன் கருத்தினை நிலைநாட்டல், உவமைகளோடு இணைத்தல் போன்றவற்றால் விருத்தி உரைப் பண்புகளுடன் அமைந்துளது. இதன்வழி ஒவ்வொரு உரையாசிரியருக்கும் தனித்த உரைநடைத்திறம் இருந்ததை அறியமுடிகிறது.

சிலப்பதிகார உரைகள் அவை தோன்றிய காலச் சமூகம், உரையாசிரியர்களின் சமயப்பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருத்தலைக் காணமுடிகின்றது.

மேலாய்வுக் களங்கள்

1. ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் சிலப்பதிகார உரைத்திறன்
2. சிலப்பதிகார உரையாசிரியர்களின் நடைக் கோட்பாடு